www.tamilarangam.net

# மற்றது ०२


## யாழ்ப்பாணம் உங்களை வரவேற்கிறது.




பவளக்கொடி தன்னுடைய ஆடைகளையெல்லாம் அவிழ்த்தெறிந்து விட்டு நிர்வாணமான நிலையில் அரைக் கம்பத்தில் தொங்கிக் கொண்டிருந்தாள். ஏண்டி மூதேசி! சனியனே! மானத்தை வேண்டுறாய். மனிசரை நிம்மதியாய் மானத்தோட வாழ விடமாட்டியோடி. உடுப்பை உடுத்தடி... உடுத்தடி... உடுத்தடி... **உன்னைக்** கெஞ்சிக் கேட்கிறம் உடுத்தடி. பவளக்கொடி அம்மணநிலையில் மேல மேல ஏறுறாளே ஒழிய ஒரு சொட்டும் கேட்கிறமாதிரித் தெரியேல்ல. அவளுக்கு இந்தக் கெஞ்சலைக் கேட்க சிரிப்பு. யாரால மானம் போகுது? கந்தன் கருணையிலையும் காத்தான் குடியிலையும் வெருகல் ஆத்திலயும் போகாத உங்கட மானம் என்ர அம்மணத்திலயா போறது. ஆருக்கு சொல்லுறியள் கதை. செத்த பிணம்மாதிரி வாழுற உங்கள விட நான் அம்மணமா இருக்குறதால ஒரு கோதாரியும் வராது. போங்கடா.... நீங்களும் உங்கட மானமும். இப்ப, பவளக்கொடிக்கு தட்டிற்றுது. அல்லது பவளக்கொடியைத் தட்டியாச்சு. கதை களப்படியும் முடியலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் இடதுசாரிகளும் யாழ் மையவாதத்தின் சிந்தனையும்

சண்முகலிங்கம்

"தமிழ் இடதுசாரிகள் பேசியதற்கு நேர் எதிர்மாறான செயற்பாட்டையே செய்தார்கள். இவர்கள் தங்களின் வீடுகளிலேயும், தங்கள் ஆதிக்கத்தில் இருக்கும் கோயில், குளம், கிணறு போன்ற பொது இடங்களை பொது சனங்களுக்கு திறந்து விடவில்லை. அம்மக்களை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. உயர்சாதிக் கட்சியினர் அம்மக்களை எப்படிப் பாவித்தார்களோ அதே மாதிரியாகவே இடதுசாரிகளும் அம்மக்களை பயன்படுத்திக்கொண்டார்கள். இவ்விடதுசாரிகள் மத்தியில் கார்த்திகேசன் மாஸ்ரர் விதிவிலக்காக இருந்தார்."

ஒரு மனிதன் பிறந்து, மனித கூட்டமாக வாழும் பொழுது - அதிகாரம் கொண்ட மனிதர்களால் உருவாக்கப்பட்ட, புரையோடிய சமூகப் பிரச்சனைகளை தன்வசப்படுத்தி, தன்கையில் எடுத்து செயல்ப்படும் போது ஒருமனிதன் பயங்கரவாதியாகவோ, அல்லது சமூக சிந்தனை கொண்ட முற்போக்குவாதியாகவோ உருவாகிறான்.

இந்த அடிப்படையை வைத்துத்தான் இலங்கையில் உள்ள இடதுசாரிகளை பற்றிய எனது விமர்சனம் அமைந்துள்ளது. ஏதோ ஒரு காரணத்துக்காக அவர்கள் மார்க்சிய இடதுசாரிகளாகவும், சோஷலிச முற்போக்குவாதிகளாகவும் இருந்துள்ளார்கள் என்பதை நான் மறுதலிக்கவில்லை. உலகத்தில் உள்ள இயங்கியல் தத்துவ மேதைகள், தோழர்கள் இவர்கள் மீது கடுமையான விமர்சனத்தை முன்வைத்தார்கள். முதலாளித்துவத்துக்கு எதிராக இவர்களினது கேள்வியோ, விமர்சனமோ அமையவில்லை. இதற்கு மாறாக முதலாளித்துவத்தை வளர்க்க உதவியது. இதனால் மார்க்சியத்தின் இயங்கியல் தன்மை தடைப் பட்டதற்கு இதுதான் மூல காரணமாக அமைந்தது. இந்த விமர்சனத்தை வைத்து முதலாளித்துவவாதிகள் மார்க்சிய தத்துவத்தையும், புரட்சி நடந்த நாடுகளையும் சிதைத்தார்கள். எனவே என் விமர்சனம் அப்படியாக அமையக் கூடாது என்ற எண்ணத்தில் விமர்சிக்கின்றேன்.

இலங்கையில் இடது சாரி அமைப்புக்கள் உருவாவதற்கு மூல காரணமாகும் அடிக் கல்லாக அமைந்த அமைப்பு 1924 ம் ஆண்டு யாழப்பாண வாலிபர் காங்கிரஸ் ஆகும். இதை ஆரம்பித்தவர்கள் யாழ்ப்பாணத்தில் உயர் கல்விகற்ற மாணவர்கள் ஆகும். இதில் ஹென்டி பேரின்பநாயகம், ஒறேற்றர் சுப்பிரமணியம், ஜே. வி. செல்லையா, நாகலிங்கம், காராளசிங்கம், வைத்திலிங்கம் நேசையா, நாகலிங்கம், கார்த்திகேசன் மாஸ்ரர், குமாரகுலசிங்கம் சகோதரர்கள், பொன் கந்தையா போன்ற பலர் இந்த அமைப்பில் அங்கம் வகித்தார்கள். இதில் தேசியவாதிகளும், முற்போக்குவாதிகளும், மார்க்சியவாதிகளும் அங்கம் வகித்தார்கள். இவர்கள் மத்தியதரவர்க்க குடும்பத்தில் இருந்து வந்தவர்கள். இவர்கள் அந்நியராட்சிக்கும், அவர்களின் அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டு இருந்த உயர் இந்து உயர் சாதிகளுக்கும் எதிராக செயற்பட்டார்கள்.

இக்காங்கிரசின் கொள்கையானது இலங்கைக்குப் பூரண சுயாட்சி, சுயமொழிகளில் கல்வி, தேசிய ஒற்றுமை, சாதி தீண்டா

www.tamilarangam.net

மையை எதிர்த்தும், தேசிய இலக்கியம்- கலை- கலாசாரம் பேணல், தொழிலாளிகளின் நலனுக்காக தொழிற்சங்கங்கள் போன்றவைகளை உருவாக்கி, திட்ட வரையறை செய்து பிரச்சாரத்தையும், போராட்டங்களையும் நடத்துவது என்று முடிவு செய்து நடைமுறைப்படுத்தினார்கள். சுதந்திரத்துக்கு முன்னர் வரை இவர்களுடைய போராட்டம் ஆளும் ஐரோப்பியர்களுக்கும், யாழ் இந்து உயர் சாதியினர்களுக்கும் பெரும் தலையிடியைக் கொடுத்தது.

இக்காலகட்டத்தில் தென் இலங்கையில் உள்ள உயர் மத்தியதர வர்க்கத்தைச் (தரகு முதலாளிகள்) சார்ந்தவர்களின் பிள்ளைகள் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று வந்தார்கள். இத் தருணம் இந்தியாவின் தேசியப் போராட்டம் ஆரம்பம் ஆகியது. இதன் விளைவால் ஆசிய நாட்டவர்களுக்கு எதிரான போக்கு அங்கு உருவாகியது. இதனால் இலங்கை மாணவர்களை இது வெகுவாக பாதித்தது. இவர்களை பாதுகாத்தவர்கள் ஐரோப்பிய மார்க்சிய சிந்தனையாளர்கள் ஆகும். இதனால் இவர்கள் மத்தியில் மார்க்சியக் கருத்துக்கள் வேர் ஊன்றியது. இதனால் இவர்கள் மத்தியில் ஒரு மாற்று அரசியல் கொள்கை மார்க்சிய அடிப்படையில் உருவாகியது.

அன்று இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, மக்கள் வறுமையில் வாடினார்கள். இச்செயலை வர்க்க ரீதியாகப் பார்த்து, தம் முழு இலங்கை மக்களையும் ஆளப் பிறந்தவர்கள் என்று கருதினார்கள். இவர்களுக்கு முன்பதாகவே ஏகாதிபத்திய வாதிகளான டி. எஸ். போன்றவர்கள் முழு மக்களையும் அடிமை யாக்கும் அரசியலை ஐரோப்பியர்களின் ஆதரவுடன் நடத்தினார்கள்.

இம்மார்க்சியவாதிகள் முழு இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் எண்ணத்துடன் இலங்கை வந்து, தெற்கில் வாலிபர் முண்னனி என்ற அமைப்பை 1929 ம் ஆண்டில் உருவாக்கினார்கள். இதில் கொல்வின், விக்கிரமசிங்க, பிலிப் , லெஸ்லி, என். எம். பெரேரா, பீற்றக் கெனமன், பொன் கந்தையா, அ.வைத்திலிங்கம் போன்றவர்கள் முக்கியமானவர்களாகும். அன்று இவர்கள் மார்க்சிய இயங்கியல் விஞ்ஞான சோஷலிசத்தின் மீது பற்றுக் கொண்டவர்களாகவே இலங்கைக்கு வந்தார்கள்.

முன்னர் யாழ்ப்பாணத்தில் இயங்கிய யாழ்வாலிபர் காங்கிரசும், தெற்க்கு வாலிபர் முன்னணியும் இணைந்து, அகில இலங்கை வாலிபர் காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்கி னார்கள். 1930ம் ஆண்டு ஐரோப்பியர்களின் பெப்பிமல் இயக்கத் துக்கு எதிராக சூரியமல் வியாபாரம் என்ற அமைப்பை உருவாக்கி முழு இலங்கை மக்களுக்குச் சேவை புரிந்தார்கள்.

மேற் கூறப்பட்ட மார்க்சிய இளைஞர்கள், ஒரு குழப்பமான முதலாளித்துவ கல்வி முறையை கற்றதுடன், தீவிர மார்க்சிய கருத்துக்களோடும், சோஷலிச சிந்தனையுடனும் வளர்ச்சி பெற்றவர் களாக இருந்தார்கள். அன்றைய அரசியல் சூழ் நிலையால் இவர்களின் வர்க்க முகம் அன்று மறைந்து இருந்தது. சுதந்திரத்துக் குப்பின் ஏற்ப்பட்ட அரசியல் மாற்றங்கள் இவர்களை அதிகார அரசியலுக்கு இழுத்துச் சென்றது. இதன் காலப்போக்கில் அவர்க ளின் அரசியல் நடவடிக்கையால் ஏற்பட்ட நடைமுறை செயற்பாட் டில், அவ்வர்க்க முகம் தோன்றத் தொடங்கியது. இவர்களில் அதிகமானோர் தங்களை ஒரு மார்க்சிய வாதியாகவோ அல்லது சோஷலிசவாதியாகவோ வெளிக்காட்ட விரும்பவில்லை. சோஷலி சத்துக்கு மாற்றுப் பெயராக, சமசமாஜிகள் என்ற பெயர் பதத்தை பாவித்தார்கள். இதனால்தான் இவர்கள் உருவாக்கிய கட்சிக்கு அப்பெயரை சூட்டினார்கள். இவர்கள் பாராளுமன்ற அதிகாரத்தில் நாட்டம் கொண்டவர்களாகவே இருந்தார்கள். சுதந்திரத்துக்கு முன் வர்க்க உணர்வுடன் அதி தீவிரமான போராட்டங்களை நடத்தி னார்கள். இதனால் பாட்டாளிவர்க்க மக்கள் இவர்கள் பின்னால் சென்றார்கள். 1956ம் ஆண்டுக்குப்பின் அப்பாட்டாளி வர்க்கத்தையோ கைகழுவி விட்டார்கள். காட்டியும் கொடுத்தார்கள்.

1926 ம் ஆண்டு ஐரோப்பாவில் பட்டப் படிப்பு முடிந்து வந்த எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஒரு சோஷலிசக் கட்சியை ஆரம்பித்தார். புஞ்ச மகா பலவேகய என்ற அடிப்படையில் தேசிய அபிலாசைகளையும், முற்போக்குத் தன்மையையும் கொண்டு இருந்தது. அன்றைய அரசியல் சூழ்நிலையில் இவருடைய சோஷ லிசக் கொள்கை தோல்வி அடைந்தது. அதன்பின் அவர் யு. என்.பி.யுடன் இணைந்து கொண்டார். பின் 1956ம் ஆண்டு இலங்கைத் தேசிய முதலாளித்துவத்தை மையமாக வைத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை தொடங்கினார். இதனால் இவ்இடது சாரிகளின் வீழ்ச்சி ஆரம்பமாகியது. பாராளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றும் எண்ணத்துடன் இவ் இடதுசாரிகள் தேசிய முதலாளித் துவக் கட்சியுடன் இணைந்து கொண்டார்கள். இதன் விளைவு 1960ம் ஆண்டுக்குப் பின் உழைக்கும் வர்க்கத்தை நடுத் தெருவுக்கு கொண்டு வந்து விட்டது. 1960 ம் ஆண்டுக்குப் பின் இவர்களினது வர்க்க முகம் தெளிவாக வெளிவந்தது. தமிழர்களின் நியாயமான உரிமைகளை மறுதலித்தார்கள். இதற்கு கொல்வினால் தயாரிக் கப்பட்ட இலங்கையின் மூல யாப்பு நல்ல உதாரணமாகும். தொழிலாளர் உரிமைப் போராட்டத்தை நசுக்கிய பெருமை என்.எம். பெரேராவுக்கு உரியது. முதலாளித்துவ வாதிகள் எப்படி இவ்விடது சாரிகள் மூலம் இலங்கையில் உள்ள முழு மக்களின் ஜனநாய கத்தையும், சுதந்திரத்தையும் பறித்ததற்கு இதைவிட வேறு உதாரணங்கள் தேவையில்லை.

பண்டாரநாயக்காவின் வரவுக்குப் பின் தமிழ் பேசும் சாதாரண மக்களின் பிள்ளைகளுக்கு கல்வி அறிவும், அரசு தொழில் வாய்ப்பும் கிடைத்தது. இத்துடன் யாழப்பாணத்தில் மாற்றுக் கருத்துக் கொண்ட தலைமைகள் உருவாகியது. இதற்கு ஜி. ஜி.பொன்னம்பலம், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்ற யாழ் மையவாதத் தலைமையின் தோல்வி நல்ல உதாரணமாகும்.

1935 ம் ஆண்டு முதலாவது இடதுசாரிக் கட்சி உருவா கியது. இதில் இலங்கைத் தேசியவாதிகள், சீர்திருத்தவாதிகள், சோஷலிசவாதிகள், கம்யூனிசவாதிகள், முற்போக்கு சிந்தனை வாதிகள் அனைவரும் அங்கம் வகித்தார்கள். எனவே சோஷலிசம், கம்யூனிசம், வர்க்கம் என்ற மொழிப்பதங்களை மக்களிடம் இருந்து தவிர்க்கும் நோக்கத்தில்தான் சமசமாஸக் கட்சி என்ற பெயர்ப் பதத்தை பாவித்தார்கள்.

இம்மார்க்சிய இடதுசாரிகள் முதலில் லெனினிசத்துக்கும் (3 வது அகிலம்), ட்ரொஸ்க்கியத்துக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு, முதல் பிளவை உண்டு பண்ணியது. சமசமாஸக் கட்சியில் இருந்து வெளியேறிய கம்யூனிஸ்வாதிகள் 1940 ம் ஆண்டு ஐக்கிய சோஷலிசக் கட்சியை உருவாக்கி னார்கள். இக்கட்சி அரசால் தடைசெய்யப்பட்டது. பின் இவர்கள் 1943 ம் ஆண்டு கம்யூனிஸ்சக் கட்சியை உருவாக்கினார்கள். பின்னர் 1963 ம் ஆண்டு ரஷ்சியா-சீனா என்ற முரண்பாட்டால் மீண்டும் பிளவு ஏற்பட்டது. இதன் மூலம் சீனா கம்யூனிஸ்சக் கட்சி சண்முகதாசன் தலைமையில் உருவாகியது. பீற்றக் கெனமன் தலைமையில் ருஷ்சியக் கம்யூனிஸகட்சி என்ற பெயரில் பழைய கட்சி இயங்கியது. இவ்விடதுசாரிக் கட்சிகள் அமைத்த தொழிற் சங்கங்களின் தலைமைப்பதவியில் இருந்த தலைவர்கள் தனியாக பிரிந்து சென்று தனித்துவமாக இயங்கினார்கள். இவர்கள் தான் எட்மன் சமரகொடி, பாலதம்பு, வாசுதேவ போன்றவர்கள் ஆகும். இவர்களின் செயற்ப்பாடுகளால் பல இடதுசாரிக் கட்சிகளும், தொழிற்சங்களும் உருவாகியது. இதனால் பாட்டாளிவர்க்கம் பிளவுபட்டது. இதனால் தொண்டைமான் போன்ற முதலாளிகள் தொழிற்சங்கங்களை அமைத்து தொழிலாளர்களின் தலைவனாக


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரமுடிந்தது. இதனால் லட்சக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்ட இடதுசாரி தொழிற்ச்சங்கங்கள் 100, 200 தொழிலாளர்களைக் கொண்ட சங்கமாக மாறியது. தொண்டைமானின் தொழிற்சங்கம் லட்சக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்ட சங்கமாக மாறியது.

இவ்விடதுசாரிகளின் செயற்பாடு தொழிலாளர்களை விற்கும், வாங்கும் பொருளாக மாற்றிவிட்டது. இதனால் தொண்டைமான் போன்ற முதலாளிகள் தொழிலாளர்களின் தலைவனாக வரக்கூடியதாக அமைந்தது. இடதுசாரிகள் ஒட்டுமொத்தமாக விட்ட பிழைகள்தான் ஏகாதிபத்திய முதலாளித்துவ கட்சியான யு. என். பியும் வர்க்க உணர்வை கதைக்க தொழிற்சங்கங்களை ஆரம்பிக்க தொடங்கிவிட்டார்கள்.

இம்மார்க்சிய கட்சிகள் ஒரு புரட்சிகர கட்சியாகத் தங்களை தயார்ப்படுத்தத் தவறியதுதான் இவர்கள் விட்ட மாபெரும் தவறாகும். ஒரு சக்திமிக்க வெகுஜனப்புரட்சி மார்க்கத்தை அடைவதற்கு தொழிலாளர்களிடமும் விவசாயிகளிடமும் புரட்சிகரமான போதனைகளை அல்லது நடைமுறைகளை செயல்லாற்றவில்லை.

இவ்விடதுசாரிகள் பாராளுமன்ற அபேட்சகர்களை நியமனம் செய்யும் போது கூட உயர் சாதியினர்களை நியமித்தார்கள். ஏனெனில் எதிராக நிற்பவர்கள் உயர் சாதிகள் என்பதால். சிங்களவர்களாக இருந்தாலும் சரி, தமிழர்களாக இருந்தாலும் சரி ,இந்துக்களாக இருந்தாலும் சரி, கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரி, உயர் குடி மக்களே ஆகும். பொதுவாக மார்க்சிய முற்போக்கு இடதுசாரிகளைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள மேல்வாரியான தரவுகளை தந்துள்ளேன். இவைகளை நீங்கள் விரிவாக பார்க்கவும்.

**இனி யாழ்ப்பாணத்து மார்க்சிய இடதுசாரிகள் எப்படி முடக்கப்பட்டார்கள் என்பதைப் பார்ப்போம்...**

யாழ்ப்பாணத்து மார்க்சிய இடதுசாரிகள் சுதந்திரத்துக்கு முன், பல தொழிலாளர்களின் நலனை முன் வைத்து அன்னியர் ஆட்சி அதிகாரத்துக்கும், அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டு இருந்த இந்து உயர் சாதியினர்களுக்கும் எதிராகவும் பல போராட்டங்களையும் நடத்தினார்கள். இப்போராட்டம் இலங்கை தழுவிய போராட்டமாக அமைந்தது. அன்னியர்களின் அதிகாரத்துக்கு ஊடாக பௌத்த சிங்கள பேரினவாதிகளின் (டி. எஸ். போன்ற) ஒத்துழைப்புடன் தேசியவாதியும், முற்போக்குத் தொழிற்சங்க வாதியுமான பொன்னம்பலம் அருணாச்சலத்தை யாழ் இந்து ஆதிக்கார வர்க்கம் அரசியலில் இருந்து அகற்றினார்கள். இதன் பின்னர்தான் ஜி. ஜி. பொன்னம்பலம் மூலம் அரசியல் ரீதியான யாழ் உயர் சாதியின் மேலாதிக்கம் வித்திடப்பட்டது. இந்த மேலாதிக்கவாதிகள் - யாழ் இந்து உயர் சாதியினர்கள் - யாழ் மையவாதசிந்தனைப் போக்கை மெல்ல வளர்த்தெடுத்து பயங்கரவாதியின் கையில் கையளித்துள்ளார்கள். இதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பங்கு பெரும் அளவில் இருந்தது.

ஏ. ஈ. குணசிங்கத்தின் இனவாதப் போக்கை எதிர்த்தும், அருணாசலத்தின் அரசியலை விட்டு ஒதுங்கிய பின்பும் வர்க்க உணர்வுடன் இனபேதங்கள் உருவாகாமல் பாதுகாத்துக் கொண்டவர்கள் இவ் இடதுசாரிகளே. (1948 ம் ஆண்டு வரை).

1956 ம் ஆண்டுக்குப் பின் சிங்கள இடதுசாரிகள் இனவாத ரீதியாக செயற்பட தொடங்கிவிட்டார்கள். தமிழர்களை நோக்கி தோசை, வடை என்ற கோஷத்தை முன்வைத்தார்கள். அன்று தமிழ் இடதுசாரிகள் இக்கோஷத்துக்கு எதிரக குரல் கொடுக்கவில்லை. இதன் பரிணாம வளர்ச்சி நிலை தான் இன்று புலிகளை தமிழ் இடதுசாரிகள் ஆதரிக்கும் நிலை.

1970 ம் ஆண்டுக்குப் பின் இவ்விடதுசாரிகளின் தப்பான போக்கு ஈழ விடுதலை அமைப்புகளில் இருந்து இயங்கிய மார்க்சிய முற்போக்குச் சிந்தனை கொண்ட இளைஞர்களையும், அமைப்புக்களையும் இந்த யாழ் மையவாதிகள் இலகுவாக அழிப்பதற்கு ஏதுவாக அமைந்தது. இதற்கு நல்ல உதாரணம் நாலு ஈழ விடுதலை அமைப்புக்களை இணைக்கும் கால கட்டத்தில், மார்க்சிய தத்துவத்தை ஏற்ற பல சிறிய அமைப்புக்கள் இயங்கின. அவ் அமைப்புக்களில் மார்க்சிய சிந்தனை கொண்ட முற்போக்கு இளைஞர்கள் இருந்த படியால் அச்சிந்தனைகளைக் கொண்ட தலைமை வந்துவிடும் என்ற காரணத்தால். அவ்வமைப்புக்களை இணைக்க யாழ் மையவாதிகள் தடையாக இருந்தார்கள். இவ் விணைப்பைத் தடுப்பதற்கு மூல காரணமாக இருந்தவர் அமிர்தலிங்கமாகும். அன்று மார்க்சியவாதி என்று இனம் காட்டிக்கொண்ட வரதராஜப்பெருமாள் அமிர்தலிங்கத்துக்கு பக்க பலமாக விளங்கினார். இவர் பிரான்ஸ்சில் இயங்கும் ஈ. பி, ஆர், எல். எவ். (மார்க்சிய கொள்கை கொண்ட ஈழ விடுதலை அமைப்பாகும்) என்ற அமைப்பின் கிளைக்கு பயங்கரத் தமிழ் தேசியவாதியான புஸ்பராஜாவை தலைவராக நியமித்தார். வரதர் தான் தலைவராக (முதல்வராக) வருவதற்கு எடுத்த நடவடிக்கை ஈ பி ஆர் எல் எவ் என்ற அமைப்பு அழிவதற்கு மூல காரணமாக அமைந்தது.

சண்முகதாசன் உட்பட தமிழ் மார்க்சிய இடதுசாரித் தலைவர்கள் தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகளுக்கு குரல் கொடுக்கவில்லை. ஏனெனில் சிங்கள மக்கள் தங்களை இனவாதிகள் என்று முத்திரை குத்திவிடுவார்கள். இதனால் தலைமைக்கு ஆபத்து ஏற்படும் எனக் கருதி மவுனமாக இருந்து விட்டார்கள். இது சிங்கள பௌத்த இனவாதிகளுக்கு சாதகமாக அமைந்தது. (முழு இடது சாரிகளுக்கும் இது பொருந்தும்) இவ் இடதுசாரிகள் சிங்கள அரசியல்வாதிகள் தான் சிங்கள மக்களின் குரல் என்று கருதினார்கள். லும்பன் என்ற லெனின் கூறிய தாற்பரியத்தை புரிந்து கொள்ள முடியாத மார்க்சியவாதிகள், தெருச் சண்டியன்களுக்கு மார்க்சிய வகுப்பு எடுத்தார்கள். இக்பால், வி. பி போன்றவர்கள் வகுப்பு எடுத்தது நல்ல உதாரணமாகும்.

இந்த யாழ் மார்க்சிய இடதுசாரிகள் மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்தவர்களானபடியால், உயர் சாதிச் சிந்தனைகள் அவர்களிடம் குடிகொண்டு இருந்தது. அந்த உயர்சாதி மனோபாவம் அவர்களைத் தமிழ் மக்களை ஆளும் எண்ணத்தை தூண்ட அவர்கள் பாராளுமன்ற அதிகாரத்தை நாடினார்கள். இதனால் அனைத்து உயர் சாதியினருடனும் சமரசம் செய்யும் நிலை ஏற்பட்டது. இதனால் சிவசிதம்பரத்துக்கு எதிரக தருமரட்ணத்தையும், செல்வநாயகத்துக்கு எதிராக காரளசிங்கத்தையும் அபேட்சகர்களாக நியமித்தார்கள்.

இப்படியான நியமனங்கள் ஒவ்வொரு தொகுதிகளிலும் நடைபெற்றது. இச்செயற்பாடு இவ் இடதுசாரிகளின் உயர் சாதிச் சிந்தனையின் வெளிப்பாடாகும். இடதுசாரிகளை வளர விடாது முடக்குவதற்கு அச்சிந்தனைதான் மூல காரணமாக அமைந்தது. தாங்கள் அதிகாரத்துக்கு வருவதற்கு தாழ்த்தப்பட்ட மக்களை பகடைக் காயாக பாவித்தார்கள். இதில் சிலர் முற்போக்கு மார்க்சியவாதிகள் என்று இனம் காட்டி தங்களை வளர்த்துக் கொண்டு உயர் சாதியினர்கள் ஆக மறிவிட்டார்கள். தங்களை மறந்ததுவும் அல்லாமல் அம்மக்களையும் மறந்து அவர்களின் உணர்வுகளையும், உழைப்பையும் சுரண்டிக் கொண்டார்கள். இதில் தீண்டாமை என். நாகரட்ணம் மட்டும் விதி விலக்காகும்.

எந்த ஒரு மனிதன் மற்ற மனிதனுடைய உணர்வுகளையும், உழைப்பையும் சுரன்டுகின்றானோ அவன் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலாதிக்க வாதியாகும். இது இந்து உயர் சாதியின் தன்மையும் ஆகும்.

இத்தமிழ் இடதுசாரிகள் இலங்கையின் சமூக பொருளாதாரத்தின் புதிய வளர்ச்சியையும், இன முரண்பாடுகளையும், தத்துவத்தின் நவீன வளச்சியையும் உரிய மார்க்கத்தில் புரிந்து கொள்ள முடியாததால் (விமர்சனம் இவர்களுக்கு பிடிக்காத விடையம்) பழைய சொற்பதங்களை மீண்டும் மீண்டும் இசை மீட்டுக் கொண்டு, பழைய தத்துவ மார்க்கத்தில் செல்வதில் அதிக கவனம் செலுத்தினார்கள். தலைமை யின் தவறான போக்கின் விளைவால் யாழப்பாணத்து முற்போக்கு மார்க்சிய வாதிகளும், யாழ்ப்பாணத்தில் மேல் மேல் உயர் சாதியானவர்களும், (இவர்கள் உழைப்பாளிகள்) இந்த இந்து உயர் சாதியினரின் ஆதிக்கத்தால் கவரப்பட்டார்கள். இதற்கு நல்ல உதாரணம் வி.பொன்னம்பலம் செந்தமிழர் இயக்கம் ஆரம்பித்தது. யாழ் உயர் சாதியின் மையவாதம் யாழ் மா்க்சிய இடதுசாரிகளின் சிந்தனையை அழித்ததற்கு நல்ல உதாரண மாகும்.

இதனால் ஒரு பொதுவுடைமைச் சமுதாயம் தமிழர்கள் மத்தியில் உருவாக முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. மனிதம் என்ற சொல்லுக்கே இடம் இல்லாமல் போய்விட்டது. தோழன் என்ற சொல் தமிழர்கள் மத்தியில் பிழையான அர்த்தத்தை கொடுத்துள்ளது. (தான் மனைவியின் சகோதரன் என்ற எண்ணப்பாட்டை உருவாக்கி விட்டது.). இத்தமிழ் இடதுசாரிகள் பேசியதற்கு நேர் எதிர்மாறான செயற்பாட்டையே செய்தார்கள்.

இவர்கள் தங்களின் வீடுகளிலேயே, தங்கள் ஆதிக்கத்தில் இருக்கும் கோயில், குளம், கிணறு போன்ற பொது இடங்களை பொது சனங்களுக்கு திறந்து விடவில்லை. அம் மக்களை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. உயர் சாதிக் கட்சியினர் அவ் மக்களை எப்படிப் பாவித்தார்களோ அதே மாதிரியாகவே இடதுசாரிகளும் அம் மக்களை பயன்படுத்திக் கொண்டார்கள். இவ்விடதுசாரிகள் மத்தியில் காத்திகேசன் மாஸ்ரர் விதிவிலக்காக இருந்தார். இவர் இறக்கும் மட்டும் மார்க்சிய கொள்கையுடன் வாழ்ந்தவர். சமூகக் குறைபாடுள்ள மக்கள் மத்தியில் சென்று பிரச்சனைகளை அணுகியவர். மற்றவர்கள் அனைவரும் பிரச்சனைகளை தம் பக்கம் இழுத்துத் தீர்வை அடைய முயன்றவர்கள். நல்ல உதாரணம் ஆலய பிரவேசம்.

இவ் இடதுசரிகள் பேசும் திறன் கொண்டவர்களாக இருந்தாலும் செயல் திறன் அற்றவர்கள். மார்க்சியம் ஒரு இயங்கியல் தத்துவம் என்பதை மறந்துவிட்டார்கள். சண்முகதாசன் புளொட், புலிகள் நடத்திய மேதினக் கூட்டங்களில் பேசினார். தொழிலா ளவர்க்கம் என்று கருதப்பட்ட மலையக மக்களைக் கணக்கில் எடுக்காது முதலாளித்துவ கட்டமைப்புக்குள் உள்ளேயே தொழிற்சங்க வேலைகளை செயற்படுத்தினார்களே ஒழிய, அம்மக்களுக்கு வர்க்கச் சிந்தனைகளை போதிக்கவில்லை. மார்க்சுக்கு ஒரு ஏங்கல்ஸ் இருந்தமாதிரி இவ் இடதுசாரித் தலைவர்களுக்கு பல ஏங்கல்ஸ்சுகள் இருந்தார்கள். ஆனால் இந்த ஏங்கல்ஸ்கள் மார்க்சிய விரோதப் போக்கை கொண்டவர் களாக இருந்தார்கள். இதனால் இடதுசாரித் தலைவர்கள் இப்போக்கை பாராமுகமாக இருந்ததால் அவர்களுக்கு சுகபோகமாக வாழவழி கிடைத்தது.

கட்சியில் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கும் போதும், தொழிலாளவர்க்கம் மிகப் பெரிய போராட்டத்தை நடாத்தும் போதும் சண்முகதாசன் அல்பேனியா போன்ற வெளிநாடுகளுக்கு தத்துவ முரண்பாடுகளை பேச சென்று விடுவார். கினக்கலை தோட்ட தொழிலாளர்கள் மாபெரும் போராட்டத்தை நடத்திய சமயத்திலும், யாழ்ப்பாணக் கிளை தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வுகாணும் நோக்கத்தில் கூடிய கூட்டத்துக்கும் வராது இருந்ததுடன் இரண்டாம் மூன்றாம் நிலையில் உள்ள தலைமைகளிடம் விடையத்தை ஒப்படைத்தார். தொழிலாளர் நலன் பேண இராமையா போன்றவர்க ளையும், தேசிய இனப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு டானியல் போன்றவர்களையும் சண்முகதாஸன் நியமித்தது இதற்கு நல்ல உதாரணமாகும். இலங்கையின் இனப் பிரச்சனைகளைப் பற்றியும். வர்க்க முரண்பாடுகளைப் பற்றியும் விளங்கிக் கொள்ள முடியாத சண்முகதாசனை, ஓரளவுக்கு மார்க்சிய சிந்தனை கொண்ட இளம் தோழர்கள் விமர்சிக்க முற்பட்ட போது அதை எதிர்த்தவர்கள் சண்ணின் விசுவாசிகள் ஆகும். பின் புலிகளின் கொலைகளுக்கும், பயங்கரவாதத்துக்கும் மார்க்சிய ரீதியான விஞ்ஞான விளக்கத்தை கொடுக்கின்றார்கள் இவர்கள்.

ஜி. ஜி. கொழும்பை மையமாக வைத்து தமிழ் மக்களை ஆளலாம் என்று கருதிச் செயற்பட்டார். யாழ் மையவாதிகளான செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்ற வர்கள் யாழ்ப்பாணத்தை மையமாக வைத்து தமிழ் பேசும் மக்களுடன் கூடி இருந்து ஆள்வதற்காக செயற்பட்டார்கள். மார்க்சிய இடதுசாரிகள் கொழும்பை மையமாக வைத்து பாட்டாளி மக்களை ஆளலாம் எனக் கருதி செயற்பட்டார்கள். மக்களுடன் இணைந்தால்த்தான் தங்கள் எண்ணங்களை நடைமுறைப்படுத்தலாம் என்ற எண்ணம் கொண்ட யாழ் மையவாதிகளுக்குப் புரிந்தளவு இந்த மார்க்சியவாதிகளுக்கு புரியவில்லை. இதனால் உழைக்கும் மக்களுக்கும் இடதுசாரிகளுக்கும் இடையில் பெரிய இடைவெளி உருவாகியது.இந்த இடைவெளியை நிரப்ப தரகர்களை நாடவேண்டி வந்தது. இத்தரகர்கள் தான் தோட்டத்தில் உள்ள தலைவர்களும், மார்க்சியத்தைப் புரிந்து கொள்ளாத சிறு தலை மைகளும் ஆகும். யாழப்பாணத்தில் இயங் கிய மார்க்சிய இடதுசாரிகள் அனைவரும் தலைமையின் விசுவாசிகளாக இயங்கினார் கள். தலைமையின் விசுவாசிகளாக இருப்ப தும், தலைமைக்கு எதிரானவர்களை துரோகி என்று கூறுவதும் தமிழர்களின் மரபாகும். இது தமிழரின் கெட்டிதட்டிப் போன மேலா திக்க சிந்தனையாகும். இவ் விடையத்தில் இடதுசாரிகளினுடைய சிந்தனையும் ஒத்ததாகவே இருந்துள்ளது.

தொழில் ரீதியாக இடதுசாரித் தொழிற்சங் கத்தில் உறுப்பினராக இருந்த பல தமிழர்கள் வெளிநாடுகளில் தங்களை இடதுசாரிகள்

**இந்த யாழ் மார்க்சிய இடதுசாரிகள் மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்தவர்களானபடியால், உயர் சாதிச் சிந்தனைகள் அவர்களிடம் குடிகொண்டு இருந்தது. அந்த உயர்சாதி மனோபாவம் அவர்களைத் தமிழ் மக்களை ஆளும் எண்ணத்தை தூண்ட அவர்கள் பாராளுமன்ற அதிகாரத்தை நாடினார்கள். இதனால் அனைத்து உயர் சாதியினருடனும் சமரசம் செய்யும் நிலை ஏற்பட்டது. இதனால் சிவசிதம்பரத்துக்கு எதிரக தருமரட்ணத்தையும், செல்வநாயகத்துக்கு எதிராக காரளசிங்கத்தையும் அபேட்சகர்களாக நியமித்தார்கள்.**

www.tamilarangam.net

என்று அறிமுகம் செய்வதை இன்று பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. திட்டமிட்டு முதலாளித்துவம், தேசிய இனப்பிரச்சனையை பாரிய அளவில் வளர்த்தபின்பும் வர்க்கப் பிரச்சனையை பேசிக் கொண்டு இருந்தார்கள் இந்த இடதுசாரிகள். பின்பு தங்கள் பிள்ளைகள் ஈழ விடுதலை இயக்கங்களுடன் இணைந்தவுடன் அவ்வியக்கங்களுடன் இணைந்து செயல்படுகின் றார்கள். அதனால்தான் இன்று பல மார்க்சிய இடதுசாரிகள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயல்ப்படுகிறார்கள். மாற்றுக் கருத்துக்கள் ஏதுமற்று புலிகளின் பயங்கரவாதத்துடன் இணைந்து மார்க்சியத்தில் விளக்கம் கொடுக்கின்றார்கள்.

பயங்கரத் தமிழ்த் தேசியவாதிகளை விட இவ்விடது சாரிகள்தான் பயங்கரவாதத்துக்கு பக்கபலமாக விளங்குகின்றார்கள். ஈழ விடுதலைப்போராட்டம் தொடங்கியபின் இலங்கையில் உருவான முரண்பாடுகளை இனம்கண்டு, தீர்க்கும் விதத்தில் மார்க்சிய விளக்கம் கொடுக்கும் பல முற்போக்குத் தமிழ் இளைஞர் களுடன் நட்பு ஏற்படுத்த இந்த பழைய மார்க்சிய இடதுசாரிகள் தயங்கினார்கள். ஏனெனில் தங்களைவிட அவர்கள் மார்க்சியத்தை நன்கு அறிந்து கொண்டு யதார்த்தமாக விவாதிப்பதால். சண்முக தாசன் தலைமையில் இயங்கும் சீனாக் கம்யூனிஸ் கட்சியால் தான் இனப் பிரச்சனைக்கு நல்ல தீர்வை கொடுக்க முடியும் என்று கருதி சந்ததியார், விசுவானந்ததேவன் போன்ற இளைஞர் கள் சண்ணுடன் கதைக்கச் சென்ற போது நீங்கள் இனவாதிகள் வெளியே போங்கள் என்று சொல்லி அனுப்பிய கூற்று இதற்கு நல்ல உதாரணமாகும். டானியலும் அச் சந்தர்ப்பத்தில் இருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. .

அன்ரன் பாலசிங்கம் புலிகளுக்கு மார்க்சிய வகுப்பு எடுத்தமை, இந்தியாவில் இயங்கிய ரெலோவுக்கு வி. பொன்னம்பலம் மார்க்சிய வகுப்பு எடுத்தமை, யாழ்ப்பாணத்தில் ரெலோ தாஸ்க்கு இக்பால் மார்க்சிய வகுப்பு எடுத்தமை இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மார்க்சிய இடதுசாரி கள் வகித்த வலுவான பத்திரத்தை யாரும் மறுதலிக்க முடியாது. இவர்கள் (தலைமைகள்) மார்க்சியப் பாதையைப் பின்பற்றி இருந்தாலும், இவர்கள் மத்தியில் பல குறைபாடுகளும், தத்துவப் போட்டிகளும், நடைமுறைத் தவறுகளும் நிறைய இருந்துள்ளது. இத்தவறுகளை சுட்டிக்காட்ட தலைமையின் விசுவாசிகளான பல தோழர்கள் மவுனமாக இருந்தார்கள். இதுதான் இன்றுவரைக் குமான சிக்கல்களுக்கு மூல காரணமாகும். எல்லாத் தவறுக ளையும் மறைத்து எவ்வித கேள்வியுமற்று தலைமையைக் காப்பாற் றுதல் என்பதுதான் தமிழ்ச் சமூகத்தின் இன்றுவரைக்குமான மரபான செயற்பாடாய் வந்துவிட்டது. இதுதான் மேட்டுக் குடியின் சிந்தனையாகும். இச்சிந்தனைதான் யாழ்ப்பாணத்தில் இயங்கிய அனைத்து மார்க்சிய சிந்தனை கொண்டவர்களையும் அழித்தது. உலகத்தில் பல தத்துவங்கள் மனித குலத்தை மனித நாகரி கத்தை மேன்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டது. இந்தத் தத்துவங் களை செயல்படுத்தியவர்கள் விட்ட பிழைதான் தத்துவங்களை பிழையாக்கி இயங்கவிடாமல் முடக்கியது. புத்த தத்துவமும், மார்க்சிய தத்துவமும் நல்ல உதாரணமாகும். இத்தத்துவங்களின் நெகிழ்ச்சிப் போக்கை உருவாக்க புதிய நவீன தத்துவங்கள் உருவாகியது. இவைகளை மக்களின் சமூகப் பார்வையில் பார்க் காமல், அதிகார அரசியலின் பார்வையைப் பார்த்து தங்களுக்கு சாதகமாக எடுத்து, இன்றைய முற்போக்கு வாதீகள் கதைக்கின்றார்கள்.



Jaffna Mayor Sellan Kandiah

01.06.1981: இனவெறியர்களால் யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டது.
14.02.2003 சாதிவெறியர்களால் யாழ் பொது நூலகம் மூடப்பட்டது.

2003இல் யாழ் மேயராக இருந்த செல்லன் கந்தையன் அவர்களின் உழைப்பினால் 14.02.2003 அன்று திறந்து வைக்கப்படவிருந்த யாழ் பொதுநூலகம் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டதுடன் செல்லன் கந்தையன் அவர்கள் பல சித்திரவதைக்கும் ஆளாக்கப்பட்டார். இதன்பின் பதவி விலகிய செல்லன் கந்தையன் அவர்கள் 01.03.2003 அன்று Daily Mirror என்ற ஆங்கிலப்பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலிருந்து...

'நாங்கள் மக்களால் சனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆனால் எம்மால் சுதந்திரமாகச் செயற்படமுடியவில்லை. நாம் சுதந்திரமாக இயங்குவதை சனநாயகத்துக்குவிரோதமாய்ப் புலிகள் தடுக்கிறார்கள்.இந்த நிலையில் நான் பதவி விலகியதே சிறந்த முடிவு. இந்த நூலகம் திறக்கப்படுவதால் புலிகளுக்கு ஒருவித பிரச்சனையும் இல்லை.நூலகம் திறக்கப்படுவதைத் தடுத்ததற்குப் பின்னால் வேறுஒரு காரணம் உள்ளது என்பதே என் கருத்து. நான் இந்த நாட்டின் சிறுபான்மைச் சமூகத்திற்குள் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவன். யாழ் நூலகத் திறப்புவிழாக் கல்வெட்டில் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவனின் பெயர் பொறிக்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. ஆம் புலிகள் முற்று முழுதாக சாதிய அடிப்படையிலேயே இப்பிரச்சனையை அணுகினார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

நடந்த முழு நிலைமைகள் மீதும் அரசாங்கம் எதுவித கவனமும் செலுத்தவில்லை.என் சொந்த சமூகத்துள் ஒரு இரத்தக்களரி ஏற்படுவதை நான் விரும்பவில்லை. எனவே நான் திறப்புவிழாவைக் கைவிட்டுப் பதவி விலகினேன்.பதவி விலகியதற்குப் பின்பாக என்மீது ஏதாவது அச்சுறுத்தல்கள் நடந்தனவா எனக் கேட்டீர்கள். இல்லை. எல்லாமே நான் பதவி துறப்பதற்கு முன்னாலேயே நடந்து விட்டன.'

(பார்க்க : ஒரு வரலாற்றுக் குற்றம் NON வெளியீடு)

www.tamilarangam.net

# இடைமறிப்பு



“யாழ்ப்பாணச் சமூகம் வித்தியாசமான மனநிலை கொண்டது. அந்த அமைப்பு பணம் சார்ந்தது. எல்லா அமைப்புக்கும் பணம் பிரதானம் எண்டாலும் யாழ்ப்பாணச் சமூகத்தின்ரை வாழ்வியல், போக்கு எண்டதுகள் பணமும், அந்தப் பணத்தின்ரை ஆதாரமான சமூக அமைப்பை நிலை நாட்டுறதுக்கான மனோநிலையுமாயே இருந்திருக்கு. அதில முக்கியமானது சாதிப்பிரச்சனை.”

## தேவகாந்தனுடன் உரையாடல் கற்சுறா

**உங்களது எழுத்தியக்கம் ஆரம்பமான காலங்கள் குறித்துக் கொஞ்சம் சொல்லுங்களேன்.**

சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நான் அட்வான்ஸ்ட் லெவல் பாஸ் பண்ணின வருசம், அப்பதான் நான் நினைக்கிறன் பல்கலைக் கழகங்களில விகிதாசார அடிப்படையிலதான் பிரவேசிக்கேலும் எண்ட சட்டச் செயற்பாடு உறுதியாய் நடைமுறைக்கு வாற நேரமெண்டு, அதாலை கூடுதலான தமிழ் மாணவருக்கு கூடுதலான புள்ளிகள் தேவைப்பட்டுது. அதால அந்த வருஷம் பல்கலைக்கழகத்துக்குப் போற வாய்ப்பு எனக்குக் கிடைக்கேல்லை. திரும்ப சோதினை எடுத்து பாஸ்பண்ணி அடுத்த வருசம் போயிருக்கலாம்தான். அப்பிடித்தான் செய்யச்சொல்லி தெரிஞ்சாக்களும் சொந்தக்காறரும் சிநேகிதர்மாரும் சொல்லிச்சினம்.ஆனா அப்பிடிச் செய்யிறதுக்கான மனநிலை வரேல்லை. அது ஒரு வீழ்ச்சியாய்ப் போச்சு. மனமொடிஞ்சு போச்சு. படிக்கிற காலத்திலையும் சோதினைக்காய்ப் படிக்கிற குணம் என்னிட்டை இருக்கேல்லை. அரசாங்க வேலையைவிடவும் வேற கூடுதலான கனவுகளோட படிப்பும், அதில்லாத வாசிப்புகளோடையும்தான் நான் அப்பவும் இருந்திருக்கிறன். கனவு எண்டுறது எதிர்காலத்தில எப்படி இருக்கவேணும், நிறைய சங்க, நவீன தமிழிலக்கியங்களை வாசிக்கவேணும், எழுதவேணும், ஒரு விரிவுரையாளராய் பேராசிரியராய் வரவேணும் எண்டதுகளைத்தான் நான் குறிப்பிடுறன். இந்தக் கனவுகளுக்கு ஆதாரமாய்ச் சில பேராசிரியர் விரிவுரையாளரின்ரை அறிமுகமும் இருந்ததைச் சொல்லலாம். அட்வான்ஸ்ட் லெவல் படிக்கேக்குள்ளையே வாஸிற்றியிலை படிச்ச நண்பர்களோட போய் கலாநிதி கைலாசபதியை நான் சந்திச்சிருக்கிறன். சு.வித்தியானந்தன்ரை ‘தமிழர் சால்பு’ படிச்ச கையோடை, அவரின்ரை இராவணன் நாடகம் யாழ்ப்பாணத்தில போட்டிச்சினம். அதையும் பாக்கக் கிடைச்சுது. அதையொட்டின ஒருநாளிலை சு.வித்தியானந்தனையும் சந்திக்கிற வாய்ப்புக் கிடைச்சுது. எனக்கு பல்கலைக் கழகத்தில படிச்ச, படிச்சுக் கொண்டிருந்த கனபேர் நண்பர்களாயும் இருந்தினம். இந்தக் காரணங்களால எனக்கு அந்தமாதிரிக் கனவுகளும் ஆசையும். தமிழ் மொழியிலைதான் ஓனர்ஸ் செய்ய நான் நினைச்சிருந்தது. அதாலை சமஸ்கிருதத்தை அட்வான்ஸ்ட் லெவலில ஒரு பாடமாய் நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயிர்ப் பயணம், விதி, கனவுச்சிறை (ஐந்து பாகம்),நிலாச் சமுத்திரம் யுத்தத்தின் முதலாம் அதிகாரம் போன்ற நாவல்களையும் எழுதாத சரித்திரங்கள், திசைகள்,என்ற இரண்டு குறுநாவல் தொகுப்புக்களையும், நெருப்பு, இன்னொரு பக்கம் காலக்கனா எனும் சிறுகதைத் தொகுப்புக்களையும் மற்றும் ஒரு விடுதலைப் போராளி என்ற உரைவீச்சையும் கதாகாலம் என்ற மகாபாரதத்தின் மறுவாசிப்பையும் எழுதியுள்ள தேவகாந்தன் மற்றய ஈழத்தின் இலக்கிய எழுத்தாளர்கள் போல் பேசப்பட்டவர் இல்லை. அதற்கு ஈழத்து இலக்கியச் சூழலுக்கு ஏதோ ஒரு விசேட காரணம் இருப்பதாகவே எண்ணிக்கொள்ள வேண்டியிருக்கிறது. சதாகாலமும் நிறைந்த வாசித்தல் எழுதுதல், நிறைந்த குடி, நிறைந்த புகைப்பிடிப்புப் பழக்கமுள்ள ஒருவர் அவர்.கடந்தகாலங்களில் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்தவர். தற்போது கனடாவில் வாழ்ந்துவருகிறார். தீவிர இலக்கிய ஈடுபாடுகொண்ட அவரிடம் கடந்தகால தற்கால இலக்கிய செயற்பாடுகள் குறித்தும் அதனுள் ஓடிவிளையாடும் அரசியல் பெருச்சாளி குறித்தும் கேட்டபோது தன்னுடைய அனுபவத்தினூடாக நிறையவே பேசினார். அந்தப் பேச்சுக்களில் ஒவ்வொரு வரிகளிலும் இன்னும் இன்னும் கேள்விகளே தொடர்கின்றன. அந்த முரண்பாடுகளுடன் இன்னும் ஏதாவது பக்கங்களில் தேவகாந்தனுடன் உரையாட முடியும். தேவகாந்தனுக்கும் அதுவே விருப்பமும்.

படிச்சன். மொழிவாரியாய் தமிழ்ப் படிப்புக்கு சமஸ்கிருதம் கொஞ்சம் உதவியாய் இருக்குமெண்டது அப்ப என்ரை நினைப்பு.

பல்கலைக்கழகத்துக்கு எடுபடாமல் போனவுடனை, என்ரை தீவிரமான வாசிப்புப் பழக்கத்தாலை இயல்பா வந்து எழுத்துத் துறையைத்தான் என்ரை மனம் நாடிச்சிது.அப்ப நான் எழுதத் தொடங்கேல்லை எண்டாலும் நல்ல வாசகனாய் இருந்திருக்கிறன். பள்ளிக்கூடத்தில படிக்கிறபோதே படிப்புக்குச் சம்பந்தமில்லாத நிறைய நாவல்களும் சிறுகதைகளும் சிறுபத்திரிகைகளும்தானே வாசிச்சுக் கொண்டு திரிஞ்சிருக்கிறன். அப்ப எழுத்து நாட்டமாய் இருந்ததால நான் போகவேண்டியிருந்தது பத்திரிகைத் துறையாய்த்தான் இருந்தது. அந்தநேரம் யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகைக்கு உதவி ஆசிரியர் எடுக்கினமெண்டு கேள்விப்பட்டு நானும் விண்ணப்பம் குடுத்தன். தெரிவும் செய்யப்பட்டன். அது ஒரு முக்கியமான திசைவழி மாற்றம் எனக்கு.

நான் 'ஈழநாடு' போன நேரத்தில அ.செ.முருகானந்தன், ஊர்க்குருவி எண்ட புனை பெயரில எழுதின பாலசுப்பிரமணியன் போன்ற முதுபெரும் எழுத்தாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தினம். அங்க போன பிறகு நிறையக் கவிஞர்கள் இ.அம்பிகைபாகன் ச.அம்பிகைபாகன், மற்றது இ.நாகராஜன், ச.பஞ்சாட்சரம் போன்றவர் களுடன் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது.அந்த நேரத்தில 'ஈழ நாடு வாரமல'ரை பொறுப்பெடுத்திருந்தது சசிபாரதி என்ற நண்பர். நான் போன நேரம் ஈழநாடு துவங்கின 10வது ஆண்டுவிழாவைப் பெரிய அளவிலை நடத்த ஏற்பாடும் நடந்துகொண்டிருந்தது. நாவல், நாடகம், சிறுகதை, கவிதைப் போட்டிகள் அறிவிக்கப்பட்டு படைப்புகளைக் கையளிக்க, வேறை காரணங்களுக்காய் நிறைய வடமாகாணத்து எழுத்தாளரும் கவிஞரும் அலுவலகத்துக்கு வந்துகொண்டும் போய்க்கொண்டுமாயிருந்தினம். அண்மையில காலஞ்சென்ற செம்பியன்செல்வன், மற்றும் செங்கையாழியான், செ.கதிர்காமநாதன் போன்றவர்கள் அக்காலகட்டத்திலை எனக்கு அறிமுகமானவர்கள்தான். சமகால ஈழ இலக்கியத்தின்ரை அகலம் தெரிய நான் திகைச்சுப்போனன். கவனிக்கவேணும். நான் அகலமெண்டுதான் குறிப்பிட்டிருக்கிறன். ஆழமான இலக்கிய முயற்சிகள் ஓரளவுக்கே இருந்திருப்பினும், அது நூற்றுக்குத் தொண்ணூறு வீதமும் வடமாகாணத்துக்கு வெளியிலை நடந்ததாய்த்தான் நான் அப்பவே கருதியிருந்தன். இதுவொண்டும் அரசியல் சார்ந்த விசயமில்லை. வாழ்வியல் சார்ந்த விசயம்தான். இதைப்பற்றிச் சந்தர்ப்பம் வந்தால் பிறகு விரிவாய்ப் பாப்பம்.

துவங்கின விசயத்துக்கு வாறன். அதுவரைக்கும் எனக்காக எனக்குள்ளை எழுதிக்கொண்டிருந்த நான் கொஞ்சம் வெளியால எழுதத் துவங்கினன். அப்ப சிறுகதைதான் எனக்கு வாய்ப்பான உருவமா வந்தது. முதல் சிறுகதையும் எழுதியாச்சு. அதுவும் நான் தினசரி ஈழநாடு அலுவலகத்துக்குப் போய் வந்து கொண்டிருக்கேக்கை நான் வழியிலை அவதானிச்ச ஒரு சம்பவத்தை மூலமாய்க் கொண்டதுதான். இப்ப எனக்குள்ளை ஒரு தயக்கம். நான் ஈழநாட்டில வேலை செய்யிறன். என்ரை சிறுகதையை ஈழநாடு பத்திரிகையிலயே கொடுத்தாப் போடுவினம். ஆனா எனக்கு அது விருப்பம் இல்லை. நான் வேலை செய்யிற பத்திரிகை எண்டதால எனது சிறுகதை தகுதி குறைவாய் இருந்தாக் கூட போடப்படக்கூடிய வாய்ப்பு வரும். அதுக்காக, வாரம் வாரம் கண்டியில இருந்து வெளிவந்துகொண்டிருந்த 'செய்தி' எண்ட பத்திரிகைக்கு அனுப்பினன். அதில வெளிவந்த என்ரை முதல் சிறுகதைதான் 'குருடர்கள்'.

### அந்தக் காலகட்டத்திலை சுமாராய் எத்தனை சிறுகதைகள் எழுதியிருப்பீர்கள்?

'குருடர்க'ளுக்கு நல்ல பாராட்டு இருந்தது. தொடர்ந்து எழுத உற்சாகம் வந்தது. பிறகு 'சிந்தாமணி', 'மல்லிகை' மற்றும் 'ஈழநாடு வாரமலர்' போன்றவற்றிலயும் எழுதினன். எண்டாலும் பெரிசாய் எழுதிக் குவிச்சிடேல்லை. சுமாராய் ஒரு இருபத்தைஞ்சு சிறுகதையள் எழுதியிருப்பன். சுமார் இருபத்தைஞ்சு வருசத்திலை சுமாராய் இருபத்தைஞ்சு சிறுகதையள் பெரிய தொகையில்லைத்தானே? எண்டாலும் அதுக்குள்ளையே சில நல்ல சிறுகதையள் இருக்கு. இப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிலை ஒண்டுகூட என்னிட்டை இல்லை. அதையெல்லாம் தேடியெடுத்துத் தொகுப்பாய்க் கொண்டுவாற ஒரு எண்ணமிருக்கு இப்ப. பாக்கலாம்.

**எழுதத் துவங்கின காலத்திலையே வருசத்துக்கு ஒரு சிறுகதையெண்டது சரியான குறைவு. அதுக்கேதாவது பிரத்தியேகக் காரணம் இருக்கேலுமா?**

பிரத்தியேகக் காரணமில்லை, பொதுக்காரணம்தான் இருக்கு. என்ரை சூழலிலை எங்கையும், தமிழ்ப் பரப்பிலை வெகுவாயும் இருந்த இலக்கியத்தின்ரை கருத்தியல்கள் குறிச்சு எனக்குள்ளை பிரச்சினை இருந்துகொண்டிருந்தது. என்னைச் சூழ இருந்த இலக்கியத்துக்கப்பாலை ஒரு சமுதாய மாற்றத்துக்கான இலக்கிய முயற்சி நடந்துகொண்டிருந்ததை நான் அவதானிச்சன். உதாரணமாய் டானியல், நீர்வை பொன்னையன், டொமினிக் ஜீவா, செ.கணேசலிங்கன் போன்றவை அப்பத்தைய சமூகம் அடைஞ்சுகொண்டிருந்த வலியளை எழுதிக்கொண்டிருந்தினம். ஆழமற்றதாயிருந்தாலும் அதுகளிலை அர்த்தமிருந்தது. ஆழம் - அர்த்தம் எண்ட விசயத்தை படைப்பு மொழியிலை கலைத்துவம் - கரு அல்லது சமூக பிரக்ஞை எண்டு சொல்லலாம் என நினைக்கிறன். இது ஒரு படைப்பாளிக்கு மிகமிகச் சிக்கலான ஒரு நிலைமை.

இப்ப பாருங்கோ, அர்த்தமில்லையெண்டு யாழ் இலக்கிய வட்டத்தோடையும் சேராமல், ஆழமில்லையெண்டு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தோடையும் இணையாமலுமிருந்தால் ஒரு படைப்பாளி எந்த இடத்திலையும்தான் ஒரு அநாமதேயம். தொகுப்பாய் வராத எழுத்தாளர்கள் இலங்கை விமர்சகர்களாலை பேசப்பட்டிருக்கினம். இந்த இரண்டு பக்கத்திலை ஒரு பக்கத்தாலையெண்டாலும் பேசப்பட்டிருக்கினம். ஏனெண்டா அவை குழுநிலை சார்ந்தவை. ஆனால் தேவகாந்தன் பேசப்படேல்லை. ஏன்? அவன் இந்த இரண்டு பக்கத்திலை எந்த இடத்திலையும் இல்லை எண்டதுதான். இதாலை அவனுக்கொண்டுமில்லை. விமர்சகர்கள்தான் காலத்தின் கேள்விகளைச் சந்திக்கவேண்டி வரும். இது அவையின்ரை பிரச்சினை.

தானொரு தனிப் பக்கமாய்த் தனியொதுங்கிருக்கிறது 'ஊரோடை ஒத்தோடு' எண்ட நீதிக்கு முரணாய் வரேல்லையோ எண்டா, வரேல்லைத்தான். எந்த அம்சத்திலை போகேலாமலிருந்துதோ அங்கதான் போகாமலிருந்தனே தவிர, போகக்கூடின அம்சத்திலை போய் இணைஞ்சன்தானே. இயல்பிலயே மார்க்சிய ஈடுபாடு கொண்டிருந்த நான், சமூக அரசியல் காரணங்களுக்கான விசயங்களிலை சேர்ந்தியங்கினன்தானே. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்திலை ஆதரவாளனாய் மட்டுமில்லை, அதிலை ஒரு போராளியாயே இருந்தன். சித்தாந்தத்திலை நம்பிக்கையிருந்ததாலை, இடதுசாரி இயக்கத்திலை நம்பிக்கையிருந்தது. கொம்யூனிஸ்டுக் கட்சியிலை ஆதரவிருந்தது. நான் கட்சியிலை அங்கத்தவனாய் எப்பவும் இருக்கேல்லை. அங்கத்தவனாய் இருந்திருந்தாப் பிழையுமில்லை. அந்த நேரத்திலை பிழையில்லை.

**இப்ப பிழையா?**

நூற்றுக்கு நூறு வீதம். ஒருகாலத்திலை, நாங்கள் மார்க்சீயத்தைப் படிக்க ஆரம்பிச்ச காலத்திலையெண்டு வையுங்கோவன், இலங்கை அரசியல் பிரச்சினையை ஒரு இடதுசாரி அரசாங்கத்தாலைதான் தீர்த்துவைக்க ஏலுமெண்டு நாங்கள் மனசார நம்பினம். இன ஐக்கியம், ஒரு நாடு, சோசலிச சமுதாயமெல்லாம் எங்கடை கனவுகளாயிருந்தது. மே தினத்துக்கு லொறி லொறியாய் யாழ்ப்பாணத்திலையிருந்து கொழும்பு போய் சிங்களச் சகோதரர்களோடை ஊர்வலங்களிலை கலந்துகொண்டது அந்தக் கனவுகளிலை நம்பிக்கையை வளத்துவிட்டுது. ஆனா…இண்டைக்கு…? அந்த நம்பிக்கையெல்லாமே தகர்ந்துபோச்சு. ஒரு இணைக்கப்பட இயலாத உடைவுக்கு சிங்கள - தமிழ் உறவு வந்திட்டுது. எல்லாத்துக்கும் தமிழின, சிங்கள பேரினவாத, இடதுசாரிக் கட்சிகளெண்ட காரணங்கள் கொஞ்சம் கொஞ்சம் இருந்தாலும், முதல் காரணமாய் நான் இடதுசாரித் துரோகத்தைத்தான் சொல்லுவன். 1983 யூலை கலவரக் காலத்திலைகூட இந்த உலகத் தொழிலாளரே, ஒன்றுபடுங்கள்! என்று கோஷம் போட்டுக்கொண்டிருந்த கொம்யூனிசவாதிகள் வாய் திறக்கேல்லை. அது எனக்குப் பெரிய ஆச்சரியம்.

ஒரு தமிழ் அரசியல்வாதி, சிங்கள அரசியல்வாதி, இடதுசாரி அரசியல்வாதி எண்டு மூண்டுபேரையும் எனக்கு முன்னாலை நிப்பாட்டி, இண்டைக்கு இந்த நாடு இப்பிடிச் சிதைஞ்சு, சிதறி, அல்லோலப்பட்டுக் கிடக்கிறதுக்கு மூலகாரணமாய் இருந்தவனெண்டு நான் நம்புற ஒரு வாதியை அடிக்கலாமெண்டு சொன்னால், கொஞ்சமகூடத் தயங்காமல் இடதுசாரிக் கட்சி அரசியல்வாதியை அடிச்சே போடுவன்.

சிங்கள இனவாதிகளின்ரை தரப்படுத்தல் முறை காரணமாய்க் கல்வி பாதிக்கப்பட்ட நான், இடதுசாரிகளின்ரை போலித்தனத்தாலை அரசியல் துரோகத்துக்கும் ஆளானன் எண்டு சொல்ல வேணும். நெஞ்செல்லாம் வாழ்க்கை முழுதும் வலியே தொடர்ந்தது.

இந்த வலியை, எழுதித்தான் அடக்கினன். 2003ம் வருசம் வெளிவந்த என்ரை 'யுத்தத்தின் முதலாம் அதிகாரம்' நாவல் பேசுறது இதைத்தான். நிகழ்வும் கற்பனையுமான அப் புனைவு நாவலின் பின்னணி முழுக்க ஒளிர்வது இந்தச் சமூக எதார்த்தம்தான். ஆயுதப் போராட்டத்தின்ரை மூலமே இஞ்சையிருந்து துவங்கிறதாய்த்தான் நான் காணுறன்.

**இதுபோன்ற கருத்துக்களின் அடிநாதமாயே உங்கள் இடைக்காலப் படைப்புக்களும் இருந்ததாய்ச் சொல்ல முடியுமா?**

அப்பிடிச் சொல்லேலாது. எனக்குள்ளை அப்ப தெளிவின்மைதான் இருந்தது. இதை வெளிப்படையாய்ச் சொல்லுறதிலை எனக்கு வெக்கமில்லை. கலை கலைக்காகவே, கலை மக்களுக்காகவே எண்ட கோட்பாடுகளில எனக்குச் சார்பெடுக்கேலாமலிருந்தது நிஜம். ஒரு தளம்பல் இருந்துகொண்டேயிருந்தது. ஒருபக்கம் டானியல், நீர்வை பொன்னையன், இ.முருகையன் போன்றவை. மற்றப்பக்கம் எஸ்.பொன்னுத்துரை, மு.தளையசிங்கம், நீலாவணன், மஹாகவி போன்றவை. பின்னவை தரத்தாலை நிமிர்ந்து நிண்டினம். இதுக்காக இடதுசாரி எழுத்தாளர்கள் எழுதினதெல்லாம் தரமில்லாததெண்டு நான் சொல்ல வரேல்லை. இதை திரு. எம்.வேதசகாயகுமார் கனடாக் □காலம்□சஞ்சிகையில எழுதினநேரம் அதுக்கு எதிர்வினையாற்றினது ஈழத்துத் தமிழ்ச் சூழலிலை நான் ஒருதன்தான். அவை எழுதினதிலையும் தரம் இருந்தது. நீர்வை பொன்னையன்ரை 'மேடும் பள்ளமும்' சிறுகதைத் தொகுப்பிலை மிகஅற்புதமான சிறுகதைகளெல்லாம் இருக்கு. ஆனாலும் ஒட்டுமொத்தமான எழுத்து ஒப்பீட்டளவிலை தரம் குறைவுதான். இப்பிடியொரு சார்பு நிலைச் சிக்கல் இருந்ததாலை, என்ரை எழுத்துக்கள் பெரும்பாலும் ஒரு மௌனகத்தோடேயே வெளிவந்ததாய்ச் சொல்லவேணும். பின்னாலை வந்த என்ரை படைப்புக்கள் இலக்கியத்தில தரத்தை முன்வைக்கும் எழுத்துக்களாய்த்தான் இருந்திருக்கு.

1981ம் ஆண்டு ரண்டாம் தடவையாய் ஈழநாடு எரிக்கப்படுறதுக்கு முந்தி நான் சொந்தக் காரணங்களுக்காக பத்திரிகை நிறுவனத்திலிருந்து விலகியிட்டன். விலகிப்போய் விவசாயம் செய்துகொண்டு இருந்தன். உடையார்கட்டிலை காடு வெட்டினதெல்லாம் அப்பதான். அது ஒருகாலம். தனிமனித அனுபவங்களுக்கான காலம்.

ஈழநாட்டில் இருந்த காலம் மிக முக்கியமானது. ஏனெண்டா,என்ரை படைப்புக்கள் அச்சுருவிலயாச்சும் வந்தது இந்தக் காலத்திலதான். 1967ம் ஆண்டு ஈழநாட்டில சேர்ந்தனான். 68ம் ஆண்டு என்ரை முதல் சிறுகதை வந்தது. 1984ம் ஆண்டு தமிழ்நாட்டுக்குப் புலம்பெயர்ந்த பின்னர்தான் கூடுதலாய் எழுதவும் வாசிக்கவும் வாய்ப்புக் கிடைச்சுது. தினமணிக் கதிர், கல்கி, கணையாழி போன்ற இடைநிலைப் பத்திரிகைகளிலும், கதைசொல்லி, கல்வெட்டுப் பேசுகிறது, சுந்தர சுகன், நிழல், சதங்கை போன்ற சிற்றிதழ்களிலும் பரவலாய் எழுதினன். அப்பிடி எழுதின சிறுகதையள் மூண்டு தொகுப்பாய் வந்திருக்கு. முதலாவது 'நெருப்பு', ரண்டாவது' இன்னொரு பக்கம்', மூண்டாவது 'காலக்கனா'.

**மல்லிகையில் எழுதியதாகக் குறிப்பிட்டீர்கள். மல்லிகையின் ஆசிரியரான டொமினிக் ஜீவாவும் ஒரு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இடதுசாரிப் பாரம்பரியத்திற்கூடாக தனது வேலைத் திட்டத்தைப் பகிர்ந்துகொள்பவர். மல்லிகையுடனோ அல்லது டொமினிக் ஜீவாவுடனோ சேர்ந்தியங்கிய சந்தர்ப்பங்கள் ஏதாவது உண்டா?**

இல்லை. அதற்குரியதாய் நடைமுறை அமையேல்லை. ஆனால் ஓரளவுக்கு இடதுசாரிப் பத்திரிகை எண்ட வகையில ஒரு ஆதரவு இருந்தது. அப்பவே ரஷ்ய சார்பு, சீன சார்பு எண்ட பெரிய பிளவு இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளை வந்திட்டுது. நான் அப்ப தீவிர ஆதரவாளனாய் இருந்தது சீனசார்புக் கொம்யூனிஸ்ட் கட்சியோடதான். அதாலை மல்லிகை ஜீவாவோடு நெருங்கிப் பழகிற வாய்ப்பு இல்லாமல் போச்சு. அவர் ரஷ்ய சார்பு. எனக்கு டானியலோட இருந்த உறவு ஜீவாவோட இல்லை. டானியல் சீனச் சார்பு கொம்யூனிஸ்டுகட்சி.

**ட்றிபேக் கல்லூரியில் அட்வான்ஸ்ட் லெவல் படித்தும் பல்கலைக்கழகம் போக முடியாமல் போனதற்கு தரப்படுத்தல்தான் காரணம் என்று கூறியிருந்தீர்கள். அந்த நேரத்தில் தரப்படுத்தல் முறை அமுல்படுத்தப்பட்டபோது உங்கள் உணர்வு எப்படியிருந்தது? இப்போது அதை நீங்கள் எப்படி உணர்கிறீர்கள்?**

அந்த நேரத்தில மாணவனாய் இருந்து தரப்படுத்தலால் பாதிக்கப்பட்ட முதல் கட்டத்தில, எனக்கு ஒரு அபரிமிதமான வெறுப்பு அதன்மீது இருந்ததுதான். நான் பாதிக்கப்பட்ட காரணத்தாலையும் அது ஏற்பட்டிருக்கலாம். இதை ஊக்குவித்ததுக்கு வேறை காரணமும் இருக்கு.

தரப்படுத்தல் எண்டது அந்த நேரத்துத் தமிழ்க் கட்சிகளாலையும் வரவேற்கப்படேல்லை. அதுக்கு எதிராய்த்தான் இருந்தினம். அதுக்காகவே நான் தரப்படுத்தலை எதிர்த்ததாய்ச் சொல்லேலாது. சுதந்திரன் வாசகனாய் இருந்த காலத்தைவிட, தேசாபிமானியின்ரையும், தொழிலாளியின்ரையும் வாசகத் தாகத்தோடைதான் நான் கனகாலம் இருந்திருக்கிறன். அதாலை என்ரை பார்வை பெரிசாய் வழி தப்பிச் செல்ல வாய்ப்பில்லை. தரப்படுத்தல் எண்டது சமூக அக்கறை சேர்ந்த விசயம். அது அரசியல் காரணத்தோடை வந்ததைத்தான் நான் எதிர்க்கிறன். சிங்கள பேரினவாதிகள் எப்பவுமே இப்பிடித்தான். தனிச் சிங்களச் சட்டத்துக்கும் தரப்படுத்தலுக்கும் எனக்கு பெரிய வித்தியாசம் தெரியேல்லை.

இந்தியாவிலை நான் இருந்த காலத்திலைதான் வி.பி.சிங் பிரதமராய் இருக்கேக்குள்ளை மண்டல் கமிசன் அறிக்கையை சட்டரீதியாய் நடைமுறைப்படுத்த நடவடிக்கையள் எடுக்கப்பட்டது. இந்தியாவே கொதிச்செழுந்திட்டுது. மண்டல் கமிசன் அறிக்கை சமூக அக்கறையின் மேலானது. சிங்கள அரசாங்கத்தின்ரை தரப்படுத்தல் இனத்துவேசம் காரணமானது. அதாலை இரண்டும் ஒப்பில்லை.

தரப்படுத்தலின்ரை நியாயம் நியாயமின்மை எண்டதை அதன் நோக்கத்தை வைச்சுத்தான் பாக்கவேணும். பின்தங்கின ஒரு பிரதேசம் அல்லது ஒரு சமூகம் அல்லது ஒரு இனம் முன்னேறுறதுக்கான ஒரு வாய்ப்பாயிருக்க இந்தத் தரப்படுத்தல் முறை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், அதை நியாயம் எண்டுசொல்ல எந்த இடத்திலையும் எனக்குத் தயக்கமில்லை. அந்த நேரத்திலை விபரம் அதிகம் தெரியாத வயதானபடியால் அதிகமான எதிர்ப்பு அல்லது அதிகமான வெறுப்பெண்டு இருந்திருந்தாலும், இப்ப கூட அந்தச்செயற்பாட்டில சமூக நியாயம் இருக்கிற தாய்ச் சொல்ல என்னாலை ஏலாமல்தான் இருக்கு. அந்த நேரத்திலை தமிழ் மாணவர்களுக்கிருந்ததைவிட, சிங்கள மக்களுக்கான பல்கலைக் கழகங்கள் அதிகமாய் இருந்தது. வித்தியோதயா, வித்தியாலங்கார போன்றவை சிங்கள மாணவர்களுக்கானவை. ஆனால் பெரதெனியா மட்டும்தான் இரண்டினங்களுக்கும் பொதுவானதாய் இருந்தது. இப்படியிருக்க, கூடியளவு பல்கலைக்கழக இடங்கள் சிங்கள மாணவர்களுக்குப் பறிபோனது, அதாலை தரப்படுத்தல் நடைமுறைப்படுத்தப்பட்டதெண்டு எங்கடை இடதுசாரித் தோழர்கள் சொன்னதை நான் நம்பேல்லை.

**தரப்படுத்தல் முறை தமிழ் சிங்கள மாணவர்களுக்கிடையிலான இனப்பிரிவின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகச் சொல்கிறீர்கள். உண்மையில் பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட தரப்படுத்தல் முறை பெரும்பாலான பின்தங்கிய மாவட்ட தமிழ் மாணவர்களுக்கு நன்மை பெறவைத்த விடயம் தானே. யாழ்ப்பாணத்தைத் தாண்டி அநேக மாணவர்களுக்கு தரப்படுத்தல் முறை பயனளித்ததை ஒப்புக் கொள்ளத்தானே வேண்டும்? அதை எப்படி நிராகரிப்பது? யாழ் மாவட்ட மாணவர்கள் தமது கல்விக்காலம் முழுவதையும் யாழ்ப்பாணத்தில் படித்துவிட்டு பல்கலைக்கழக பரீட்சையைமட்டும் பின்தங்கிய பிரதேசத்தில் வந்து எழுதி அந்த ஒரு குறைந்த பட்ச உரிமையையும்தட்டிப்பறிப்பதை அறிந்திருக்கிறீர்களா?**

தரப்படுத்தல் முறை வந்தாப்பிறகுதான் இவைக்கு அதிக சந்தர்ப்பங்கள் கிடைச்சதெண்டு சொல்ல முடியாது. யாழ் பல்கலைக் கழகம் முதலிலை உருவாச்சுது. பிறகு மட்டக்களப்பு பல்கலைக் கழகம். இப்ப கடைசியாய் வவுனியாவிலை ஒண்டு. இந்தப் பல்கலைக் கழகங்கள் வந்தாப்பிறகுதான் பின்தங்கிய பிரதேச மாணவர்களுக்கு அதிக சந்தர்ப்பம் கிடைச்சதாய் நான் சொல்லுவன். இதை முதல்லேயே அரசாங்கம் செய்திருக்கலாம். தமிழ்ப் பகுதி மாணவர்களுக்கு தமிழ்ப் பகுதியிலையும், சிங்கள மாணவர்களுக்கு சிங்களப் பகுதியிலையும் பல்கலைக் கழகங்களை உருவாக்கிற திட்டம் அரசாங்கத்துக்கு நிச்சயமாய் இருந்தது. அதை நிறைவேற்றுறதை விட்டிட்டு ஒரு பகுதியினுடைய படிப்பு வசதியைக் குறைப்பதனூடாய்த்தான் அரசாங்கத்தாலை இதைச் செய்ய முடிஞ்சதெண்டதை என்னாலை எப்பவுமே ஒப்புக்கொள்ள ஏலாது.

இந்த விசயம் - நீங்கள் சொன்ன வேறு பிரதேசங்களிலை வடபகுதி மாணவர்கள் வந்து பரீட்சையெழுதி அந்தப் பிரதேச மாணவரின்ரை பல்கலைக் கழகப் பிரவேசத்தைப் பாதிக்கிற விசயம் - நான் முந்தியே அறிஞ்சதுதான். யாழ்ப்பாணத்திலை சித்தியடையாமல் போற சிலபேர் இப்பிடிச் செய்திருக்கினம்தான். இப்பிடி எங்கை நடக்காது? ஒரு ஒழுங்கின்மையின்ரை அடையாளமிது. இது எங்கையும்தான் ஏற்படலாம். பஸ் ஏறுவதற்கு நிக்கிற கியூவிலை ஒராள் வந்து இடிச்சுத் துளைச்சுக்கொண்டு நிக்கிறேல்லையே, அதுமாதிரி இது.

மற்ற விசயம், இது நடந்து இப்ப கால் நூற்றாண்டுக்கு மேலை ஆகுது. மண்டல் கமிசன் விசயமெல்லாம் சுமாராய் ஒரு பத்தாண்டுகளுக்கு முந்தினது. அதையும் இதையும் ஒப்பிடுகிறதிலையும் கால வித்தியாசம் ஒரு பெரிய தாக்கமாய் வந்து நிண்டு இடைஞ்சல் செய்யும். இன்னுமொண்டு. தரப்படுத்தல், யாழ் நூலக எரிப்புக்கும் முற்பட்டது. 1983 கலவரத்துக்கும் முற்பட்டது. இண்டைய நிலைமைக்கு வேறைவேறை மிகமுக்கியமான பிரச்சினைகளெல்லாம் வந்து முன்னாலை நிண்டுகொண்டிருக்கு. யுத்தம் ஒரு மகாபிரச்சினை. இன அழிப்பின் உச்சகட்டம். தரப்ப டுத்தலெண்டது ஒருகாலத்திய இனத்துவேசத்தின் அடையாளம் அவ்வளவுதான்.

**ஈழத்து இலக்கியப் பிரதிகளில் கவிதை நீண்ட வளர்ச்சிப் போக்கினை எட்டவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது? தற்போது போர்க்காலக் கவிதைகள் -புலம்பெயர்ந்து போனபின் எழுதும் இழப்பின் துயரக் கவிதைகள்- இவைதான் ஈழத்துக் கவிதைகள் என்று அடையாளப்படுத்த முடியுமா?**

நிச்சயமாய் அப்பிடி இல்லை. சங்கத் தொகுப்புக்குப் பின்னாலை, பாரதி சகாப்தத்துக்குப் பிறகு தமிழ்ப் பரப்பிலயே கவிதை சிறப்பாய் வளந்ததெண்டால் அது ஈழத்திலையெண்டுதான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லவேணும். நாவல் சிறுகதையெண்டு வேறை எந்த இலக்கிய வடிவத்தைவிடவும் ஈழம் கவிதையில முன்னுக்குத்தான் நிக்குது. தமிழ்நாட்டிலையும் பாரதி சாகாப்தத்திலயிருந்து வீச்சாய் வளந்தது கவிதைதான்.

பிறகு அங்கை ந. பிச்சமூர்த்தியின்ரை செல்வாக்கை அதிகம் பெற்று ஒரு திசையிலையும், ஈழத்தில பாரதியின் தொடர்ச் சியாய் வேறொரு திசையிலையும் அது வளந்ததெண்டு சொல்லலாம். பாரதியின்ரை செல்வாக்கோட ஈழத்தில கவிதை இருந்த காலத்தில் தான் எங்களுக்கு மிகப்பெருங் கவிஞர்களாக சிலர் உருவாகினம். மகாகவி, முருகையன், நீலாவாணன் எண்டு முக்கியமாய் இந்த மூண்டு பேரையும் இந்த இடத்திலை சொல்லலாம்.

இவையின்ரை கவிதைப் போக்குகளைத் தனித்தனியாய்த் தான் பாக்கவேணும். அவைக்குள்ளையும் பிரிநிலைக் கோடுகள் இருக்கு. மேலெழுந்தவாரியாய்ச் சில விஷயங்களைச் சொல்லுறன். மண்,பிரதேசம் இந்தமாதிரியானஉணர்வு மகாகவியின் கவிதைக ளிலை அதிகம். அதுபோல நீலாவாணனின் கவிதையளிலும் அது தூக்கலாயிருக்கும். அதாவது, அவரது கிழக்கு மாகாண வளம் அவரது கவிதைகளில் அதிகம் இருக்கும். இதுக்கான ஒரு முக்கிய காரணமாய் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை நான் சொல்லுவன். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மண்வளத்தைப் பேசுகிற இலக்கியம் என்ற கோசத்தை முன் வைச்சுது. மண்வாசனையெண்டு பொதுவாய்ச் சொல்லிக் கொண்டினம். ஈழத்து நிலப்பரப்பைப் பேசுதல்,அதன் வளங்களைப் பேசுதல், அதன் மக்களைப் பேசுதல், அவர்களின் பேச்சுமொழியைப் பாவனை யாக்குதல் எண்டவை அதன் குணாம்சங்களாயிருந்தன. இவை யந் திரத்தனமாய்ப் பாவிக்கப்பட்டன எண்டு ஏ.ஜே.கனகரட்னா சொல்லுறதும் மெய். அதாலை போலி இலக்கியங்கள் எழுந்தனவெண்ட நிஜத்தையும் நான் இங்கே சொல்லவேணும். சமூகரீதியான எழுச்சியை அது வெளிப்படுத்தியிருந்தபோதிலையும், இலக்கியரீதியாய்ப் பெரிய சாதனைகளை நடத்தினதாய்ச் சொல்லேலாது. ஆனா ஒண்டு. தமிழ் நாட்டிலை தலித் இலக்கியப் பிரஸ்தாபம் எழுகிறதுக்கு முந்தி மக்கள் இலக்கியம் அல்லது மண்வாசன இலக்கியம் எண்ட இந்த எழுத்து ஈழத்திலை பதிவாகியிட்டுது. டானியலையெல்லாம் தமிழிலை தலித் இலக்கிய முன்னோடியெண்டு அ.மார்க்ஸ் சொல்லுவார். 'இழிச னர் இலக்கியம்' எண்டு பலராலையும் கேலிசெய்யப்பட அந்த இலக்கியவகையை வளத்தெடுத்தவர் அவர். இந்த மண்வாசைன வீச்சு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில இல்லாத எழுத்தாளரிட்டையும் ஏற்பட்டுது. இந்தத் தாக்கத்தில எழுதியவர்தான் மஹாகவி. இதன் மூலம் ஈழத்து இலக்கியம் முன்னேறினது எண்டுதான் நினைக்கிறன்.

இதுக்கு அடுத்த கட்டத்தில வந்தவைதான் வ.ஐ.ச.ஜெய பாலன்,சேரன், சண்முகம் சிவலிங்கம் போன்றவை. இவையின்ரை கவிதைப் போக்குகள் முந்தைய தலைமுறையினரின்ரை கவிதைப் போக்குகளை விட நவீனமாக, புதுக்கவிதையின் அம்சங்களோடை வந்துது. முந்தின தலைமுறையினரின்ரை காலம் அரசியலிலை இனப்பிரச்சினையும், சமூகத்திலை சாதிப் போராட்டமாயும் இருந்த காலம். பின்னாலை வந்தவையை சமூகப் பிரச்சினையும், யுத்தமும் எதிர்கொண்டுது. பாடு பொருள் இப்ப வேறாயிட்டுது. இவைக்கு கொஞ்சம் பிந்தி வந்ததாய்ச் சொல்லக்கூடிய அ.யேசுராசா, அஸ்வகோஷ், நஷ்மி, மு.பொன்னம்பலம், சோலைக்கிளி போன்றவை எதிர்கொண்டது இதே எதார்த்தத்தையேயெண்டாலும் தீவிரமானதாய் எதிர்கொண்டினம். இண்டைக்கு போராளிகளே படைப்பாளியளாயும் இருக்கினம். 'போர் உலா' போன்ற புதினம் தமிழ்நாட்டுச் சூழலிலை வரேலாது. வரவேயேலாது. அதுமாதிரித்தான் மாலதி, மைதிலி, தான்யா, அனார், சிவரமணி, செல்வி போன்றவையின்ரை கவிதையளும். இவையெல்லாம் போரின்ரை வார்ப்புகள். கி.பி.அரவிந்தன், சுகன், நட்சத்திரன் செவ்விந்தியன், செழியன், திருமாவளவன், பா.அகிலன் போன்றவையும் இந்தமாதிரித்தான். உலகமகா யுத்த காலங்களிலையும் அதையொட்டியும் மிகச் சிறப்பான கவிதையள் உலக இலக்கியப் பரப்பிலை பாடப்பட்டன என்பினம். மெய். முப்பதாண்டுப் போர்ச் சூழலிலை ஈழத்திலையும், ஈழத்தவராலை வெளிநாடுகளிலையிருந்தும் பாடப்பட்ட கவிதையள் பல அவைக்கு நிகரானவை இல்லாட்டி அவைக்குக் கொஞ்சம் மேலானவை யெண்டதிலை எனக்கு வேறை கருத்தில்லை.

**தற்போது போர்க்காலக் கவிதைகள் - புலம்பெயர்ந்து போனபின் எழுதும் இழப்பின் துயரக் கவிதைகள் - இவைதான் ஈழத்துக் கவிதைகள் என்று அடையாளப்படுத்த முடியுமா?**

இக் காலகட்டத்தின் விசேஷமான அடையாளமே போர்ச் சூழல்தானே? இதைவிட்டுக் கவிதை வேறையெங்கை போகேலும்? எண்டாலும் ஒண்டை நாங்கள் மறந்திடக்கூடாது. மனித இருப்பு இன்னும் இருக்கு. மரணம்போலவே ஜனனமும் நடக்குது. கண்ணீரைப் போல காமமும் வருகுது. ஒரு உறவு போக இன்னொண்டு வருகுது. எல்லாம் இயங்கிக்கொண்டே இருக்கு. அப்ப என்ன வித்தியா சமெண்டா... நேற்று மாதிரி இண்டைய வாழ்க்கை இல்லையெண்ட துதான். போர்க்காலக் கவிதை இதையெல்லாமே பேசுதுதான்.

புலம்பெயர்ந்த இடத்திலைகூட இழப்புமட்டுமே வலியில்லை. இங்கையிருக்கிற கலாச்சாரச் சிக்கல், அடையாளச் சிக்கல் எல்லாமே பிரச்சினைதான். நிறச் சிக்கல், மொழிச் சிக்கல் இல்லையெண்டு சொல்லவேண்டாம். இல்லையெண்டமாதிரி ஒரு தோற்றம்தான் இருக்கு. இதெல்லாம்தான் கவிதைப் பொருள்.

ஈழத்துக் கவிதைகள் எல்லாம் போர்க் காலக் கவிதையள், புலம்பெயர்ந்தோர் கவிதையெண்டது வெறும் இழப்பின் துயரம் உள்ளதுதான் எண்டதெல்லாம் ஒரு மாயத் தோற்றத்தின் விளைவு. இல்லாட்டி, ஒரு மாயத் தோற்றத்தை உண்டாக்கிறதுக்கான முயற்சி. தமிழ்நாட்டிலை சில வருஷங்களுக்கு முந்தி இப்பிடியொரு முனைப்பு எழுந்ததை இப்ப என்னாலை நினைச்சுப் பாக்க முடியுது.

**ஒரு சிலரைத் தவிர்த்து அநேகமானவர்களது கவிதைகளை ஒன்றாக்கி எழுதியவர்களது பெயரை நீக்கி விட்டால் எல்லாம் ஒருவரது கவிதைகள் என்று குறிப்பிடும் நிலையில்தானே ஈழத்துக் கவிதைகளது போக்கு இருக்கின்றது?**

அப்பிடிச் சொல்லேலாது. இந்த யுத்த, புலம்பெயர்வுச் சூழலிலை அநேகமாக எல்லாரின்ரை உணர்வுகளும், பாதிப்புக்களும் ஒரேமாதிரி இருக்குதெண்டு சொல்லலாம். அதாலை, எடுக்கிற பொருள் ஒண்டாயிருக்கிறதுக்கு, அதாவது ஒரேமாதிரி இருக்கிறதுக்கான வாய்ப்பு அதிகம். கவிதையளும் ஒரே விஷயத்தைப் பேசுறதுபோல இருக்கும். ஆனா கவித்துவம் வேறை. அது வித்தியாசமானது. ஒவ்வொருத்தரிட்டையும் ஒவ்வொருமாதிரி அது வெளிப்படும். வெளிப்படவேணும். வெளிப்படாட்டி அது நல்ல கவிதையில்லை. எண்டாலும் சில கவிஞர்கள் வெகுவாக வேறை மாதிரிப் பேசேல்லை எண்டுதான் நினைக்கிறன். தீவிரமாய்ச் சொன்ன நேரத்திலை, கவித்துவமாயோ, வித்தியாசமாயோ அவை சொல்லேல்லை.

சுபத்திரன்ரை கவிதையள் உணர்வு நிறைஞ்சவை. சாதிப்போராட்ட காலத்தில சுபத்திரனது கவிதையள் பலரை எழுச்சிப்படுத்திச்சுது. 'சங்கானைக்கு என் வணக்கம்' எண்ட கவிதை மிகமுக்கியமானது. காசி ஆனந்தனது கவிதையள்மாதிரி இவரின்ரை. ஆனா காசியானந்தனது கவிதையள் காலத்திலை நிக்காது. அவரது பல கவிதையளை கவிதையெண்டே என்னால இப்ப எடுக்க ஏலாது. பசுபதி வித்தியாசமாய் எழுதினவர். மக்கள் கவிஞரெண்டு சொல்லக் கூடியளவுக்கு எழுதினவர். சுபத்திரன்ரையும் பசுபதியின்ரையும் கவிதையள் பாக்க ஒண்டாயிருக்கும். ஆனா கவித்துவத்தாலை அவை தனித்தனியாவேதான் நிக்கும். புலப்பெயர்வுக் கவிதையளோடை இந்த வர்க்கப் போராட்டக் கவிதைத் தன்மையளை நாங்கள் ஒப்பிட்டுப் பாக்க ஏலும்.

புதுக்கவிதை தோன்றின ஆரம்பத்தில அதுக்கெண்டு யாப்பு இல்லாமல் எதையும் சொல்லலாமெண்ட சுதந்திரப் பாங்கில மயங்கி பலபேர் எழுதிச்சினம் எண்டதை நாங்கள் இப்ப நினைச்சுப் பாக்கலாம். எப்படியும் எழுதலாமெண்டு இருந்தபடியா எழுதிச்சினம். சிலபேர் வசனங்களையே சிதைச்சு கவிதை மாதிரித் தந்தினம். புதுக்கவிதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிக மலினப்பட்டுப் போச்சு. அதுக்குமேலை சந்தேகமே வந்திட்டுது, காலத்திலை இது தமிழிலை நிண்டுபிடிக்கக்கூடின வடிவமாய் இருக்குமோவெண்டு.

அதைப்போல ஒரு வீச்சு புலம் பெயர்ந்தவர்களின்ரை பக்கத்திலையும் உருவானதுதான். பலபேர் எழுதியிருக்கினம். நிறைய எழுதியிருக்கினம். அவையளின்ரை ஏதேனும் எழுத்து வரவேணும் எண்ட நிலையில இருந்த பத்திரிகையள் அவையின்ரை கவிதையளை வெளியிட்டுதுகள். மழைக்காலத்திலை ஈசல் மாதிரி கவிதையள் வெடிச்சுக் கிளம்பிச்சுதுகள். புதுக்கவிதை தொடங்கின காலத்தில இருந்ததுமாதிரி புலம்பெயர்ந்த கவிதைகள் எழுதத் துவங்கின பலபேருக்கு இண்டைக்கு நல்ல கவிதைகள் எழுதக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கு. நல்ல கவிதையளே எழுதுகினம். இவையிலை தனித்துவமான கவிஞர்களே இருக்கினம். நிறைய எழுதாமல் விட்டாலும் இவையின்ரை அடையாளங்கள் புலம்பெயர்ந்த தமிழர்களுடைய கவிதை வரலாற்றில ஆழமாய்ப் பதிஞ்சிருக்கு.

இதே குறைபாட்டை யுத்தச் சூழலிலை வாழுற கவிஞர்கள் மேலையும் சொல்லலாம். அந்தச் சூழலிலை வெடிச்செழும் கவிதையளுக்கும் இதேமாதிரியான விளக்கத்தைத்தான் சொல்லமுடியும்.

**ஈழத்து இலக்கியச் சூழலில் தரமான இலக்கியச் சஞ்சிகையாக தனக்கான கருத்துநிலையில் நின்று கறாரான விமர்சனப் போக்கை முன்வைத்த சஞ்சிகையாக எதனை நீங்கள் குறிப்பிடுவீர்கள்?**

ஈழத்தில, 60களிலயிருந்து பாக்கலாம், எப்பவுமே சிறுபத்திரிகைகள் பெரிய வீச்சைப் பெற்றதில்லை. 'மறுமலர்ச்சி' வெளிவந்து ஏற்படுத்தின தாக்கம்மாதிரி வேறு எதுவும் ஏற்படுத்தினதில்லை. 'மறுமலர்ச்சி'க் காலத்தில 'தேனருவி' எண்டொரு சஞ்சிகை வெளிவந்தது, 'கலைச்செல்வி' எண்டு இன்னொரு சஞ்சிகை வெளிவந்தது. ஆனா மறுமலர்ச்சி மாதிரி வேறு எதுவும் பாதிப்பை ஏற்படுத்தினதில்லை. இதுகளின்ர காரணம் நிறைய இருந்தாலும் மேலோட்டமான ஒரு காரணத்தைச் சொல்ல வேணும். அதாவது ஈழத்தில சிறுபத்திரிகைக்கான ஒரு சூழலமைப்பு இருக்கேல்லை. காரணம், ஈழத்தில வெளிவந்து கொண்டிருந்த தினகரன், வீரகேசரி, ஈழநாடு, தினபதி போன்ற பத்திரிகைகள் தங்கடை வார மலர்களை இலக்கியத்தை முன்நிறுத்திக் காத்திரமாயே வெளியிட்டன. தினகரன் வந்துகொண்டிருந்த காலத்தில அதுகின்ரை வாரமஞ்சரி முக்கியமான பதிப்பு. அதுகின்ரை ஆசிரியராயிருந்து கலாநிதி கைலாசபதி ஆற்றிய பங்கு அறுபதுகளிலை மகத்தானது. இப்பிடி இலக்கியச் சஞ்சிகைகள் போல தினசரிகளின்ரை வாரமலர்கள் வந்துகொண்டிருந்தபடியால் வேறை சிறுசஞ்சிகை முயற்சிகள் எதுவும் பெரிதாய்ப் பயன் தரேல்லை. 'அலைகள்', 'புதுசு', 'திசைகள்','நந்தலாலா' எண்டு நிறையச் சிறுபத்திரிகைகள். நிச்சயமாய் எங்களுக்கெண்டு ஒரு சிறுபத்திரிகை வரலாறிருக்கு. அதோடையே அதுகள் காத்திரமானதாயில்லை எண்ட உண்மையும் இருக்கு.

'மல்லிகை' வந்து கொண்டிருந்தது. இப்பவும் வந்து கொண்டிருக்கு. மல்லிகை வந்து எதாவது ஒரு இலக்கியப் பாதிப்பை இதுவரை செய்ததா எண்டால் இல்லை எண்டுதான் சொல்லுவன். அது இதுவரைக்கும் செய்ததும் செய்துகொண்டிருக்கிறதும் சில படைப்பாளிகளுக்கு ஒரு களமாக இருப்பது மட்டுந்தான். தன்ரை போக்கை-நிலைப்பாட்டை அது சொல்லிக்கொண்டிருக்கு எண்டது வேறை சங்கதி. அது ஒரு சிறுபத்திரிகையின்ரை வேலையில்லை. சிறு பத்திரிகை எண்ட கருத்துருவாக்கத்தின் மீது எனக்கு வித்தியாசமான கருத்திருக்கு. மல்லிகையைப் போலத்தான் 'ஞான'மும். ஆனால் 'சரிநிகர்' பத்திரிகை வந்து கொண்டிருந்த காலத்தில, 90களில, முக்கியமான ஒரு நவீன இலக்கியத் தளமாயும் இருந்ததெண்டதை மறுக்கேலாது. நவீன அரசியல், இலக்கியச் சிந்தனைக்கான பத்திரிகையாய் இருந்தது எண்டதைத் தவிர, அதுவும் ஒரு பெரிய அலையாக ஈழத்து இலக்கியப் பரப்பிலை செயற்படேல்லை. சரிநிகர் காலம் என்று வரேல்லை. மணிக்கொடி காலம், சரஸ்வதி காலம் எண்டு தமிழ்நாட்டில இருக்கிறது போல ஒரு காலத்தை ஏற்படுத்த இந்தப் பத்திரிகைகளால முடியேல்லை. பத்திரிகையள், சிறுசஞ்சிகையள் காலத்தையுருவாக்கிறதில்லை, காலமே தன்ரை தேவைக்கான உபகரணங்களை உருவாக்கிக் கொள்ளுது எண்டதே சரி. எண்டாலும் காலத்தின்ரை போக்கை, அதுகின்ரை தேவையை அறிஞ்சு இல்லாட்டி முன்னனுமானிச்சு பத்திரிகையளும் வரவேணும்.

'மூன்றாவது மனித'னை ஒரு காலகட்டத்தை உருவாக்கத் துவங்கின சஞ்சிகையாய் என்னாலை குறிப்பிட ஏலும். மூன்றாவது மனிதன் நவீன இலக்கியத்தின் ஒரு தீவிர தளமாக இருந்தது. இது ஒரு அலையாகச் செயற்பட்டிருக்க முடியும். ஆனா அது தொடர்ந்து வெளிவர முடியாமல் போனது வாசகர்களுக்குத் துக்கமான விசயம். ஈழத்தில வந்து கொண்டிருந்த இவ்வளவு பத்திரிகைகளையும் மேலோட்டமாப் பாக்கேக்க தன் கருத்து நிலையில சரியாக நிண்டு வெளிவந்த பத்திரிகைகளெண்டு சரிநிகரையும், மூன்றாவது மனிதனையும்தான் குறிப்பிடலாம்.

**ஈழத்து இலக்கியப்பிரதிகள் மீதான விமர்சனப் பார்வை என்பது அன்றிலிருந்து இன்றுவரை ஒரு தரமான நிலையில் இருந்ததில்லை. தனிநபர் வழிபாடு அல்லது தனிநபர் வெறுப்பு சார்ந்தே இன்று வரை இருந்து வந்திருக்கிறது. அல்லது மௌனமாய் இருத்தலாய் இருக்கிறது. இதற்கான மூலகாரணம் எது?**

தமிழ்ப் பரப்பிலையே விமர்சனம் எண்டது வெறும் வரட்டுத்தனமாய்த்தான் இருந்தது. கலாநிதிகள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, நா.வானமாமலை போன்றவை விமர்சனத்துறைக் குள்ளை பிரவேசிக்கிறவரைக்கும். அண்டைவரைக்கும் தமிழிலக்கியம் நவீன விமர்சனத்தை அறியாது. தமிழிலையிருந்த விமர்சன நூலெண்டு சொல்லக்கூடினதா யிருந்தது சிதம்பர ரகுநாதன்ரை 'இலக்கியத் திறனாய்வு' மட்டும்தான். அதுக்கு முந்தி விமர்சனமெண்டு இருந்ததெல்லாம் ரசனைமுறைத் திறனாய்வு எண்டதுதான். கம்பராமாயணத்தை ரசிகமணி டி.கே.சி. வாசிச்ச முறையிலேயே நவீன தமிழ்ப் பிரதியையும் வாசிச்சினம். வித்தியாசமாய் தமிழிலக்கியத்தை விமர்சனமாய்ப் பாத்தது அதுவரைக்கும் புதுமைப்பித்தன்தான். சிறந்த படைப்பாளியாய் இருந்தாலும் இந்த விமர்சனப்பார்வை புதுமைப்பித்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனுக்கு கைகூடி வந்திருக்கு. ஆங்கில மொழிமூலமாய், இலக்கியம் ஊடாய் இந்த விமர்சனக் கருத்துக்களை புதுமைப்பித்தன் அடைஞ்சிருக்கிறார். ஆங்கில இலக்கிய வகையான புதினத்தை அல்லது நவீன கவிதையை தமிழ்முறைப்படி விமர்சனம்செய்து பாத்து மகிழ்ச்சிகொண்டாடிக்கொண்டிருந்தது படிச்ச கூட்டம். இஞ்சைதான் கைலாசபதியும், சிவத்தம்பியும் வருகினம். தமிழிலக்கியத்தை மார்க்சீயத்தினூடாய் எப்பிடிப் பாக்கிறதெண்டதை தமிழுலகத்துக்கு அறிமுகமாக்கி வைச்சது இவையெண்டு சொன்னாலும் பிழையில்லை. தமிழிலக்கியம் இதுவரையில்லாத புதுப் பார்வை கொண்டு நிமிர்ந்து திரியத் துவங்கினதாய் இவையின்ரை தமிழ்த் துறைப் பிரவேசப் பலனாய் நான் பாக்கிறன்.

நாவலர் மூலமாய்த் தமிழ் வசனநடையின்ரை மாபெரும் துவக்கத்தைச் செய்ததுமாதிரி, மார்க்சீயமூடாகப் பிரதியை உணருகிற இந்தத் திறனாய்வு முறையை கைலாசபதி சிவத்தம்பி மூலமாய் ஈழம்தான் துவங்கிவைச்சது. விமர்சனத் துறையிலை ஈழத்தின்ரை சாதனை இவ்வளவுதான். இந்தளவிலை கைலாசபதி, சிவத்தம்பியின்ரை பங்களிப்பும் முடிஞ்சுபோச்சு. இவை சிலாகிச்சுச் சொன்ன எழுத்தாளர்களின்ரை கலாசித்தியளை வைச்சு இவையின்ரை விமர்சன முடிவுகளிலையுள்ள அபத்தங்களைச் சுலபமாய் நாங்கள் கண்டுகொள்ளலாம். மார்க்சீய விமர்சனமுறையின்ரை நேர்மையிலை சந்தேகத்தையே இவையின்ரை விமர்சனத் தெரிவுகள் உண்டாக்கியிட்டுதெண்டாலும் பிழையில்லை. நான் பெயர் குறிப்பிட விரும்பேல்லை. இந்தப் படைப்பாளிகளின்ரை படைப்புகளைப்பற்றி வாசகர்கள் தெரிஞ்சிருக்கினம். அதுபோதும்.

விமர்சனத்திலையிருக்கிற மூலாதாரமான விஷயமே ரசிக்காமல் விமர்சனம் செய்ய ஏலாதெண்டதுதான். பலர் வாசிக்கிறதுகூட இல்லாமல் விமர்சனம் செய்ய வருகினம், உவை புத்தகத்தையே பாத்திருக்க மாட்டினம், ஆளைப் பாத்துத்தான் விமர்சனம் செய்யிறவையெண்டு சிலபேர் சொல்லுறவை. அதை நான் நம்பமாட்டன். அந்தப் புத்தகத்திலை நிச்சயமாய்க் கண்ணோடியிருப்பினம்தான். முதல்லையிருந்து கடைசிவரைக்கும் கண்ணோடியிருப்பினம். வடிவாய்க் குறிப்புமெடுத்திருப்பினம். குறிப்பெடுத்தாச்சா, விமர்சனம் வந்திட்டுதெண்டு அர்த்தம். இந்த ஆரம்ப நிலையை மீறி நாங்கள் வளரேல்லை.

இதுக்கனுகூலமாய் இருக்கிற விஷயம் என்னெண்டா, எங்கடை பேர்போன விமர்சகர்களெல்லாருமே எங்கடை பல்கலைக் கழகக் காறர் எண்டது. எல்லாரையும் நான் சொல்லவரேல்லை. ஆனா ஒட்டு மொத்தமான உண்மை என்னெண்டா, ஈழத்தமிழின்ரை விமர்சனத் துறையெண்டது பல்கலைக்கழகத்துக்கை அடக்கமாயிட்டுது. அடக்கமெண்டதை ரண்டு அர்த்தத்திலையும் நீங்கள் எடுக்கலாம்.

**அநேக புலம்பெயர்ந்த சிறுகதைகள் கவிதைகளைப் பார்த்தீர்கள் என்றால் றெஸ்ரோறண்டில் கோப்பை கழுவுவது, கிளீனிங்செய்வது இப்போது மோட்கேஜ் கட்டுவது என்றுதானே இருந்து வருகிறது? ஈழத்தில் இருக்கிற அநேக பிரதிகள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வேலைக்குப் போய்வருவது குறித்துக் கவலைப்படுகிறது. இதே யாழ்ப்பாணத்தில் முறிகண்டியில் கொழும்பில் தேனீர்கடைகளிலும் தெருவோரங்களிலும் எத்தனை இளைஞர்கள் கோப்பை கழுவுறார்கள், வெங்கயாம் உரிக்கிறார்கள்? தெருக்கூட்டுகிறார்கள். ஏன் அவை எவையும் இவர்களது படைப்பில் கதையாகவோ கவிதையாகவோ வந்ததில்லை? தாங்கள் கழுவியவுடன் மாத்திரம் அழுகிறார்கள், புலம்புகிறார்கள், கவிதை எழுதுகிறார்கள். இந்தப் படைப்பாளிகளது பிரதிகள் சொல்லும் சிந்தனைத் தளம் அங்கே எது? இங்கே எது?**

இந்த யாழ்ப்பாண சமூகம் என்பது ஒரு மோசமான சமூகம். ஒரு சமூகம். மோசமானது, மோசமானதில்லையெண்டதை எப்பிடி அறியேலுமெண்டா, அது வழங்கிற பழமொழியளிலையிருந்துதான். அவை அதுகின்ரை வாழ்க்கை முறையின்ரை அடையாளம். வேற இனங்களில, சமூகங்களில இந்த மாதிரிப் பழமொழியள் இருக்குமோ எனக்குத் தெரியாது. 'கோழி மேய்ச்சாலும் கொறணமேந்தில மேய்க்கவேணும்', 'கெட்டவன் கிழக்கை போ' மாதிரிப் பழமொழியள் அந்த இனத்தையே வெளிச்சம்போட்டுக் காட்டியிடுது. கிழக்கை எண்டது அப்ப பணம் சேர்க்கக் கூடிய திசையிலயிருந்த சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளைத்தான். இந்தப் பணம் சார்ந்த கட்டுமானங்கள் யாழ்ப்பாணச் சமூகத்திட்ட அதிகமாய் இருக்கு. நான் அந்தச் சமூகம் எண்டதில எந்த ஒரு தனிநபரையும் குற்றஞ்சாட்டேல்லை. சமூகத்தைக்கூடக் குற்றம்சாட்டேல்லைத்தான். நான் வரலாற்றைப் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கிறன். வரலாறுதான் தவறாய் நடந்திருக்கு. தவறாய் இருந்திருக்கு. சமூக அமைப்பிலை மாற்றம், மாற்றமின்மை, மாறுபாடு போன்றதுகளை நாம் சரியாய் விளங்கிக் கொள்ள வேணும்.

யாழ்ப்பாணச் சமூகம் வித்தியாசமான மனநிலை கொண்டது. அந்த அமைப்பு பணம் சார்ந்தது. எல்லா அமைப்புக்கும் பணம் பிரதானம் எண்டாலும் யாழ்ப்பாணச் சமூகத்தின்ரை வாழ்வியல், போக்கு எண்டதுகள் பணமும், அந்தப் பணத்தின்ரை ஆதாரமான சமூக அமைப்பை நிலை நாட்டுறதுக்கான மனோநிலையுமாயே இருந்திருக்கு. அதில முக்கியமானது சாதிப்பிரச்சனை. 'யார் இந்த யாழ்ப்பாணத்தான்?' எண்டு பேராசிரியர் சிவத்தம்பி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். யாழ்ப்பாண மனநிலை அதிலை அழகாய் விழுந்திருக்கு.

இந்தப் பின்னணியிலையிருந்து புலம் பெயர்ந்து வந்தவைக்கு, எழுத்து முயற்சியெண்டது ஒரு கட்டறுப்பு. சுதந்திரமாய் இருக்கிற வகையிலை, அவையின்ரை அடிநிலை எண்ணங்கள் பீறிக் கொண்டு வெளிப்பட்டு வாறதைத் தவிர்கவேயேலாது. வெளியில வந்தாப்பிறகு நான் கோப்பை கழுவுறதா எண்டொரு ஆதங்கம். அவேசம். கோப்பை கழுவுறதை, கிளீனிங் செய்யிறதை ஏற்றுக் கொள்ளமுடியாத மனோநிலையில உள்ளவையிட்டை இந்த எழுத்துதான் உருவாகும். இந்த உணர்வு ஒற்றுமை நிலைதான் படைப்புகள் ஒண்டுபோலத் தோன்றுறதுக்கும் காரணம். முந்தியே இதைப் பற்றி நான் குறிப்பிட்டிருக்கிறன்.

அண்மைக்காலம்வரையான புலம்பெயர்ந்தோருக்குள்ளை பலபேர் தங்கடை கல்வியை இழந்தவை. அவை தங்கடை உணர்வுகளைக் கொட்டிச்சினமேதவிர இலக்கிய முக்கியத்துவம் கொடுத்து எழுதியதாய்ச் சொல்லேலாது.சில தீவிரவாசகர்க ளாயிருந்தவை, தீவிர வாழ்வனுபவங்களுக்காளானவை ஒரு மொழியைத் தங்கட வசமாக்கிக் கொண்டு எழுதிச்சினம். அதில நான் குறிப்பிடக் கூடிய ஓராள் ஷோபாசக்தி. 60களில எஸ்.பொ.வின்ரை மொழி ஆளுமை சிறப்பாய் இருந்தது. தமிழ்நாட்டிலை லா.ச.ரா.வைச் சொல்லுறவேளை ஈழத்துக்கு எஸ்.பொவைச் சொல்ல முடியும். மொழியை அவ்வளவு தீவிரமாய்க் கையாளக்கூடிய தகைமை இப்பதைய ஆக்களில ஷோபாசக்திக்கு உண்டு. அவரது கருத்துக்களோடு எவ்வளவு முரண்பட்டாலும் படைப்பு மொழி எண்ட வகையில அவரது நடை எனக்குப் பிடித்தமானது. ஆனா கனபேர் வளராமலே இருக்கினம். தங்கடை எண்ணங்களை இலக்கியப் பிரக்ஞையுடன் எழுதிய ஆக்களெண்டும் கனபேரைச் சொல்ல ஏலாது. அவையிலையும் கனபேர் பிரான்ஸிலைதான் இருக்கினம். மிச்சப்பேர் சிறுகதை எண்டு தங்களுக்குத் தெரிஞ்ச மொழிகளில ஏதோ எழுதிச்சினம். பெயரை நீக்கிப்பார்த்தால் ஒண்டுபோலை அனுபவங்கள் விரிஞ்சுகொண்டே போகும். கவிதை எண்டதுக்கு அதன் இலகு வடிவத்தை – வரி அமைப்பை - பாத்தினமே தவிர அதுக்கு மேலை ஆருக்கும் தெரிஞ்சிருக்கேல்லை. அவைக்குத் தெரிஞ்சிருக்கவும் வேண்டியிருக்கேல்லை. பின்நவீனத் துவப்பாணியிலை, நவீன யதார்த்தப் போக்கிலை எழுதுகிற தமிழகப் படைப்பாளிகளிட்டைக் கூட இந்த நிலை இருக்கு. ஒரு சிறுகதையின்ரை பேரை நீக்கிப் பாத்தால் ஆர் எழுதினதெண்டு சொல்ல முடியாமல் தான் இருக்கும். சில முக்கிய படைப்பாளிகள் எஸ். ராமகிருஸ்ணன், ஜெயமோகன், சுந்தரராமசாமி போன்ற ஆக்களைத் தவிர்த்துப் பாத்தால் இண்டைய இளம் படைப்பாளிகளிட்டைச் சுயஅடையாள அழிப்புத்தான் இருக்கு. அனுபவமேற ஏறத்தான் சுய அடையாளங்களோடை கூடின படைப்புக்கள் அவையிட்டையிருந்து பிறக்கும். புலம்பெயர்ந்தவையிட்டையிருந்தும் அந்தமாதிரித்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடிவ மேன்மைமாதிரித்தான் கருவும் மாறும்.

தொலைக் காட்சி, சினிமா ஊடகங்களூடாய் ஈழத்துப் பேச்சுவழக்கு முறையிலை தமிழ் நாட்டுப் பேச்சு வழக்குமுறை ஒரு பாணியாயும், இயல்பாயும் கலந்து வருகுதெண்ட உண்மை எத்தினைபேர் கவனத்திலை பட்டுதோ தெரியாது. ஆனா ஒரு கலப்பு நடந்து கொண்டிருக்கு. ஆரும் தூண்டாமலேதான். இதுபோலத்தான் தமிழ்நாட்டு இலக்கியநடைப் போக்கும் ஈழத்திலை கசிய ஆரம்பிச்சிட்டுது. உள்வாங்குதல் இல்லாமல், வெறுமனே 'கொப்பி'பண்ணுற மாதிரியான இந்தப் போக்கு விமர்சனத்துக்காளாகாமல் தவிரவும் மாட்டுது.

கல்வி வசதி மறுக்கப்பட்டு சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படும் கொடுமைகள்பற்றி ஏன் ஈழத்திலை எழுதப்படேல்லை எண்டு கேட்டியள். எழுதப்பட்டிருக்கவேணும். ஆனா எழுதப்படேல்லை. ஒன்றிரண்டு ஆக்கங்கள் வந்திருக்கிறதாய்த்தான் நினைக்கிறன். பேர் குறிப்பிட்டுச் சொல்ல உடனடியாய் வரேல்லை. அது போதாது. ஆனாலும் எந்தவொரு படைப்பாளியிட்டையும் இதைப்பற்றி ஏன் எழுதேல்லையெண்டு கேக்கப்படமுடியாத கேள்வி இது.

அங்கத்தைச் சூழ்நிலையிலை ஆரும் இப்பிடியொரு கேள்வியை அங்கை கேட்டிட மாட்டினம். ஏனெண்டா ஒரு யுத்தம் அங்கை நடந்து கொண்டிருக்கு. மனித இருப்பே கேள்விக்குள்ளாகியிருக்கிற நேரத்திலை, அதன் இருப்புக்கான இங்கிதங்களிலை கரிசனை வராது.

இது எதுகின்ரை சிந்தனைத் தளம்? வாழ்முறைதான் சிந்தனைத் தளத்தை உருவாக்குது. அப்பிடியெண்டா யுத்தத்தின்ரை சிந்தனைத் தளமெண்டு இதைச் சொல்லலாமா? அப்பிடித்தான் எனக்குச் சொல்லத் தெரியுது.

***ஈழத்து எழுத்தாளர்கள் சுயமரியாதையுள்ளவர்கள்***



**புலம் பெயர்ந்து வந்தவைக்கு, எழுத்து முயற்சியெண்டது ஒரு கட்டறுப்பு. சுதந்திரமாய் இருக்கிற வகையிலை, அவையின்ரை அடிநிலை எண்ணங்கள் பீறிக்கொண்டு வெளிப்பட்டு வாறதைத் தவிர்கவேயேலாது. வெளியில வந்தாப்பிறகு நான் கோப்பை கழுவுறதா எண்டொரு ஆதங்கம். ஆவேசம். கோப்பை கழுவுறதை, கிளீனிங் செய்யிறதை ஏற்றுக்கொள்ள முடியாத மனோநிலையில உள்ளவையிட்டை இந்த எழுத்துதான் உருவாகும். இந்த உணர்வு ஒற்றுமை நிலைதான் படைப்புகள் ஒண்டுபோலத் தோன்றுறதுக்கும் காரணம்.**

***என்பதில் சந்தேகமாக இருக்கிறது. அவர்கள் தாங்களாக எதையும் உணர்ந்து எழுதுவதில்லையென்றும், அந்தநேர அலைகளுக்கான எழுத்தை மட்டும் எழுதுபவர்கள் என்றும் சொல்லலாமா? வடக்கிலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டமை எந்த எழுத்தாளரினதும் எழுத்தாமுமையைப் பாதித்ததாக இல்லையே!***

ஒரு எழுத்தாளன் அல்லது கவிஞன் அல்லது கூத்து நாடகம் போன்றவற்றில் இருக்கிற கலைஞர்களின்ரை படைப்பு மய்யத்தைச் சமகால நிகழ்வுதான் பாதிக்க வேணுமெண்டு இல்லை. அதோடை மனதிலை பதியும் எந்தவொரு நிகழ்வும் உடனடியாய் எழுத்தாக வரவேண்டுமெண்டும் நாங்கள் எதிர்பாக்கவுமேலாது. எதிர்பாக்கவும் கூடாது. அதுக்கான பிரதிபலிப்பு வேறுமாதிரியும் இருக்கலாம்.

இப்ப வடபகுதியில இருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்ட சம்பவங்கள் குறிச்சு படைப்பாளிகள் ஆரும் எந்தப் பெரிய ஆக்கத்தையும் செய்யேல்லை எண்டுதான் நானும் நினைக்கிறன். தொண்ணூற்றி மூண்டு மேயிலை பிரதமர் பிரேமதாச கொலைசெய்யப்பட்ட நாலு மாசத்துக்குள்ளை அந்தச் சம்பவத்தின்ரை பின்னணியிலை 'ஞானத் தீ' எண்ட சிறுகதையை நான் எழுதினன். அதுக்கு கல்கி நினைவுச் சிறுகதைப் பரிசும் கிடைச்சது அப்ப. ஒரு சம்பவம் நடந்து நாலு மாசத்துக்குள்ளை அதைப் படைப்பாக்க முடிஞ்சிருக்கு. அதுபோலை அனார், இளையஅப்துல்லா, முல்லை முஸ்ரிபா போன்ற சிலரின்ரை கவிதையள் வடக்கிலையிருந்து முஸ்லீம்கள் வெளியேறப்பட்டது குறிச்சு வந்திருக்கு. வடபகுதிப் படைப்பாளிகளின்ரை ஆக்கங்களும் இல்லாமலில்லை. ஆனா இவை போதாது. வராதது பிழை எண்டும் நான் நினைக்கமாட்டன். அதற்கு மாறான கருத்தை எழுதுகிறபோதுதான் இந்தப் பிரச்சனையே வரும்.

எந்தவொரு சம்பவத்தையும் படைப்பாக்கு அல்லாட்டி படைப்பாக்காதை எண்டு சொல்லுற உரிமை வாசகனுக்கோ விமர்சகனுக்கோ இல்லை. அப்படைப்பாளிக்கு ஒரு சம்பவம் மனசிலைபட்டு, அது கலையாய் வெளிப்பாடடையிற விஷயம் வந்து அவனுக் குச் சொந்தம். அவனுக்கே அவனுக்குச் சொந்தமானது. இது அவன்ரை தன்னுணர்வு சார்ந்த விஷயம் எண்டிறன். இண்டைக்கு முஸ்லீம்கள் கலைக்கப்பட்டு ஏறக்குறைய 10 வருஷங்களுக்கு மேலை ஆகியிட்டாலும் இன்னொரு படைப்பாளி இதை எழுத ஏலும். அவன் இதை எழுதுற நேரத்திலை இதை ஏன் இப்ப எழுதுறாயெண்டும் கேக்கேலாது எண்டது என்ரை நிலைப்பாடு. இது ஒண்டு.

இந்த விஷயத்திலை கேக்கப்படவேண்டிய இன்னொரு கேள்வி இந்தச் சம்பவத்தை நான் எப்பிடிப் பாக்கிறனெண்டது. இது சரியா பிழையா எண்டதிலை திட்டவட்டமான அபிப்பிராயம் என்னிட்டை இருக்கு. வடபகுதியிலிருந்து முஸ்லீம்கள் விரட்டப்பட்டது நூற்றுக்கு நூறு வீதம் பிழையானது. மோசமானது. மனிதாபிமானம் அற்றது. இதைச் செய்த அரசியல் இயக்கம் அரசியல் இயங்கு தளத்திலை தன்ரை செயற்பாட்டுத் திறமையின்மையைத்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதன்மூலம் வெளிப்படுத்தியிருக்கெண்டு நான் சொல்லுவன்.

முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதுக்கான காரணம் வேறை வேறை விதமாய்ச் சொல்லப்படுகுது. விடுதலைப் போராட்டத்துக்கு எதிராய்ச் செயற்படுறதுக்காய் முஸ்லீம் இளைஞர் பலர் பேரினவாத அரசினாலை அங்கை சேர்க்கப்பட்டிருந்தினமெண்டும் சொல்லப்பட்டுது. எண்டாலும் இதைக்கூட ஒரு அரசியல் பிரச்சினையாயெடுத்து அந்தத் தளத்திலை வைச்சு ஒரு செயற்பாட்டுத் திறமையுள்ள இயக்கத்தாலை தீர்த்துக்கொண்டிருக்கேலும். ஒரு சில முஸ்லீம்கள் செய்த ஒரு தவறை ஒட்டு மொத்த சமூகமும் செய்ததாய் நினைச்சு ஒட்டு மொத்தமான சமூகத்தையும் வெளியேற்றினது சகல வடபகுதித் தமிழரையுமே சிலுவை சுமக்க வைச்சிட்டுது. ஒரு வடபகுதித் தமிழனாய் என்ரை தலை குனிஞ்ச இடம் இதுதான்.

**படைப்பாளிகள் தங்களுடைய தன்னுணர்வு சார்ந்து எழுதுகிறார்கள், எல்லாவற்றையும் எழுது என்று கேட்க முடியாது, காலஞ்சென்றும் எழுதலாம் என்கிறீர்கள். ஒரு ஓர்மமான எழுத்தாளனால் மனித வாழ்வியல் வாதைகளுக்கும் அதன் இன்பங்களுக்கும் இடையில் ஓடி எழுதிக்கொண்டிருக்கவே முடியும். ஈழத்து எழுத்தாளப் பெருந்தகைகள் அல்லது இப்படிச் சொல்லும் எழுத்தாளர்கள் ஈழத்து வாழ்வியல் அவலங்களை கண்டுகொள்ளாமல் இருப்பதைப் பற்றித்தான் நான் குறிப்பிடுகிறேன். பெரும்பாலான படைப்பாளிகள் தனது என்பதற்குள் இருந்தே புனைவுகளையோ கவிதைகளையோ செய்கிறார்கள் (நோட் த பொயிண்ட் செய்கிறார்கள்). பரந்த மனதுள்ள எழுத்தாளர்கள் மற்றதை அறவே மறந்து போய்விடுகிறார்கள். ஈழத்து விமர்சனச் செம்மலான கா. சிவத்தம்பி அவர்கள் கூட இவற்றையெல்லாம் கடந்து நின்று தத்துவம் பேசுகிறார். கயிறைப் பாம்பாக நம்பி விட்டுவிடலாம் ஆனால் பாம்பைக் கயிறாக நம்பி விட்டுவிடக்கூடாது என்று ஈழவிடுதலை என்ற பெயரில் செய்த அநியாயத்துக் கெல்லாம் நியாயம் கற்பிக்கிறாரே?**

பேராசிரியர் சிவத்தம்பி எந்தப் பேட்டியில, எந்தக் கட்டுரையில இந்தக் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறாரெண்டு எனக்குத் தெரியேல்லை. அப்பிடிச் சொல்லியிருந்தாரெண்டால் பேராசிரியர் இந்த விஷயத்திலை மிக நிதானமாயோ, சரியாயோ பதில் சொன்னதாய் என்னாலை சொல்லேலாது. பாம்பும் கயிறும் மயக்கமான விடைக்கு அல்லது கேள்விக்கான மூலமாயிருக்கும். எப்பவும். முஸ்லீம்கள் வடபகுதியில இருந்து வெளியேற்றப்பட்டது எவ்வளவுதான் காரணங்களைக் கொண்டிருந்தாலும் அது மகா தவறான ஒரு காரியம். சரி, பிழைகளுக்கிடையிலை இடைபாதை எடுக்கேலாது. எண்டாலும் எனக்கு இன்னுமொரு கருத்திருக்கு. உண்மையெண்டது ஒண்டேயில்லை எண்டதுதான் அது. எண்டாலும் அதுக்கான வலுவான பதிலுக்கு முன்னாலை இத்தனை வருசத்திற்குப் பிறகு இப்ப இது கதைக்கப்படுறதுக்கான அரசியல் புலமும் எனக்குத் தெரியவேணும். ஒரு யுத்தம் நடந்துகொண்டிருக்கெண்ட யதார்த்தத்தை மீறி என்னாலை எதையும் பாத்திட ஏலாது. அந்த எதிர்ப்பின் பின்புலம் எனக்கு எல்லாமாயும் இப்ப தோற்றம் தருகுது.

ஏறக்குறைய வடபகுதியிலை முஸ்லீம்கள் திரும்பவும் வந்து மீளக் குடியேறுகினமெண்டுதான் செய்தியள் மூலம் நான் அறியிறன். முஸ்லீம்கள் இதை இண்டைக்குப் பெரிதுபடுத்துறதாயும் தெரியேல்லை. அவர்கள் மறக்காவிட்டாலும் மன்னிச்சுவிட்டார்கள் எண்டு இதை நாம் எடுக்கலாம். இளைய அப்துல்லா எழுதின கவிதைகள்ளகூட முஸ்லீம்களின்ரை வெளியேற்றத்துக்கு அப்பாலான சில நியாயமான ஆதங்கங்களும் இருக்கிறதை நான் காணுறன். முஸ்லீம்கள் ஒருவேளை பேரினவாதத்தின் அரசியல் சதுரங்கத்தில காய்களாய் நகர்த்தப்படுகினமோ எண்ட ஐயம் அந்தக் கவிதைகளில -சில கவிதைகளிலையெண்டாலும் - இருக்கு. இளைய அப்துல்லாவின் கவிதைகளிலை ஒரு பூடகத்தன்மை இருக்கும். அவர் வெளிப்படையாய்க் கட்டுரைகளிலை எழுதினாலும் அவரின்ரை கவிதைகளிலை முஸ்லீம்களின்ரை இடப் பெயர்வுப் பிரச்சனை குறிச்சு அவர் பெரிசாய்ப் பேசேல்லையெண்டுதான் நான் சொல்லுவன். அவரின்ரை 'பிணம் செய்யும் தேசம்' கவிதைத் தொகுப்பையும் கிட்டடியிலைதான் படிச்சு முடிச்சன். அதிலைகூடப் பெரிசாய்ப் பேசேல்லை. பேசினவை கவிதைகளாய் இல்லை. இதை எப்பிடி நான் பாக்கிறன் எண்டால், முஸ்லீம்களை வெளியேற்றின ஒரு தவறை வைச்சுக் கொண்டு நாங்கள் எவ்வளவு தூரத்திற்குப் போகலாம் எண்டதுதான். புலிகளாலானது எண்டதைவிடவும், போராலானது எண்டதுதான் என்ரை தெளிவு, புரிதல்.


அடுத்தது சுயமரியாதை பற்றின விஷயத்துக்கு வாறன். ஈழத்தில சிறுகதை வளர்ச்சி தொடங்கின அந்த நாளில இருந்து எப்பவுமே அது தமிழகத்தின்ரை ஒரு மறுபதிப்புப் போலத்தான் தொடர்ந்து வந்து கொண்டிருக்கு. நாங்கள் எவ்வளவுதான் நாவலலை, சரித்திர நாவல்ல புதுமைகளையும் பரீட்சார்த்தங்களையும், சில முன்னோட்டங்களையும் செய்தம் எண்டு சொல்லிக் கொண்டிருந்தாலும், எங்கடை சிறுகதை அல்லது கவிதை தமிழகத்தின்ரை ஒரு பின் விளைவாய்த்தான் எப்பவும் வந்து கொண்டிருக்கெண்டது மறுக்கேலாத உண்மை. அரசியல்ல எப்படி இருந்ததோ அது போலத்தான் இலக்கியத்திலும். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் புதிய தேசிய இலக்கியத் திட்டத்தை முன்வைச்சுச் செயற்படத் துவங்கிற வரைக்கும் அப்படியிருந்தது எண்டும் சொல்லலாம். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தோன்றினதுக்குப் பிறகு அதிகமாய் அந்தச் சங்கத்தில இருந்து எழுதினவை சாதி அடக்குமுறை, வர்க்க அடக்கு முறை போன்றதுகளுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டில இருந்து மண்வளத்தையும் மக்களையும் பேசிச்சினம் எண்டது சரியான வார்த்தைதான். அதிலை முக்கியமாகக் குறிப்பிடவேண்டியவர்கள் நீர்வை பொன்னையன், டானியல், டொமினிக் ஜீவா, செ.கணேசலிங்கன் போன்றவை. இவையின்ரை சிறந்த கலைப் படைப்புக்களா எண்டு தமிழ் நாட்டில விவாதம் வந்தது. ஈழத்தில வந்திருந்தா ஓரளவுக்குச் சரியாய் இருந்திருக்கும். எனக்கு வந்துது. தமிழ் நாட்டில வந்தது எனக்கு முரணாய்த் தெரிஞ்சுது. வந்ததுக்கான பின்புலத்தை பிறகு நான் யோசித்து அறிஞ்சன். கலாநிதியள் கைலாசபதிக்கும் சிவத்தம்பிக்கும் தமிழ் விமர்சனத்துறையில இருந்த மதிப்பு, இவை சோஷலிச முகாமைச் சேர்ந்தவையெண்ட காரணத்தாலை சிலபேருக்குப் பிடிக்கேல்லை. இவைதான் டானியல் மற்றும் இடது சாரி எழுத்தாளர்களின்ரை படைப்புக்களை முன்னெடுத்துப் பேசினவை. இவையின்ரை விமர்சன முறைமை மூலம் ஸ்தாபிக்கப்பட்டவையின்ரை செல்வாக்கை அழிக்கிறதுக்கும், இவையின்ரை செல்வாக்கை அழிக்கிறதுக்காயுமே ஒரு முயற்சி அந்தச் சிலராலை எடுக்கப்பட்டுது. அதுகின்ரை ஒரு அம்சம்தான் மு.தளையசிங்கத்தின்ரை படைப்புக்கள் மீதான ஆய்வரங்கு. அது ஊட்டியிலை 4 வருடத்திற்கு முந்தி நடந்தது. வேதசகாயகுமார் மு.தளையசிங்கத்தின்ரை சிறுகதைகள் பற்றின ஒரு பெரிய கட்டுரை வாசிச்சார். மு.தளையசிங்கம் குறித்த அவரின்ரை கருத்துக்களோடை எனக்குப் பெரிய மாறுபாடில்லை. இருக்கவேண்டினதுமில்லை. ஆனால் அது இடதுசாரி எழுத்தாளர்கள், விமர்சகர்களின்ரை வரலாற்றிருப்பையும் உள்ளீடாய்க் கேள்விக்குட்படுத்தியிருந்தது.

அந்தக் கேள்வியின்ரை விரிவுதான் பிறகு 'காலம்'இதழில் வந்த 'ஈழத்துச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற கட்டுரை. அந்தக் கட்டுரை முற்று முழுதாக டானியல், நீர்வை பொன்னையன், டொமினிக் ஜீவா போன்றவர்களின்ரை இலக்கிய வரலாற்று முக்கியத்துவத்தை நிராகரிச்சுது. அவர்களின்ரை சிறுகதைகளை ஒரு பிரஸ்தாபத்துக்குக்கூட வேதசகாயகுமாரின்ரை கட்டுரை எடுக்கேல்லை. அதுக்கு மறுப்பாய் நான் ஒரு கட்டுரையைப் பதிவுகள் டொட் கொம் இல் எழுதினன். அதற்கு ஜெயமோகன் மறுப்புக் கட்டுரையொண்டை 'பதிவுகள்'ளையே எழுதினார். அந்தக் கட்டுரை என்ன சொல்லிச்சுது எண்டதை விளக்கிறதைக் காட்டிலும் அதுகின்ரை தலைப்பைச் சொன்னாலே எல்லாருக்கும் கருத்து விளங்கும். அது 'ஒரு படைப்பை நிராகரிப்பதற்கு வாசகனுக்கு உரிமையுண்டு' எண்டதுதான். அதற்கு நான் ஒரு பதில் எழுதினன். 'ஒரு படைப்பை நிராகரிக்க வாசகனுக்கு உரிமையுண்டு. ஆனால் ஆய்வாளனுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்த உரிமையில்லை.' பொத்தம் பொதுவில டானியல், நீர்வை பொன்னையன் போன்றவையின்ரை கதைகளை ஒதுக்கும் மனோநிலை தமிழ்நாட்டிலை இப்பவும் இருக்கு. ஒதுக்கிறதெண்டது கலைத் தரம் எண்ட தளத்திலை சரியாயிருந் தாலும் சமூகத் தரங்கள்ள, அதன் வரலாற்று அடியிலை எப்பவுமே ஒதுக்க முடியாது. இவர்க ளின்ரை படைப்புக்கள் அந்தக் காலத்துக்குரிய நியாயத்தையும் சரியையும் கொண்டிருந்ததுகள். பிறகு மொழி அல்லது இனம் கார ணமான தளங்களிலை எழுந்த எழுத்தாளர்களிடையே ஒரு ஒட்டுண்ணித் தனமான கருத்துச் சத்துறிஞ்சல் வந்திட்டுது. இப்பவும் பரவலாய்த் தமிழ் நாட்டில அறியப்பட்ட செ.யோகநாதன், செங்கை யாழியான் போன்றவையின்ரை எழுத்துக்கள் வெகுசன வாசிப்பிற்கான சாதாரண நடையில சான்டில்யன் அல்லது புஸ்பா தங்கத்துரை போன்றவையின்ரை எழுத்துக்கள் மாதிரியிலேயே இருக்கு. ஒரு பிரச்சனையை எடுத்துக்கொள்ளுற விதம் கையாளுற விதம் எல்லாம் ஒண்டுதான். எங்களுக்கான மொழி நடை, மொழிப் பாவனைகளை விட்டிட்டு நாங்கள் எங்கையோ போய்க் கொண்டிருக்கிறம். இதைவந்து சுயமரியாதையற்ற எழுத்துக்க ளாய்த்தான் கொள்ளலாம்.

***தமிழ் இலக்கியத்திலும் சரி, அரசியல் சூழலிலும் சரி இந்தத் தனித் தமிழ் வெறியர்களின் துன்பம் தாங்கேலாமல் இருக்கிறது. ஒரு மொழி அழிந்து போகக்கூடாது என்பதிற்கூடாக தமிழ்மொழியும் அழிந்து போகக்கூடாது என்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் இன்றுள்ள சூழல் ஒரு வன்முறை சார்ந்ததா கவே இருக்கிறது. தேசியம் பற்றிய ஆசையும் கற்புக் குறித்துக் கவலையும் படும் ஒரு குழு பெரியாரையும் ஆதரிக்கிறது. வெதுப்பகம்,வெதுப்பி, வாகன உதிரிப்பாக தொழிற்பாய்வு கூடம் என்று தமிழைப் பிய்த்தெடுக்கும் குழு தன்னைத் தமிழில் லெப்டினன்ட் கேர்ணல் என்கிறது. இது உங்களுக்குச் சிரிப்பாக இல்லையா? சித்த சுவாதீன அல்லது கோமாநிலையில் நமது சமூகம் வந்திருப்பதாக நீங்கள் நினைக்கவி ல்லையா?***

படைப்பாளிகளிடத்தில் தனித்தமிழ் பற்றின விஷயத்தில் கருத்துருவாகியிட்டுது. தனித்தமிழ் எண்டு ஒரு தமிழை நாங்கள் இனிமேல் கொண்டுவர ஏலாது. ஆனால் ஆரம்பத்தில தனித்தமிழ் எண்டு ஒரு நிலைப்பாட்டை எடுக்கிறதக்கான அரசியல் நிலை தமிழ் நாட்டிலை இருந்தது. தமிழ் நாட்டில பிராமணர்களின்ரை தமிழ், ஆதிக்கம் செலுத்துகிற ஒரு வகையாய் இருந்தது. அதை அழிக்கிறதுக்கு திராவிட இயக்கத்துக்கு ஒரு தேவை இருந்தது. அதுக்கு முன்னாலை தமிழும் சமஸ்கிருதமும் ஏறக்குறைய சம பங்காய்க் கலந்து எழுதுற முறை வந்திருந்தது. இதை இலக்கணம் மணிப்பிரவாள நடை எண்டு சொல்லிச்சுது. மணிப்பிரவாளமெண்ட ஒரு புது மொழியே உருவாகிற நிலை. இதுக்கு அப்பவிருந்த எழுத்தாளரும் கவிஞரும்தான் தெரிஞ்சோ, தெரியாமலோ துணையி ருந்தினம். அந்தநேரத்திலை மறைமலையடிகள் மற்றது பரிதிமாற் கலைஞர் போன்றவையாலை இந்த மொழியாபத்து தடுத்துநிறுத்தப் பட்டது. அவையாலை துவங்கப்பட்ட தனித்தமிழ் இயக்கத்துக்கு அந்த நேரத்தில தமிழ்நாட்டில தேவை இருந்தது மெய். அப்ப தனித்தமிழ் இயக்கம் வடமொழிக்கு எதிரானதாய்த்தான் இருந்தது. இப்ப ஆரும் தமிழ் நாட்டில தனித்தமிழ்த் தேவை பற்றி அதிகமாய்ப் பேசுறதில்லை. இடைக்காலத்திலை ஜெயகாந்தன், சுஜாதா போன் றவை ஆங்கிலத்தை அதீதமாய்ப் பாவிச்சு தங்கடை படைப்புக்களைச் செய்தினம். அப்பகூட ஆங்கிலத்தை ஆங்கிலமாகவே பாவிக்காமல் மக்களின்ரை பயன்பாட்டு வடிவத்திலை பாவிக்க வேணுமெண்டதுதான் அப்ப எழுந்த எதிர்ப்பின்ரை ஆதாரமாயிருந்தது. இப்பத்தைய எதிர்ப்பு ஊடகங்கள், குறிப்பாய் தொலைக்காட்சிகளிலை வாற தமிழுக்கெண்டா ஆர் அதைப் பிழையில்லையெண்டு சொல்லப்போகினம்? இங்கு கனடாவிலைகூட தனித்தமிழ் முயற்சிகள் இருப்பதாய் நான் அறிகியிறன். அந்த இயக்கம் சார்ந்த பத்திரிகையிலை எழுதுற போதுகூட அவை சொல்லக்கூடியதான மொழி வரைபுகளை ஏற்க மறுத்துதத்தான் சுயாதீனமாய் எழுதினன். எனக்கு ஒரு பஸ் வந்து பஸ்சாய்த்தான் இருக்கு. எனக்கு பேக்கரி பேக்கரிதான். பாண் பாண்தான். ஆனால் இதைவிட உயர்ந்த மட்டத்துக்குப் போய் பாணுக்கு ஏன் தமிழிலை ஒரு சொல் இருக்கக்கூடாதெண்டு நான் நினைக்கலாம். ஆனா அது அகராதிக்கானதோ அல்லது கலைச்சொல் தொகுதிக்கானதாயோதான் இருக்க ஏலும். அதை நடை முறைப்படுத்தவேணுமெண்டு நான் நினைக்கமாட்டன். எனக்கு வந்து நிசங்கம், ஆதர போன்ற சிங்களச் சொல்லுகள் கூட பிரியமா னதாய் இருக்கு. நான் அதை நிறையவே எனது படைப்புக்களில பயன்படுத்தியிருக்கிறன். காதல் எண்ட சொல்லை விட கூடுதல் அர்த்தம் பொதிந்த சொல் ஆதர. அந்தவகையில அவை முக்கிய மானவை. ஆனா அவை இயல்பிலை வந்து கலந்த சொல்லுகளாய் இருக்கவேணுமெண்டது எல்லாத்தையும்விட முக்கியம். திருப்புழி எண்ட சொல் என்ரை கிராமத்திலை தச்சுவேலை செய்யிற ஆக்கள் பாவிச்ச மொழி. அதுக்குப் பதிலாய் ஸ்குரு ட்ரைவர் எண்டு படிப் பிச்சால் அதைப் பிழையெண்டு சொல்ல நான் தயங்கமாட்டன். அதையும் சூழ்நிலைக்குத் தகதான் செய்யவேணும். கனடாவிலை திருப்புழியெண்டுதான் பாவிக்கவேணுமெண்டு நான் நிண்டா அது எப்பிடிச் சுவாதீனமானதாகும்? அது இப்ப அகராதிக்கானது. மக்களிடமிருந்து பெறப்பட்டதேயானாலும்கூட.

ஒரு படைப்பாளிக்கு தன் மொழி மகத்தானது. அதன் வாழ்வு அப்படைப்பாளியின் ஜீவநிலைப்பாட்டோடை கூடினது. மொழி யில்லாமல் படைப்பில்லை. ஏன், சிந்தனையேயில்லை.

மேலை நான் சொன்னதுகள் ஒரு படைப்பாளியாய் என்ரை கருத்து. மற்றப்படி, இது மொழிகளின்ரை இயல்பு தெரிஞ்ச மொழியாய்வாளராலை தீர்மானிக்கப்படவேண்டிய விஷயமே. நாங்களும் சிந்திப்பம்.

❏



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அட்டைப்படக் கதையின் தொடக்கம் அல்லது குட்டி திரப்பட விமர்சனம்.

கற்சுறா

கதை சொல்லுறது மாதிரி எப்பவும் கதை இருக்கிறேல்ல. கதைக்கு பல கோணங்களும் பன்முகங்களும் இருக்கின்றது.கதையை யாராக இருந்து வாசிக்கிறோம் என்பதுதான் பெரிய சிக்கலுக்குரியது. அதைவிடச் சிக்கல் யாராக இருந்து சொல்கிறோம் என்பது. எப்பவும் திரு.முத்துலிங்கம் அவர்கள் கதை சொல்லும் தளத்திலிருந்து அவரின் கதாபாத்திரம் மெல்ல அவரின் காலையே வாரி விடுவது போல் கதைசொல்வது மிகச் சிக்கலானது. அதுமாதிரித்தான் குட்டி திரைப்படமும். குட்டி திரைப்படத்தை கலைப்படம் என்றும் சிறந்த திரைக்கதை என்றும் தமிழ்சிற்றிதழ்கள் புகழாரம் சூட்டின. எல்லாம் கதை சொல்லியாக இருந்து கதையைப்பார்த்தார்களே ஒழிய கதாபாத்திரத்தில் இருந்து கதையைப்பார்க்கத் தவறின. கதாபாத்திரத்திலிருந்து கதையைப் பார்த்தால்தான் கதை பிசகாமல் வரும்.

இப்ப கதைக்குப் பலகோணங்கள் இருக்கின்றன என்ற ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு தப்பித்து விடலாம் என்று நினைப்பதை ஒருகணம் நிறுத்தி...

அப்பு ஏன் புல்லைப்பிடுங்கினார். ஏன் மாட்டைத் தடவினார்? மாட்டுப்பட்டிக்கும் தன்ர கட்டிலுக்கும் மாறி மாறி ஏன் நடந்தார் என்பதை யோசிக்க வேணும். அப்புவுக்கு மனசிருக்கேல்ல, மனசில ஈரமிருக்கேல்ல. என்டு விடியக்காலத்தாலை எழும்பின கையோட ஆர் குற்றஞ்சாட்டினாலும் அப்புவுக்கு மனசில ஒரு தைரியம் இருந்து கொண்டே இருந்தது. அப்புவினர மனசை மாடுகளாவது தெரிஞ்சு வைத்திருந்தது. ஆர் ஆற்ற மசிரைப் புடுங்கினாலும் யார் யருடைய தாலியை அறுத்தாலும் அப்பு அசையிறமாதிரித் தெரியேல்ல. இது மாடுகளுக்கும் தெரியும். மாடுகளுக்கு அடிமடியில கையைவிட்டுத் தடவவேணும் அதுவும் அப்பு தடவவேணும். மாடுகளுக்கு நாணம் தலைக்கேற அப்புவைச் சுத்திச்சுத்தி நிக்கும். மாடு மாடுதானே.

அப்புவுக்கு ஊரிப்பட்ட பொட்டையள். அதுகள்ள ஒண்டு போய், வா எண்டாலும் வராது. மனப்படாதுகள் மாடுகள். மாடு கசியோணும். மனசை உருக்கி ஊனா உழைக்கோணும். அதில்லாம வாடி படி எண்டா படுக்குதே. மாடுகளல்லே. அப்பு மாடுகள கிடத்தி தடவி அதோடயே சீவியம் போனகாலத்தில இந்தியனாமி கொண்டுவந்த கோமாரி நோய் ஒவ்வொரு மாட்டின்ர காலையும் கழற்றிக்கொண்டு போனது. அப்பு கவிண்டிற்றார். கிடங்குகிண்டி உப்புத்தண்ணி கரைச்சூத்தி மாடுகளை நாள்பூரா நிக்க விட்டாலும் அழுகல் நோய் காலைக் கழற்றிக் கொண்டு போனது போனதுதான். கோமாரி கொண்டு போனது போக அப்புவுக்கு மிஞ்சியது ஒன்பது பெட்டையளும் ஒரு குழுவனும் கொஞ்ச எருத்தனும்.

இலங்கை அரசியல் மாற்றம் அப்புவின்ர தனிப்பட்ட வாழ்வையும் தாக்கியருப்பதாக கவலைப்பட்டுக் கொண்டிருந்ததார். அப்பு ஒரு ஊடு பார்த்து தன்ர கஸ்டத்தைக் குறைக்க ஒன்பது பெட்டையள்ள ஒருத்தியைப் புடிச்சு யாழ்ப்பாணத்துக்கு ஒரு வீடு பராமரிப்பாளராக- இந்த வாத்தையை உபயோகிக்க விரும்பிய வர்கள் இப்படியே உபயோகிக்கவும் மற்றவர்கள் வீட்டு வேலைக்காரி என்று உபயோகிக்கலாம் - தன்ர சிநேகிதன் மூலம் அனுப்பிவைச்சார். அப்பு யோசிச்சதெல்லாம் ஒருத்தியின்ர ஒருநேரச்சாப்பாடு பற்றித்தான். தன்னோட இருந்து சாப்பாட்டுக்கு அவதிப்படுறதைப் பாக்குறதுக்கு மனசு கேக்கேல்ல வளர்ற பிள்ளையள். கல்லைத் திண்டாலும் செமிக்கிற வயசு. சாப்பாடு முக்கியம் தானே அப்பு யோசித்தார் செய்தார்.

தயவு செய்து குட்டி படத்தை நீங்கள் இப்போது பார்கத் தொடங்க வேண்டும். அப்புவுக்கு எல்லாம் குமாரிகள். ஜெயக்குமாரி. வசந்தகுமாரி, சாந்தகுமாரி, ராஜகுமாரி, விஜயகுமாரி, தேவகுமாரி, ரத்தினகுமாரி என்று ஊரிப்பட்ட குமாரிகள். இதில ஒரு குமாரியான ராஜகுமாரியைப் பிடித்து ஒருமாதிரி யாழ்ப்பாணத்திற்குப் பெட்டி கட்டிவிட்டார் அப்பு. அப்பு மனசுக்குச் சரியென்று படுவதைச் செய்ய ஒரு கணமும் யோசிப்பதில்லை.

இப்ப ராஜகுமாரி யாழ்ப்பாணத்தில் இறங்குறாள். இடம்வலம் தெரியாமல் முழிக்க கூட்டிவந்த நண்பர் தேடிப்பிடித்து உரியவரிடம் ஒப்படைக்கிறார். வந்தவர் நல்ல பவ்வியமாக குனிஞ்சு ராஜகுமாரியின் கையைப் பிடித்து பஸ்ராண்டைக் கடந்து கேகேஎஸ் பஸ் எடுக்கப் போறார். ராஜகுமாரி திக்குமுக்காடிப் போனாள். என்ன நெரிசல். புதூர் நாகதம்பிரான் கோயில்லையோ அல்லது காட்டுவைரவர் கோயில்லையோ திருவிழா நடக்கிற நேரம் கூட அவள் இப்பிடியொரு நெரிசலைப் பார்க்கவில்லை. காலை எடுத்து வைத்து பெருவீதியைக்கடக்கிறபோது பதறித்தான் போனாள்.

பஸ் எடுக்கிறதுக்கு கொஞ்சம் நடக்க வேணும்.முந்தி பக்கத்தில இருந்து எடுக்கிற பஸ்சை இந்தியனாமிக்காரங்கள் தங்கட வசதிக்கு ஸ்ரான்லிறோட்டுக்கு மாத்தியிருக்கிறாங்கள். அதில தட்டாதெரு தாவடி மானிப்பாய் என்று கத்திகத்தி கூப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு பஸ்ஸில ஏற்றினார். என்ன பெரிய பஸ். சிரிபியிலேயே ஏறாத ராஜகுமாரிக்கு ஏதோ கனவுலகத்தில் மிதப்பது போலிருந்தது. பெரிய மினிபஸ். யன்னல் கரையோரமாக இருந்த சீற்றை அவளுக்குக் கொடுத்து விட்டு பிள்ளை உன்ர பேரென்னம்மா என்று பேச்சைத் தொடங்குகிறார். குட்டியை ரெயில் பிடித்து பட்டணத்திற்கு கூட்டி வந்தவர் அந்த நல்ல மனசுள்ள குடும்பத் தலைவனிடம் ஒப்படைக்க அவர் தன்ர காரில் ஏற்றிக் கொண்டு என்ன பெயர் என்று பேச்சைத் தொடங்குவது உங்களுக்கு ஞாபகம் வரவேண்டும்.இதில பாட்டெல்லாம் வருமா என்று குட்டி அதிசயப்படுகிறாள். இப்பஞாபகம் வருதா?

அப்புவுக்கு ஒன்பது பொட்டையளும் ஒத்தாசையாய் நிண்டு பார்க்கிற அலுவல்ல பாதிகுறைஞ்சது மாதிரி இருந்தது. கோமாரி வந்து பாதி மாட்டைக் கொண்டு போக வெள்ளையன் வெளிறியன் எண்டு ஊருக்குள்ள இருக்கிற மாடுதூக்கிகளிட்டை இருந்து மாட்டைக் காப்பாற்ற மாறி மாறி சென்றி பார்க்க வேண்டியதாய் இருந்தது. ராஜகுமாரி வெளிக்கிட்ட நாள்ள இருந்து வீடு இடிஞ்சு போயிட்டுது. இருட்டு விழுந்தமாதிரி. பொட்டையளுக்கு மாடென்ன மனிசரென்ன எண்டு வந்துட்டுது. சமையலில்லை. சாப்பாடில்லை. இழவு விழுந்த வீடு மாதிரி. அப்புவை எப்பவும் நச்சரித்துக் கொண்டிருத்துதுகள். காலமை எழும்பினதில இருந்து படுக்கப்போகும் வரையும் அப்புவுக்கு ஏச்சுத்தான். செத்துப் போனாலும் இஞ்ச கிடந்து சாகவேண்டியது என்னத்துக்கு அவளைப் புடிச்சு அனுப்பினனீ எண்டு ஒவ்வொரு நாளும் பிரச்சனை. அப்பு தைரியமாய் இருக்கவேண்டிய நேரம். விட்டால் மாட்டுக்கு யாருமில்லை எண்டமாதிரி நிலை வந்துட்டுது.

(தொடர்ச்சி: 71ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ‘ப’னாவும் அதன் ‘து’னாவும்



ஜீவராசி

குழந்தை தனது ஒரு உள்ளங்கையிலிருந்து
கையின் பிஞ்சு விரல்களால் எனக்கு சோறூட்டியது.

‘ இது உனக்கு விளங்கிச்சா’

‘புண்ணாக்கு கேள்வியெல்ல கேக்கிறா’

‘அப்பசரி இந்தா நான் உனக்கு தீத்திறன’

‘உனக்கென்ன விசரே’

‘இதத்தான் குழந்தையும் செய்தது’

‘என்ன இளவடா’

‘அதத்தான் சொல்லுறன் குழந்தை ஊட்டுற
பாக்கியம் கிடைக்க வேணும் அல்லது தரிசிக்க
வேணும்’

‘பூளல் கதையெல்ல கதைக்கிறா வடக்கு
கிழக்கிலகொலை நடக்குது குறைஞ்சது ஒரு
நாளைக்கு ஒருகொலை விழுது.
கொழும்பிலையும் விழுது
இதையெல்லாம் போய் தரிசிக்கச்சொல்லுறியே
நீயே அதைச்சாட்டி இஞ்ச ஓடிவந்திட்டு’

‘சொல்லசொல்லக் கேக்கிறாயில்ல என்ன’

அதட்டினாள் மலர். அச்சிறுமொட்டை
அதட்டினால் அதற்கென்ன விளங்கும்.
ஒருவயதான அச்சின்னச்சிறுசு கண்ணில் படும்
அனைத்தையும் தன்னிடம் கொடுக்கும்படி
அடம்பிடிக்கிறது.

முன்னொரு காலத்தில், மலர் காதல்
வயப்பட்டிருந்தபோது செல்வம்
தனிஈழத்தின் கனவுலகிலிருந்தான்.
இடதுசாரி கொள்கைப்பிடிப்பிலிருந்தான்.
அல்லது அப்பிடியிலிருந்தான்.

அதுவொரு காலம்.
அடுத்த பொங்கல் தமிழீழத்திலதான் என மாட்டுக்கு முன்னால புல்லைக் கட்டிக்கொண்டு ஓடினகாலம். இருந்தாலும் அப்பொழுதுதான் போராட்டம், தியாகம், அர்ப்பணிப்பு, நம்பிக்கை, எதிர்பார்ப்பு எல்லாம் இருந்தது. ஆனால் இயக்கம் இயக்கத்திற்குள் - இயக்கங்களையும் கொன்று குவித்தபோது தான் தமிழ்மக்களின் ஆத்மா கொல்லப்படத்தொடங்கியது.

www.tamilarangam.net

'ஸ்ரொப்பிற் பிளடி இடியட் உன்னைக் கததானே சொல்லச் சொன்னது நீ என்ன அரசியலெல்லாம் பேசிறா. அதுதான் பறவாயில்ல அவங்களயேன் வம்புக்கு இழுக்கிறா. பேந்தவன் சுட்டுப்போட்டுப் போக நாலுபேர் நிண்டு வவ் வவ் வவ்...'

நாய் குரைக்கும் சத்தம்கேட்டு மலர் கண்விழித்தாள். காதுகள் கூர்மையாகின. அவளுக்கு சர்வமும் அடங்குவதற்குள், 'அப்பா எழும்புங்கோ நாய் குரைக்குது'

'சும்மா படப்பா நாயென்ன பாட்டே பாடும்'

அவளுக்கு கோபம் பத்திக்கொண்டு வந்தது. அதைவிட பயம் அவளைக் கௌவிக் கொண்டது. நாயின் குரைச்லென்னும் அதிகமானது. மிக அருகிலானது. செல்வத்தின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. மலரின் நெஞ்சுக்குழித் தண்ணி வத்தி நாளிகையானது.

'யாரது'

'ஐபிகேஎவ்'

செல்வம் மலரை ஆறுதல்படுத்தியவாறு கதவைத்திறந்தான்

'ஹாய் ஐயாம் மேஜர் பாரத'

'ஹலோ ஐயாம் செல்வம்'

'கானய் கம் இன'

'யேஸ் பிளிஸ'

ஒரு தொகுதி ஆமி வீட்டைச் சூழ்ந்து கொண்டது. இருவரும் கதிரையில் அமர்ந்து ஆங்கிலத்தில் உரையாடிக் கொண்டிருந் தனர். மலருக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்ட நிலையில் ஆறாவது தொழில்பட ஆரம்பித்தாலும் சூதாரித்துக்கொண்டு அவர்கள் உரையாடுவதை செவிமடுப் பதுற்கு படாதபாடு பட்டாள். அதை விளங்கிக் கொள்வது அதைவிடப் பெரும் பாடாகிப் போய்விட்டது. ஐபிகேஎவ், பீஸ், எல்ரிரிஈ போன்ற ஒற்றைச் சொற்கள் விளங்கிக் கொண்டாலும் அவற்றைக் கொண்டு அவள் ஒரு முடிவுக்கு வரமுடியும் ஆனாலும் இப்ப வரமுடியாதே.

'மேஜர்' செல்வத்தின் அனுமதியோடு சிக ரெட்டைப் பற்றவைத்தான். சாம்பரை கவனமாக சிகரெட் பெட்டிக்குள்ளேயே தட்டிக்கொண்டான். சுமார் இரண்டு மணித்தி யாலங்களுக்கு மேல் சம்பாசனை நிகழ்ந்தது. இரவு வேளையில் வந்து தொந்தரவு செய்ததற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு மேஜர்விடை பெற்றுக்கொண்டான்.

மலருக்கு இருப்புக்கொள்ளவில்லை. படுக்கையில் கிடந்து புரண்டாள். அவளும் ஏழெட்டுத்தடவை 'என்னப்பா என்ன சொல்லுறான' என்றெல்லாம் கேட்டுப் பார்த்தாள். செல்வம் 'ம' கொட்டினா னொழிய வாயைத் திறக்கவில்லை. நித்திரைக்குப்போனவனை எழுப்பி 'இன்றும் சாப்பாடில்லை நித்திரையைக் கொள்' என்பதுபோலானது. செல்வம் அதிகாலையிலேயே எழுந்து தோட்டத் துக்குப் போய்விட்டான். அந்நேரம் மலர் கொஞ்சம் அயர்ந்துவிட்டாள். அவன் எழும்புவதற்கு முதல் எழும்பி விஷயத்தை அறியவேண்டும் என்றுதான் எண்ணிணாள். அறக்கப்பறக்க காலை உணவைத் தயாரித்துக்கொண்டு சைக்கிளை எடுக்கப்போனவள் திரும்பி வீட்டுக் கோடிக்குள் போய் அடையாளத்துக்கு வைக்கப்பட்டிருந்த கல்லைப் பார்த்து திருப்திப் பட்டவளாக செல்வத்திடம் ஓடினாள்.

செல்வம் தோட்டம் கொத்திக் கொண்டிருந்தான். அவன் மண்வெட்டியால் ஒவ்வொரு குழி வெட்டும் போதும் மேயரின் முகம் தோன்றித் தோன்றி மறைந்தது. மலர் கிணத்தடியில் நின்று அவனை கூப்பிடவும் மண்வெட்டியை வைத்துவிட்டு என்ன வழக்கத்துக்கு மாறாக இருக்கே என எண்ணியவனாக கிணற்றடிக்குப் போனான். மலர் தனது அவசரத்தை மறைத்துக்கொண்டு உணவைப் பரிமாறினாள் மெதுவாக,

'என்னப்பா ரத்திரி ஆமிக்காரனோட கதைச்சனியள்'

'இப்ப உனக்கு அது அவசரமே, பேசாமல் உன்ர வேலயப்பாரன'

'பெரிய பஸ்ஸடிக்கிறியள்'

'உனக்கு விடுப்பறியிறது என்றால் தின்னாமல் கொள்ளாமல் இருப்பா என்ன'

'பெரிய ரகசியம்தான் வைத்துக் கொள்ளுங்கோ'

'அவன் நடக்கப்போற மாகாணத் தேர்தல்ல எங்கள போட்டிபோடட்டாம்'

'அதுக்கு நீங்கள் என்ன சொன்னியள்'

'நான் அரசியல விட்டு ஒதுங்கி கனகாலம். இனியும் ஈடுபடமாட்டன் என்று சொன்னன்'

'ஏன், நிண்டுபாக்கலாமே'

'உனக்கென்ன விசரே'

'சரி. 2, 3 மணித்தியாலமா இதையே கதைச்சனியள்'

'மலர், பலதும் பத்தும் கதைச்சம். சனத்தப்பற்றிக் கதைச்சம், அரசியலப் பற்றிக் கதைச்சம் அதொண்டும் உனக்கு விளங்காது சும்மா இரு நீ.

'ம்... ம்'

அவளால் அடக்கமுடியாத கோபம் மேலெம்பியது. ஒருவாறு அடக்கிக்கொண்டு கால் பெருவிரலை பூமிக்குள் அழுத்தி கோபத்தைத் தணித்துக்கொண்டாள். கை துருதுருத்தது. கையைத் தூக்கி மண்டைக்கு நேராகப்பிடித்து சுட்டும் விரலை அழுத்த மண்டை சிதற

'ஐஐயோ கதைய நிப்பாட்டு யார்ரா அவள்'

'சும்மா இர்றா'

செல்வம் நேர அட்டவணையின்படி வாழ்பவன். காலை தோட்டத்துக்குப் போய் மதியம் வீடு திரும்பி குளித்தோ முழுகியோவிட்டு வாசிகசாலைக்குச் சென்று 4 பேப்பர படித்துவிட்டு திரும்பிவந்து மதிய உணவு. மீண்டும் தோட்டத்துக்குப் போய், இருளத்தொடங்க வீடு திரும்பி அங்கிருந்து நேராக தவறணைக்குப் போய் வர எப்படியும் இரவு 9, 10 மணியாகும். இந்த வாழ்வோட்டத்தில் மலர் அடிக்கடி வந்து போவாள் இடையிடையே காணமல் போவாள் அதைப்பற்றி அவன் அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் மலர் தான் எங்கபோனது என்பதை தவறாமல் சொல்லிக்கொள்வாள். சிலவேளை அதில் செயற்கைத்தனமும் ஒட்டியிருக்கும்.

மலர் செல்வத்தை விரும்பியதும், ஒருநாள் பொழுதில் திருமண பந்தத்துக்குள் புகுந்துகொண்டதெல்லாம் மலரின் முடிவு. அவள் இன்னொரு முடிவிலும் இருந்தாள்.

தாய்மை அடையவேண்டிய தேவை அவளுக்கில்லை. அதேபோல இது செல்வத்துக்குத் தெரியவும் தேவையில்லை என நினைத்திருந்தாள். எனவே அவள் நாட்டு வைத்தியம், கைமருந்து எல்லாவற்றையும் முறையே முறைதவறி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைக்கொண்டாள். மழலைகள் மீதான செல்வத்தின் அதீத காதலைக்கண்டு 'அபாக்கியவதி நான்' அப்பப்போ புலம்பிக்கொள்வாள்.

சாம்பல் மேட்டிலிருந்து பறக்கும் பீனிக்ஸ் பறவைபோல செல்வம் பறந்தான். தடைகளை மீறி மலர் தாய்மையானாள். இன்னொரு பீனிக்ஸ் பறவைகள்போல புலிகள் எம்பியது. அமைதிப்படை பின்வாங்க, இயக்கத்தில் இருந்தவர்கள், இருக்காதவர்கள், தொடர்புள்ளவர்கள், தொடர்பில்லாதவர்கள் எல்லாரும் தங்களிடம் சரணடையச் சொன்னார்கள் புலிகள், வழமை போலவே 'தவறினால் கடுமையாக தண்டிக்கப்படுவீர்கள்' என வீடுவீடாக ஸ்பீக்கர் கட்டிச் சொன்னார்கள்.

'என்ன மயிரையாவது பிடுங்குங்கோடா' என செல்வம் வழமைபோல இயங்கத் தொடங்கினான்.
ஆனால் மலர்தான் ஓடுப்பட்டுத் திரிந்தாள். இரவோடு இரவாக அவர்கள் தெற்கு நோக்கிப் பயணப்பட்டார்கள்.

'இதுக்கவேற வாயிலயும் வயித்திலயும். வாயில நல்லாத்தான் வருது, சனியன் சனியன' மலரின் மனம் முழுவதும் நிறைந்திருந்தது இது.

வவுனியாவில் வாழ்வு தொடர்ந்தது. சிறு குடிசை. சிறு மழலை. கூலி வேலையில் வாழ்க்கை ஒட்டிக்கிடந்தது.

கட்டம் கட்டமாக ஈழப்போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக சொல்லப் படுவதனால் இப்போது இலங்கை அரசாங் கத்துக்கும் புலிகளுக்கும் நோர்வேயின் அனுசரணையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. மீண்டும் தோட்டம் செய்யும் ஆசை செல்வத்தின் மனதில் துளிர்விட்டது. நிர்பந்தத்தின் காரண மாகவோ என்னவோ மலர் மீண்டும் ஊர் போக முடிவெடுத்தாள். மீண்டும் வடபுலம் நோக்கிய பயணம்.

செல்வம் வழமையான வாழ்க்கை ஓட்டத்திற்குள் புகுந்துகொண்டான். அவனுடைய ஒட்டத்துக்குள் இன்னொரு ஜீவனும் தன்னை ஒட்டிக்கொண்டது. எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நாய் என்றது. அவனுடனே ஒட்டிக்கொள்ளும் அவனுக்காகவே காத்திருந்து அவனுடனே உண்டு உறங்கியது. வீட்டுக்கு யார் வந்தாலும் போனாலும் உறுமிக்கொண்டே இருக்கும் ஆனாலும் பசித்தாலும் மனிதனைத் தின்னாது.

'வீமா சும்மா இரு' என செல்வத்தின் குரல் கேட்கும் வரை சுற்றிச் சுழன்று பம்பரமாய் நிற்கும். சமயத்தில் மலரே செல்வத்தை அதட்டுகிறபோது நாய் தயாராக எழுந்து நின்றுவிடும்.

தன்னைச் சூழல் இயக்கிக்கொண்டதாக அவன் உணர்ந்தான். மலர் ஒருவேளை குழந்தையுடன் அன்பாகவும் ஆதரவாகவும் நடந்துகொள்வாள். மறுவேளை கோபம், ஆத்திரம் மேலிட தூசித்துக்கொள்வாள். அடியும் போடுவாள்.

'என்னப்பா குழந்தையைப் போய்.....'

'பொத்துங்கோ வாய, போங்கோ அங்கால' அதில் அதிகாரம் இருக்கும், ஆணவம் இருக்கும். மலர் மெல்ல மெல்ல மாறினாள். வவுனியாவில் குடியேறிய காலகட்டத்தில் அரசியலில் ஈடுபடும்படி அவனது முன்னாள் தோழர்கள் வற்புறுத்தினர். எல்லோருடைய வேண்டுகோளையும் வற்புறுத்தலையும் புன்முறுவலோடு சமாளித்துக்கொண்டான். இந்தநிலையில் போராட்டக் குத்தகைக் காரர்கள் பாராளுமன்ற கதிரையைக் காட்டி ஆசையை மூட்டினார்கள்.

'என்ன நீங்கள் ஒண்டுக்கும் அசையிறியள் இல்லை. சரியெண்டு சொல்லுங்கோவன். எத்தின நளைக்குத்தான் கூலி வேலைக்குப் போய்...'

'நான் சொல்லுறது உங்கட காதில ஏறேல்ல என்ன?'

'பேசாமல் செத்துப்போகலாம்'

'நானொரு விசரி உங்களப் போய் கலி யாணம் கட்டினன்'

'பிள்ளேன்ர எதிர்காலத்தப்பற்றியாவது யோசிங்கோவன்'
என்றவாறு மலர் அவ்வப்போது சீண்டிக் கொண்டிருந்தாள். ஆத்தாதபோது,
'வைச்சிருக்கிறதயாவது சொல்லுங கோவன'

'என்ன?'

ஒரு நிமிடம் இல்லை ஒரு விநாடிக்குள் உள்ளங்காலில் பற்றிய குளிர் உச்சந் தலையில் வந்து மோதியது. கால் தாமதித்தது மீண்டும் அவன் சுயநினைவு பெற்றான்.

இன்ப அதிர்ச்சி, ஆச்சரியம், பயம், தயக்கம் எல்லாம் அவளில் நின்றது, இருந்தது, எழுந்தது, குதித்தது. கூத்தாடியது. திக்குமுக்காடிப்போனாள். சந்திக்க வரச்சொல்லி தகவல் வந்ததும் முதலில் அதிர்ச்சிதான். 'எப்படி ஆமின்ர கட்டுப்பாட்டுக்க அம்மான் வந்துநிக்கிறார்' என்ற கேள்வி அவளை குடைந்துகொண்டே இருந்தது.
முதன் முதலில் அவரைச் சந்தித்த நினைவு நிழலாடியது. கூதலோடிச் சிலிர்த்தது மேனி. அதுவும் அவளது வாழ்க்கையில் முதன் முதலில் நடந்தது. முதன்முதலில் அதப் பிடிக்கேக்க ஏன் பிடிக்கிறார் என்ற கேள்விதான் சுற்றிச் சுழன்றது. கூச்சமாய் இருந்தது. ஆனாலும் அவர் பிடிக்கிறத விடேல்ல. வெட்கம் அதை மிஞ்சிய அவமானம் புரக்கடிக்க முகஞ்சிவக்க தலையைக் குனிஞ்து கொண்டு நட்ட மரம் போல நின்றாள். பிறகு தமிழினியக்காதான் சொன்னா, கூச்சம் இல்லாமல் செய்ய அதைச் செய்யுறது என்று.

வழமைபோல செல்வம் தவறணையால் வந்து வீட்டுக்குள் நுழைந்தான் காலைச்சுற்றும் வீமனைக் காணவில்லையே

'வீமா.... வீமா......'

மலரின் சிறு அசைவுகளைக் கவனித்தான். ஒருவேளை இன்று கூடக்குடிச்சிட்டனோ என்று நினைத்தவாறு சிற்றாடை உடைஉடுத்தி பொங்கிவந்த தேன்துளியை அள்ளி மடியில் வைத்துக்கொண்டான். சிறுகையிரண்டையும் ஒன்றோடு ஒன்று தட்டியவாறே,

தத்தாங்கி கொட்டும் பிள்ளை

தயிரும் சோறும் உண்ணும் பிள்ளை

அப்பம் சுட்டால் தின்னும் பிள்ளை

அவல் உருண்டை உண்ணும் பிள்ளை

அப்பாவந்தால் சொல்லும் பிள்ளை

'என்ன அப்பா வந்தால் சொல்லும் பிள்ளை' என நாலுகாலில் பாய்ந்தாள் மலர்

'இது பாட்டப்பா'
'கண்டறியாத.....'
அந்தச் சின்னஞ்சிறுமொட்டை இரு உள்ளங்கைகளாலும் பொத்திக்கொண்டான்.

'தோழர் செல்வம்'

www.tamilarangam.net

ஆறும் கெட்டு அறிவும் கெட்டது. கீறலாயிருந்த போதையும் தெளிந்தது. ஒரு நிமிடம் நடுங்கி ஓய்ந்தது இதயம்.

'என்ன பாக்கிற மலரேதான்.
ம்...... லெப்டினன் மாதவி........ மலர்'
'ஐஐயோ கதய நிப்பாட்டு யார்ரா அவள்'

'பொத்தடா வாய'

கண்பதும் கேட்பதும் கனவா நனவா. நா எழுவில்லை. சிலையாகி நின்றான். நுாகுாாசு வாத்தின்ர இளைய மகள். மலரின் அக்காளை அமைதிப்படை துவம்சம் செய்துபோட்டு தாய், தகப்பனோட சேர்த்து சுட்டுப்போட்டாங்கள். இவள் தனிச்சுப் போனாள். ஊரைவிட்டு போனவள் திரும்பி வந்து மாமன் சின்னராசுவிடம் அடைக்கலம் புகுந்தவள நம்பிக்கையோடு கையைப் பிடிச்சனே எண்ணிக்கொள்ளவும்,

'செல்வம்,

நீர் ஏன் அரசியலில ஈடுபடுறீரில்ல, மறைச்சுவைச்சிருக்கிற ஆயுதம் - காசு எங்க? இந்த இரண்டுக்கும் பதில் சொன்னா நான் என்ர பாட்டுக்கு போய்விடுவன்'

'இதென்னப்பா பேக் கதகதைக்கிறா'
என்றவாறு எழுந்தபோது குழந்தையை அவனிடமிருந்து பிடிங்கிக்கொண்டவள்

'அங்கேயே நில்'

என்றவாறு மறைத்துவதைத்திருந்த பிஸ்டலை உருவினாள். அடுத்தகணமே குழந்தையின் தலையில் குறிவைத்தாள். வாஞ்சையோடு வந்த அவன் மனம் சுவரோடு அறையப்பட்டு வழிந்து துளித்துளியா நிலத்தில் வீழ்ந்து.

'இஞ்சபார் நீ லெபனான் றெயினிங்கா இருக்கலாம். தப்பிக்கலாம் என்று நினைச்சியோ உன்ர குழந்தையும் சரி. நாங்கள் உயிர்களப்பற்றி பெரிசா அலட்டிக்கொள்ளுறேல்ல என்றது உனக்குத் தெரியும். இப்ப கைய தூக்கிக்கொண்டு திரும்பு.... சுவரோடு ஒட்டி நில்'

'மலர் மலர் குழந்தைய ஒண்டும் செய்தி டாத,
மலர் மலர் குழந்தைய ஒண்டும் செய்திடாத,
மலர் மலர் குழந்தைய ஒண்டும் செய்திடாத,
மலர் மலர் குழந்தைய ஒண்டும் செய்திடாத,
மலர்... மலர்... குழந்தைய ஒண்டும் செய்திடாத,
ஒண்டும் செய்திடாத,
ஒண்டும் செய்திடாத,
மலர்... மலர்... குழந்தைய ஒண்டும் செய்திடாத.........'
பிஸ்டலை இடது கைக்கு மாற்றி அவனது பிடரியில் வைத்தாள். எனக்கும் உதுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதுபோல் விளக்கு பிரகசித்துக்கொண்டிருந்தது. அதேபோலல்லாமல் கோடிக்குள் ரத்தம் கக்கிச் செத்துக்கிடந்தது இடைச்சாதி.

'சொல்லு'

செல்வம் கண்களை மூடினான். குழந்தையின் கள்ளம் கபடமற்ற புன்னகை நிழலாடியது. தனது பிஞ்சு கைகளால் முகத்தை தூக்கி கன்னத்தில் கொஞ்சிய சுகம் மனசை நிறைக்க மறுகணம் வலது கையால் உருவிய கத்தியை செல்வத்தின் கழுத்தில் வைத்து,

'சொல்லு........ புண்டையாண்டி சொல்லுறா'
என்றவாறே காலைப்பிடித்து பிள்யை தலைகீழாக தூக்கினாள்.

'ஐயோ பிள்ள'

'பிள்ளயும் புண்டையும்'

என்று சொல்லிக்கொண்டே சுவத்தில் ஓங்கி

'ஐஐயோ... இன்பம்'

'இன்பமோ...? துரோகி!

சுவரோடு சுருண்டுகிடந்த சிறுமொட்டை அள்ளி
என்ர செல்லம் வாட,
தங்கம் வாங்கட,
என்ர வாழ்வே வாட,
அப்பனே வாட,
ரத்தம் சொட்டச் சொட்ட அணைத்துக் கொண்டு

தத்தாங்கி கொண்டும் பிள்ள

தயிரும்சோறும் உண்ணும் பிள்ள

இங்குமங்குமாக தவண்டுகொண்டிருந்தான்.

ஏதொவொரு உந்துதலினால் மீண்டும் சிறுத்தை இனத்தின் பச்சலோடு அவன் முன் தோன்றினாள். செல்வத்தின் மண்டை மயிரைப் பிடித்து உயர்த்தியபடியே,

'சொல்லு எங்க சமானுகள ஒழிச்சு வைச்சிருக்கிறா'

'ஒரு சாமானும் இல்லையடி...நா'

என்றவாறே வெறிபிடித்த நாய்போல எழுந்தபோது வசதியாக வந்த அவனது கழுத்தை அவளது கத்தி பதம்பார்த்தது.

சிறுமொட்டை அணைத்தபடியே மண்ணோடு மண்ணாக...
வெளியில் ருசி பார்க்க இன்னும் சிறுத்தையினத்தை சார்ந்தவைகள்.

இதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று கொலை இரண்டு கொலை.

இந்தச் சுவை இருபதாம் நூற்றண்டின் பிற்பகுதியில் எழுந்தது,
இதுவொரு வரலாற்றுத் திருப்பம் என்று புகழாங்கிதம் கொள்ள புழுங்கி அவிய எல்லாத்தையும் அவிழ்த்துப்போட்டு நிர்வாணமாய் நின்றது பேராசிரியம்.

கொலையிலும் ஒரு கலைதெரியுதுபார்

பிஸ்டலை எடுத்து சட்டைக்குள் மறைத்து வைத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினாள். குளிர்காற்று முகத்தில் அறைந்தது. சந்தியில் அவள் வருகைக்காக இரு சிறுவர்கள் சைக்கிளோடு நின்றிருந்தார்கள்.

'இந்தக் கதயில நீ என்ன சொல்லவாறா'
'நிர்வாணமாய் நின்றது பேராசிரியம் மட்டும்தானா'

'இது பொய்தானே'

'நீ,அவன், அவள், அது' சகல ஜீவராசி (நான்)களையும் தவிர மனிதன்'

இறுதிக்குறிப்பு: கடைசியாக செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர், யாழ்மாவட்டத்தில் கொலை செய்யப்பட்டு குவிக்கப்பட்டுள்ள மண்டையோடுகளில் மேலே கதையில் சொல்லப்பட்டவர்களது மண்டையோடுகளையும் நீங்கள் காணலாம்.மண்டையோடுகள் பழுதடைவதற்கு பல நூற்றாண்டுகள் எடுக்கும் என்பது நிபுணர்களின் கணக்கு.

❏

www.tamilarangam.net

# கே.டானியல் கடிதங்கள்




**அசுரா**

அ.மாக்சினால் இத்தொகுப்பில் டானியல் எழுதிய ஐம்பது கடிதங்கள் தொகுக்கப்பட்டுள்ளது. அக்கடிதங்களானது தனிநபர் உறவுகளுக்கப்பால் ஒடுக்கப்படும் தலித் மக்களின்பாலான டானியலின் சமூக அக்கறையையும், அவர் நம்பிக்கை கொண்டுள்ள சமூக-அரசியல் கோட்பாடுகளையும் தமிழகத்திலுள்ள தனது நெருங்கிய தோழர்களான அறிவுருவோன், வேலுச்சாமி, மணிஅரசன், அ.மார்க்ஸ் போன்றவர்களோடு பேசுவதாகவே இதன் உள்ளடக்கம் காணப்படுகிறது. இதில் இரண்டொரு கடிதங்களைத்தவிர மிகுதி அனைத்தும் அ.மார்க்ஸிற்கு எழுதப்பட்ட கடிதங்களாகவே காணப்படுகிறது.

இத்தொகுப்பான «டானியல் கடிதங்கள்»எனது வாசிப்பின் மூலமாக எனக்குள் ஏற்படுத்திய விளைவுகள் என்ன என்பதே இக்கட்டுரையின் நோக்கம். இத்தொகுப்பானது ஒரு கருத்தியல் கோட்பாட்டை வலியுறுத்தி நியாயப்படுத்துவதற்கான அல்லது நியாயப்படுத்துபவர்களுக்கான வாய்ப்புகளே மிகையாக உள்ளதென அக்கோட்பாட்டில் பற்றுள்ளவர்களாலும் நியாயப்படுத்திட முடியும். ஆனால் எனது வாசிப்பின் ஊடாக டானியலை அவரது பிற படைப்புக்களான நாவல்கள், சிறுகதைகளினூடாகவும், அ.மார்க்ஸின் இத்தொகுப்பின் மூலமாகவும் டானியலின் இலக்கிய படைப்புகளானது அவர் கொண்ட அல்லது அவர் நம்பிய சமூகக் கோட்பாட்டிற்கு சாதகமான விளைவுகளைக் கொண்டதா? அல்லது டானியலின் 'தனித்துவமாக', உயர்சாதிக் கருத்தியலுக்கு எதிரான போர்க்களமாக விளங்கியதா? என்பதே எனது வாசிப்பினாலான அனுபவமாக கொள்ளலாம்.

டானியலின் தனித்துவமானது; ஒடுக்கப்படும் தலித்சமூகங்களின் துயர் சூழ்ந்த வாழ்வையும், உயர்சாதிகளால் அச்சமூகம் அடைந்த துன்பங்களையும் எவ்வித கற்பனைச் செருகலுமின்றி ஜதார்த்தச்செறிவுடன் இலக்கியப்படைப்புகளாய் உருவாக்கியதில்தான் தங்கியுள்ளது. தமிழில் தலித் இலக்கியப் படைப்படைப்பிற்கான முன்னோடியாகவும் இருந்துள்ளார் என்பதை தமிழ் இலக்கியச்சமூகமே ஏற்றுக்கொண்ட ஒரு வரலாற்று உண்மையும். அதுவே டானியலின் காலத்தையும் வென்று நிற்கும் சாதனையுமாகும்.

எனவே டானியலது பல படைப்புகளை கற்றறிந்த அனுபவத்தோடும், அ.மார்க்சின் தொகுப்பான டானியல் கடிதத்தொகுப்பையும் உள்வாங்கியவகையில் டானியலது தனித்துவ செயல்பாட்டையும், அவர் நம்பிய சமூகக்கருத்தியல் கோட்பாடுகளையும் இணைத்துப் பரிசீலனைக்குட்படுத்தியபோது டானியல் நம்பிய கருத்தியல் கோட்பாட்டுக்கு பொருந்தா வகையில், போர்க்குணாம்சத்துடன் எதிர்ப்புக்குரலாய் இன்றும் நிலவுவதற்கு துணையாய் நிற்பது அவரது தனித்துவச் செயல்பாடேயாகும் எவ்வித கருத்தியல் கோட்பாடுகளும் அவருக்குத் துணை நின்றதில்லை. அதாவது தலித்சமூகத்தின் வாழ்வையும் அச்சமூகத்திற்கு யாழ்-உயர்சாதியினரால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைப் பிரயோகங்களையும் சொந்த அனுபங்களினூடகவும் அறிந்து, அவைகளை தனது படைப்பிலக்கியத்தினூடாக அம்பல படுத்தியதில் தான் நம்பிய சமூகக்கோட்பாட்டை மீறிய டானியல் அவர்களின் தனித்துவமே அவருக்குரிய பெருமையாக நான் கருதுகிறேன்.

டானியலின் தனித்துவமான செயல்பாட்டையும் அதன் பயன்பாடுகளையும், தான் நம்பிய


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகக்கோட்பாட்டு வாதத்தால் அவர் படும் துயரங்களில் சிலவற்றையும் இத்தொகுப்பில் உள்ள அவரது கடித உரையாடல்கள் மூலமாக நான் புரிந்து கொண்டவற்றை மிக சுருக்கமாக எனது பார்வையில் குறிப்பிட முனைகிறேன்.

இத்தொகுப்பில் உள்ள 6வது கடிதத்தில் (அ.மார்க்சிற்கு எழுதியது) 1982ம் ஆண்டு டானியலின் 'பஞ்சமர்' நாவல் வெளிவந்ததன் பிற்பாடு அந்நாவல் ஏற்படுத்திய சமூகப்பாதிப்பானது டானியலின் தனித்துவ செயற்பாட்டின் விளைவாகவே அமைந்திருந்தது. கொடிகாமம் எனும் ஊரில் நடந்த உண்மைச் சம்பவமாகவும் அதில் வரும் கதாபாத்திரங்கள் அனைத்தும் நிஜமான பாத்திரங்களாய் அமைந்த காரணத்தினாலேயே 'பஞ்சமர்' நாவலானது உயர்சாதிகளின் கோபத்திற்கு உள்ளாகியிருந்ததையும் நாம் அறியக்கூடியதாக இருக்கிறது.

மேலும் அந்நாவலின் இலக்கியச் சிறப்பாக இருந்தமைக்கான உதாரணமாக

பஞ்சமரில் காணும் அரசியல்
பஞ்சமரில் காணும் சமூகவியல்
பஞ்சமரில் காணும் காதல்
பஞ்சமரில் காணும் வீரம்
பஞ்சமரில் காணும் மொழி வளம்

என்பதான தலைப்புகளைக் கொண்டு ஒரு கவியரங்கம் அக்கால கட்டத்தில் நடைபெற்றிருக்கிறது என அறிகிறபோது இவற்றை நாம் டானியலின் கோட்பாட்டின் விளைவென்பதா? டானியலின் தனித்துவத்தின் விளைவென்பதா? இதைவிட பஞ்சமரின் தாக்கமானது இரண்டு கிராமங்களில் படிப்பறிவும், வாசிப்பறிவும் அற்ற கிராமத்தவர்கள் கேட்பதற்காக தொடர்ந்து மூன்று இரவுகள் அக்கிராம மக்கள் கேட்டு அறிவதற்காக வாசித்தும் காட்டப்பட்டிருக்கிறது எனவும் நாம் இத்தொகுப்பினுடாக அறியக்கூடியதாக இருக்கிறது.

பஞ்சமர் ஏற்படுத்திய விளைவுகள் பற்றி அறிவதற்காக தொடர்ந்து மூன்று இரவுகள் அக்கிராம மக்கள் கேட்டு அறிவதற்காக வாசித்தும் காட்டப்பட்டிருக்கிறது எனவும் நாம் இத்தொகுப்பினூடாக அறியக் கூடியதாக இருக்கிறது.

'பஞ்சமர்' நாவல் ஏற்படுத்திய விளைவுகள் பற்றி டானியல் அ.மார்க்ஸிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்படும் போது

**'மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் இலக்கியங்களை மக்களுக்கான அரசியலோடு ஒன்றிய வர்களால் தான் கொடுக்க முடியும்'**

என்ற துணிவும் தனக்கு ஏற்பட்டுள்ளதாக, தனது கோட்பாட்டு நம்பிக்கையின் காரணமாகவே அதை எழுதியுள்ளார் என்பதை அறியக்கூடியதாக உள்ளது. ஆனால் 'பஞ்சமர்' நாவலின் பகைப்புலமானது ஒரு கிராமத்தில் நிகழ்ந்த உண்மையான நிகழ்வின் விளைவுகளாகும். அதை இலக்கியப் படைப்பாற்றலாக்கியதன் சிறப்பு டானியலின் தனித்துவத்தாலானதே அன்றி அவர் திட்டமிட்ட அரசியல் கோட்பாட்டின் விளைவென்பதற்கான ஆதாரம்தான் என்ன!!!

பஞ்சமர் விளைவித்த அனர்த்தங்கள் எனும் கருத்தை உள்ளடக்கி உயர்சாதியினருக்கு ஆதரவான கட்டுரை எழுதிய நபர் ஒருவர் ஒரு கிராமத்தில் நூல் நிலைய திறப்பு விழாவிற்கு பேசுவதற்காக வந்திருந்தபோது ஆத்திரங்கொண்ட மக்கள் மேடை மீது பாய்ந்து அவரை அவமானப்படுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாது வீடு வீடாக சென்று பஞ்சமர் நாவலையும் விற்பனை செய்துள்ளார்கள் என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது.

இத்தொகுப்பிலுள்ள 9வது கடிதத்தில் 1982ம் ஆண்டு உயர்சாதியினரால் மேற்கொள்ளப்பட்ட கோரச்சம்பவம் ஒன்றைப் பற்றி மார்க்சிற்கு எழுதியுள்ளார். உயர்சாதிவெறியர்களால் அண்ணாச்சாமி எனும் தலித் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் இதனால் ஆத்திரமுற்ற தலித் மக்கள் கொலைக்கு காரணமான உயர்சாதியைச் சேர்ந்த ஒருவரின் சொத்துக்களை நாசப்படுத்தியிருக்கிறார்கள். இதற்காக கொலை செய்யப்பட்ட அண்ணாச்சாமியின் மனைவியை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரிக்காமல் பாதிக்கப்பட்ட சொத்துடமையாளரின் வீட்டில் வைத்தே விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இக்காலகட்டத்தில் இலக்கியப்பணி புரிந்தவர்களால் மேற்படி சம்பவத்தைப்பற்றி எவ்வித எதிர்வினைகளையும் மேற்கொள்ளப்படாததை டானியல் சுட்டிக்காட்டியுள்ளார்.

அக்காலகட்டத்தில் டானியல் அவர்கள் டொமினிக் ஜீவாவுடன் அதிக முரண்பாடுடையவராக இருந்திருக்கிறார் என்பதையும் இத்தொகுப்பில் அவர் எழுதிய கடிதங்களின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. டொமினிக்ஜீவாவின் தொகுப்பு நுலான 'ஈழத்திலிருந்து ஒரு இலக்கியக்குரல்' பற்றிய தனதுவிமர்சனத்தை இவ்வாறு தெரிவிக்கிறார்.

**'அதைப்படிக்க எனக்கு மனது மிகவும் கஸ்டப்பட்டுவிட்டது. சுயவிளம் பரத்தை வெளியாக்கும் இப்படி ஒரு புத்தகம் இலக்கியக்குரலாவது மண்ணாங்கட்டியாவது. என்றுதான் திட்ட வேண்டும்போல் தோன்றுகிறது. 'ஏதோ இலக்கி யக்காரனின் சிந்தனைக் கூடாகத்தான் உலக யுகங்கள் பிறக்கின்றன-நடக்கின்றன மாறு கின்றன, அல்லது நடக்கவேண்டும்-மாறவேண்டும் என்ற மேல்வீடு பழுதான நினைப்புகள் தமிழகத்திலும் உண்டு...'**

*(நாம் வரலாற்றுக்காலமான மூவாயிரம் ஆண்டுக்குள் நுழைந்தவர்களாக இருக்கிறோம். மனிதசமூகத்திற்காகவே எனக்கூறப்படும் ஆட்சிகளும் அதன்அதிகாரத்துக்குமான முயற்சிகளும் வெவ்வேறு வடிவங்களில் பிரயோகிக்கப்பட்டு வந்ததையே நாம்வரலாறாக எழுதப்பட்ட வகைகளா*



**டானியல் சமூகக் கோட்பாட்டையும் நம்பி இருந்தது மட்டுமல்லாது, உயர்சாதிக் கருத்தியலுக்கு எதிரான அவரது தனித்துவமான படைப்பிலக்கிய பணிகளின் ஈடுபாட்டையும், அதற்காக டானியல் பட்ட சிரமங்கள், அவர் தனது நெருங்கிய தமிழக தோழர்களுடன் பகிர்ந்து கொண்ட நட்புறவுகள் போன்ற பல சம்பவங்களை உள்ளடக்கிய ஒரு ஆவணமாக கடிதங்கள் எனும் இத்தொகுப்பு நூல் அமைந்திருக்கிறது.**

www.tamilarangam.net

*லும் எமது சமகால அனுபவத்தினூடாகவும் அறிகின்றோமேயல்லாது. அதிகாரத் தைக் கைப்பெற்றியவர்களின் முன் அனுமான இலட்சியங்கள் எவையுமே நிறைவேறியதான அடையாளங்கள் எதுவுமே இல்லை. மன்னர்களும் மதங் களும் நினைத் தவை நிகழ்ந்திட வில்லை சர்வாதிகாரம் சாதிக்க முனைந்தது நிகழ்ந்ததாய் வரலாறில்லை, ஆகா என எழுந்தது பார் யுகப்புரட்சி என பச்சைப்பொய் ஒன்றையும் பாடிச்சென்றான் பாரதி!!. ஏன் எமது புகலிட இருப்பானதும் எங்களது முன் அனுமானங்களா? இவைகள் மிக துல்லியமாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய விடயங்களாகும்)*



**'பலபுதிய சிந்தனைகளை மனதுக்குள் புகுவதற்கு வழி விட்டுக் கொண்டிருக்கிறேன் இன்னும் எத்தனையோ படிக்கக் கிடக்கிறது' எனும் டானியலின் சிந்தனையானது ஒரு கோட் பாட்டின் மீதான அவரது நம்பிக்கையே தவிர பலர் போல் சித்தாந்த 'பிடிவாதகராய்' இருந்ததில்லை என நம்பத் தோன்றுகிறது.**

டொமினிக்ஜீவா ஒருமுறை பஞ்சமர் நாவலை மறு பிரசுரம் செய்யும் அனுமதியைத் தனக்கு தருமாறு டானியலைக் கேட்டிருக்கிறார். பஞ்சமர் நூலின் மீள் பிரசுரத்தின் அவசியமும் அதன் சமூகத்தேவை யையும் நன்கறிந்த டானியல் அவர்கள்,ஏன் அம்முயற்சிக்கு தடையாயிருந்தார் என அறியும் போது, அது டானியலுக்கும் டொமினிக் ஜீவா விற்கும் இடையிலான கோட்பாட்டு முரண்விளைவென்பதை நாம் டானியலின் கடித உரையாடலூடாக துல்லியமாக பிரித்தறியலாம்.

அதாவது பஞ்சமர் நாவலின் முதல் பதிப்பு, பிரகாஸ் எனும் வெளியீட்டு நிறுவனத்தின் தவறுதலால் நாவலின் பிரசுர வடிவம் திருப்தியில்லாமல் இருந்ததாகவும் பஞ்சமர் நாவலை மீண்டும் தாங்களே வெளியிடுவதற்கும் பொருளாதாரம் மிகப் பலவீனமாக இருந்தது பற்றியும் அறியக்கூடியதாக இருக்கிறது. பொருளாதார நெருக்கடியும், முதல்பிரசுரமும் அழகுற அமையாததைக்கருதி டொமினிக்ஜீவாவிடம் மறு பிரசுர உரிமையை கொடுப்பது நல்லதே எனக்கருதும் அவரது தனித்துவத்தை இவ்வாறு சிதைத்துள்ளார். **'இந்த எண்ணம் அரசியல் நஷ்டத்தை வருவிக்குமெனில் எனது எண்ணத்தை மறு பரிசீலனை செய்தே ஆகவேண்டும், எனவே இதற்கான உங்கள் ஆலோசனையை அறிந்தபின்பே நான் எனது ஒப்புதலை கொடுக்க இருக்கிறேன்'** என அ.மார்க்சிடம் கேட்டு எழுதியிருக்கிறார். பிறர் ஆலோசனை கோருவது பிறருடன் கலந்து முடிவெடுப்பது தவறென்பதல்ல எனது பார்வை. டானியலின் கோட்பாடானது அவரது தனித்துவத்தை சிதைத்துவிடுகிற தென்பதுதான். டானியல் சீனக்கோட்பாடு டொமினிக்ஜீவா ரசியக் கோட்பாடு இவையே அவர்களுக்குள் இருந்த பிரதானமான முரண்பாடுகளாகத் தெரிகிறது.

இத் தொகுப்பிலுள்ள பல கடிதங்களில் டானியலின் வர்க்கம் சார்ந்த நிலைப்பாட்டையும் அதற்கான வழிமுறைகளையும் மார்க்சுடன் பகிர்ந்து கொள்வதைக் காணலாம். ஒரு கடிதத்தில் **'40அல்லது 50ஆண்டுகால வரலாற்றில் தலைமைகளின் போக்கு நீங்கள் குறிப்பிட்ட விதத்திலேயே அமைந்து வந்திருக்கிறது என்பது உண்மைதான். அந்த நிலையினை அடியோடு மாற்றி அமைப்பதற்கு வேலை முறையில், அணுகுமுறைகளில் நாம் நம்பும் வர்க்கத்தினை எதற்கும் தயாராக்குவதில் கவனம் செலுத்துதல் ஒன்றே சரியான பலனைத் தரக்கூடியதென்று நான் கருதுகிறேன்.'**

*(வர்க்கத்தினை எதற்கும் தயாராக்குவது, மக்களை வென்றெடுப்பது, மக்களை அரசியல்மயப்படுத்துவது, போன்ற சொற்பிரயோகங் களானது குறிப்பான் இல்லாத வெறும் அதிகாரக் குறியீடாகவே பயன்படுத்தப்பட்டதை இரண்டாயிரம் ஆண்டுகளையும் கடந்த வரலாறுகள் சாட்சியங் களாய் நிற்பதை நாம் அறிய மறுக்கிறோமே!! எம்மொழி யாகினும் குறிப்பதற்கான பொருள் இருப்பதால்தான் அப்பொருளைக் குறிப்பதற்கான குறியீடும் அதனாலான பயன்பாடு களுமாகும். மாறாக நாம் கருதியவகைகளும், எம்முள் புகுத்தப்பட்ட கருத்துகளும் குறிப்பான் இல்லாத அதிகாரக் குறியீடு களாய் இருப்பின் அதன் பொதுவான பயன்பாட்டுத் தன்மை அதிகாரத்தைக் கோருவதைத் தவிர வேறெவ்வகையில் சாத்தியம்!! இதனால் அதிகாரம் இல்லாத ஒரு சமூகம் சாத்தியம் என்பதல்ல ஒன்றிற்கு மாற்றான பதிலீடென்பது எவ்வகையில் புனிதமானதாக கட்டமைக்கப்படு கிறதென்பதே விவாதப் பொருளாகும்)*

டானியலின் அடிமைகள் நாவல் பிறந்த வரலாறும் அதன் பாத்திரங்களின் வாழ்வும் அவைகளின் இயல்புகளை சித்தரித்த உபாயமானது உயர்சாதியினருக்கெதிரான போராட்டக் களமாகவே அந்நாவல் வரலாற்றில் நிற்கும். யூன் 1983இல் எழுதிய 23வது கடிதத்தில் இலங்கையில் இனக்கலவரம் நடைபெறும் என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் திறனும் எமது இனமுரண்பாட்டு மோதல்களை ஆய்விற்குட்படுத்தும் தகுதியும் பெற்றவர் என்பதை அறியக்கூடியதாயுள்ளது.

பல கடிதங்களில் எமது ஆயுதப்போராட்டத்தின் தன்மையையும் இயக்கங்களின் செயல்பாடுகளையும் கடுமையான விமர்சனத்திற் குட்படுத்தியிருக்கிறார். அதற்கான பிரதான காரணமாக அவர்கொண்ட வர்க்க கோட்பாடே ஆகும். அதாவது இலங்கையின்அனைத்துத் தொழிலாள வர்க்கத்தின் விடுதலையை உள்ளடக்கிய போராட்டத்தில் நமம்பிக்கை கொண்டவராய் இருந்தார். அத்துடன் இந்தியாவையே எமது தாய்நாடு எனவும் வலியுறுத் துகிறார்.

இதிலுள்ள 34வது கடிதத்தில் எழுதுகிறார் **'பலபுதிய சிந்தனைகளை மனதுக்குள் புகுவதற்கு வழி விட்டுக் கொண்டிருக்கிறேன் இன்னும் எத்தனையோ படிக்கக் கிடக்கிறது'** எனும் டானியலின் சிந்தனையானது ஒரு கோட்பாட்டின் மீதான அவரது நம்பிக்கையே தவிர பலர் போல் சித்தாந்த **'பிடிவாதகராய்'** இருந்ததில்லை என நம்பத் தோன்றுகிறது. (39வது கடிதத்தில்) கொடிகாமம் என்ற ஊரில், அந்தஊரே பஞ்சமர் நாவலுக்கான களமாயும் இருந்திருக்கிறது.அங்கு வேளாளனுக்கு ஒரு தலித் இளைஞன் கை நீட்டி அடித்ததற்காக அவ்விளைஞனை துண்டு துண்டாக வெட்டிக்கொன்ற நிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றி அ.மார்க்சிற்கு எழுதும்போது

**'இங்கு சமூகவிரோதிகள் என்று பலர் அழிக்கப்படுகின்றனர் சாதிகாரணமாக இந்த இளைஞனைத் துண்டுகளாக வெட்டி எறிந்த சாதி வெறியர்கள் யாருமே இவர்களுக்கு சமூக விரோதிளாகப் படவில்லையே'** என அம்மக்களுக்கான குரலாக தனது தனித்துவத்தை வெளிப்படுத்தும் செயலையும் இத்தொகுப்பின் ஊடாக அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

எமது சாதியச் சமூகத்துள் நிலவும் தீண்டாமைச் சிந்தனையை பகிரங்கப்படுத்தும் ஒரு குறிப்பை இதில் உள்ள 46வது கடிதத்தில் காணலாம். அதாவது சிங்கள இனத்துள் கலப்பதில் உற்சாகப்படும் எமது சாதியச் சமூகச் சூழ்நிலையானது உள்ளூர் தாழ்ந்த சாதிப் பெண்களை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலைக்கு என்னும் வளைந்து கொடுக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

டானியலின் காலகட்டத்தில் தலித்-இலக்கியம் என்பது பரவலாக மதிப்புப் பெறாத காலகட்டம். எனவேதான தலித்-இலக்கியத்தின் அவசியம் பற்றி ஒரு மாநாடு தழிழ் நாட்டில் நடாத்துவதற்கு டானியல் பெருமுயற்சி எடுத்ததை அ.மார்க்சிற்கு எழுதிய கடிதங்களில் காணக்கூடியதாக இருக்கிறது. இருந்தும் அம்முயற்சி அவர் காலத்தில் நடைபெறவில்லை எனவும் அ.மார்க்ஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

டானியல் அவர்கள் எமது சமூகத்தில் நிலவுகின்ற சாதிப்படிநிலை கருத்தியலையும் ஒவ்வொரு சாதிக்குள்ளும் இருக்கும் உயர்சாதி நிலைக்கருத்தியலையும் சரியாக மதிப்பிட தவறியள்ளாரா என கருதத்தோன்றுகிறது.இதற்கான காரணம் என்னவெனில் சிவத்தம்பியையும் செ.யோகநாதனைப் பற்றியும் இத்தொகுப்பிலுள்ள கடிதங்கள் மூலம் அறிமுகப்படுத்தும்போது இவர்கள் எமது சமூகத்தில் மிகவம் கீழ்த்தட்டு மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிட்டிருக்கிறார். பஞ்சமர் எனக் குறிப்பிடப்படும் இனத்தவர்கள் சமூகச் சாதிக்கொடுமைக்கு உள்ளானதுபோல் மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சாதிக் கொடுமைக்குள்ளானவர்கள் இல்லை. நான் அறிந்தவரையில் இவர்களால் வெள்ளாளர்களென அறியப்படும் உயர்சாதி சாதியினர்கூட சில ஊர்களில் அடி உதை வாங்கிக்கட்டியதையும் நான் அறிந்திருக்றேன். பொருளாதாரத்திலும் அவர்களைவிட உயர்ந்த மட்டத்தில் இருக்கிறார்கள் என்றே கூறலாம்.

எனக்குள் மிகப்பெரிய கேள்வியாய் இருப்பது டானியலின் யாழ்ப்பாணத்து தோழர்களான சிவத்தம்பி கைலாசபதி போன்ற பேராசிரியப் புத்திஜீவிகள் இருந்தும் டானியலுடைய அனைத்துத் தேவைகளையும் புத்தகம் வெளியிடுவதிலுள்ள ஆலோசனைகள் அட்டைப்படம், முன்னுரை, விரும்பியபடி மாற்றங்களைச் செயயவும்,பொருளாதார நெருக்கடிகள் என ஒவ்வொன்றிற்கும் அ. மார்க்சுடனும் மற்றும் அவரது தமிழ்நாட்டுத்தோழர்களிடமும் மட்டுமே அனைத்து விடயங்களுமே பகிர்ந்து கொள்ளப்பட்டிருக்கிறதே!!.

கைலாசபதி பற்றி டானியல் கூறும்போது

சைவத்தையும் தமிழையும் பாதுகாத்தார் என்றும் பழமையிலே புதுமை காணமுற்பட்டவர் என்றும் ஆறுமுகநாவலரில் தேசியம் கண்டவர் என்றும்கூட கருத்துக்கள் ஆதாரங்களுடன் காட்ட முற்பட்டிருக்கின்றனர் பலர். இவ்வாறு பல தகவல்களையும், தலித் இலக்கியத்திற்காய் டானியல் மேற்கொண்ட காத்திரமான பணிகளையும் நாம் புரிந்து கொள்ள 'டானியலின் கடிதங்கள்' எனும் தொகுப்பு நூல் எமக்கு உதவியாய் உள்ளது.

டானியல் சமூகக் கோட்பாட்டையும் நம்பி இருந்தது மட்டுமல்லாது, உயர்சாதிக் கருத்தியலுக்கு எதிரான அவரது தனித்துவமான படைப்பிலக்கிய பணிகளின் ஈடுபாட்டையும், அதற்காக டானியல் பட்ட சிரமங்கள், அவர் தனது நெருங்கிய தமிழக தோழர்களுடன் பகிர்ந்து கொண்ட நட்புறவுகள் போன்ற பல சம்பவங்களை உள்ளடக்கிய ஒரு ஆவணமாக 'டானியலின் கடிதங்கள்'எனும் இத்தொகுப்பு நூல் அமைந்திருக்கிறது.

*ஒவ்வொருவரிடமும் இருக்கும் தனித்துவமானது பிறிதொருவரிடமிருந்து பல வேறுபாடுகளுடனானது, எழுதப்பட்ட வரலாற்றுப் பொருள் முதல் வாதமானது ஆயுவுகூடத்துள் வைத்துப் பரிசீலிக்கப்பட்ட வேதனையான சம்பவமாகக் கிடக்கிறது. மனிதனை மானிடம் எனும் வரலாறாக நோக்கப்பட்ட மிகத் தவறான செயல்பாட்டையும் அதன் குறைபாட்டையும் பலர் தெளிவுபடுத்தியபோதும் புரட்சி எனும் தாரக மந்திரத்தால் அனைத்தையும் கருத்து முதல் வாதமாகச் சித்தரித்து பிறிதொருவரின் கருத்துகளை விழுங்கிய மந்தைகளாத கத்திரிகிறோம். இறுதி இலட்சியம் என்பதில்லை என லெனின் நடவடிக்கைகளை வமர்சனம் செய்த பேர்ன்சரைனின் கேள்விகளை நாம் அலட்சியப் படுத்தினோம், தத்துவங்கள் கோட்பாடுகளென முன்மொழியப்பட்ட அனைத்தையும் அதன் எல்லைவரை சென்று குலைத்துப் போட்ட விமர்சனப்பாங்கையும் எதிர்புரட்சி/துரோகி என முத்திரை குத்தி தொடர்ந்தும் கொன்று குவிப்போம்.*

*நாம் வாழ்ந்து கொண்டிருப்பது முதலாளித்துவ சமூகத்திலுமல்ல, பாட்டாளி வர்க்க சமூகத்துக்காகவும் அல்ல!! மிகப் பெரிய முரண்பாடுகளுடனும் அதிகாரத்தை ஒரே வகையான குணாம்சத்துடன் அதாவது அடிமைப்படுத்துவது, மேலாதிக்கப்படுத்துவது போன்ற குணாம்சத்தை வெவ்வேறு வடிவங்களில் பிரயோகிக்கப்பட்டும், முன்னகர்ந்து கொண்டிருக்கும் நுகர்வுச் சமூகத்துள் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நுகர்வுமீதான குறைபாடானது எப்போதும் இருக்கும் அதுவே நிஜம் நிரந்தரமான சிந்தனை என்பதுவும் அதுதான். முலாளித்துவ சிந்தனை ,பாட்டாளி வர்க்க சிந்தனை என்பதெல்லாம் அதிகாரத்திற்காக பயன்படுத்தப்படும் சொற்கள் மட்டுமே, எனும் உண்மை உணரப்படும் பட்சத்திலேயே கொலை வெறிகளை தவிர்ப்பதும் பல்வேறு தனித்துவங்களுடன் இயங்கும் மனிதர்களுடன் இணைந்து வாழ்வதும் சாத்தியமாகும்.*

*இங்கே நான் சுருக்கமாய் குறிப்பிட்டவையாவும் எனது தனித்துவங்களாகும். பிறிதொருவரிடமிருந்து ஒரு இசைவைக் கோருவதற்கான கருத்தியலும் அல்ல. கருத்தியலின் தன்மையானது இசைவுடன்தான் நிலைத்திருக்கமுடியும்,இங்கு இசைவிற்கு சுயதேடல் அபாயகரமானது. ஒவ்வொருத்தருக்கும் இத்தொகுப்பு சம்பந்தமாக ஒவ்வொரு அபிப்பிராயங்கள் இருக்கும். ஒவ்வொருவர் கருதுவதும் அவர்களுடைய சொந்தம். பிறர் சொன்ன தத்துவங்களையும் கோட்பாடுளையும் எல்லோருக்குமானதாகக் கருதி மந்தைகாளாய்ப் போனதன் விளைவுகள் எமக்குப் போதாதா!!! நாம் ஒவ்வொருவரும் அவரவர் தனித்துவங்க ளைக்கொண்ட மனிதர்கள். ஜடப்பொருட்களல்ல.*

இவ்வகையில் டானியலின் தனித்துவத்தை அவரது நாவல்கள், சிறுகதைகளுடாக மட்டுமல்லாது, இந்த 'டானியல் கடிதங்கள்' எனும் தொகுப்பினூடாகவும் நான் புரிந்து கொள்ள காரணமாக இருந்த அ.மார்க்சிற்கும், அந்நூலை வெளியிட்ட அடையாளம்' பதிப்பகத்திற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

www.tamilarangam.net

# பேராசிரியர் சிவத்தம்பியும் நவ சிந்தனைகளும்

அ. மார்க்ஸ்



ஈழத்தில் தொழிலை வைத்துத்தான் சாதி இருந்தது என்றும் தொழிலை விடும்போது சாதி போய்விடுகிறது என்றும் பேராசிரியர் கூறுவது அப்பட்டமான பொய். இன்று புலம் பெயர்ந்து பழைய தொழில்களை விட்டுவிட்டு அய்ரோப்பிய நாடுகளில் அகதிகளாக வாழ்கிற ஈழத்தமிழர்களிடையே சாதி உணர்வுகள் இல்லையா? சாதி அடையாளங்கள் பார்க்கப்படவில்லையா? திருமணத் தொடர்புகளில் இறுக்கமான சாதி அடையாளங்களை அவர்கள் பேணுவது பேராசிரியரின் கவனத்தில் பட்டதில்லையா? புலம் பெயர்ந்து வாழ்ந்த போதிலும் ஒரு த-த் இளைஞனுக்கு வேளாளச் சாதியினர் பெண் கொடுக்கும் சூழல் வளர்ந்துள்ளது எனப் பேராசிரியர் கூற இயலுமா?

### நினைவுகளில் பேராசிரியர்

தமிழ் ஆய்வுலகம் இன்று தன்னிடையே வாழும் அதன் தலைமகனுக்குத் தன் மரியாதையையும், அன்பையும், நன்றிகளையும் தெரிவிக்கும் ஒரு திருவிழா போல இரண்டு நாட்களாக இந்நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆய்வாளர்கள் மட்டுமின்றி பேராசிரியரின் குடும்பத்தினர், மாணவர்கள், நண்பர்கள் என்பதாகத் திரண்டுள்ள இவ்வரங்கில் பேராசிரியருக்கும் எனக்குமான சில தனிப்பட்ட நெருக்கங்களைப் பகிர்ந்து கொள்ளாதிருக்க இயலவில்லை. வகுப்பறையில் நான் அவரிடம் பாடம் கேட்டவனில்லையாயினும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுப் பணிக்காக அவர் வந்திருந்த ஆறு மாத காலமும் கிட்டத்தட்ட ஒரு குருகுல வாசம் போலப் பழகிய அனுபவம் எனக்குண்டு. 'பாரதி: மறைவு முதல் மகாகவி வரை' எனும் நூலை அவருடன் இணைந்து எழுதும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது. அநேகமாக இத்தகைய வாய்ப்பு எனக்கு மட்டுமே கிட்டிய ஒன்று என்றே கருதுகிறேன். தரவுகளைச் சேகரித்தல், தொகுத்தல், பகுப்பாய்வு செய்தல், இறுக்கமாக எழுதுதல், செப்பம் செய்தல் என்கிற நூலெழுது முறைமையினை நான் அறிந்து சொல்வதற்கு அவ்வனுபவம் பேருதவியாக அமைந்தது. ரஷிய வழி மார்க்சிய நூற்கள், கிறிஸ்டபர் காட்வெல், ஜார்ஜ் லூகாக்ஸ் ஆகியவற்றோடு நின்றிருந்த எங்கள் படிப்பை விசாலப்படுத்தியது அவருடைய நட்பு. குறிப்பாக டெர்ரி ஈகிள்டன், ரேமன்ட் வில்-யம்ஸ் ஆகியோரின் எழுத்துக்கள் அவர் மூலம் பரிச்சயமாயிற்று.

தஞ்சையிலுள்ள சரபோஜி மன்னர் காலத்திய சத்திரங்களை நிர்வகிக்கும் அரசுத்துறை நடத்துகிற 'ராஜா ரெஸ்ட் ஹவுஸ்' எனும் ஒரு எளிய விடுதியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்கியிருந்த பேராசிரியரைத் தினசரி கல்லூரி முடிந்தவுடன் நேராகச் சென்று சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். நண்பர் வேல்சாமி கடையை மூடிவிட்டு இரவு எட்டு மணி போல வருவார். பேசிக்கொண்டே இருப்போம். இடையில் வெளியே சென்று ஓட்டலில் சாப்பிட்டு விட்டு, தஞ்சை வீதிகளில் வண்டிகளில் விற்கும் வாழைப்பழத்தை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு, பேருந்து நிலையத்தை ஒட்டி எப்போதும் ஒலிபெருக்கியில் ஒலித்துக் கொண்டிருக்கும் லாட்டரிச் சீட்டு விளம்பரத்தை ரசித்துக் கொண்டே அறைக்கு வருவோம். நல்ல சிலோன் தேயிலை வைத்திருப்பார் பேராசிரியர். பாலில்லாமல் தேநீர் அருந்துவதும் எங்களுக்குப் பழக்கமாயிற்று.

புலமை சார்ந்த விடையங்கள் தவிர வேறு சில உயர் பண்புகளையும் நாங்கள் அவரிடமிருந்து கற்றுக் கொண்டோம். இடதுசாரிக் கட்சிகளுடன் அடையாளம் காணப்பட்ட அவரைச் சந்திக்கவென கிராமப் பகுதிகளிலிருந்து சில நேரங்களில் கட்சித் தோழர்கள் கூட வருவர். எந்நேரமாயினும், எத்தனை முக்கிய வேலை இருந்தபோதிலும் அவர்களுடன் நீண்ட நேரம் உரையாடி மகிழ்வார் பேராசிரியர். அவர்களிடம் சொல்வதற்கு மட்டுமின்றி அவர்களிடமிருந்து அறிந்து கொள்வதற்கும் பேராசிரியருக்குச் செய்திகள் இருக்கும்.

பேராசிரியர் தஞ்சையில் இருந்த காலத்தில்தான் எங்களுக்கு இன்னொரு முக்கிய நட்பும் வாய்த்தது. தோழர் டானியல் அவர்களும் 'பஞ்சமர்' நூல் வெளியீட்டிற்காக அதே நேரத்தில் தஞ்சையில் தங்கியிருந்தார். அரசியல் ரீதியாகவும், வர்க்க அடையாளத்தினடியாகவும் எங்களின் சாய்வு டானியலின் பக்கமே அதிகமிருந்தது. டானியலும் பேராசிரியரும் இடதுசாரி அரசியலில் வேறு வேறு அணியில் இருந்தவர்கள். முன்னவர் சீனச் சார்புடையவர். பின்னவர் ரசியச் சார்புடையவர். தவிரவும் பேராசிரியரின் தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து முற்றாக விலகியவர் டானியல். எங்களுடனான உரையாடல்களில் சிவத்தம்பி அவர்களை குறிக்குமிடத்து டானியல் மிகவும் இயல்பாகத் 'திரிபுவாதி' என்பார். எங்களுக்கு மிகவும் வியப்பாக இருக்கும். ஏனெனில் இங்கே அது அரசியல் எதிரிகளைத் திட்டப் பயன்படுத்தும் சொல். திட்டும் நோக்கிலன்றி அரசியல் ரீதியாக அடையாளப்படுத்தும் நோக்கிலேயே டானியல் பேராசிரியரைத் 'திரிபுவாதி' என்பார். இருவருக்குமிடையே நல்லதொரு நட்பு நிலவியதை எங்களால் அனுமானிக்க முடிந்தது. அத்தகைய ஒரு நட்பைப் பேராசிரியர் கைலாசபதி அவர்களுடன் டானியல் கொண்டிருக்கவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இத்தனைக்கும் கைலாசபதி ஏதோ ஒரு வகையில் சீனச் சார்பு நிலை எடுத்தவர்.

பேராசிரியரின் மாணவன் என இங்கே என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். அது எனக்குப் பெருமை. ஆனால் பேராசிரியர் அவர்களுக்கு இது எந்த அளவிற்குப் பெருமை சேர்க்கும் என எனக்குத் தெரியாது. ஏனெனில் நாங்கள் செய்து வரும் பல காரியங்கள் இன்று பேராசிரியருக்குக் உவப்பளிக்கக் கூடியதாக இருக்காது என்பதை நானறிவேன். எனினும் சிவத்தம்பி அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றிக் கடன்பட்டுள்ளேன். பேராசிரியரின் 'கல்விசார் வாழ்வும் பணியும்' என்கிற தலைப்பில் இங்கே அளிக்கப்பட்டுள்ள சிற்றேட்டைப் புரட்டும் யாருக்கும் மலைப்பு ஏற்படவே செய்யும். எத்தனை அனுபவங்கள், எத்தனை விரிவான தளங்களில் அவரின் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை எல்லாம் அறியும் போது பிரமிப்பு மேலிடுகிறது. பேராசிரியர் நவீன சிந்தனைகளை எதிர்கொண்டுள்ள விதம் என்பதாக அன்றி அவரது பிறதுறைப் பங்களிப்புகளில் ஏதொன்றையாவது நான் தேர்வு செய்திருந்தேனெனில் எனது நன்றிக் கடனைச் செலுத்துவதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்திருக்குமே என்கிற ஆதங்கத்தோடு எனது தலைப்பினுள் நுழைகிறேன்.

### 1. மரபில் வேர் கொண்ட பேராசிரியர்

வரலாற்றுப் பொருள் முதல்வாத அணுகல் முறை என்பது மிகவும் வரட்டுத் தனமாகப் பிரயோகிக்கப்பட்டுக் கொண்டிருந்த தமிழ்ச் சூழலில் அதனைச் சற்றே நெகிழ்த்தி லூயி அல்துஸ்ஸர், டெர்ரி ஈகிள்டன், பியர் மாசெறி ஆகியோர் முன்வைத்த 'கருத்தியல்' என்கிற கருத்தாக்கத்தின் அடிப்படையில் மார்க்சிய அணுகல் முறையைச் செழுமையாக்கியவர் பேரா. சிவத்தம்பி. வரலாறு எழுதியல், இலக்கிய வழி வரலாறு எழுதுதல் ஆகியன குறித்துத் தமிழ்ச்சூழல், குறிப்பாகக் கல்விச் சூழலில் பிரக்ஞை உருவாக்கியவர் அவர். திணைக் கோட்பாடு குறித்த அவரது கட்டுரை இங்கு ஏற்படுத்திய சலசலப்பு குறிப்பிடத்தக்கது. உயர் இலக்கியங்களுடன் தன் ஆய்வைச் சுருக்கிக் கொள்ளாமல் சனரஞ்சகக் கலாச்சாரம் (popular culture) குறித்த விமர்சனங்களையும் அவர் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார். புதிய செய்திகளைச் சீரணிக்க முயற்சிக்கும் போக்கு அவரிடம் இன்றுவரை உள்ளதை யாரும் மறுத்துவிட இயலாது.

இன்றைய கொண்டாட்டங்கள் அனைத்திற்கும், சிவத்தம்பி அவர்கள் தகுதியானவர்தான் என்ற போதிலும் இத்தகைய முயற்சிகள் அவரை ஒரு 'திரு உரு' (icon) வாக்கும் ஆபத்தை நாம் சுட்டிக்காட்டாதிருக்க முடியாது. இப்படியான திருஉருக்களை உருவாக்குவதென்பது ஆய்வு வளர்ச்சிக்கு இடையூறாக மாறிவிடுகிற ஆபத்து உண்டு. இந்த எச்சரிக்கை குறித்த உணர்வுடன் என் உரை அமைகிறது.

பேராசிரியர் ஒரு பன்னாட்டு அறிஞர் (International Scholar). அவரது ஆய்வுகளும் விரிந்த பரப்புடையது. அவரது புலமை குறித்து இருபதிவுகளைச் செய்தல் அவசியம்.

1. விரிந்த புலமையும் கல்வியியல் தகுதிகளும் உள்ள போதும் நோம் சோம்ஸ்கி போல அவர் ஒரு Public Intellectual (மக்கள் அறிஞர்) அல்லர். சமகால அரசியல் குறித்து அவர் பேசியிருந்த போதிலும் ஈழத் தேசிய அரசியலில் சில சந்தர்ப்பங்களில் அவர் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவரை ஒரு Public Intellectual எனக் கூற இயலாது. தம் மக்களின் உரிமைகள் மீறப்படுதலை விருப்பு வெறுப்பின்றி அவர் கண்டித்தோ, அவற்றிற்கு எதிரான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதோ, வீதி இறங்கியதோ கிடையாது.

2. அவருடைய சர்வதேசப் புலமைக்கு அப்பால் அவரிடம் வேர்கொண்டுள்ள உள்ளூர்த் தன்மை (localism) கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பெருமைக்குரிய மாணவரான சிவத்தம்பி அவர்களின் ஐயா (தந்தையார்) கார்த்திகேசு அவர்கள் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பண்டிதர்; சைவ சித்தாந்தக் கழகத்தின் சைவப் புலவர். குமாரசாமிப் புலவர், நவநீதி கிருஷ்ண பாரதி, சோமசுந்தரப் புலவர், மகா–ங்க சிவம் ஆகியோரிடம் பாடம் கேட்டவர், கட்டுரையாளர், சோதிட ஆய்வாளர், முருக பக்தர். வெருவல், செல்வச் சன்னிதி பற்றிப் பாடல்கள் இயற்றியவர். இத்தகைய பாரம்பரியத்தில் தோன்றிய நம் பேராசிரியர் எந்நாடுகள் சுற்றிய போதிலும் தன்னாட்டில் மய்யம் கொண்டவராக, அதன் பண்பாடுகளிலும், மரபுகளிலும், அரசிய–லும் ஆழ வேர் பாய்ச்சியவராக இருந்து வந்துள்ளார். புலமைப் பணிகளுக்காக மட்டுமே (தற்கா–கப்) புலப் பெயர்வுகளை மேற்கொண்டவர் அவர். ராகுல சாங்கிருத்தியாயன் போல ஒரு நாடோடி அல்லர். கரவெட்டி, வல்வெட்டித்துறை முதலான அடையாளங்கள் அவரிடமிருந்து தரிக்க இயலாதவை.

இந்தப் புலம் பெயரா மாண்பு அவரை மிகவும் மரபு வழிப்பட்ட புலமையாளராக உருவாக்கியுள்ளது. மார்க்சியம் பேசிய போதும், பின் நவீனத்துவத்தைச் சொல்லாடிய போதும் அவர் இந்த மரபின் எல்லையைத் தாண்டியதில்லை. இதன் விளைவாகவே இறுக்கமான மரபு வழிப்பட்டவர்களாலும் அவர் ஏற்றப்படுகிறார். இன்று தமிழுலகம் முழுமையாக எழுந்து நின்று அவரைப் போற்றுவதற்கும் அதுவே காரணம்.

மரபில் இவ்வாறு வேர் பாய்ச்சி நின்றமை இத்தகைய பெருமைகளை அவருக்கு ஈட்டித் தந்திருந்த போதிலும் அவரது ஆய்வில் சில எல்லைகளை ஏற்படுத்தவும் செய்தன. சில அம்சங்களில் குறுகிய வட்டத்திற்குள் அவரை முடக்கின. நிரப்ப இயலாத சில இடைவெளிகளை அவை ஏற்படுத்தின. சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், சிறுகதை, நாவல் முதலான நவீன இலக்கியங்கள், திரைப்படம், தொலைக்காட்சித் தொடர் குறித்தெல்லாம் விரிவாய்ப் பேசிய பேராசிரியர் மணிமேகலை, சிந்தாமணி, பெருங்கதை முதலான பேரிலக்கியங்கள் குறித்து ஒன்றும் பேசியதில்லை. திருக்குறளில் காணப்படும் சமணக் கூறுகளுக்கு அழுத்தம் கொடுத்ததில்லை. பர்ட்டன் ஸ்டெய்னின், இடைக்கால வரலாறு குறித்த ஆய்வுகளை விளக்கும் பேராசிரியர் களப்பிரர் காலத்தை இருண்ட காலமாய்ச் சித்திரிக்கும் தமிழ் மரபு குறித்து சீனி வெங்கடசாமி போல உறுதியான கருத்தும் பகர்ந்ததில்லை.

பக்தி இயக்கம் குறித்த மரபு வழிப்பட்ட விமர்சனமற்ற பார்வையே பேராசிரியரிடம் வெளிப்பட்டது. வணிக வர்க்கத்திற்கு எதிரான நிலவுடமையினர்களின் எதிர்ப்புணர்வாகப் பக்தி இயக்கத்தை விவரித்து வந்த பேராசிரியர் பின்னாளில் இக்கூற்றிற்கு அதிக அழுத்தம் கொடுக்கவில்லையாயினும் அதனை விதப்பதைக் குறைத்தாரில்லை.

> **''தமிழ்நாட்டில் சைவ–வைணவப் பாரம்பரியங்களின் மிக முக்கியமான பலம் பக்தி நிலையே. பக்திநிலை என்பது வழிபடு கடவுளோடு ஒரு ஆள்நிலைப்பட்ட (Personal) உறவு கொள்வது ஆகும்''. (நேர் காணல்கள், பக்.202).**

என்பது பேராசிரியரின் கூற்று. அகில இந்திய மனநிலை (Indian Psyche) தமிழ் இலக்கியங்களில் வெளிப்படுவது குறித்த கேள்வி எழுப்பப்படும்போது,

> **''இந்திய மனநிலை தமிழ் நாவல்களில் வரவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் ஒன்று. இந்திய மனநிலை வேறு எந்த வகையிலும் தெரியாத வகையில் தமிழ் இலக்கியத்தில் வந்துள்ளது. மாணிக்க வாசகர், நம்மாழ்வார் போன்றோரின் கவிதைகள், அது இந்திய மனநிலைதான். கடவுளோடு உள்ள உறவுதான். அவதாரங்கள் பற்றிய நினைவுகள்தான். தெய்வங்கள் பற்றிய கோட்பாடுதான். பக்தி பற்றியதுதான். அது மாணிக்க வாசகர், நம்மாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார்கள் போன்றவர்களின் சொந்த வாழ்க்கை யாகவே இருந்தது. தமிழ் இலக்கியத்திற்கு இன்றுள்ள பெரிய பலன்களில் ஒன்று இது. இந்தியப் பக்தி இலக்கியத்திற்கான மிகப்பெரிய உதாரணமே தமிழ் இலக்கியங்களில் இருப்பவைதான்''. (நேர்காணல்கள், பக்.214).**

என்கிற பேராசிரியரின் கூற்றைக் கூர்ந்து கவனித்தோமானால் இந்திய மனநிலையாக அவர் கருதுவது சைவ, வைணவ மனநிலை, அதாவது இந்து மனநிலையே என்பது விளங்கும். பவுத்த, சமணக் கருத்து நிலைகளை அவர் இந்திய மனநிலையாகக் கருதவில்லை. அவதாரங்களின் நினைவுகளை ஏந்தும் கம்பனும், வில்–ப்புத்தூராருமே அவருக்கு இந்திய மனநிலையைப் பிரதிப–த்தவர்கள். இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப வளங்கெழு கூலவணிகன் சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலையும், கொங்குவேளிரால் பாடப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் பேராசிரியரின் நினைவில் எடுத்துக்காட்டுக்களாய் எழவில்லை. தவத்திறம் பூண்டு, அறவணரிடம் தருமம் கேட்டுப் 'பவத்திறம் அறுப்பேன்' என நோற்றுபாரோர் பசிப்பிணி அகற்றித் திரிந்த அன்னை மணிமேகலையும் அவருரைத்த பவுத்த சீலங்களும் இந்திய மனநிலைக்கு எடுத்துக்காட்டுகள் இல்லை எனில் வேறு எதுதான் இந்திய மனநிலை? அவதார நினைவுகள் மட்டுந்தானா?

பேராசிரியரின் விரிந்த ஆய்வுக் களத்தில் மணிமேகலைக்கும் இதர சமணக் காப்பியங்களுக்கும் இடமில்லாமற் போனது வெறும் விபத்தன்று. அவரிடம் வேரோடி நின்ற சைவ மனநிலையே அதற்குக் காரணம்,

சமண, பவுத்த, வைதீக மதங்களில் பக்திக்கு முக்கியமில்லை. முக்தி என்ற கருத்தாக்கம் வைதீகம், அவைதீகம் இரண்டிற்கும் பொதுவானதுதான் என்ற போதிலும் வேள்வி வேட்டல், சுயதர்மம் பேணுதல், பக்தி செய்தல் ஆகியவற்றின் மூலம் முக்தி அடைதலை வற்புறுத்தியது வைதீகம். மாறாக பஞ்சசீலம், எண் வழிப்பாதை என அறவாழ்க்கை மூலம் மட்டுமே முக்தி அடைதலைக் கூறியது அவைதீகம். வைதீகம் இறைமயப்படுத்தியதை (Theologise) அவைதீகம் அறமயப்படுத்தியது (Ethicise). திருக்குறள் முதலான அற இலக்கியங்களும், பசிப்பிணி அகற்றுதல், பல்லுயிரோம்புதல், சிறைக் கோட்டங்களை அறக் கோட்டங்களாக மாற்றுதல் எனச் செழித்தோங்கிய அறச்சூழலை அழித்தொழித்தது பக்தி இயக்கம். அறம் சார்ந்த வாழ்வைக் காட்டிலும் பிள்ளையை வெட்டிக் கறி சமைக்கிற, மனைவியைக் கூட்டி அனுப்புகிற கண்மூடித்தனமான பக்தியை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வற்புறுத்திய இலக்கியங்களைத் தமிழின் பெருமையாகக் கருதுவது எங்ஙனம்?

பக்தி இயக்கம் வன்முறையாகப் பவுத்த, சமண மதங்களை அழித்தொழித்த உண்மையை அடக்கி வாசிப்பதையும் பேராசிரியரிடம் காண இயலும். இதுகுறித்த கேள்வி ஒன்றை கல்பனாதாசன் எழுப்பும்போது,

> **''பவுத்தமும் சமணமும் பொருள் முதல் வாதம் பேசிய மதங்கள் அல்ல. பவுத்தத்தையும் சமணத்தையும் அழித்ததாகச் சொல்கிறீர்கள். நாங்கள் அவற்றை உள்வாங்கிக் கொண்டோம். யாழ்ப்பாணத்தில் சைவ சாப்பாடு என்பது சமண உணவு. எங்களுக்கு மிகப்பெரிய இலக்கணங்களை எழுதியது சமணமும் பவுத்தமும்தான்... எங்கே அழித்தோம்?''**

எனப் பதிலுரைப்பார். திருஞானசம்பந்தர் சமணர்களைக் கழுவில் ஏற்றிய வரலாற்றைப் பேட்டி எடுப்பவர் நினைவூட்டுகையில் 'அது வரலாறல்ல,' வெறும் எங்கே இல்லை இத்தகைய சண்டைகள் என்கிற ரீதியில் பேசி நழுவுவார் பேராசிரியர் *(நேர்காணல், பக்.180).* hageography எந்த மதமும் பொருள் முதல் வாதம் பேசியிருக்க முடியாது என்பதை நாம் அறியலாம். ஆனால் நான் சற்று முன் குறிப்பிட்டது போல பவுத்த, சமண மதங்களில், குறிப்பாகப் பவுத்தத்தில் இறைவனை மய்யப்படுத்திய செயற்பாடுகள் குறைவு. பிக்கு என்பவர் மக்களுக்கு அறம் உரைப்பவர் மட்டுமே. பிராமணர் போல இறைவனுக்கும் மக்களுக்கும் இடைத்தரகர் அல்ல. இந்த கூறுகளின் விளைவாகவே பெரியார் போன்ற இறை மறுப்பாளர்களும், ராகுல்ஜி போன்ற மார்க்சியர்களும் பவுத்தத்தின் பால் ஈர்க்கப்பட்டனர். மறைந்த தோழர் கே.டி.கே.தங்கமணி அவர்கள் தான் உயிருடன் இருந்த வரைக்கும் ஏதேனும் ஒரு இதழுக்குக் கட்டுரை எழுதச் சொன்னால் மணிமேகலை பற்றி மட்டுமே எழுதி வந்தார் என்பதும் இங்கே நினைவு கூறத்தக்கது.

''பவுத்தத்தையும் சமணத்தையும் நாங்கள் உள்வாங்கிக் கொண்டோம்'' என்கிற பேராசிரியரின் கூற்று ஆர்.எஸ்.எஸ் (ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்) அமைப்பின் முன்னுரிமைப் பணிகள் குறித்த அடல் பிகாரி வாஜ்பேயின் கட்டுரை ஒன்றை எனக்கு நினைவூட்டுகிறது *(பார்க்க : 'Sangh My Soul', Organiser, May 7, 1995. பா.ஜ.க வின் இணையதளத்திலும் இக்கட்டுரையைக் காணலாம்).* ஆர்.எஸ்.எஸ்ஸின் பணிகளாக அவர் கூறுவன: 1) இந்துக்களை அமைப்பாக்குவது (Organising) 2) முஸ்லிம்களை உட்கொள்வது (assimilation). மாற்று மரபுகளை அவற்றின் அடையாளங்களை அழித்து உட்செரிக்கிற இந்துத்துவ மாண்பை விதப்பதில் பேராசிரியர் வாஜ்பேயியுடன் இணைய நேர்கிற புள்ளி கவலைக்குரிய ஒன்று.

சங்க இலக்கியங்கள் குறித்துப் பேராசிரியர் நிறைய எழுதியுள்ளார். மிக ஆழமான ஆய்வுகள் பலவற்றைச் செய்துள்ளார். யாதும் ஊரே யாவரும் கேளிர் என முழங்கிய சங்க இலக்கியத் தொகுப்பு குறிஞ்சி, முல்லை முதலான ஐவகை நிலங்கள், திணைகளை வற்புறுத்தியதன் மூலம் (Contextual Sensitiveness) பிரபஞ்சம் தழுவிய ஒரு விசாலித்த பார்வையை (Universalism) முழுமையாக வெளிப்படுத்த இயலாமற் போனதை ஏ.கே.ராமானுஜம் போன்றோர் சுட்டிக் காட்டுவதும் இங்கே சிந்திக்கத்தக்கது. மரபில், சூழலில் வேர் பாய்ச்சுதல் என்பது பிரபஞ்ச விசாலிப்பிற்குத் தடையாகவே அமையும்.

## 2. அறியப்பட்ட மார்க்சியத்தின் மீதான பேராசிரியரின் விமர்சனங்கள்:

எண்பதுகளின் இறுதி தொடங்கித் தொண்ணூறுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் அறியப்பட்ட மார்க்சியத்தின் மீதும், மக்களால் தூக்கி எறியப்பட்ட சோசலிசக் கட்டுமானங்கள் குறித்தும் பல விரிவான விவாதங்களுக்கு வழி வகுத்தன. கட்சிகளுக்குள் இந்த விமர்சனங்கள் ஆழமாகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்ளப்படாதது ஒரு குறை தான் என்ற போதிலும் புதிய நூற்றாண்டின் தொடக்கத்தில் இடதுசாரிக் கட்சிகள் கருத்தியல் அளவிலும் நடைமுறைகளிலும் பாரிய மாற்றங்களுக்கு உள்ளாகியிருப்பதை யாரும் மறுத்துவிட இயலாது,

சோசலிசக் கட்டுமானத்தின் இலக்கிய வெளிப்பாடாகிய சோசலிச எதார்த்தவாத அணுகல் முறையைக் கைவிடுவதாகத் தமிழின் முக்கிய இடதுசாரி விமர்சகரான தொ.மு.சி. ரகுநாதன் அவர்கள் 1990களின் தொடக்கத்தில் அறிவித்தார். என்.சி.பி.எச். நூல் வெளியீட்டு நிறுவனம் நடத்திய கருத்தரங்கொன்றில் *(திருநெல்வேலி, செப்டம்பர் 29, 30, 1990)* அவர் சமர்ப்பித்த வழிகாட்டு உரையில் இதை அவர் அறிவித்தார். இதற்கும் முன்னதாகவே 1988ல் வெளிவந்த தனது நூலொன்றில் சோசலிசக் கட்டுமானத்தின் கருத்தியல் அடிப்படைகளான பிரதிபலிப்புக் கொள்கை, அடித்தள–மேற்கட்டுமானக் கோட்பாடு ஆகியவற்றின் மீதான விமர்சனத்தைப் பேராசிரியர் சிவத்தம்பி *(தமிழில் இலக்கிய வரலாறு, பக்.12–13, 37)* முன் வைத்தார். இத்தகைய விமர்சனங்களைக் கட்சி சாராத மார்க்சியர்கள் (எஸ்.வி. ராஜதுரை, ஞானி, நுஃமான் முதலானோர்) பல ஆண்டுகட்கு முன்பே வைத்து வந்த போதிலும் ரசியச் சார்பு மார்க்சியர்களான சிவத்தம்பியும் ரகுநாதனும் இதை வெளிப்படையாக அறிவிக்க நேர்ந்ததற்குப் பின்னணியாக இருந்தது கோர்பசேவின் 'பிரெஸ்தோரிகா' மற்றும் 'கிளாஸ்நாஸ்ட்' (1985–1991) செயற்பாடுகள்.

1999 இறுதியில் அளித்த பேட்டி ஒன்றில்,

> **''நான் ஆறு வருட காலத்திற்கு மேலாக சோசலிச எதார்த்த வாதத்தை நாம் பேசியிருக்கக்கூடாது என என் மனக்குறைகளைச் சொல்லி வந்திருக்கிறேன். நாங்கள் விமர்சன எதார்த்த வாதத்தைப் பேசியிருக்க வேண்டும்'' (நேர்காணல்கள், பக்.23)**

எனக் கூறிய பேராசிரியர் தொடர்ந்து, ''அதிலே பின்னோக்கிப் பார்க்கும்போது சில தவறுகள் ஏற்பட்டிருக்கிறது என்பதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம்'' என்பார். அங்காவது புரட்சிக்குப் பிந்திய அரசைத் தக்க வைப்பதற்காக அப்படி எழுத நேரிட்டது. இங்கு சோசலிச எதார்த்தவாதத்தின் தேவை என்ன என்றும் ஒரு கேள்வியை முன் வைப்பார். இதன்மூலம் சோவியத் நாட்டில் சோசலிச எதார்த்தவாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> பௌத்தமும் சமணமும் பொருள் முதல் வாதம் பேசிய மதங்கள் அல்ல. பௌத்தத்தையும் சமணத்தையும் அழித்ததாகச் சொல்கிறீர்கள். நாங்கள் அவற்றை உள்வாங்கிக் கொண்டோம். யாழ்ப்பாணத்தில் சைவ சாப்பாடு என்பது சமண உணவு. எங்களுக்கு மிகப்பெரிய இலக்கணங்களை எழுதியது சமணமும் பௌத்தமும்தான்... எங்கே அழித்தோம்?
>
> எனப் பதிலுரைப்பார், திருஞானசம்பந்தர் சமணர்களைக் கழுவில் ஏற்றிய வரலாற்றைப் பேட்டி எடுப்பவர் நினைவூட்டுகையில் அது வரலாறல்ல. வெறும் எங்கே இல்லை இத்தகைய சண்டைகள் என்கிற ரீதியில் பேசி நழுவுவார் பேராசிரியர்



சரிதான் என்கிற முடிவுக்கு அவர் வருவதையும், இங்கு இவ்வணுகல் முறை பாவிக்கப்பட்டதனால் விளைந்தது 'சிறு தவறுகளே' என்று அவர் கருதுவதையும் நாம் கவனிக்க வேண்டும். எனினும் காலம் தாழ்த்தியேனும் சோச–ச எதார்த்தவாதம் குறித்த ஒரு விமர்சனத்தை அவர் முன்வைக்க நேர்ந்தது வரவேற்புக்குரியதே.

சோச–சக் கட்டுமானத்தின் மீது விமர்சனங்களை வைக்கும் மார்க்சியர்களைப் பலவாறாக நாம் அடையாளம் காணலாம். லெனின் வரைக்கும் எல்லாம் சரியாக இருந்ததென்போர்; ஸ்டா–ன் வரைக்கும் சரியாக இருந்தது. குருஷ்சேவ் தான் கெடுத்தார் என்போர்; குருஷ்சேவ், பிரஷ்னேவ் எல்லாம் கூடச் சரிதான், கோர்பசேவ்தான் எல்லாவற்றையும் குட்டிச்சுவராக்கியது என்போர்... இப்படி. சிவத்தம்பி இதில் இரண்டாம் வகையில் நிற்கிறார். அதாவது லெனின் வரை OK; ஸ்டா–னிடம் தான் பிரச்சினை துவங்குகிறது.

> **"ஸ்டா–னியத்தின் குறை லெனின் காலத்திய உள்கட்சி விவாதம் இல்லாமற் போனதே. லெனின் போன்ற ஒரு ஜனநாயகவாதி, எல்லாக் கட்டங்களிலும் ஜனநாயகச் சூழலைப் பேணுகிற சிந்தனைத் திறமுள்ள தீட்சண்யமான ஒரு பார்வையுள்ள ஒரு தலைவர் இருக்கிற வரையில் பிரச்சினை இல்லை" (நேர்காணல்கள், பக்.250)**

என்பதே பேராசிரியரின் கருத்து. லெனின் காலம் தொடங்கி ரசியாவில் மேற்கொள்ளப்பட்ட சோச–சக் கட்டுமான முறைமீதே விமர்சனங்கள் உண்டு. சென்ற நூற்றாண்டின் முக்கிய மார்க்சியச் சிந்தனையாளர்களின் ஒருவரான மாசேதுங் இது குறித்து வைத்துள்ள விமர்சனங்கள் புகழ்பெற்றவை. சிவத்தம்பியின் மார்க்சியத்தில் மாவோவுக்கு இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாவோ குறித்த பிரக்ஞை அவரிடம் இருந்ததற்கான அடையாளமே அவரது எழுத்தில் கிடையாது.

நிற்க. சோவியத் கட்டுமானத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்து நான் மிக விரிவாக எழுதியுள்ளேன் ***(பார்க்க மார்க்ஸியத்தின் பெயரால், விடியல் பதிப்பகம், 1995).*** இங்கு அதனை மீண்டும் விரித்து, எழுதுவது தேவையில்லை. தனிச் சொத்துக்களை ஒழித்தல், பாட்டாளி வர்க்கக் கட்சியை ஆட்சி பீடத்தில் ஏற்றுதல் இந்த இரண்டு அம்சங்களே சோச–சக் கட்டுமானத்திற்குப் போதுமானவை என்று லெனினியம்–போல்ஷ்விசம் கருதியது. மற்றபடி அரசு வடிவம், நீதி வழங்கு முறை, சட்ட ஒழுங்கு நிலைநாட்டல், கல்வி, மருத்துவம் குறித்த நடைமுறைகள், தொழில்நுட்பம் ஆகியவற்றில் முதலாளித்துவ நடைமுறைகளைப் பின்பற்றுவதில் தவறில்லை என்கிற கருத்தை அது கொண்டிருந்தது, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்கிற கருத்து, முதலாளியச் சனநாயகமும் கூட மக்களுக்கு மறுக்கப்படுவதற்கு ஏதுவானது. சுருக்கமாகச் சொல்வதானால் உள்ளடக்கம் (தனிச் சொத்தின்மை, பாட்டாளி வர்க்க ஆட்சி) மாறினால் போதும் வடிவங்கள் அப்படியே இருக்கலாம் என்பதே லெனினிய சோச–க் கட்டுமானக் கொள்கை. இதன் இலக்கிய வெளிப்பாடே சோச–ச எதார்த்தவாதம் (சோச–சம் என்கிற உள்ளடக்கம் + எதார்த்தவாதம் என்கிற முதலாளிய வடிவம்). சோவியத் + மின்சாரம் = சோச–சம் என்கிற எளிய சூத்திரங்களை எல்லாம் லெனின் பயன்படுத்தினார்.

லெனின் காலத்தில் உட்கட்சி விவாதத்திற்கு முழுமையாக இடமிருந்தது எனப் பேராசிரியர் சொல்வதை நாம் ஏற்க முடியாது. தொழிற்சாலைகளை லாபகரமாக


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்துவதற்கு நிர்வாகங்களை மீண்டும் முதலாளிகளின் கையிலேயே கொடுத்துவிடலாம் என்கிற முடிவும் லெனின் காலத்திலேயே எடுக்கப்பட்டது. இதனை எதிர்த்து 'தொழிற்சாலை கவுன்சில்' என்கிற கருத்தை முன் வைத்த ஒசின்ஸ்கி போன்றோர் லெனினாலேயே ஓரங்கப்பட்டனர். படிப்படியாகப் பெரும்பான்மையின் அடிப்படையில் முடிவெடுப்பது என்கிற நடைமுறையும் முடிவுக்கு வந்தது. இதன் உச்சகட்டமாக ஸ்டா–னியம் அமைந்தது.

மார்க்ஸ் முன் வைத்த 'பண்ட மாயை' என்பதற்கொத்த 'சொத்து மாயை' (Property Fetishism)க்கு போல்ஷ்விசம் ப–யாகியது. அதாவது தனிச் சொத்து ஒழிந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்கிற நம்பிக்கை. அரசு உதிர்வதற்குப் பதிலாக அரசு வலுப்பெற்ற சமூகமாக (Statist Society) சோவியத் சமூகம் மாறியது. இந்தியா போன்ற நாடுகளிலுள்ள 'ஹேபியாஸ் கார்பஸ்' உரிமை கூட சோவியத் மக்களுக்கு இருந்ததில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அரசியல் ரீதியாக ரசிய மார்க்சியத்தின் எல்லைகளைத் தாண்ட இயலாத சிவத்தம்பியின் பார்வையில் இத்தகைய சிந்தனைகளுக்கு இடமில்லை என்பதால், சோவியத் சமூகத்தின் சிக்கல் வெறுமனே ரொட்டிக்குக் 'கியூ' நிற்கும் பிரச்சினையாக மட்டுமே அவருக்குப் பட்டது.

> **''இவற்றினூடாக (அங்கு) ஒரு சமத்துவம் இருந்தது. Social democracy இருந்தது. பெண்கள் சமத்துவம் போற்றப்பட்டது. உழைப்பாளிக்கு உண்மையான சமூக கவுரவம் இருந்தது'' (நேர்காணல்கள், பக்.258)**

என்கிற பேராசிரியரின் கூற்றில் ஒவ்வொரு அம்சத்தையும் மறுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அய்யா, அங்கே சமத்துவம் இருக்கவில்லை. சமூக ஜனநாயகம் இருக்கவில்லை. பெண்கள் சமத்துவம் போற்றப்படவில்லை. உழைப்பாளிகளுக்கு உண்மையான சமூக கவுரவம் இருக்கவில்லை. அதிகாரமனைத்தும் கட்சி அதிகார வர்க்கத்திடமே குவிந்திருந்தது. அதன் விளைவாகவே மக்களாலேயே அவ்வரசுகள் தூக்கி எறியப்பட்டன. எனவே சோச–சக் கட்டுமானத்தின் அடிப்படைகளையே நாம் விமர்சிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஜனநாயகம் குறித்த ஆழமான விவாதங்களே இன்றைய தேவை. அவற்றை விட்டுவிட்டு சோச–சத்தை முகாமை (manage) செய்ததில் நேர்ந்த சிறு தவறுகளாகப் பிரச்சினைகளைப் பார்த்துவிட இயலாது.

சீன சோவியத் முரண்பாடு அடிப்படையில் சோச–சக் கட்டுமானம் குறித்த இரு போக்குகளுக்கிடையே ஏற்பட்ட ஒன்று. பெத்தலஹேம், பால் ஸ்வீஸி, சாமிர் அமின் முதலானோர் இதுகுறித்து விரிவாக எழுதியுள்ளனர். சோவியத் பொருளாதாரம் குறித்த மாவோவின் விமர்சனத்தையும் இதுதொடர்பான 'மாபெரும் விவாதத்தையும்' அப்படியே ஒதுக்கிப் போட்டுவிட்டு,

> **''அது (சீன–சோவியத் முரண்) உண்மையில் அரசுகளில் முரண்பாடு. அது மார்க்சீயத்தின் முரண்பாடென்று நான் எடுக்கமாட்டேன்'' (நேர்காணல்கள், பக்.259)**

எனப் புறந்தள்ளுவதற்குப் பேராசிரியர் துணிவதென்பது சோச–சக் கட்டுமானம் குறித்த அவரது ரசியப் புரித–ன் விளைவே.

சோச–ச நாடுகளில் அதிகாரங்கள் உருவானமை குறித்த மனந்திறந்த விமர்சனங்களின் விளைவாகவே இன்றைய நவீன சிந்தனைகள் உருப்பெற்றுள்ளன. இவை குறித்த ஒரு மூடிய பார்வையுடன், மார்க்சிய வாசிப்பில் சுய விமர்சனத்தின் இடம் குறித்தும், பரந்துபட்ட மார்க்சிய வாசிப்பு குறித்தும் பேராசிரியர் பேசும்போதும் *(நேர்காணல், பக்.270)*, ''மார்க்சியம் என்பது மேலே மேலே பாயும் நதி. அது பின்னோக்கிப் பாய்வதில்லை'' என்று முழக்கமிடும் போதும் அவை வெற்றுப் பிரகடனங்களாகவே நம் காதில் ஒ–க்கின்றன.

### 3. மார்க்சியத்திற்குப் பிந்திய சிந்தனைகளும் பேராசிரியரும்:

தமிழ்ச் சூழ–ல் அமைப்பியல், பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் தொடர்பான நூல்களெல்லாம் 1980கள் தொடங்கிவர ஆரம்பித்தன. இவை ஏற்படுத்திய சிந்தனை உசாவல்களும், விவாதங்களும் குறிப்பிடத்தக்கவை. இலக்கியவாதிகள், சிறு பத்திரிகைகள் என்கிற மட்டங்களைத் தாண்டி அரசியல் இயக்கங்களும் கூட இப்புதிய சிந்தனைகள் மற்றும் ஆய்வு முறைகள் பற்றி மாற்றுக் கருத்தை முன் வைக்கும் சூழலும் இங்கிருந்தது. 1970, 80களில் இங்கு எல்லோரையும் கவர்ந்திருந்த மரபு வழிப்பட்ட மார்க்சிய அணுகல்முறை சற்றே பின்னடைவுக்குள்ளாகி, 'வித்தியாசம்', 'பெருங்கதையாடல்களில் சிதைவு', 'கட்டவிழ்ப்பு' முதலான கருத்தாக்கங்கள் மேலுக்கு வந்தன. இளைஞர்கள் மத்தியில் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்திய இச்சிந்தனைகள் ஏற்கனவே தம்மை நிறுவியிருந்த அறிவு ஜீவிகள் மத்தியில் சற்றே அச்சத்தையும் ஏற்படுத்தின.

இக்காலகட்டத்தில் மிகத் தீவிரமாகத் தமிழ் ஆய்வுக் களத்திலும் கல்விக் களத்திலும் சர்வதேச அளவில் புகழுடன் இயங்கி வந்தப் பேராசிரியர் சிவத்தம்பி 1999 இறுதி வரை இச்சிந்தனைகள் குறித்து ஒரு இறுக்கமான மவுனத்தையே கடைபிடித்து வந்தார். இப்புதிய சிந்தனைகள், விவாதங்கள் குறித்த உங்களுடைய கருத்து தான் என்ன? என்கிற கேள்வி ஈழச் சூழ–ல் இளைஞர்கள் மத்தியில் உருவானபோது வேறு வழியின்றி 1999 இறுதியில் பின் நவீனத்துவம் முதலான சிந்தனைகளின் மீது பேராசிரியர் தன் கருத்துக்களைச் சொல்லத் தொடங்கினார். *(பார்க்க: 'நேர்காணல்கள்' மற்றும் 'நவீனத்துவம் – தமிழ் – பின் நவீனத்துவம்', மக்கள் வெளியீடு, 2001).* 1997ல் 'தமிழில் பின் நவீனத்துவம் பற்றிப் பேசப்படுவதற்கு முன்' என்றொரு கட்டுரையைத் 'தழல்' இதழில் அவர் எழுதியுள்ள போதிலும் அதில் பின்நவீனத்துவம் பற்றி ஏதும் பேசப்படவில்லை. தமிழில் நவீனத்துவம் வந்துவிட்டதா என்பது குறித்த ஒரு உசாவலாகவே அக்கட்டுரை அமைந்தது.

முற்போக்கு எழுத்தாளர் சங்கக் கூட்டமொன்றில் *(கோவை, மே 1999)* பின் நவீனத்துவம், பின் அமைப்பியவாதம் ஆகியன குறித்துப் பேசக்கூடாது எனத் தான் தடுக்கப்பட்டது குறித்து நினைவு கூறுமிடத்து,

> **''மார்க்சியவாதிகளான நண்பர்கள் தோழர்கள் பலர் அமைப்பியல்வாதம், பின் அமைப்பியல்வாதம், பின் நவீனத்துவம் ஆகியன பற்றிப் பேசுவதே பாவச் செயல் எனக் கருதுகிறார்கள். இது ஒரு**

www.tamilarangam.net

**தவறான அணுகுமுறை. இது மார்க்சியத்தை மதவெறியாக்கும் மடமை''**

எனச் சிவத்தம்பி குறிப்பிடுகிறார். 'நவீனத்துவம், தமிழ், பின் நவீனத்துவம்' என்கிற தலைப்பிட்ட ஒரு நூ—ன் முன்னுரையில் (பக். 15) அவர் இவ்வாறு குறிப்பிடும்போது நாம் சற்றே நிமிர்ந்து உட்காருகிறோம். ஆர்வமுடன் நூலைப் புரட்டுகிறோம். ஆனால் இந்நூ—லுள்ள கட்டுரையையும், 'நேர்காணல்கள்' தொகுப்பில் உள்ள இது தொடர்பான அவரது கருத்துக்களையும் படித்து முடிக்கும்போது நமக்குப் பெரும் ஏமாற்றமே எஞ்சுகிறது. இந்தக் கருத்துக்களைக் கண்டு எதற்காக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் அஞ்சினர் என்கிற வியப்பும் மேலெழுகிறது.

''பின் நவீனத்துவத்தைப் புறங்காண்பதற்கான வழி அதன் இயல்புக்கான காரணத்தை அறிவதுதான்''
என்கிற கூற்றி—ருந்து *(நவீனத்துவம்....... பக்.178)* மார்க்சியத்திற்குப் பிந்திய சிந்தனைகளைப் 'புறங்காணப்பட வேண்டிய' வைகளாகவே கருதிக் கவச குண்டலங்களுடன் அவர் களமிறங்கிவிட்டது நமக்கு விளங்குகிறது.

பின் நவீனத்துவம், பின் அமைப்பியல்வாதம் தொடர்பாகவும், இச்சிந்தனைகளுக்கெதிராகவும் பேராசிரியர் முன் வைக்கும் வாதங்களைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கொள்ளலாம்.

*** பின் நவீனத்துவம் என்பது இப்போது மேற்குலகச் சிந்தனை மரபில் வந்துள்ள ஓர் எண்ணக்கரு... 1970ல் பிந்திய மேநாட்டு அய்ரோப்பிய அமெரிக்கப் பண்பாட்டையும், பண்பாட்டு நடவடிக்கைகளையும் குறிப்பிடுவதற்குப் பயன்படும் தொடர்.... பின் அமைப்பியல் வாதத்துக்குச் சமாந்திரமாக அமையும் கலை பண்பாட்டு நிலையைக் குறிக்க இத்தொடர் பயன்படும். *(நவீனத்துவம்..... பக்.160)***

*** பின் நவீனத்துவம் காலையின் செல் நெறிகள் பற்றியது......... பின் நவீனத்துவம் ஒரு சிந்தனைச் செல் நெறியாகும். *(நவீனத்துவம்........ பக்.179)***

*** பின் நவீனத்துவம் வந்துவிட்ட நாடுகள் அனைத்தும் மேற்குலக நிலைப்பட்டவையே. உலகின் பெரும்பாலான நாடுகளிலும் நவீனத்தன்மை முற்று முதலாகத் தனது ஓட்டத்தை முடித்துக் கொண்டுவிட்டது என்று சொல்ல முடியாது. *(நவீனத்துவம்....... பக்.213)***

*** பின் நவீனத்துவம் என்பது முற்று முழுதான ஒரு எதிர்மறை வாதமே. அது நவீனத்துவத்தின் சொல்நெறிகளை, ஈட்டங்களை மறுத—க்கிறதே தவிர இந்த எதிர்ப்பு நிலைக்குப் பின் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாட்டு முறைமை யாது என்பதை அது வற்புறுத்தவில்லை. *(நேர்காணல்கள் 204).***

*** அது சுட்டும் அரசின் அதிகாரங்களை முற்று முழுதாக ஒழித்துவிடக்கூடியதா என்பதைப் பற்றிய தெளிவு அதற்கு இல்லை............அது குறிப்பிடும் நுண் அரசியல் அதிகாரங்களை ஓரங்களில் கடிப்பதாக இருக்குமேயொழிய அழிப்பதாக அது இராது. *(நவீனத்துவம்..........பக்.204).***

*** உண்மை பற்றிய மறுத—ப்பு பின் நிற்கும் முதலாளித்துவத்தைப் பார்க்க மறுத்துவிடுகிறது. *(நவீனத்துவம் பக்.204, 205)***

*** பகுத்தாய்வு நோக்கினை எதிர்க்கிறது......... அறிவியலையே எதிர்க்கிறது. *(நவீனத்துவம், பக்.204, 205)***

*** மறுத—ப்பு முகத்தை காட்டுகிறதே ஒழிய மேலே சென்று அவற்றைக் களைவதற்கான வழிமுறைகள் பற்றிய சிந்தனைக்கு நம்மை இட்டுச் செல்வதில்லை.**

*** ''பின் நவீனத்துவத்தில் எனக்குள்ள சிக்கல் இதுதான். என்னவென்று சொன்னால் it doesn't end there. Differentiation is there. *அந்த* difference (வித்தியாசத்திற்கு) அப்பால் என்ன? So What? அதற்கு அப்பாலே எங்கே போகிறோம்?**

பேராசிரியரின் மேற்குறித்த கருத்துக்கள் யாவும் கடந்த பத்தாண்டுகளாகப் பின்நவீனச் சிந்தனைகளை எதிர்த்த கட்சிக்காரர்களும், மற்றவர்களும் முன் வைத்தவையே. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் பேராசிரியரின் வாதங்கள் யமுனா ராஜேந்திரனின் 'ரேஞ்சை'த் தாண்டாதவை. இது ஒரு மேலைத் தத்துவம், இங்கே பொருந்தாது, எல்லாவற்றையும் விமர்சிக்குமே ஒழிய தீர்வைச் சொல்லாது, உண்மை / பகுப்பாய்வு ஆகியவற்றை மறுத—ப்பது என்பவற்றிற்கு அப்பால் பேராசிரியர் வேறேதும் சொல்லவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். இத்தகைய கேள்விகளுக்குப் பலமுறை பதில்கள் சொல்—யாயிற்று. அவற்றையும் பேராசிரியர் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவற்றில் போதாமை என எதையாவது அடையாளம் கண்டு அதைச் சுட்டிக் காட்டி இருந்தால் விவாதத்தை மேற்கொண்டு செல்ல நமக்கு ஏதுவாக இருந்திருக்கும். துரதிர்ஷ்டவசமாகப் பேராசிரியர் அதற்கு வாய்ப்பளிக்கவில்லை.

பேராசிரியர் மேற்கோள் காட்டும் நூற்களில் ல்யோதார்த்தின் நூலொன்றைத் தவிர பிற அனைத்தும் இரண்டாம் நிலை நூற்கள் *(நவீனத்துவம், பக்.210).* தெரிதா, ஃபூக்கோ, பாத்ரிலா, ல்யோதார்தின் பிற நூற்கள் ஆகியவற்றைப் பேராசிரியர் படித்ததற்குச் சான்றில்லை. 'போஸ்ட் மார்டனிச ரீடர்'களையும் பின் நவீனத்தை எதிர்த்து எழுதிய டெர்ரி ஈகிள்டனின் இரண்டாம் தரமான நூலையும் மட்டும் வைத்துக் கொண்டு புதிய சிந்தனைகளைப் 'புறங்காண' முயற்சித்தால் நியாயமாக இராது என்பதை நாம் பேராசிரியரிருக்கு விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை. *(டெர்ரி ஈகிள்டனின் நூலைப் படித்தவுடன் தனக்கு ஏற்பட்ட இன்பச் சி—ர்ப்பை ஒரு குழந்தை போல அவர் வெளிப்படுத்துவதைக் காண்க: நேர்காணல்கள், பக்.267)*

பின்நவீன நிலைச் சிந்தனைகளுக்கு மேற்குலக முத்திரை குத்துகிறார் சிவத்தம்பி. உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்ட ஒரு சூழ—ல் இந்த விவாதம் எந்த அளவிற்குப் பொருத்தமாக இருக்கும்? மார்க்சியம், தேசியம் இவைகளெல்லாம் மேற்குலகச் சிந்தனைகள் இல்லையா? ஏகப்பட்ட பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டங்களை உருவாக்கும் பொறுப்பிலுள்ள பேராசிரியர் தனது கல்விசார் செயற்பாடுகளில் மேற்குலகப் பங்களிப்புகளைப்

www.tamilarangam.net

பின்பற்றுவதில்லையா? நாவல், சிறுகதை, பதிப்பு நுணுக்கங்கள், ஒப்பியலாய்வு இவை எல்லாம் மேற்குலகி–ருந்து இங்கே வரவில்லையா? உங்கள் முனைவர் பட்ட ஆய்விற்கு நீங்கள் பேராசிரியர் ஜார்ஜ் தாம்ஸனை நாடிச் செல்லவில்லையா?

சனநாயகம், மனித உரிமைகள், கருத்துச் சுதந்திரம், பண்பாட்டுப் பன்மைத்துவம், அறிதல் முறைகள் ஆகிய சமகாலப் பிரச்சினைகள் நுணுக்கமான தத்துவார்த்த தளத்தில் விவாதிக்கப்பட வேண்டியவை. இந்தியத் தத்துவ மரபோ நவீனத்துவத்தையே எட்டாத ஒன்று. ஆதி சங்கரனுடனும் சைவ சித்தாந்தனுடனும் தேங்கிப் போனவர்கள் நாம். 'விமர்சன எதார்த்தவாதம் பேசியிருக்க வேண்டும்' என இன்று நீங்கள் புலம்புகிறீர்கள்? கான்ட்டையும், ஹூஸ்ஸரலையும், ஹெய்டெகரையும் பயிலாமல் இதை நாம் எப்படிச் செய்திருக்க முடியும்? ஹெகலையும், மார்க்ஸையும் கூடத்தான் இங்கே நாம் ஒழுங்காகப் பயின்றோமா? இத்தகைய ஆழ்ந்த படிப்புகளின்றி எளிய சூத்திரங்களை வழங்கியது என்பதால் தானே நாம் சோச–ச எதார்த்தவாதத்தில் திருப்திப்பட்டோம்?

'நவீனத்துவமே தனது ஓட்டத்தை முடித்துக் கொள்ளாத நாடுகளில்' பின் நவீனத்துவத்தின் தேவை என்ன என்று கேட்கிறார் பேராசிரியர். முதல் தொடக்கம் மட்டுமே முந்தையதின் ஓட்டம் முடிந்தபின் தொடங்குகிறது. அடுத்தடுத்த தொடக்கங்கள் அப்படிக் காத்திருப்பதில்லை. 'அல்லோபதி' மருத்துவ முறை முதலாளியக் கட்டத்தின் வெளிப்பாடு என்கிறோம். 'அல்லோபதி' அறிமுகப்படுத்தப்பட்ட நாடுகளில் எல்லாம் முதலாவது வளர்ச்சியடைந்த பின்புதான் அது நிகழ்ந்ததா? உலகப் பொதுவான தொழில்நுட்பங்கள், இசை வடிவங்கள், திரைப்படங்கள் உருவாகிக் கொண்டிருக்கும் ஒரு காலச் சூழ–ல் 'இங்கு பொருந்தாது' என்பது என்ன நியாயம்? இன்றைய தத்துவார்த்தப் பிரச்சினைகளை எல்லாம் சைவ சித்தாந்தத்தில் நின்று தீர்த்துவிட இயலும் எனச் சொல்லுகிறீர்களா அய்யா?

> **''வித்தியாசம்/வேறுபாடு என்பதும் மற்றது என்பதும் பண்பாடுகளின் பன்முகப்பாட்டை வற்புறுத்தின. இதுவரை பேரெடுத்துரைப்புகளின் முழுமை நோக்கினுள் விடப்பட்ட மற்றதுகளும் வித்தியாசங்களும் முக்கியப்படுத்தப்பட்டன. பெண் நிலை வாதம் இந்த நோக்கினால் முனைப்புப் பெற்றது. சமூகங்களில் கவனிக்கப்படாதிருந்த குழுமங்கள் முக்கியப்படுத்தப்பட்டன''**
> ***(நவீனத்துவம், பக்.203)***

எனப் பின் நவீன நிலைச் சிந்தனைகளின் சாதனைகளைப் பட்டிய–டுகிறீர்கள். மகிழ்ச்சி. இப்படி இதுகாறும் புறக்கணிக்கப்பட்ட மற்றதுகளை இனங்காணவும் உரிய முக்கியத்துவம் அளிக்கவும் நவீனத்துவம் தன் ஓட்டத்தை முடிக்கும் வரை நாம் காத்திருக்க வேண்டுமா?

வித்தியாசம், வித்தியாசம் என்றால் அதன் முடிவுதான் என்ன? – என்றொரு கேள்வியை எல்லோரையும் போல நீங்களும் எழுப்புகிறீர்கள். ஆமாம், அதற்கு முடிவே இல்லை. முடிவு வந்துவிட்டதாக எப்போது நினைக்கிறோமோ அப்போது சனநாயகமே முடிவுக்கு வந்து விடுகிறது. அதிகாரம் நிலைநாட்டப்படுகிறது. முதலாளி x தொழிலாளி என்பதோடு வித்தியாசங்கள் முடிந்துவிட்டதாகக் கருதியதுதான் சோச–சக் கட்டுமானங்கள் இறுகியதற்குக் காரணம். இன வேறுபாடுகளும், பா–யல் வேறுபாடுகளும், சாதி வேறுபாடுகளும் புறக்கணிக்கப்படுவதற்கு அது ஏதுவாகியது. பா–யல் வேறுபாடுகள் என்றால் அது ஆண் x பெண் என்பதோடு முடிவதில்லை. மூன்றாவது பால், நான்காவது பால் என்றெல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறது. எல்லாவற்றிற்குள்ளும் சிறுபான்மையினரின் நலனை நாம் பேச வேண்டியிருக்கிறது. மதச் சிறுபான்மையினரைப் போல, பா–யல் சிறுபான்மையினர்..... இப்படி. சாதி வித்தியாசங்கள் த–த்களோடு முடிவதில்லை. த–த்களுக்குள்ளும் த–த் பெண்ணியம் பேச வேண்டியிருக்கிறது. அருந்ததியருக்குத் தனி இட ஒதுக்கீடு கோர வேண்டியிருக்கிறது. வித்தியாசங்களால் ஆனது இவ்வுலகம், வித்தியாசங்களுக்கு முடிவேது?

பின் நவீனச் சிந்தனைகள் வற்புறுத்தும் பன்முகப் பார்வைகளைப் பற்றிச் சொல்ல வரும்போது, ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசைகளின்பால் போய்,

> **''சிக்கிப் போய்விடாமல், அதற்குள் போக முடியாதவைகளாக மாறிவிடாமல் எங்கோ ஒரு இடத்தில் சந்திக்கிற Point (புள்ளி) ஆக இருக்க வேண்டும். போஸ்ட் மார்டனிசத்திலை நான் காணுவது அதுதான்''**
> **(நேர்காணல்கள், பக்.267)**

என்கிறார். ஆக எல்லாம் சந்திக்கிற ஒரு புள்ளி, முடிவு, இறுதி நிலை ஒன்று இருந்தாக வேண்டும். ஆதியில் குழப்பம் இருந்தபோதிலும் இறுதியில் ஒழுங்கு அமைய வேண்டும். அந்த இறுதிப் புள்ளி என்ன? முக்தியா, இறைமையா? மறுமையா?

எல்லாம் சந்திக்கிற புள்ளியைத் தேடும் இந்த 'Reconcilation' (சமரசப்படுத்தும்) மனோபாவம் சனநாயக விரோதமானது. கருத்து வேறுபாடுகள் சமரசமாவதென்பது ஏதோ ஒரு கருத்தை மற்றதன் மீது திணிப்பதாகவே ஆகும். சில அம்சங்களின் கருத்தொருமிப்பு (Conseses) தேவை என்பது உண்மைதான். ஆனால் அது கருத்து வேறுபாடுகளை (dissention) உள்ளடக்கியதாகவே இருக்க முடியும். கருத்து வேறுபாடுகளை அழித்தொழிப்பதாக அது இருக்கக்கூடாது. கருத்து வேறுபாடுகளுக்கு இடையேயான போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும். சனநாயகமும், பன்மைத்துவமும் முற்றுப் பெறுகிற விஷயங்கள் அல்ல. அவை கையளிக்கப்படக் கூடியனவோ, வந்து முடிவனவோ அல்ல. அதன் வருகை எப்போதும் நிகழ்வதில்லை. ஒரு தேவதூதனின் வருகைக்காகக் காத்திருப்பதைப் போல நாம் அதற்காகக் காத்திருக்க வேண்டும். போராடிக் கொண்டிருக்க வேண்டும். சனநாயகத்திற்கான போராட்டங்கள் எந்நாளும், எந்நிலையிலும் முற்றுப் பெறுவதில்லை.

பின் நவீனம் வற்புறுத்தும் ஒரு முக்கியமான அம்சம் – incommensurality – தொகுப்பின்மை – தொகுப்பின் சாத்தியமின்மை. எல்லாவற்றையும் தொகுத்துச் சுருக்கிவிடுதல் இயலாது. அவ்வவ்வற்றிற்கான இடங்கள் அவ்வவ்வற்றிற்கு அளிக்கப்பட்டே ஆதல் வேண்டும்.

பல்வேறு மேலைநாட்டுச் சிந்தனையாளர்களை எல்லாம் மேற்கோள்காட்டும் பேராசிரியரின் பட்டிய–ல் இடம் பெயராத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரு முக்கிய பெயர்கள்: பால் ஃபெய்ரா பாண்ட், தாமஸ் குன். பெரும் ஆய்வறிஞரான சிவத்தம்பி அவர்கள் ஆய்வு முறையியல் குறித்த முக்கிய சிந்தனைகளை வழங்கிய இவ்விருவரை நமக்கு அறிமுகப்படுத்தாமற் போனது வியப்பு. சென்ற நூற்றாண்டில் மிக அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூற்களில் ஒன்று தாமஸ்குன்னுடைய விஞ்ஞான ஆய்வுச் சட்டங்கள் (Scientific Paradigm) தொடர்பானது என்பர். அறிதல் முறைகளை இரண்டாகப் பகுத்தார் பெய்ராபாண்ட். 1) சட்ட ஒழுங்கு அறிதல் முறை (Law & Order Method) 2) ஒழுங்கவிழ்ப்பு அறிதல் முறை (Anarchist Method) முந்திய கருத்தமைவுகளுடன் இணைந்து போவது சட்ட ஒழுங்கு அறிதல். முன்னதை மறுத்து எழுதுவது (Counter Inductive approach) ஒழுங்கவிழ்ப்பு அறிதல். எல்லா அறிவியற் கண்டுபிடிப்புகளும் முன்னதை மறுத்தே எழுந்துள்ளன என நிறுவுவார் ஃபெய்ராபாண்ட். ஒரு அறிதல் சட்டத்திற்கும் (Paradigm) புதிய அறிதல் சட்டத்திற்கும் இடையேயான தொகுப்புச் சாத்தியமில்லாமையை தாமஸ் குன்னிடமிருந்து நாம் பெறுகிறோம்.

ஆனால் முன்னதான சட்டங்களுடன் தொகுப்புச் சாத்தியமுடையவற்றை மட்டுமே ஏற்றுக் கொள்பவராகவே நமது பேராசிரியர் உள்ளார். மரபில் ஆழ வேர் பாய்ச்சியவர் பின் எப்படி இருக்க முயலும்? மார்க்சியத்தையும் தமிழ் மரபையும் தொகுத்துச் சாமர்த்தியம் பண்ணியதாலேயே அவர் இரு தரப்பினராலும் போற்றப்படுவராக உள்ளார் என்பதையும் நாம் இங்கே நினைவு கூர்தல் அவசியம்.

> **''நான் அண்மையில் பின் நவீனத்துவத்தைப் பற்றி ஒரு நீண்ட கட்டுரை எழுதியுள்ளேன். அதில் நான் பின் நவீனத்துவத்தை மார்க்சியக் கண்ணோட்டத்தில் தான் பார்த்தேன். ஆனால் அதற்காக நான் பின்நவீனத்துவம் ஒன்று இல்லை என்று சொல்லமாட்டேன். அது முட்டாள்தனம். (நேர்காணல்கள், பக்.287)**

என்று கூறும்போது பின்நவீனத்துவத்தை ஏற்றுக் கொண்டதற்காக நாம் அவருக்கு நன்றி பாராட்டியபோதும் மகிழ்ச்சி கொள்ள முடியாது. மார்க்சியத்தையும் பின் நவீனத்துவத்தையும் Reconcile பண்ணுகிற முயற்சியாலேயே அது அமைகிறது. ஒரு சட்டகத்தை வைத்து இன்னொரு சட்டகத்தை அளக்கும் முயற்சி இது. இதன் விளைவே பின் நவீனம் குறித்த அவரது விமர்சனங்கள் அனைத்தும். புறங்காணுதலைப் பற்றிப் பேசியவர்தான் இந்த Reconcilation முயற்சியில் இறங்குகிறார் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். ஏதேனும் ஒன்றைப் புறங்காணும் முயற்சியாகவே Reconcilationகளும் அமைந்து விடுகின்றன.

இரு சட்டகங்களும் வேறு வேறு என்பதோடு சரி. இவற்றில் எது சரி எனச் சொல்ல இயலாது. மார்க்சியம் எழுப்புகிற பிரச்சினைகள் முக்கியமானவையே. அவற்றிற்கும் பின் நவீனம் பதிலளிக்க இயலாது. பின் நவீனம் எழுப்புகிற பிரச்சினைகள் இதி–ருந்து முற்றிலும் வேறுபட்டவை. மார்க்சியம் எழுப்புகிற பிரச்சினைகளைப் போலவே இவையும் முக்கியமானவையே. எந்தவொரு சட்டகமும் மற்றெல்லாவற்றையும் அளக்கும் Universal Frame Work ஆக இருக்க முடியாது. அப்படியான ஒரு Universal Paradigm ஆக மார்க்சியத்தைக் கருத்தில் கொண்டு விட்டோமேயானால் பின் நவீன நிலைச் சிந்தனைகளுடன் உரையாடல் சாத்தியமில்லை. பின் நவீனம்அப்படியான ஒரு Universal சட்டகமும் அல்ல. அப்படிக் கருதி எல்லாப் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளையும் அதனிடம் எதிர்பார்ப்பது சரியாகாது.

அதிகாரங்களை முற்றிலும் ஒழிக்காமல் ஓரத்தில் கொறிப்பதாக பின் நவீனத்துவத்தைக் குறைச் சொல்வார் பேராசிரியர். எல்லா அதிகாரங்களையும் அழிக்கும் சூத்திரங்களைக் கொண்டதல்ல பின் நவீனம். நுண் அதிகாரங்களையே அது பேசுகிறது. நுண் அதிகாரங்களை விட்டுவிட்டுத் தனிச்சொத்தை அழித்தால் எல்லா அதிகாரங்களும் அழிந்துவிடும் என்று கூறிய மார்க்சியத்தின் விளைவு என்ன என்று யோசிக்க வேண்டும். சோவியத் அதிகாரமும், கட்சி அதிகாரமும் முதலாளித்துவ அதிகாரங்களை விடக் கொடுமையாக இருந்ததை நாம் மறந்துவிடக் கூடாது. மார்க்சியத்தைக் கருதியதைப் போலவே எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கும் நிவாரணியாகப் பின் நவீனச் சிந்தனைகளையும் கருதுத–ன் விளைவே இத்தகைய குற்றச்சாட்டுகள்.

1960களில் பிரான்சில் ஏற்பட்ட இளைஞர் போராட்டம் சமீப கால வரலாற்றில் முக்கியமான ஒன்று. உலகெங்கிலும் எதிர்ப்பியக்க ஆர்வலர்களால் வியர்ந்து பாராட்டக்கூடிய ஒன்று. உலகெங்கிலும் அதை ஒட்டி எழுச்சிகள் ஏற்பட்டன. அது குறித்து,

> **''1963, 68ல் பிரான்சில் ஒரு இளைஞர் கிளர்ச்சி எழுந்தது. அது ஒரு கட்டத்தில் பிரெஞ்சு அதிகார அமைப்பையே உடைக்கும் போலத் தோன்றியது. பின்னர் அது எத்தகைய வெற்றியும் ஈட்ட முடியாமற் பிசுபிசுத்துப் போயிற்று.'' (நவீனத்துவம்............ பக்.185)**

என்கிற பேராசிரியரின் மதிப்பீடு மிகவும் பிழையானது. பின்னாளில் வரலாறு எழுதுபவர்கள் இப்படியான ஒரு மதிப்பீட்டைச் சோச–ச முயற்சிகளின் மீதும், அதனடியாக மார்க்சியத்தின் மீதும் வைத்துவிட முடியும்தானே. சோச–சக் கட்டுமான முயற்சியில் இன்று தோற்றுப் போயிருக்கலாம். மார்க்சியம் பின்னடைவுக்குள்ளாகி இருக்கலாம். ஆனால் அது ஏற்படுத்திய தாக்கங்களும், விளைவுகளும் காலத்தால் அழிக்க முடியாதவை. ஜனநாயகம், மனித உரிமை, மக்கள் அதிகாரம் குறித்த அனைத்து விவாதங்களும் மார்க்சியத்தின் மேல் நின்றே இனி நடைபெறும். அது போலவே 1968 எழுச்சி ஆட்சி மாற்றத்தை உருவாக்காது போயிருக்கலாம். ஆனால் இதை ஒட்டி உலகெங்கிலும் உருவான anti systemic movements அரசியல் தளத்தில் மட்டுமின்றி சிந்தனைத்தளத்திலும் ஏற்படுத்திய தாக்கங்கள் பல. இன்றைய பின் நவீனநிலைச் சிந்தனைகளையே கூட இதன் விளைபொருளாகச் சொல்ல இயலும். (இதே போலத்தான் இன்று மார்ச்–2006ல் பிரான்சில் உருவாகியுள்ள இளைஞர் எழுச்சியையும் மதிப்பிட வேண்டும். உலகமயச் செயற்பாடுகள் மேனாடுகளில் இதுகாறும் இருந்து வந்த 'சமூகப் பாதுகாப்பை'த் தகர்க்கத் தொடங்கியிருப்பதற்கான முதல் எதிர்ப்பாக இதை நாம் காண முடியும்).

கட்டவிழ்ப்பைப் பற்றிச் சொல்ல வரும்போது அதை ஒரு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மெய்யாயற் பிரச்சினை எனச் சரியாகவே இனம் காணும் பேராசிரியர் தொடர்ந்து,

**''இந்தப் பின்னணிகள் தமிழில் தெளிவுபடுத்தப்படாமலேயே இந்தக் கொள்கைகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. தமிழ்நாட்டில் முனைப்பான போக்குகள் இடம்பெற்றாலும் அவர்களிடையேயும் தெளிவாக உணரப்படவில்லை என்கிற குறை இருக்கிறது''. (நேர்காணல்கள், பக்.242)**

என்பார். குறைகள் இருக்கலாம். ஆனால் தத்துவார்த்தப் பின்னணி சுட்டப்படவில்லை என்பது தவறு *(பார்க்க அ.மார்க்சின், பின் நவீனத்துவம், இலக்கியம், அரசிய–ல், விடியல் பதிப்பகம், 1997).*

### 4. பேராசிரியரும், த–த்தியமும்

வேறு யாரைக் காட்டிலும் சாதிப் பிரச்சினையைக் கணக்கில் எடுத்துக் கொண்டவர் என்கிற பாராட்டுக்குரியவர் பேராசிரியர் சிவத்தம்பி. மறைந்த பேராசிரியர் கைலாசபதியைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் சாதி குறித்த ஒரு உரையாடல் சாத்தியமுள்ளவர் எனச் சிவத்தம்பி குறித்து டானியல் அவர்கள் சொல்லக் கேட்டுள்ளேன். வேளாள ஆதிக்கமுள்ள யாழ்ப்பாணத்தில் கரையார் வகுப்பைச் சேர்ந்த பேராசிரியர் கல்வித்துறையில் சில பாதிப்புகளுக்கு உள்ளானார் என்றும் கூட டானியல் சொல்வதுண்டு. ஈழத்து இலக்கியங்கள் பற்றி எழுத வரும்போதெல்லாம் டானியல் முதலான த–த் எழுத்தாளர்களுக்கு உரிய இடத்தை அளிக்கும் பழக்கத்தைப் பேராசிரியர் கொண்டிருப்பதையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

எனினும் பேராசிரியரின் எழுத்துக்களைக் கூர்ந்து வாசிக்கும்போது த–த்திய எழுத்துக்களை அவர் முற்போக்கு எழுத்துக்களின் ஒரு கூறாகவே காண்பது புலப்படும். த–த்தியத்தின் தனித்துவத்தை ஏற்காத மனப்பாங்கில் சிவத்தம்பியும் மறைந்த கேசவனும் ஒரே நிலையில் உள்ளனர். த–த் எழுத்துக்களை த–த் மட்டுமே படைக்க முடியும் என்கிற கருத்தாக்கத்தையும் சிவத்தம்பி மறுக்கிறார் *(நேர்காணல்கள், பக்.249).* இந்தியச் சூழ–ல் த–த் இலக்கியம் உருவான காரணம் குறித்த ஒரு கேள்வியை அவர் நேரடியாக எதிர் கொள்ளும்போது,

**''இந்தியாவில் த–த்துகளுக்கு மேல் நிலையில் உள்ளவர்களுடனான தொடர்புகளுக்கோ அல்லது அவர்களுக்கு அண்மையில் போவதற்கான வாசமோ வாய்ப்போ இல்லை. கும்பிடும் தெய்வங்கள் கூட வேறு வேறு. அதனால் தங்களுடைய தனித்துவத்தைப் பேண முற்பட்டனர்............ அங்குள்ள (அதாவது இந்தியாவில்–அ.மா) உள்ள சாதி அமைப்பு போன்று இங்கில்லை. இங்கு தொழிலை வைத்துக் கொண்டுதான் Casteஐ பார்த்தார்கள். தொழிலை விட்டுவிட்டால் Casteன் பெயர் இல்லை. வெளிப்படையான அடையாளத்தை மறைத்துவிட்டால் சரி. இங்கு (அதாவது ஈழத்தில்–அ.மா) போராட்டம் வித்தியாசம், இங்கு தீண்டாமை போராட்டமென்பது கோயில் பிரவேசம். ஏனென்றால் கோயில் பிரவேசம் மட்டும்தான் இங்கு பிரச்சினையானது. மற்றபடி அவர்களின் சமூக முன்னேற்றத்தை தடுக்க முடியவில்லை. இந்தியாவில் இந்நிலை இல்லை. அவன் வாழும் சூழல் எல்லாவற்றிலும் வித்தியாசம்.'' (நேர்காணல்கள், பக்.249)**

என்று கூறுவது வியப்பாக இருக்கிறது. ஈழத்திலும் இந்தியாவிலுமுள்ள சாதிய அமைப்புகளிடையே சில வேறுபாடுகள் உண்டுதான். இந்தியாவைப் போல பார்ப்பன ஆதிக்கம் அங்கு கிடையாது. ஆனால் அதனினும் கொடிய அளவில் வேளாள ஆதிக்கம் ஈழத்திலுண்டு. மற்றபடி சாதிப்படி நிலையில் மேல் நிலையில் உள்ளவர்களுக்கும் த–த்துகளுக்கும் இடையேயான உறவில் பேராசிரியர் சுட்டுவது போல பாரிய வேறுபாடுகள் ஏதுமில்லை. ஈழத்துச் சாதிய அமைப்பு குறித்த ஆய்வுகளில் இருந்தும் டானியல் போன்றோரின் எழுத்துக்களில் இருந்தும் இதனை நிறுவ இயலும்.

ஈழத்தில் தொழிலை வைத்துத்தான் சாதி இருந்தது என்றும் தொழிலை விடும்போது சாதி போய்விடுகிறது என்றும் பேராசிரியர் கூறுவது அப்பட்டமான பொய். இன்று புலம் பெயர்ந்து பழைய தொழில்களை விட்டுவிட்டு அய்ரோப்பிய நாடுகளில் அகதிகளாக வாழ்கிற ஈழத்தமிழர்களிடையே சாதி உணர்வுகள் இல்லையா? சாதி அடையாளங்கள் பார்க்கப்படவில்லையா? திருமணத் தொடர்புகளில் இறுக்கமான சாதி அடையாளங்களை அவர்கள் பேணுவது பேராசிரியரின் கவனத்தில் பட்டதில்லையா? புலம் பெயர்ந்து வாழ்ந்த போதிலும் ஒரு த–த் இளைஞனுக்கு வேளாளச் சாதியினர் பெண் கொடுக்கும் சூழல் வளர்ந்துள்ளது எனப் பேராசிரியர் கூற இயலுமா?

தீண்டாமைப் போராட்டங்கள் தொடர்பாக அவர் சுட்டுகிற வித்தியாசங்களையும் நாம் ஏற்க முடியாது. இங்கும் ஆலயப் பிரவேசத்திற்கான போராட்டங்கள் நந்தன் காலம் தொடங்கி நடைபெற்று வருகின்றன. வெளிநாட்டுப் படிப்பு முடித்து இந்தியா வந்து தீண்டாமை எதிர்ப்புச் செயற்பாடுகளைக் கையிலெடுத்தபோது அண்ணல் அம்பேத்கார் கோயில் (நாசிக்) நுழைவு, குளத்தில் (சௌதார்) நீரெடுத்தல் முதலான போராட்டங்களைத்தான் தொடங்கினார். இன்றும் 'புதிய தமிழகம்' என்கிற த–த் அமைப்பு கண்டதேவி ஆலயத்தில் தேர் வடம்பிடிப்பதற்காக உரிமை கோரி ஆண்டு தோறும் போராட்டங்களை நடத்திக் கொண்டுதான் இருக்கிறது.

இந்தியாவில் த–த்களின் சமூக முன்னேற்றம் தடைப்பட்டது. இலங்கையில் அப்படியில்லை என்றெல்லாம் பேராசிரியர் சொல்வதற்கு நியாயங்கள் இல்லை. இத்தகைய தவறான கருத்தோட்டங்களின் அடிப்படையில் ஈழத்தில் த–த் இலக்கிய விகசிப்பு ஏற்படாததை நியாயப்படுத்துவதை நாம் ஏற்க இயலாது. தமிழ்த் தேசியத்தை நியாயப்படுத்த வேண்டி த–த் நியாயப்பாடுகளைப் புறங்கணிப்பது என்ன ஆய்வு நேர்மை?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அய்யா, ஒரு தந்தைபோல என் எதிரே நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். உங்கள் மாணவன் எனச் சொல்வதில் பெருமை கொள்பவன் நான்.

**''டானியலுடைய எழுத்துக்களில் த–த் இருப்பதைவிட கிறிஸ்தவ மனிதாபிமானம் இருப்பதையே நான் காண்கிறேன்''. (நேர்காணல்கள், பக்.249)**

எனத் தாங்கள் கூறுவதைப் படிக்கும்போது மனம் பதறுகிறது. காலமெல்லாம் தீண்டாமைக் கொடுமைகளை மட்டுமே எதிர்த்து எழுதியும், களத்தில் இறங்கிப் போராடியும் வந்த டானியலுக்கு நீங்கள் நியாயம் இழைக்கத் தவறி விட்டீர்கள். உங்கள் மீதுள்ள அனைத்து மரியாதைகளுடனும் சொல்லுகிறேன். டானியலுக்கு அவருக்குரிய த–த் அடையாளத்தை வழங்காமல், கிறிஸ்தவச் சிமிழுக்குள் அடைக்க முயல்வதில் உங்களின் சர்வதேசப் புலமை வெளிப்படுவதற்குப் பதிலாக யாழ்ப்பாணச் சைவக் குசும்புதான் வெளிப்படுகிறது

**நிறைவாக**

நான் தொடக்த்தில் குறிப்பிட்டது போலப் பேராசிரியரின் புலமைப் பங்களிப்புகளை மறுப்பது என் நோக்கமன்று. நவீன சிந்தனைகளைப் பேராசிரியர் எதிர் கொண்டமை குறித்த தலைப்பாகவன்றி பிற பங்களிப்புகளைப் பற்றிப் பேச நேர்ந்திருந்தால் என் நன்றிக்கடனைச் சிறந்த முறையில் செலுத்தியிருக்க இயலும்.

இது ஈன்ஸ்டின் நூற்றாண்டு. நான் ஒரு இயற்பியல் ஆசிரியர். சென்ற ஆயிரமாண்டின் மிகச் சிறந்த அறிவியல் அறிஞரான ஈன்ஸ்டினின் மூன்று முக்கிய ஆய்வுகள் ஒரே ஆண்டில் (1905) வெளிப்படுகின்றன. பிறகு நீண்ட காலம் அவர் உயிருடன் வாழ்கிறார். அக்காலக்கட்டத்தில் இயற்பிய–ல் மிக முக்கியமான பல கண்டுபிடிப்புகள் உருவாகின. ஆனால் அவற்றில் ஈன்ஸ்டினுக்குப் பங்கில்லை. 1905க்குப் பிந்திய காலத்தில் பொதுச் சார்பியல் பற்றிய கண்டுபிடிப்பு ஒன்று மட்டுமே அவரது ஒரே பங்களிப்பாக இருந்தது. அதிலும் பின்னாளில் அவரே வருத்தப்படும்படியான முக்கிய தவறுகளும் இருந்தன.

உலக முழுமைக்குமான சர்வ வியாபகமான உண்மை என ஏதும் கிடையாது. அனைத்தும் சார்பானவையே என்கிற தத்துவ முக்கியத்துவம் வாங்கிய ஒரு கண்டுபிடிப்பை உலகிற்கு அளித்த ஈன்ஸ்டின் தொடர்ந்து வந்த குவாண்டம் கொள்கைக் கருத்தாக்கங்களைச் செரிக்க இயலாமற் போனார். எதுவும் முற்றுண்மையானதல்ல எனச் சொல்லத் துணிந்த ஈன்ஸ்டின் 'எதுவும் உறுதியானதல்ல' என்கிற ஹெய்சன்பர்கின் 'உறுதியின்மைக் கொள்கை'யை (Uncertainty Principle) எள்ளி நகையாடினார். ''என்ன சொல்கிறீர்கள்? கடவுள் என்ன மனிதனுடன் தாயமா (dice) விளையாடுகிறார்?'' என்று கேட்டார். எதுவும் சாத்தியம் (probable) என்பதை அவரால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. பொருட்களின் இரட்டைத் தன்மை, ambiguous nature ஆகியவற்றை அவரால் செரித்துக் கொள்ள இயலவில்லை. விளைவு? இயற்பியல் வளர்ந்து கொண்டு சென்றது. ஈன்ஸ்டின் தேங்கிப் போனார்.

ஒரு கட்டத்திற்குப் பிறகு இத்தகைய தேக்கம் பலரது வாழ்விலும் ஏற்படுகிறது. பேராசிரியரிடம் இதையே நாம் காண்கிறோம். புதிய சிந்தனைகள் முன் வைத்த கேள்விகளைப் பேராசிரியரால் பொறுக்க இயலவில்லை. தனது அளவுகோலைப் புதியவற்றுடன் Reconcile பண்ணும் முயற்சியாகவே அவரது எஞ்சிய செயற்பாடுகள் அமைந்தன. எனவே அவரால் எந்தப் புதிய பங்களிப்புகளையும் செய்ய இயலவில்லை. தேக்கம் தவிர்க்க இயலாமல் அவரைச் சூழ்ந்தது. ஆனால் சிந்தனை மாற்றங்களை யாரும் தேக்கி நிறுத்த இயலாது. அது அதன் போக்கில் மாறிக் கொண்டே போகும்.

டானியலுடைய எழுத்துக்களில் த–த்
இருப்பதைவிட கிறிஸ்தவ மனிதாபிமானம்
இருப்பதையே நான் காண்கிறேன்
எனத் தாங்கள் கூறுவதைப்
படிக்கும்போது மனம்
பதறுகிறது. காலமெல்லாம்
தீண்டாமைக்
கொடுமைகளை மட்டுமே எதிர்த்து
எழுதியும். களத்தில் இறங்கிப்
போராடியும்
வந்த டானியலுக்கு நீங்கள் நியாயம்
இழைக்கத் தவறி விட்டீர்கள். உங்கள்
மீதுள்ள அனைத்து மரியாதைகளுடனும்
சொல்லுகிறேன். டானியலுக்கு
அவருக்குரிய த–த் அடையாளத்தை
வழங்காமல். கிறிஸ்தவச் சிமிழுக்குள்
அடைக்க முயல்வதில் உங்களின்
சர்வதேசப் புலமை வெளிப்படுவதற்குப்
பதிலாக யாழ்ப்பாணச் சைவக்
குசும்புதான்
வெளிப்படுகிறது

('இருபதாம் நூற்றாண்டுத் தமிழியல் ஆய்வு: பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் வகிபாகமும் திசை வழிகளும்' என்கிற தலைப்பில் சென்ற டிசம்பர் 12, 13, 14 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தமிழ்ப் பரப்பில் மேலெழுந்து வந்த நவீன சிந்தனைகளைப் பேராசிரியர் எதிர்கொண்ட விதம் குறித்து அ. மார்க்ஸ் ஆற்றிய உரை இங்கு முழுமையாக வெளியிடப்படுகிறது. டொரொன்டோ பல்கலைக் கழகத்தின் தென் ஆசிய மையமும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலக்கியத் துறையும் இணைந்து நடத்திய இக்கருத்தரங்கில் சுமார் முப்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு உரையாற்றினர். அ. மார்க்ஸின் இவ்வுரை அடங்கிய அரங்கிற்குத் தலைமை ஏற்ற தமிழவன், ''இதுவரை முன் வைக்கப்பட்ட கருத்துக்களி–ருந்து மாறுபட்டு ஒ–க்கும் ஒரே குரல்'' என்பதாக இதனை மதிப்பிட்டது குறிப்பிடத்தக்கது).


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# No More T(F)ears Sister



மனோரஞ்சன்

இந்த ஆவணத் திரைப்படத்தினுடைய Press showவை கனடாவில் ஊடகவியளாளர்களுக்குக் காண்பிப்பதற்கு முன்னர் சில மனித உரிமை ஸ்தாபனங்களுக்கும் குறிப்பான சில ஜனநாயக விரும்பிகளுக்கும், இத்திரைப்படம் பற்றிய கருத்துக்களைக் கேட்பதற்காக ரொரன்டோவில் இப்படம் போட்டுக் காண்பிக்கப்பட்து. அப்போது தான் முதன் முதலில் அதை பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தது.

அத் திரைப்படத்தைப் பார்த்த உடனேயே ஒரு குறிப்பை நான் அங்கு சொன்னேன். `நான் ராஜினியுடன் குறிப்பிட்ட காலம், 1987ம் ஆண்டின் இறுதிப்பகுதி முதல் அவரின் இறப்புவரையான இரு வருடங்கள் கணிசமான அளவு நெருக்கமாக அவருடன் நான் வேலை செய்தேன். ராஜினிக்குள் பெரியதொரு Force இருந்தது. ஒரு அமைப்பைக் கட்டக்கூடிய நெருப்பு இருந்தது. ராஜினி என்னும் பாத்திரம், அவரின் நேர்மை- தான் ஒரு காலத்தில ஒரு பிழையான மோசமான சக்தியுடன் வேலை செய்துவிட்டேன் என்று அவருக்குள் ஏற்பட்ட குமுறல்- அச் சக்திக்கு எதிராக வேலை செய்ய வேண்டும் என்ற அவரின் தவிப்பு அதெல்லாம் அந்தத் திரைப்படத்தில் வரவில்லை. அதுதான் இன்று எமது சமூகத்திற்குத் தேவை. அந்தத் தவிப்பும் நெருப்பும்தான் அவரது அரசியல் பயணத்தை முன்னோக்கி நகர்த்தி வநதிருக்கிறது. அது இந்தத் திரைப்படத்தில் வந்திருக்க வேண்டும். அது வரவில்லை. அவ்வாறனவைதான் இன்னும் பல பேருக்கு நம்பிக்கையைக் கொடுத்திருக்கும், என்று எனக்குள் எழுந்த கருத்தை அங்கு வெளிப்படுத்தினேன்.

அத்துடன், தமிழ் சமூகத்திற்குள் புலிகளால் ஆழமாக ஊன்றப்பட்டிருக்கும் பீதியை இந்தத் திரைப்படம் மீளவும் ஊன்றி அழுத்திவிட்டுப் (reinforced) போகிறதா. இத் திரைப்படத்தைப் பார்க்கும் ஒருவருக்கு வரக்கூடிய எண்ணம், இலங்கையில் தமிழ் சமூகத்தை, அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண சமூகத்தைப் பற்றிப் பிடித்திருக்கிற அச்சம் நிறைந்த சூழ்நிலையையும், அதற்கு சவால் விடுகிறவர்கள் இப்படித்தான் அழித்தொழிக்கப் படுகிறார்கள் என்ற விடயமும், அந்த அவலத்திற்குள் அகப்பட்டு அதற்கு சவால்விட முனைந்த துணிகரமான நபர்களினதும் அவர்களின் குடும்பத்தினதும் கதை இது, என்று பெருமூச்சு விடுவதோடு அது நின்று விட்டது என்றே எனக்குத் தோன்றியது.

ஆனால், அதுக்குப் பின்னர் அந்தத் திரைப்படத்தின் இயக்குனர். மற்றும் ராஜினியுடைய சகோதரிகள் பிள்ளைகள் ஆகியோருடன் பேசிய பினனர் அவர்கள் இத்திரைப்படத்தின்

www.tamilarangam.net

உருவாக்கம் பற்றி சொன்ன பல விடயங்கள் முக்கியமானவை. ராஜினியின் குடும்பத்தாரிடம் இருந்தோ அல்லது ராஜினி நெருக்கமாய்ப் பணியாற்றிய UTHR என்ற அமைப்பிலிருந்தோ கொடுக்கப்பட்ட உந்துதலால், ராஜினியைப் பற்றி இப்படியானதொரு திரைப்படத்தை எடுப்பதற்கான பணி ஆரம்பிக்கப் படவில்லை. இத்திரைப்படத்தின் இயக்குனரான Helene Klowdawsky க்கு Canadian Film Board இனால் 'யுத்தத்துக்குள் பெண்கள்' (women in war) என்னும் பொதுவான தலைப்பில் ஒரு ஆவணத் திரைப்படத்தை எடுக்கும்படி Contract ஒன்று கொடுக்கப்பட்டது.

Helene Klowdawsky தன்னுடைய திரைப்படத்தின் கதைக்காக இன்டர் நெட்டில் மேற்கொண்ட ஆய்வின்போது 'யுத்தமும் பெண்களும்' என்ற தலைப்பில் ராஜினி எழுதியவைகள் கிடைத்துள்ளன. அதனைத் தொடர்ந்து அவர் மேற்கொண்ட ஆய்வின்போது ராஜினியைப் பற்றியும், ராஜினி தனது அரசியல் எழுத்துக்களுக்காக சுட்டுக் கொல்லப்பட்ட விடயத்தையும் அவர் தெரிந்து கொண்டார். அதைக் கண்டதும், *'ஓ..இங்கே என் திரைப்படத்திற்கு ஒரு கதை இருப்பதை நான் காண்கிறேன்.....yes there is a real story here .'* என்றார் இயக்குனர்......இதுதான் ஆரம்பம்.

அதன் பிறகு இதையொட்டி தான் மேலதிக ஆய்வைத் தொடங்கிய பின் தனக்கு இரண்டு விதமான கதை ஓட்டங்கள் (story line) கிடைத்தன என்றார். ஒன்று இந்த ராஜினி என்னும் யாழ்ப்பாண தமிழ் சமூகத்தைச் சேர்ந்த வித்தியாசமான ஒரு பெண் - அவரின் மூத்த சகோதரி நிர்மலா தமிழ் புலிகள் இயக்கத்துடன் இயங்கி சிறைக்குப் போன பெண் போராளியாக இருந்து, பின்பு புலிகளுடன் பிரச்சனை ஏற்பட்டு வெளியில் வந்தது - அவரின் சகோதரியான ராஜினி வெளிநாட்டில புலிகளுக்கு ஆதரவாக வேலை செய்தது - பிறகு அவர் புலிகளாலேயே கொல்லப்பட்டது – ராஜினி தனது தனிப்பட்ட வாழ்கையை தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள அரசியல் செயற்பாட்டாளருடன் இணைத்துக் கொண்டது - இவை எல்லாவற்றுக்கூடாகவும் இந்தக் குடும்பம் அவரது சிறு வயது பிள்ளைகள் சகோதரிகள் ஆகியோர் முகம் கொடுத்த சமூக, அரசியல், வாழ்க்கைப் பிரச்சினைகள். - இது ஒரு கதை ஓட்டம்.

மறுபக்கமாக, இலங்கை அரசியல் - தமிழரின் அரசியல் - அங்கு ராஜினியின் அரசியல் - அவருடைய சமூக அரசியல் பார்வை. - அவருடைய சமூக அரசியல் வேலைகள் - அதன் தாக்கங்கள் - புலிகள் இயக்கத்திற்கும் அவருக்கும் இருந்த முன்னைய தொடர்புகள் - புலிகளுடன் முரண்பாடு ஏற்படும் காரணம் - அதன் பின்னர் அவர் மேற்கொண்ட புதிய அரசியல் பணி - அதன்போது அவருடன் பணியாற்றிய சமூகச் செயற்பாட்டாளர்கள் – குறிப்பாக அவருடன் நெருங்கிப் பணியாற்றிய பெண்களின் கதைகள் - புலிகள் அவரைக் கொலை செய்வதற்கான காரணம், என்று இரண்டாவது கதை ஓட்டம் இருக்கிறது.

இந்த இரண்டு விதமான கதைகளுக்குமான, அக்கதைகளுடன் தொடர்பான நபர்களுடனும் தான் தொடர்பு கொண்டபோது, பின்நாளில் ராஜினியுடன் பணியாற்றிய அல்லது அவரது சமூக அரசியல் வாழ்வுடன் தொடர்புபட்ட பலர் முன்வரத் தயங்கியதாக இயக்குனர் கூறினார். ஆனால் அவரின் குடும்பத்தவர்கள் மிகவும் ஆர்வம் காட்டினார்கள். இதைச் செய்ய அரம்பித்த பொழுது ராஜினியின் தமக்கை நிர்மலா சொன்னது – 'We have been waiting For 15 years for some one to take this up -15 வருடமாக நாம் காத்திருந்தோம் இதோ இன்று எதேச்சையாக அந்த வாய்ப்பு வந்திருக்கிறது.'

இத்திரைப்படம் எப்படி வரவேண்டும் என்பதை இறுதியாகத் தீர்மானிக்கும் பொறுப்பும் அதிகாரமும் இயக்குனரின் கைகளிலேயே இருந்தது. 'யுத்தத்துக்குள் பெண்கள்' என்னும் பாரியதொரு யுத்தகால சமூக, அரசியல், பாலியல் விடயத்தை சொல்வதாக நினைத்துக் கொண்டு ராஜினியின் குடும்பக் கதையைச் சொல்லியிருக்கிறாரா இயக்குனர்? என்றும் ஒரு கேள்வியை இங்கு கேட்கலாம். ராஜினியின் வாழ்க்கையைப் பற்றி ஒரு படம் எடுக்க வேண்டும் என தனிப்பட்ட ஒரு தேவை இயக்குனருக்கு எழுந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், ஒன்று ராஜினியை அவருக்கு தனிப்பட்ட முறையில் தெரியாது. மற்றது இலங்கைப் பிரைச்சினையில் இயக்குனருக்கு அப்படி என்னதான் தனிப்பட்ட அக்கறை?

இலங்கையின் அரசியல் - தமிழர் போராட்டம் - புலிகள் இயக்கம் - ராஜினியின் குடும்பம் - ராஜினியின் சமூக அரசியல் செயற்பாடுகள் என்னும்

**" ராஜினி, அவரின் வாழ்க்கை, அவரின் பணி, அவரின் இழப்பு என்பவை அனைத்துமே, ஆதிக்க வெறிகொண்ட யாழ்ப்பாண மையவாத சமூக அரசியல் கலசாரத்திற்குள்ளே வைத்துப் பார்க்க வேண்டிய விடயங்கள்தான். ராஜினி அவரின் சகோதரி நிர்மலா ஆகியோரின் அரசியல், அவர்களின் அரசியல் தவறுகள், அதனோடு ஏற்பட்ட முரண்பாடுகள். அவர்கள் முகம் கொடுத்த சவால்கள் மற்றும் ராஜினியின் வேதனைகள், சாதனைகள் எல்லாமே, ஆதிக்க வெறிகொண்ட யாழ்ப்பாண மையவாத சிந்தனைக்குள் அகப்பட்டு சின்னாபின்னப் பட்டிருக்கும் தமிழ் அரசியலுக்குள் இருந்து தனித்தெடுக்கப்படாமல் பார்க்கப்படல் வேண்டும். "**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடயங்கள் என்பன இப்படத்தில் தொடப்பட்டிருந்தாலும், அவரின் குடும்பக் கதையே இங்கு முக்கியமாக நகர்த்திச் செல்லப்படுகிறது. அது நாட்டின் அரசியலோடும் - தமிழ் சமூக அரசியலோடும் ஆங்காங்கே தொடர்பு படுத்தப்பட்டு நகர்தப் பட்டிருக்கிறது. இதை 'யுத்தமும் பெண்களும்' என்ற கருப்பொருளுடனான ஒரு அரசியல் விவரணமாக இயக்குனர் நகர்த்தவில்லை. அதுதான் அவரது மூல நோக்கமாக இருந்திருந்தாலும் கூட. அந்த விடயம் இங்கே பெரும்பாலும் தவறவிடப்பட்டு விட்டது.

*'ஓரளவிற்கேனும் இத்திரைப்படத்தில அரசியல் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்றால் அது நாங்கள் அவ்வப்போது இயக்குனரிடம் அழுத்தியதனால்தான்'* என்று ராஜினியின் சகோதரிகள் என்னிடம் கூறினார்கள். இயக்குனர் Helene இனது ஆளுமைக்குள்ளும் அதிகாரத்திற்குள்ளும் இவர்களாள் அதிக தாக்கத்தை ஏற்படுத்த முடியாமல் போயிருக்கலாம். அது தவிர்க்க முடியாதது. Canadian National Film Board எதையோ சொல்ல, இயக்குனர் Helene Klowdawsky கிடைத்த கருவைக் கொண்டு எதையோ செய்யப்போய், எங்கேயோ போய் முடிந்து விட்டது படம். ஆனாலும்....இயக்குனர் Helene, தனக்கு வழங்கப்பட்ட Contractக்கு தற்செயலாகவேனும் ராஜினியின் கதையையும் அத்தோடு ஒட்டிய இலங்கை தமிழ், சிங்கள அரசிய அரசியலையும் எடுத்துக் கையாண்டதுவரை நல்லது என்ற அளவோடு நாம் திருப்திப்பட்டுக் கொண்டு, நின்று கொள்ளலாம். ஏனெனில்... கீழே விழ வேண்டிய பழம் தற்செயலாக வேனும் நழுவி பாலுக்குள் விழுந்திருக்கிறதல்லவா.!?

இயக்குனர் Helene Klowdawsky, இதற்கு முன்னர் 1988ல் எழுதி இயக்கிய Shoot and Cry என்னும் திரைப்படத்திலும், இஸ்ரேலிய - பலஸ்தீன மோதல், அதில் மிகவும் சிக்கலான 'காசா எல்லைப் பிரதேச மோதல்' விடயங்களை, ஒருவரையொரவர் சந்தித்துக் கொள்ளும் இரண்டு பலஸ்தீன - இஸ்ரேலிய இளைஞர்களை வைத்து தன் கதையை நகர்த்தியிருக்கிறார். ஆகவே Heleneக்கு என்று கதை சொல்லும் ஒரு பாணி இருக்கிறது. அதில் அதிகம் மற்றவர்கள் தலையிடுவதை அவர் விரும்பாது இருப்பது இயல்பே. எமது நாட்டுப் பிரைச்சினைக்குள் முழுமையாகக் கிடந்து தோய்ந்து எழுந்த எமக்கு, *'அட.. இந்தப் படத்தில் இன்னும் எவ்வளவோ சொல்லப்பட்டிருக்க வேண்டுமே..என்னத்தை சொல்லி கிழித்து விட்டார்கள்'* என்பது ஆதங்கமாய் இருந்தாலும், படத்தை எடுத்தவர்களுக்கு ஒரு நோக்கமும், ஒரு பாணியும் இருக்கின்றன, அதை அவர்கள் மாற்ற மாட்டார்கள். யாரும் மாற்றுவதையும் அநுமதிக்க மாட்டார்கள்.

எது எப்படியோ படம் வெளிவந்ததால் பலர் மிகக் கடுப்பு. குறிப்பாக தேசியத் தலைவருக்கும் அவரைச் சார்ந்தவர்களும் தாம் குழிதோண்டிப் புதைத்து விட்டதாகக் கருதிய விடயம், மீண்டும் வெளியே வந்துவிட்டதே என்ற தடுமாற்றம்தான். ராஜினியின் கொலையோடு தொடர்பிருந்த, இன்னும் பெரிய மனிதர்களாக சமூகத்தில் உலவும் பலருக்கு படம் ஒரு தலையிடிதான். ஆகவே வெளிவந்த இந்தத் திரைப்படத்தை வைத்துக் கொண்டு, இன்று தமிழ் சமூகத்திற்குள் நசுக்கப்பட முயற்சிக்கப்படும் தமிழ் சமூக அரசியலின் 'உண்மையான அசிங்கமான' பக்கங்களை மீண்டும் வெளிப்படையாகப் புரட்டி கதைப்பதற்கு வழியேதும் உண்டா என்று முயற்சித்துப் பார்க்கலாம். தமிழ் சமூகத்தின் அரசியல் எதை நோக்கி நகர்கின்றது என்பதை சர்வதேச மட்டத்தில், பல்வேறு சமூகங்களுக்கிடையே, பல கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கும் இத்திரைப்படத்தை ஒரு ஊடகமாக கொள்ளலாம்.

ராஜினி, அவரின் வாழ்க்கை, அவரின் பணி, அவரின் இழப்பு என்பவை அனைத்துமே, ஆதிக்க வெறிகொண்ட யாழ்ப்பாண மையவாத சமூக அரிசயல் கலசாரத்திற்குள்ளே வைத்துப் பார்க்க வேண்டிய விடயங்கள்தான். ராஜினி அவரின் சகோதரி நிமலா ஆகியோரின் அரசியல், அவர்களின் அரசியல் தவறுகள், அதனோடு ஏற்பட்ட முரண்பாடுகள். அவர்கள் முகம் கொடுத்த சவால்கள் மற்றும் ராஜினியின் வேதனைகள், சாதனைகள் எல்லாமே, ஆதிக்க வெறிகொண்ட யாழ்ப்பாண மையவாத சிந்தனைக்குள் அகப்பட்டு சின்னாபின்னப்பட்டிருக்கும் தமிழ் அரசியலுக்குள் இருந்து தனித்தெடுக்கப்படாமல் பார்க்கப்படல் வேண்டும். அது தகாது என்றால். அது தவறு. ஏனெனில் ராஜினியின் (நிர்மலாவின்) கதையும், இன்று நாறி நாற்றம் எடுத்துக் கொண்டிருக்கும் தமிழர்களின் பெரும் கதைக்குள்ளான ஒரு கதைதான். சினிமா மொழியில் *A Story within the Story* என்பார்களே அதுபோலத்தான். ஆகவே.. 'ப்பூ..இதுதானா தமிழர்களின் முழு நீளக் கதை..? இதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது...!' என்று இத்திரைப்படத்தை பார்த்த தமிழர்கள் யாரும் குமுறுவதில் அதிக ஆத்தமில்லை. ஏனெனில் அந்த சுவாரசியமான முழு நீளக் கதையை இனிமேல்தான் இந்த 'நம்மவர்கள்' என்போர் யாராவது சொல்ல வேண்டும்.

❑

## அநிச்ச இதழ் 2இல் பக்கம் 19இல்...

ஜோசப் பரராஜசிங்கத்தை கிறிஸ்மஸ் தினத்தன்று பிரார்த்தனையில் இருந்த போது சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுக்கு கவலை தெரிவிக்கும் சுகன்,

காத்தான்குடி பள்ளிவாசல், பௌத்தவிகாரை, தலதா மாளிகை, மட்டக்களப்பு செயிண்ட் மேரீஸ் கதீட்ரல் தேவாலயம் என்பவற்றின் படுகொலைகளைக் குறிப்பிட்டு 'இப்படியாக வணக்க தலங்களில் அவ்வப்போதைய அரசியல் எதிரிகளைக் கணக்குத் தீர்ப்பதும் அப்பாவி மக்களைக் கொல்வதும் மனித நிலையுமல்ல மிருக நிலையுமல்ல' என்று வருத்தப்பட்டுள்ளார். சரி.

ஆக இப்ப சுகன் என்ன சொல்ல வருகிறார்.

மட்டக்களப்பு தெழில் நுட்பக் கல்லூரி அதிபரைக் கொன்றது போல் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது கொல்லலாம் என்கிறாரா?

சபாலிங்கத்தைக் கொன்றது போல் மனைவி பிள்ளைகளுக்கு முன் சுட்டுக் கொல்லலாம் என்கிறாரா?

ராஜினியைக் கொன்றது போல் பல்கலைக்கழக வாயிலில் கொல்லலாம் என்கிறாரா?

பரியோவான் கல்லூரி அதிபர் ஆனந்தராசாரவைக் கொன்றது போல் பாடசாலை வளவிற்குள்ளே கொல்ல லாம் என்கிறாரா?

அக்கரைப்பற்று நீதிமன்றில் வைத்து இளைஞர்களை சுட்டது சரி என்கிறாரா?

கொழும்பு கொட்டாவாவில் வைத்து நித்திரைப்பாயில் வைத்துச் சுடலாம் என்கிறாரா?

கவிஞர் செல்வியைக் கொன்றது போல் கடத்திக் கொண்டுபோய் கொல்ல வேண்டும் என்கிறாரா? இதில் எங்கே வைத்து எப்படிக் கொன்றால் மனித நிலை அடையமுடியும் என்பதை நமக்குச் சுகன் சொல்ல வேண்டும். சுகன் எப்போதும் ஒரு கலகக்காரனாகவும் பாசிச சக்திகளை எதிர்ப்பவராகவும் இருந்து வருபவர்.

கடந்த 2வருடங்களாக கிழக்கிலங்கையில் நடைபெற்றுவரும் கீழ்த்தரமான படுகொலைகள் பற்றியோ அது நியாயப்படுத்தும் அரசியல் நிலை பற்றியோ அநிச்ச இதழில் ஒரு புள்ளிதன்னும் எழுதாதது குறித்து நாம் அச்சமடைய வேண்டிய நிலையில் உள்ளோம். இந்தப் படுகொலைகள் குறித்து ஆதரித்து எழுதுவது மட்டுமல்ல மாறாக எதையும்எழுதாமல் இருப்பதும் மோசமான யாழ்ப்பாணிய மனோபாவமே.

கற்சுறா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ்ப்பாணியம்
# நல்ல முகமூடி ஈழத்தமிழ்த் தேசியம்.

கற்சுறா

‘யாழ்ப்பாணியம்.’ அல்லது ‘யாழ்மையவாதம;’ என்ற மேற்கோள் குறிக்குள் வருகின்ற இந்த சொற்கள் குறித்து ஒருவர் பேச முற்படும் பொழுது அல்லது அதுகுறித்து கருத்துத் தெரிவிக்க முற்படும் பொழுது அந்த நபர் மிகத் தெளிவாக அப்புறப்படுத்தப் படுவார். கட்டமைக்கப்படும் வரலாற்றில் அவருக்குரிய இடம் மறுதலிக்கப்பட்டு தமிழ் மரபு சார்ந்த அடையாளங்களில் ஒன்றான ‘துரோகி’ அல்லது ‘எதிரி’ என்பதாக அடையாளமிட்டு தயாரித்து பழக்கப்படுத்தி வைக்கப்பட்ட பதில்களி னூடாக யாழ்ப்பாணியம் என்ற அந்தச் சொல் தன்னை மீளவும் தக்கவைத்துக் கொள்ளும்.

இதற்கான எதிர்க் கருத்தி யலை அது எவ்வகையில் நிராகரிக்கின் றது? தன்னை நியாயப்படுத்த தன்னைப் பாதுகாக்க எவ்வளவு தூரம் தனது கரங்களை நீட்டி தனக்கான பாதையை தயார்படுத்தி ஒவ்வொரு நபர்களாக குறிவைத்து தனக்குள் இழுத்து, யாழ்ப்பாணியத்தின் வெளியை எவ்வாறு விரிக்கிறது என்று நோக்கியே ஆகவேண்டும். இதன்மூலமே யாழ்ப்பாணியம் கட்டி வைத்துள்ள தேசப்பற்றையும் அதன் உச்ச வெறியில் உருவாகிய இன்றைய யுத்தத்தின் தேவையும் அதனால் உருவாக இருப்ப தாகச் சொல்லும் தமிழீழம் என்பதின் தேவையையும் புரிந்து கொள்ள முடியும்.

தமிழ்த் தேசியம் என்ற ஒற்றைச் சொல்லினூடாக அதன் மீதான அதீத பற்றை அல்லது கடவுள் மீதான நம்பிக்கையைப் போல் கேள்வியற்ற ஒரு வழிபாட்டை ஒரு வெறியை யாழ்ப்பாணியம் தன்னகத்தே கட்டமைத்து வைத்திருக்கிறது. இங்கே அந்த ஒற்றைச் சொல்லின் மீதான பற்றில் அது தன்னைப் பாதுகாப்பதற்காக நாம் எவ்வளவு தொகைக் கேள்விகளை இழந்திருக்கிறோம் என்று நோக்க வேண்டும். கேள்விகள் என்பது வெறும் வார்த்தைகளல்ல. மனிதப் படுகொலைகள்.

ஈழத் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பமான காலங்களில் அதற்கெதிரான துரோகிகளும் கட்டமைக்கப்பட்டார்கள். அன்றைய துரோகிகள் எனப்படுவோர் இன்றைய துரோகிகளது நிலைக்கு எவ்விதத்திலும் இணைவு இல்லாதவர்கள். ஆனாலும் அவர்கள் துரோகிகள். துரோகிகள் என அடையாளப் படுத்தப்பட்டவர்கள். அவர்களுக்குரிய அடையாளப்படுத்தலுக்குப் பின்னால் ஒருவித அரசியல் கருத்து நிலைப்பாடும் இருக்கவில்லை. யாருடைய கட்சியையோ

www.tamilarangam.net

குழுவையோ அவர்கள் சேர்ந்திருக்க வில்லை. ஆனால் அவர்கள் சமூகத்தின் அரசியல் நெருக்கடியின் பக்கவிளைவுகள்.

இன்றைய துரோகிகள் எனப்படுவோர் ஈழத்தமிழ்த் தேசியத்தின் ஒவ்வொரு அங்கங்கள். எல்லோரையும் போல தேசியத்தின் மீதான பற்றைக் கொண்டிருப்பவர்கள். இன்னும் சிலர் தேசியத்தை நிராகரிப்பவர்கள். அப்படிச் சொல்வதை விட இன்றைய ஈழத்தமிழ்த் தேசியத்தை ஆதரிக்காதவர்கள் என்று சொல்ல முடியும். இவர்களையெல்லாம் துரோகிகள், சமூகத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டியவர்கள் என்பதாக நமக்குச் சொல்லப்படுகிறது. நாங்கள் நம்புகிறோம். சொல்பவர்கள் யாரெனில் இதே தமிழ்த் தேசியத்தின் பிரதிநிதியாக தம்மை முன்நிறுத்தி மிகத் தந்திரோபாயமான வார்த்தைகளால் மக்களின் அனைத்து வாசல்கதவுகளையும் மூடிவிட்ட யாழ் மையவாதச் சிந்தனைப் போக்கின் தற்போதைய உன்னத பிரதிநிதியான விடுதலைப் புலிகள். மற்றும் அவர்களுக்குச் சலாம் போடும் யாழ் மேலாதிக்க மேட்டுக்குடிகள். அவர்கள் கையகப்படுத்தி யிருக்கும் தமிழ்ப் பத்திரிகைகள், ஊடகங்கள்.

விடுதலைப் புலிகளை அல்லது அவர்களது அரசியல் நடவடிக்கைகளை வெறுமனே குற்றஞ் சாட்டுவதினூடக இந்தச் சமூகம் தப்பித்துவிட முடியாது. ஈழவிடுதலைப் போராட்டம் ஆரம்பமானதும் அது தன்னகத்தே சிதையத் தொடங்கியதும் யாழ்ப்பாண எல்லைக்குள்ளேயே. விடுதலைப்புலிகள் என்ற அமைப்பின் சிதைவினுடன் அதன்மீதான குற்றச்சாட்டுக்கள் முடிவுக்குவரும். ஆனால் தன்னை அறிவியல் சார்ந்த சமூகம் என்று சொல்லிக்கொள்ளும் யாழ்ப்பாணிய சமூகம் அனைத்துக்குமான பொறுப்பை எப்போதும் ஏற்க வேண்டும்.

இன்று மக்கள் தாம் தன்னியல்பாக ஒவ்வொரு விடையத்தையும் உள்வாங்குகிறார்கள், தமது சுய சிந்தனையின் அடிப்படையிலேயே சிந்திக்கிறார்கள் என்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மிகக் கூரிய ஆயுதமான தேசியத்தினால் அவர்களது சிந்தனை முறை மழுங்கடிக் கப்படுகிறது. கேள்விகளற்ற ஒரு முண்ட நிலைக்கு அது கொண்டுவந்து விடுகிறது. ஈழமக்களுக்கான தேசியம் என்பது எண்ணற்ற வன்முறைகளையும் எண்ணற்ற கொலைகளையும் தாண்டியிருக்கிறது. தன்னகத்தே நடாத்தியிருக்கிறது என்பது பற்றி அவர்கள் யோசிக்க மறுக்கிறார்கள். அல்லது அவை தமக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் என்று நம்புகிறார்கள். அத்தனை கொலைகளையும் வன்முறைகளையும் வரவேற்கி றார்கள். இந்த வரவேற்றல் மனோநிலையில் மக்கள் வந்திருக் கிறார்கள் எனில் இதற்கு யார் பொறுப்பு. எங்கேயிருந்து இந்தத் தவறு தொடர்ந்து வந்திருக்கிறது?

ஆரம்பத்தில் கல்விகற்ற மேல்சாதி மக்களிடம் இருந்து அப்புறப்பட்டு சமூகத்தின் விளிம்பு நிலையில் இருந்து வாழ்த லுக்குப் போராடிக்கொண்டிருந்த ஒரு சமூகத்தின் நபர்களை துரோகிகள் என்று மின்கம்பத்தில் கட்டிச் சுட்டுக் கொல்லும்போது வரவேற்கப்பட்டது. இந்தத் துரோகிகள் அடையாளம் யாருக்கெதிரானதாக இருந்தது? யாழ் படித்த மேல்சாதி சமூகத்திற்கெதிராக துரோகிகள் உருவாக்கப்பட்டார்கள். இதை நடைமுறைப்படுத்தியது ஈழத் தேசியவிடுதலைப் போராட்ட இயக்கங்கள். ஆக ஈழவிடுதலைப் போராட்ட அமைப்புக்கள் யாரின் பிரதிநிதியாக அப்போது தம்மை முன்நிறுத்தினார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். இப்படி யாழ்ப்பாணத்து விளிம்பு நிலை மக்களைத் துரோகிகளாக்கிய யாழ்ப்பாணியம் மெல்ல நகர்ந்து ஈழமெங்கும் பரவியது. ஈழத்தில் ஒவ்வொரு ஊருக்கும் பல விளிம்பு நிலை மனிதர்களை துரோகிகளாக்கிக் கொன்று போட்டது ஈழவிடுதலை இயக்கங்கள். இந்த ஈழவிடுதலை இயக்கங்கள் தம்மை முன்நிறுத்துவதற்கு இந்த மக்களின் கொலைகளையே முக்கியத்துவப்படுத்தினர். இவை அத்தனையையும் வரவேற்றது யாழ்ப்பாணிய மனம். யாழ்ப்பாணியம் ஈழத்தேசியமாக பரிணாமம் அடைந்தது இப்படித்தான்.

**ஈழமக்களுக்கான தேசியம் என்பது எண்ணற்ற வன்முறைகளையும் எண்ணற்ற கொலைகளையும் தாண்டியிருக்கிறது. தன்னகத்தே நடாத்தியிருக்கிறது என்பது பற்றி அவர்கள் யோசிக்க மறுக்கிறார்கள். அல்லது அவை தமக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் என்று நம்புகிறார்கள். அத்தனை கொலைகளையும் வன்முறைகளையும் வரவேற்கிறார்கள். இந்த வரவேற்றல் மனோநிலையில் மக்கள் வந்திருக்கிறார்கள் எனில் இதற்கு யார் பொறுப்பு. எங்கேயிருந்து இந்தத் தவறு தொடர்ந்து வந்திருக்கிறது?**

இவை எல்லாவற்றையும் விட மிகப்பெரிய ஆபத்தான விடையம் என்னவென்றால், ஈழத்தேசியத்தின் பிரதிநிதியாய் உள்ளார்ந்த யாழ்ப்பாணியத்தின் பிரதிநிதியாய் இருக்கின்றவர்கள் ஈழத்தில் குழந்தைகள் காப்பகத்தையும், சிறுவர் பாடசாலை களையும் கைப்பற்றி நடாத்திக் கொண்டிருப்பதுதான். செஞ்சோலை என்ற பெயரில் யுத்தத்தில் பாதிப்புற்ற அநாதைச் சிறுவர்களை பராமரிப்பதாகச் சொல்லும் விடுதலைப் புலிகள் மீது தொடர்ச்சியாக சிறுவர்களைப் படையணியில் சேர்க்கப்படுவது பற்றி வருகின்ற குற்றச்சாட்டுக்களை எவருமே கண்டுகொள்ளவில்லை. அல்லது பேச மறுக்கிறார்கள். அநேக பத்திரிகையாளர்கள் அல்லது எழுத்தாளர்கள் யாவருமே அப்படியொன்று நடக்கவில்லை என்பது போல் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். மறுக்கிறார்கள். எழுகின்ற எந்தக் கேள்விகளுக்கும் பதிலற்ற ஒரு கோமாநிலையில் எப்படி இவர்களால் வாழ முடிகிறது என்பது மிகப்பெரிய கேள்வி. அதற்குரிய பதில் மிகப்பெரியது. அது சொல்லப்படவில்லை.

கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் இவர்களால் இலகுவாக நுழைய முடியும் என்பதற்கு நம்முன்னால் உள்ள

www.tamilarangam.net



யாழ்ப்பாணத்தில் முஸ்லீம்கள் வழமையான வாழ்க்கைக்குத் திரும்பி விட்டார்கள் என்று பள்ளிவாசலில் இருக்கும் இரண்டு முஸ்லீம்களை மட்டும் படம் பிடித்து பம்மாத்துக்காட்டும் B.B.C.

வாழ்வு சாட்சி. உலக வரலாற்றின் பொக்கிசமாகக் கருதப்படும் மாணவர் சமூகம் என்பது மிக இலகுவாக எல்லோராலும் ஏமாற்றப்படக்கூடியது வென்றுவி டக்கூடியது என்பதற்கு யாழ் பல்கலைக் கழகமே முதன்மைச் சாட்சி. கடந்த காலங்களில் படுமோசமான அரசியல் படுகொலைகள் யாழ் பல்கலைக் கழகத்திலேயே நடந்திருக்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மை. விஜிதரன் ராஜினி,செல்வி விமலேஸ்வரன் என்று இந்தப்பட்டியல் நீளும். இந்த உண்மை நிலை எப்படி நமது சமூகத்தின் இருட்ட றைகளில் பதுங்கிக் கிடக்கிறது. இதை தூண்டி விடக் கூடிய பெரும் பலம் யாருடைய கையில் இருக்கிறது? இது எவற்றுக்கும் விடையில்லை. விடையில்லை என்பதை விட விடை தேட விருப்பமில்லை. தேவையில்லை. ஈழவிடுதலைப் போராட்டத்தின் இருள் மூடிய பக்கங்களை இவர்கள் அறிய மறுக்கிறார்கள். அப்படி ஏதாவது இந்தப் பூமியில் நடந்தனவா? நடக்கவேயில்லை. நடந்ததற்கான எந்தவித தடையங்களும் அவர்களிடம் கொடுக்கப்படவில்லை. கொடுக்கப்படாததை அவர்கள் எப்படிப் பேசமுடியும்? அவர்களுக்கு ஈழம் ஒரு வழிபாட்டுக்குரிய பூமி. அங்கே பழிகளுக்கும் பாவங்களுக்கும் இடமில்லை. அப்படி நடந்த பழிகளும் பாவங்களும் தெய்வவழிபாட்டிற்குரியவை. தெய்வ தியானத்தில் திளைத்திருக்கும் பல்கலை வளாகம் தெய்வத்தின் குற்றத்திலிருந்து விடுபட தன்னையே தெய்வமாக்குகிறது. தெய்வத்திருவளையாடலை தெய்வத்திற்கு மேலால் விளையாடுகிறது யாழ்பல்கலைகழகம்.

'யாழ்ப்பாணியம்' என்ற இந்த கொடுஞ்சொல் நடைமுறைவாழ்வில் அரசியலில் என்று சகல திசைகளிலும் தன்னை ஆழப்படுத்தியிருந்தாலும் அவையெல்லாவற்றையும் மறுதலித்தப்பேசக் கூடிய புத்திசீவிகள் மட்டத்தில் மிகமிக நுண்ணிய தளத்தில் இது உறைந்திருப்பது குறித்து நம்மில் அநேகம்பேர் கண்டுகொள்வதில்லை. இந்த உறைவு நிலையின் அப்பட்டமான வெளிப்பாடுதான் தமிழ்த் தேசிய அடையாளம். இங்கே வெட்கம் என்னவெனில் இவர்களில் அநேகம் பேர் தம்மை வெளிப்படையாக தேசியவாதிகளாக அடையாளம் இடுவதுதான்.

ஈழத்தமிழ்தேசியவாதியாக தன்னை அடையாளப்படுத்தும் ஒருவன் எப்படி ஈழத்து முஸ்லீம்கள் குறித்து அக்கறைப்படுவதாகச் சொல்வது? தன்னை ஈழத்தமிழ்தேசியத்தில் அக்கறை யுள்ளவனாகச் சொல்லும் ஒருவன் எப்படி ஒடுக்கப்பட்டமக்கள் குறித்து தான் அக்கறை கொள்வதாகவும் சொல்லமுடியும்? கிழக்கு மாகாண மக்கள் குறித்தும் அக்கறைப்படுவதாகச் சொல்லும் ஒருவன் எப்படித் தமிழ்த் தேசியவாதியாக இருக்கிறேன் என்று சொல்லமுடியும்? எவ்வளவு முரண்பாடுள்ள விடையம் இது. இதுவரை ஈழத்தமிழ்த் தேசியமாக வளர்ச்சிநிலை எய்திய யாழ்ப்பாணியம் என்பது ஒடுக்கப்பட்ட மக்கள் குறித்து எந்த இடத்தில் கவலைப்பட்டது? கிழக்கு மாகாணம் குறித்த உண்மையான கரிசனையை ஏதாவது ஒரு தருணத்தில் அது நிரூபித்ததா? முஸ்லீம் மக்கள் குறித்து என்ன கருத்தை இந்த தமிழ்த் தேசியம் கொண்டுள்ளது? இவ்வளவு கேள்விகளையும் தம்மைத் தமிழ்த் தேசியவாதிகள் எனக் கூறிக் கொள்பவர்கள் அல்லது அடையாளப்படுத்துபவர்கள் கேட்டுக்கொள்ள வேண்டும்.இன்னொரு பக்கம் இந்தத் தமிழ்த்தேசியவாதிகள் தம்மைப் பெரியாரிஸ்டுகள் என்பது வேடிக்கையான விடையம். கறுத்தச் சட்டை உடுத்தி கடவுள் மறுப்பும் செய்தால் மட்டும் பெரியாரிஸ்ட் என்று செல்ல முடியுமா? பெரியாரின் சிந்தனை கட்டறுக்கும் மிகப்பெரிய புள்ளியான தேசியத்தைத் துறக்க வேண்டாமா? தேசியம் என்பது காதல் அன்பு கடவுள் போன்றது ஒரு பம்மாத்து என்றவரல்லவா பெரியார்.

பொதுவாக இன்று அனேகர்களால் சொல்லப்படும் ஒரு கருத்தியல் நிலை என்பது நமக்கான பொது எதிரி அல்லது முதல் எதிரி சிங்களப் பேரினவாதம் என்பது. இந்த உண்மை நிலை, இதை உண்மை நிலையாக எண்ணப்படுவதற்கு உள்ளார மறைந்திருப்பது தமிழ்த் தேசியம் அல்லாமல் வேறென்ன?. ஏனெனில் தமிழர்கள் என்ற ஒற்றை அடையாளத்தை நினைவூட்டி தமிழர்களுக்கான பொதுப்பிரச்சனை ஒன்றை முன்நிறுத்தி அந்தப்பிரச்சனைக்கு எதிரானதை மட்டும் முதல்காரணமாக கட்டமைப்பதனூடு தமிழ்த் தேசியத்தினை இது முன்மொழிகிறது. இதற்குள் தமிழ்ப் பேரினவாதம் செய்து வருகின்ற வன்முறைகள் எல்லாம் காயடிக்கப்பட்டு விடுகிறது. யாழ்ப்பாணியம்தான் தமிழ்த் தேசியவாதம் என்றானபின் ஈழத்தின் மற்றய பகுதிகளுக்கு அங்கு வேலையில்லாமல் போய்விடுகிறது. சிங்களப் பேரினவாதம் முதல் எதிரியில்லாமல் யாழ்ப்பாணியமும் அதற்குள் மறைந்திருக்கின்ற அதிகாரமுமே முதல் எதிரியாகிவிடுகிறதுமற்றவர்களுக்கு. இந்த யாழ்ப்பாணியத்திற்கு எதிரான போராட்டமே முதன்மைப்பட்டு விடுகிறது. கட்டமைக்கப்பட்ட பொது எதிரி யாழ்ப்பாணியத்திற்கான எதிரி. அது எல்லோருக்குமான முதல் எதிரியாக்கப்படுவது வன்முறை. இந்த வன்முறையை பொதுமைப்படுத்தலை புலிகள் தொடக்கம் புலிகளின் அரசியலை விமர்சிக்கும் அல்லது மறுத்து நிற்கும் மாற்றுக் கருத்தாளர்கள் எனச் சொல்பவர்கள் வரை காவி நிற்கிறார்கள். இவர்களுக்குள் உள்ளார யாழ்ப்பாணியத்தின் ஆணிவேர் ஆழமாக இறுக்கப்பட்டிருக்கிறது. அது எவ்வகையிலும் அவர்களிடம் இருந்து வெளிப்பட்டு விடுகிறது. ஆக நமக்கு முதல் எதிரி சிங்களப்பேரினவாதம் என்றால் இந்த நமக்கு என்பதற்குள் யாரெல்லாம் வருகிறார்கள் என்று சொல்பவர்கள் அடையாளமிட வேண்டுமல்லவா?

யாழ்ப்பாணம் என்ற பெருமிதத்தினுள் ஈழத்தேசியத்தை அடையாளப்படுத்தும் செயற்பாடுகள் கடந்த காலங்களில் பெருவாரியாகவே நடைபெற்று வருகின்றன. இது மிகவும் பகிடியானதும் அப்பாவித்தனமானதும் ஆகும். யாழ்ப்பாணத்தில் எவடம்? யாழ்ப்பாணத்து முறைப்படி தயாரிக்கப்பட்ட

www.tamilarangam.net

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட எனும் வார்த்தைப் பிரையோகங்களை கூச்சமில்லாமல் பயன்படுத்துவதன் மூலம் தமது சுய அறிவீனத்தை யாழ்ப்பாணத் திமிரை அப்பட்டமாக வெளிக்காட்டும் மனநோய் கொண்ட ஒரு சமூகமாக மாறிவிட்டிருப்பதை அவதானிக்க முடியும்.

பொதுச்சூழல் இப்படியிருக்க புத்திசீவிகள் மாற்றுச்சிந்தனை கொண்டதாகச் சொல்லிக் கொள்ளும் பலரையும் இந்த மனநோய் பீடித்திருப்பதை நாம் நிறையவே அவதானிக்க முடியும்.

கனடா காலம் இதழ்- 18.ல் எடிட்டோரியல் இப்படிச் சொல்கிறது. ஏ.ஜே. கனகரட்னா அவர்கள் யாழ்ப்பாணத்துக்கே உரிய கல்வி முறையை தக்கபடி பயின்றவர்.என்று எழுதியது. இங்கே யாழ்ப்பாணத்துக்கே உரிய என்பதற்குள் மறைந்திருக்கும் யாழ்ப்பாணத்திமிர் குறித்த கவலை அல்லது கேள்வி காலத்தின் வாசகர்கள் யாருக்கும் இதுவரை எழவில்லை. காலம் இதழ் கனடாவில் இலக்கிய இதழாகத் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது. அந்தத் தொடர்ச்சிக்கும் அந்த உழைப்பிற்கும் நான் மரியாதை கொள்கிறேன். இதுகுறித்து நான் பலதடவை சஞ்சிகை ஆசிரியருடனே பேசியிருக்கிறேன். எவ்விடத்திலேயும் அது குறித்து அவர்கள் யோசித்ததாக இல்லை.இந்த வார்த்தை குறித்து நான் சில கேள்விகளை உங்களிடம் கேட்க முடியும்.

1. யாழ்ப்பாணத்திற்குரிய கல்வி முறை என்று ஒன்று உண்டாயின் மற்றய பிரதேசங்களுக்கான கல்வி முறைகள் எவை?

2. அவை எப்படி யாழ்ப்பாணத்துக்குரிய கல்வி முறையிலிருந்து வேறுபடுகிறது?

3.மற்றைய பிரதேசத்திற்கான கல்வி முறையை யார் யார் தக்கபடி பயின்றவர்கள்?

4. வேறு யாரெல்லாம் யாழ்ப்பாணத்துக்குரிய கல்வி முறையைத் தக்கபடி பயின்றவர்கள்?

ஏ.ஜே. கனகரட்னா மட்டும்தான் தக்கபடி பயின்றவர் எனில் ஏன் யாழ்ப்பாணத்திலுள்ள மற்றவர்கள் தக்கபடி பயில முடியாமல் போனது?

இப்படி பல ஆயிரம் கேள்விகள் நமக்குத் தோன்றுவது தவிர்க்கமுடியாதது. யாழ்ப்பாணத்துக்குரிய முறையில் தயாரிக்கப்பட்ட வறுத்த மிளகாயத்தூள் என்ற வார்த்தையிலிருந்து இந்த வார்த்தை எவ்விதத்திலும் வேறுபட்டதல்ல.

அடுத்து கனடா பதிவுகள் டொட் காம் எழுதியது:

யாழ்ப்பாணத்தில் தலித் பெண்களை வைப்பாட்டிகளாக வைத்திருப்பதற்கு ஏற்றுக்கொண்டவர்கள்தானே நாங்கள் என்கிறது. இதை கனடாவில் ஒருபாலுறவுசார்ந்த கருத்தியலைப் பற்றிப் பேச வந்த ஓர்க்வில் நிருபாமா என்ற பெயரில் ஒழிந்திருக்கும் ஒருயாழ்ப்பாணி- இப்படி ஒருவர் கனடாவில் எழுதுவதில்லை அப்படி ஒருவரும் கனடாவில் இல்லை என்றே அனைவரும் சொல்கிறார்கள்- இதை எழுதினார். இதுபற்றி அதே இணையத்திற்கு நான் மறுத்து எழுதிய மூன்று நிமிடத்தில் அந்தக் கட்டுரையிலிருந்த வரிகள் நீக்கப்பட்டுவிட்டன. ஆக என்னால் இந்த மோசமான கருத்தியலுக்கு அந்த இணையத்தின் ஆசிரியரையே குற்றஞ்சாட்ட முடியும். நான் அவரிடம் கேட்டு எழுதியது தலித் பெண்களை வைப்பாட்டிகளாக வைத்திருப்பதற்கு ஏற்றுக்கொண்டவர்கள்தானே நாங்கள் என்பதில் வருகின்ற நாங்கள் என்பதற்குள் மறைந்திருக்கும் சாதி எது? என்பதுவே. கவனமாகக் கவனிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் - நாங்கள் என்ற சொல்லாடலுக்குள் இருக்கின்ற மிக முக்கியமான தளம் பற்றி கருத்துக்கெடுக்காதவர்கள் இவர்கள். அந்தக் கருத்தாக்கம் தருகின்ற வன்முறைகள் குறித்த கேள்விகளை எழுப்பாதவர்கள் இவர்கள். இவர்கள் எல்லோரும்தான் தம்மை ஈழத்தேசியவாதிகளாக அடையாளப்படுத்துகிறார்கள். இந்த ஈழத்தேசியவாதிகள் மீது நாம் எவ்வகையான அவதானத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

இந்த ஈழத்தேசியவாதிகள் அநேகமானோர் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம்கள் விரட்டப்பட்டது குறித்து பேசமுறபடும் போது சித்தசுவாதீனமற்றவர்களாகிவிடுகிறார்கள். வரலாற்றின் பாதையிலிருந்து முறித்தெறியப்பட்ட அந்த இனம் தனது பாதையை நேராக்க இன்னும் எவ்வளவுகாலம் காத்திருக்க வேண்டியிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். யாழ்ப்பாணத் திமிரின் உச்சக்கட்ட வன்முறையாய் இருந்தது அந்தத் துரத்தியடிப்பு.இன்றைக்கு 16 வருடங்கள். இன்னும் தெளிவற்ற நிலை. இப்ப நாங்கள் திரும்பி வந்து இருக்கச் சொல்லி விட்டோம். அவர்களும் திரும்பி வந்திருக்கிறார்கள் நன்றாக வாழ்கிறார்கள் என்று புலிகள் தங்களது பினாமி ஊடகங்கள் மூலம் சொல்ல வைக்கிறது. ஆனால் 16வருடத்திற்குப்பின் எதுவுமற்ற ஒரு இடத்திற்கு எப்படிப் போய் வாழ முடியும் என்று யோசிக்கிறது முஸ்லீம் இனம். ஒரு சந்ததி இழந்து இன்னொரு சந்ததி உருவாகிவிட்டகாலம். எங்கே போவது.யாரை நம்பிப் போவது? இது இப்படியிருக்க யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம்கள் துரத்தப்பட்ட காலத்தை நினைவுகூர அல்லது அதுகுறித்துப் பேச முறபடும் பொழுது இன்றைக்குப் 16 வருடமாகிவிட்டது. இத்தனை வருசத்திற்குப் பிறகும் அதுகுறித்து ஏன் பேசிக் கொண்டிருக்க வேணும். என்று அந்தப் பிரச்சனையில் இருந்து தப்பிக்கொள்ள விளைகிறது யாழ்ப்பாணியம். ஆனால் மறுபுறம் 23 வருசமாகியும் 83 ஜூலைப் படுகொலை குறித்து நினைவுகொள்வதை கேள்வியெழுப்வில்லை. வருடக்கணக்குப் பார்த்தால் நாம் மறந்து போகக் கூடியது ஜூலைப்படுகொலையே.

குமுதினிப்படகில் கொல்லப்பட்ட மக்கள் குறித்து இத்தனை வருசமாகியும் நினைவுகொள்ளும் நமது தேசியவாதிகள் ஹென்பார்ம் டொலர் பார்ம் தொழிலாளர்கள் குறித்து ஒருசின்னக் கவலையும் கொள்வதில்லை. அவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்பதுவே அவர்களின் சிந்தனை. தமது செயற்பாட்டிற்கு எதிரானவர்கள், மறுத்தவர்கள்,கேள்விகளை முன்வைத்தவர்கள் என்று எல்லோரையும் கொன்றுவிட தமிழ்த் தேசியம் ஒருபோதும் யோசிப்பதில்லை.

எந்தக் கேள்விக்கும் எதுவித பதிலுமற்ற தமிழ்த் தேசியத்தின் பிதாமகனான புலிகள் யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்தை அழித்த காட்சிகளை வரவேற்று நின்றது யாழ்ப்பாணியம். ஒருகையால் ரெலோ இளைஞர்களை தீயில் போட மறுகையில் கொக்கோகோலா உடைத்துக் கொடுத்து தாகம் தீர்த்தது யாழ்ப்பாணியம். விடுதலைப்புலிகளால் நடாத்தி முடிக்கப்பட்ட ரெலோ இயக்கத்தினரது அழிப்பில் அழிந்து போனது ரெலோ இயக்கமல்ல. திண்ணவேலிச்சந்தியில் ரயருக்குள் கிடந்து கருகிச் செத்தது கிழக்குமாகாணம். ஆம் திருகோணமலை மட்டக்களப்பு ரெலோ இயக்கப்போராளிகள் மட்டுமே தேடித்தேடிக் கொல்லப்பட்டார்கள். கிழக்கு மாகாண இளைஞர்கள் யாழ்ப்பாணியத்தின் எதிரிகளாக எப்போதுமே முன்நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

கிழக்கின் மார்ச் பிளவு யாழ்ப்பாணியத்தின் மிக இறுக்கமான ஆணிவேரை ஒட்ட அறுத்தது. யாழ்ப்பாணியத்தின் காவலனான விடுதலைப் புலிகள் சொல்லிக்கொண்டிருந்த தாகத் தமிழீழத்திலிருந்து கிழக்கு பிரிந்துபோனது. ஈழவிடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து அதீதவளர்ச்சி பெற்ற காலம் ஈறாக விடுதலை இயக்க அழிப்பு வரையில் யாழ்ப்பாணத்திமிர் தன் கோரப் பற்களை நீட்டியே வந்திருக்கிறது. ஆனால்

www.tamilarangam.net

அதன் தாண்டவம் விடுதலைப் புலிகளின் மார்ச் பிளவில் தான் வெளித் தெரிந்தது. யாழ்ப்பாணத்தின் அத்தனை கிடுகு வேலிகளும் யாழ்ப்பாணம் அல்லாத ஒருவனையாவது கொல்வதற்கு துடித்துக் கொண்டிருந்தது. அதே நேரம் யாழ்ப்பாணத்தான் ஒருவனையாவது இழந்து விடக்கூடாது என்று கண்காணித்துக் கொண்டிருந்தது. மட்டக்களப்பில் பிரிந்து போன விடுதலைப்புலிகளை அழிக்க மட்டக்களப்பு சிறுவர்களையே அனுப்பி அவர்களது சகோதரத்திற்கு எதிராக சண்டையிடவைத்து. திமிரின் உச்சக்கட்டத்தை நிரூபித்துக் காட்டியிருக்கிறது யாழ்ப்பாணியம். வெருகல் ஆறு யாழ்ப்பாணத் திமிரின் கொலைச் சரித்திரத்தை தன்னகத்தே மெல்லப்பதுக்கிப் பாதுகாத்து ஓடிக்கொண்டிருக்கிறது. தனது குழந்தைகளின் குருதியை உள்ளாரப் பதுக்கி வைத்திருக்கிறது நாளையவரலாற்றுக்கு காண்பிக்க.

ஆனால் இன்று வரலாற்றை எழுதும் ஆசிரியர்களோ தமது மௌனத்தின் மூலம் அனைத்திற்கும் பச்சைக்கொடி காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதை எழுதாத, இந்தக் கொடூரத்தை மறுக்காதவர்கள் தம்மைப் புத்திசீவிகள் அல்லது மாற்றுக் கருத்தாளர்கள் என்று சொல்லி வருவதில் என்ன அர்த்தம் இருந்து விடப்போகிறது?

ஆனால் இன்று வரலாற்றை எழுதவேண்டிய, நம் கைகளில் தவளுகின்ற தமிழ்ப் பத்திரிகைகளோ உண்மை என்ற ஒன்றை தமது அறிவுப் புலத்திற்கு அப்பால் நின்று நிறுவுகிறார்கள். அந்த உண்மை மூலம் இன்று விடுதலைப் புலிகளையும் அவர்களின் தனித்த அபிலாசைகளையும் முன் நிறுத்துவதினூடாக தமக்கான தமிழ்த்தேசியத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று நம்பியிருந்தார்கள். அண்மைக்காலமாக அந்த நம்பிக்கையும் அவர்கள் கைமீறிப் போய்கொண்டிருப்பது பற்றி அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். இந்த உணர்வு அவர்களிடம் ஒரு பீதியை உண்டுபண்ணியிருக்கிறது. தமக்காக இருக்கின்ற ஒரு பிடியையும் அவர்கள் கைவிட விரும்பவில்லை. அதனால் புலிகளால் செய்யப்படும் அநீதிகளையெல்லாம் இந்தப்பத்திரிகையாளர்கள் குறிப்பிடுவதில்லை. புலிகளின் அத்துமீறிய வன்முறைகளெல்லாம் இவர்களால் வரவேற்கப் பட்டிருக்கின்றன. புலிகள் தமக்கான காரணமாக எதைச் சொல்கி றார்களோ அதையே அச்செடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். புலிகளின் வாக்கே அவர்களது ஆசிரியமாகிவிடுகிறது.

எவ்வகையிலும் எதிராக மக்களைச் சிந்திக்க வைக்காது மிகவும் தந்திரோபாயமாக புலிகளைக் காப்பாற்றி வைத்திருக்கும் செயற்பாட்டில் வெற்றி பெறுகிறார்கள். புலிகள் தமது இருப்பை நிலை நாட்ட என்னவெல்லாம் செய்ய நினைக்கிறார்களோ. அதை அப்படியே செய்வதற்கு வழிகாட்டிகளாக இருப்பது இன்றைய தமிழ் ஊடகங்கள்.இன்றைய கொலைகளுக்கும் அத்துமீறிய வன்முறைகளுக்கும் துணையாய் இருக்கும் தமிழ்வெறி கக்கும் ஊடகங்கள் வரலாற்றின் குற்றநிலையில் முதலிடம் பெறுவார்கள். ஈழத்தில் இன்று நடந்து கொண்டிருக்கும் அத்தனை கொலைகளிற்கும் புலிகள் பொறுப்பெடுக்க வேண்டிய வர்கள்.அவர்களே குற்றவாளிகள். ஆனால் அவற்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்திய குற்றமான Conspiracy to comit murder தாக்கலை எதுவித எதிர்ப்புக்களுமற்று இருகரம் கோர்த்துக் காப்பாற்றி வந்த பத்திரிகைகளின்மீதும் அதன் எழுத்தாளர்கள் மீதும் நடைமுறைப்படுத்த வேண்டும். புலிகளின் எந்தவொரு வன்முறையையும் இவர்கள் இன்றுவரை எழுதியது கிடையாது.

இதைவிட இன்னுமொரு மோசமான நிலை இருக்கிறது. அது தன்னைப் புத்திசீவிகள் என்று சொல்லிக்கொள்கிறது. தனக்கு ஏன் தேவையில்லாத வேலை என்று சொல்லி தருணம் பார்த்திருப் பதாகச் சொல்லும் அந்த வட்டம் எப்பொழுதும் மௌனமாகவே இருந்து வருகிறது. இது ஒரு சட நிலை. இதற்கும் முதற் சொன்னதற்கும் பெரிய வேறுபாடு கிடையாது. இரண்டுக்கும் தருணம் தான் வித்தியாசம். மௌனம் என்பது சட நிலை. சம்மத நிலை. அதை நான் ஒரு போதும் ஒத்துக் கொள்ளப் போவதில்லை. அமெரிக்க ஏகாதிபத்தியம், ஈராக் படுகொலை, ஆப்கானிஸ்தான் சண்டை, என்று எல்லாவற்றையும் பேசும் இந்த புத்திசீவிகள் கூட்டம் எப்படி இதில் மட்டும் அமைதியாக இருக்க முடியும்?

இந்தப் பெருத்த அமைதிக்குப் பின்னால் இருப்பது எது? உயிருக்கான பயம் என்பதை நான் ஒத்துக்கொள்ள மாட் டேன். இங்கே புலிகளின் கட்டாயப்பண வசூலிப்பை எத்தனை அப்பாவி மக்கள் தனித்து எதிர்த்து நின்றிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் எந்தளவுக்குப் பயம் கொண்டிருக்க வேண்டும். அவர்க ளுக்கு இல்லாத பயம் எப்படி இந்தப் புத்திசீவிகளுக்கு மட்டும் வரமுடியும்? சரியான வேடிக்கையான விடையம் இது. இல்லை இவர்கள் பயமற்று இருக்கிறார்கள் எனில் ஏன் இவர்கள் எதிர்ப்பதில்லை?

இவர்கள் தமிழீழம் ஒன்று உருவாகும் என்று நினைக்கிறார்கள். தமிழீழம் என்ற ஒன்று தேவை என்று மனசார எண்ணுகிறார்கள். அதனைப் பெற்றுத்தர இன்று புலிகளை விட வேறு எவர்களாலும் முடியாது என்று நினைக்கிறார்கள். தங்களது பிள்ளைகளைத் தவிர வேறு எவரைக் கொன்றாவது தமிழீழம் பெற்றுத்தரவேண்டும் என்று தினமும் கடவுளைத் தியானிக்கிறார்கள். அதற்காகவே அவர்கள் மௌனமாக இருக்கிறார்கள். இங்கே அவர்களது மௌனம் தியானமே தவிரப் பயமில்லை. தியானத்திலிருந்து கடைக்கண்ணால் அத்தனை கொலைகளையும் கவனிக்கிறார்கள். கொலை செய்யப்பட்டவர்கள் தங்களுக்குத் தேவையற்றவர்கள் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரிகிறது. தங்களுடைய விழிப்பிற்கான தருணம் இதுவல்ல என்பது அவர்களுக்குத் தெரியும். தருணம் முக்கியம். பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு தருணத்திலும் யாழ்ப்பாணியம் தன்னை பாதுகாத்து உயர உயர வளர்க்கிறது. தமிழீழம் என்பது தமிழர்களுக்கான ஆகக்கூடிய ஒரு பொய். ஒரு ஏமாற்று. அது உண்மையற்ற ஒரு தளம். அதற்குள் மிகக் கவனமாக ஒழிந்திருப்பது யாழ்ப்பாணியம்.

## Stop

கனடாவில் நடைபெற்ற சுந்தரராமசமி அவர்களது அஞ்சலிக் கூட்டத்தில் பிரேமிள் அவர்களை துரோகி என்று அடையாளப்படுத்தப்பட்டது குறித்து மற்றது இதழ் தனது கண்டனத்தைத் தெரிவிக்கிறது. பிரேமிள் அவர்களது எழுத்துக்கள் முழுமையாகத் தொகுக்கப்பட்டு அவரது எழுத்தியக்கம் குறித்து தீவிரமாகப் பேசப்பட்டுவரும் சூழல் இது. இந்த நேரத்தில் பிரேமிள் குறித்த எதிர்வினையை முன்வைப்பது பயனுள்ளது. அதைவிட்டு புலிகளின் ரேஞ்சில் துரோகி என்று ஒற்றை வரியில் குற்றஞ்சாட்டுவது இலக்கியவாதிகளுக்கு அழகான வேலையில்லை. இன்று துரோகி என்பது தமிழ் அகராதியில் அழிக்கப்படவேண்டியது என்றே அர்த்தம் கொள்ளப்படும் சூழலில் வாழ்ந்து வருகிறோம். இந்த நிலையில் இப்படியான கூற்று இலக்கியச்சூழலை பாசிசத்தை நோக்கி நகர்த்தி விடுகிறது.

-மற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கிரேக்கர்களுக்கு மாசிடோனியர்கள் என்றால் எப்பவும் ஒரு இழப்பம். இத்தனைக்கும் மாசிடோனியர்கள் கிரேக்க இதிகாச வீரன் ஹர்க்கூலிஸின் வழித்தோன்றல்கள் தான். ஆனாலும் மாசிடோனியர்களை காட்டுமிராண்டிகள் என்று அடிமைப் படுத்தியும் ஆண்டாண்டு காலமாக ஆண்டு கொண்டும் வருகிறார்கள்.

அனேகமான மாசிடோனியர்கள் தங்களை ஒரு கிரேக்கராக உருவகப்படுத்திப் பார்ப்பதில் எப்போதும் உள்ளூர ஒரு சந்தோசம். அதனால்தானோ என்னவோ கிரேக்கர்கள் மீது சிறுவயதிலிருந்து அப்படியொரு வெறுப்பு அலக்ஸாண்டருக்கு.

தத்துவாசிரியர் அரிஸ்டாட்டில் கூட அலெக்ஸாண்டருக்கு கிரேக்க அரசர்கள் மீது வெறுப்பை உண்டு பண்ணும் விதமாய் கிரேக்க இதிகாச வீரர்களைப் பற்றியும் அவர்கள் மாசிடோனியர்களுக்கு செய்யும் கொடுமைகள் பற்றியும் அடிக்கடி சொல்வார். அலக்ஸாண்டருக்கு மட்டுமல்ல மசிடோனிய மக்களுக்கும் மதியுரைஞரான அரிஸ்டாட்டின் மீது பாரியபிரியம்.

அலெக்ஸாண்டர் எப்போதும் கிரேக்கர்கள் மீது வெறியுடன் அலைந்தான். அலெக்ஸான்டர் மட்டுமல்ல, எல்லா வாலிபர்களும் தத்துவாசிரியர் அரிஸ்டாட்டிலின் போதனைகளால் பேரசு மீது கோபம் கொண்டு வாளுடன்தான் நடமாடினார்கள்.

எப்போது புரட்சி வெடிக்கும்; கிரேக்க பேரரசு எப்போது வீழ்தப்பட்டு மாசிடோனியர்கள் அரியணை ஏறுவர்கள் என்னும் எதிர்பார்ப்பு மாசிடோனியர்களிடம் காணப்பட்டது. கிரேக்கர்களின் அநீதிக்கு உட்பட்டும்; சிரச்சேதம் செய்யப்பட்டும் மாசிடோனியர்கள் மாண்டு கொண்டிருந்தாலும் கலகக்காரர்கள் மறைந்திருந்து போர்தொடுக்காமல் இல்லை.

ஆனால் அலெக்ஸாண்டருக்கு இப்படியான போர்முறையில் எல்லாம் நம்பிக்கையில்லை. அதற்கு காரணம் தத்துவாசிரியர் அரிஸ்டாட்டிலின் போதனையும் அவரது எதார்த்த வாத தத்துவங்களுமாக இருந்தாலும் மறைமுகமாய் அவரது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனிப்பட்ட வழிநடத்தலும்தான்.

மதியுரைஞர் அரிஸ்டாட்டில், எப்போதும் இலியாத் புராண காவியத்தை அலெக்ஸான்டருக்கு போதித்தார். அதில் வரும் மாவீரன் அகிலஸ் போன்று அலெக்ஸான்டரை உருவகப்படுத்தினார்.

அலெக்ஸான்டரும் உருவேறினான். ஒரு கையில் வாளும் மறுகையில் இலியாத்துமாகவே திரிந்தான்.

ஒலிம்பியாவில் நடக்கப்போகும் ஓட்டப்பந்தயத்தில் எவர் வெல்கிறார்களோ அவர்களே அகிலஸாசுக்கு நிகரானவன். அவனே கிரேக்க பேரரசு மீது போர் செய்யும் வல்லமையும் உடையவன் என அன்று தேவாலய பிரதமகுருவும் தத்துவாசிரியர் அரிஸ்டாட்டிலும் பேசிக்கொண்டதாக அலெக்ஸான்டரின் தோழன் கிரேத்துவா மூலம் கேள்வியுற்றான்.

ஒலிம்பியாவில் நடக்கவிருக்கும் ஓட்டப் பந்தயத்துக்கு முதல் நாள் இரவு தன்னுடன்டன் போட்டியிட இருந்தவர்கள் எல்லோரது தலையையும் துண்டித்து விட்டு அலெக்ஸாண்டர் மட்டும் அன்று ஒலிம்பியாவில் ஓடி வெற்றி பெற்றான்.

மறுநாளே கிரேக்கம் மீது போர்தொடுத்தான். ஒவ்வொரு வீடுவீடாக சென்று கதவைத்தட்டி ஒளிந்திருந்த ஆண்களையெல்லாம் பிடித்துவந்து சிரச்சேதம் செய்தான். அதற்கு மறுநாள் மசிடோனியாவை சுதந்திர நாடாக பிரகடனம் செய்தான். அதன்மறுநாள் ஒவ்வொரு மாசிடோனியனின் வீட்டுக்கதவைத் தட்டி வரி அறவிட ஆரம்பித்தான்.

கதவைத் திறந்த குடும்பத்தலைவன் முகத்தில் என்ன பாவம் காட்டுவது என்று புரியாமல் தடுமாறுகிறான்.

நீ சினேகமாய் புன்னகைக்கிறாய்.

உன்னைப்பார்த்து புன்னகைப்பதற்கு பதிலாய் உன் அருகே சற்று பின்னால் நிற்கின்ற என்னை அவர் பார்க்கிறார்.

பயிற்றப்பட்ட முறையில் நானும் சினேகமாய் புன்னகைக்கிறேன்.

குடும்பத்தலைவர் முகத்தில் கலவரம் போன்றதொரு பாவம் தோன்ற என் அருகே அரையடி பின்னே நிற்கும் அவனைப் பார்க்கிறார்.

நம்மைப்போல் அவனும் புன்னகைக்கிறான்.

கணப்பொழுதில் நம்மை அவர் விளங்கிக்கொண்டிருக்க வேண்டும். இயலாமையும் பயமும் பதட்டமும் தடுமாறித் தடுமாறி படபடக்கிறது அவர் கண்களுக்குள்.

அவரது கை கதவை மூடுவதற்கோ அல்லது இன்னும் அகலமாக திறப்பதற்கோ எத்தனித்து தடுமாறுகிறது.

நின்ற இடத்தில் இருந்து ஒருபாதத்தை முன்னெடுத்து வைக்கிறாய். உனது செய்கை உளவியல் ரீதியாய் அவரை பலஹீனப்படுத்துகிறது. நானும் உன்னைப் போன்றே முன்னே நகர்கிறேன். என் பின்னே நின்ற அவனும் தனது பாதத்தை எடுத்து முன்னே வைக்கிறான்.

மில்லியன் ஆண்டுகளாக போர் செய்வோரால் வாழ்வு குதறப்பட்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். துடிக்கும் துண்டித்த பல்லியின் வால்போல் எஞ்சியிருக்கும் வாழ்வுக்காக ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

மொழியை மறந்த வியாதியஸ்த்தன் போன்றும் திக்பிரமை பிடித்தவர் போன்றும் அவர் வீட்டினுள் போகிறார்.

நீயும், நானும், அவனும் அவர் பின்னே போய் வீட்டின் ஹோலுக்குள் போனோம்.

"ஜீ.ஜே நீங்க உங்க வேலயமட்டும் பாத்துகிட்டு இருங்க."

"செல்வி, பிஸ்னச மட்டுமே பார்த்துகிட்டு இருந்தா உங்க வயித்துல வளர்ர என்னோட குழந்தை எப்டி ஆரோக்கியமா பிறக்கும்."

"அது உங்க குழந்தையா இருந்தாலும் என்னோட வயித்துல வளருது..."

"உன்னோட. உங்களோட இந்த கோபம் தான் செல்வி... "

செல்வி தொடர், தொடர் அறுகிறது. ஆனாலும் ரெலிவிஷன் தொடர்ந்து ஒளிர்கிறது..

அகதிகள்.. அகதிகள். அகதிகள். உலகின் தெருவெங்கும் கந்தக நெடி தவிர்த்து வாழ்வின் உயிர்தேடி ஓடுகிறார்கள். கையில் குழந்தைகளுடனும் மீதமிருக்கின்ற நம்கையுடனும் ஓடுகிறார்கள். மில்லியன் ஆண்டுகளாக போர் செய்வோரால் வாழ்வு குதறப்பட்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். துடிக்கும் துண்டித்த பல்லியின் வால்போல் எஞ்சியிருக்கும் வாழ்வுக்காக ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

அலக்ஸான்டரும் நெப்போலியனும் செங்கிஸ்கானும் முசோலினியும் ஹிட்லரும் கொலைக்கருவிகளுடனும் பெரும்படையுடனும் மக்களை துரத்திக்கொண்டிருக்

www.tamilarangam.net

கிறார்கள்.

போர் விரும்பிகள் கோஷமிடுகிறார்கள்.

மனிதன் இன்று பெற்றிருக்கின்ற வாழ்வுக்கு தேவையான எத்தனையோ அம்சங்கள் போரின் மூலம் கிடைத்தவையே. இன்று நாம் பயன்படுத்துகின்ற நெடுஞ்சாலைகளும் வீதிகளும் இரண்டு நண்பர்கள் சந்தித்துக் கொள்வதற்காகவோ, தூரயிருக்கின்ற ஆண்களும் பெண்களும் சந்தித்து திருமணம் செய்து கொள்வதற்காகவோ யில்லை. இரண்டு பகைவர்கள் மோதிக்கொள்ளும் போருக்காக போடப்பட்டவைகளே.

நாமின்று பார்க்கின்ற உயர்ந்த கோபுரங்களும் கோட்டைகளும் போருக்காக கட்டப்பட்டவைகளே. முதன் முதலாக கட்டப்பட்ட உயர்ந்த சுவர் பகைவனின் படையெடுப்பை தடுப்பற்கே. இதைத்தொடர்ந்தே கோட்டைளும் மதிற் சுவர்களும் எழுந்தன.

பெரிய நகரங்களிலெல்லாம் வானுயர்ந்த கட்டிடங்களும் தொழிற்சாலைகளையும் பார்கிறோமென்றால் அவையெல்லாம் போரின் பின்விளைவுகளே.

மனிதனின் சகல சாதனைகளும், அறிவியலும், தொழில் நுட்பமும் அடிப்படையில் போருக்கே கடமைப்பட்டிருக்கின்றன.

அந்த ஹாலில் சோபா நுனியில் அமர்ந்து தொலைக்காட்சியில் மூழ்கியிருப்பது போன்று பாவனை செய்யும் குடும்பத்தலைவி அவசரமாய் எழுந்து கொள்கிறாள். எழுந்த வேகத்தில் திக் பிரமையையும் மொழியினை மறந்த வண்ணமும் நிற்கும் குடும்பத் தலைவனைப் பார்க்கிறாள். பின் டெலிவிஷனின் இயக்கத்தை துண்டிக்கிறாள். துண்டித்த பின் அனுமதி பெறாமலேயே தன்னிச்சையாய் சோபாவில் அமரும் உன்னைப் பார்க்கிறாள். நீ என்னைப் பார்த்து சைகை செய்வதால் உன்னை அந்த இல்லத்தலைவி பார்த்ததை தவிர்த்துவிட்டாய்.

உன் சைகையின் பொருட்டு நானும் இருக்கையில் அமர்ந்து கொள்கிறேன். என்போன்றே அவனும் அமர்ந்து கொள்கிறான்.

பெருநிசப்தம் நிகழ்கிறது..

இறுக்கமான மௌனத்தை உடைக்க நீ குடும்பத்தலைவியைப்பார்த்து புன்னகைக்கிறாய். அவளோ ஒப்புக்கு சப்பாணியாய் கடைவாய் உதட்டால் நெளிந்து பின் புன்னகைக்கிறாள்.



"தலைவரோட நேரடி பிரதிநிதிகளாய் உங்களிட்ட வந்திருக்கிறம். என்கிறாய் நீ."

எல்லாம் தெரிந்த குடும்ப தலைவனும் தலைவியும் எதுவுமே தெரியாத அப்பாவிகள் போன்று பாவனை காட்டிக் கொண்டு ஒருவரை ஒருவர் ஆச்சரியப்பட்டு பார்த்துக்கொள்கின்றனர்.

"எதுக்கு?" என்கிறாள் குடும்பத்தலைவி.

உங்களோட குடும்பத்திடம் இருந்து எங்களுக்கு அஞ்சாயிரம் வரவேண்டும்." என்ற உன்னை திடுக்கிட்டுப் பார்த்த அந்த குடும்பத்தினர் என்னையும் அதே வேகத்தில் பார்த்தனர்.

"ஐயாயிரமோ? என்னத்துக்கு?" பொங்கி வந்த பயத்தை பொத்திக்கொண்டு கோபம் கொண்டவர் போன்று அந்த குடும்பத் தலைவர் கேட்டார்.

"நாங்கள் கடைசிப்போர் ஆரம்பிக்கப் போறம்." என்றேன் நான். என்மீது உனக்கு சினம் வருகிறது. வடிவமைக்கப்பட்ட முறைக்கு அப்பால் தாவி நான் பேசியது பிழையென்று பின்தான் புரிகிறது.

"இல்லை ஒரு ஆளுக்கு இரண்டாயிரத்தி ஐந்நூறு தான் வாங்கிறம் ஆனா, நீங்கள் ரெண்டு பேரும் வேலை செய்யிறிங்கள். அது மட்டுமில்லாம உங்களுக்கு ஒரு பிள்ளைதான்." என்மேலான சினத்தை கட்டுக்குள் வைத்துக் கொண்டு நீ நிதானமாய் பேசுகிறாய்.

"இஞ்சேயப்பா, உங்களுக்கு வேலைக்கு நேரமாகேல்லையே" குடும்பதலைவியின் அதட்டலால் பதட்டமடைகின்ற குடும்பத்தலைவர் உன்னைப்பார்க்கிறார். அவருக்கு வேலை இன்று இல்லை என்பது உனக்கு மட்டுமல்ல, எனக்கு மட்டுமல்ல, அவனுக்கும் தெரியும் என்பது அவர்களுக்கு கூட தெரியும்.

"இருங்கோ போகலாம். நாங்கள் கொஞ்சம் கதைக்க வேணும்." என்று

www.tamilarangam.net

அவரைப்பார்த்து சொன்னதும் அவர் குடும்பத்தலைவியை பார்க்கிறார். அவளோ உன்னைப்பார்க்கிறாள்.

"என்ன கதைக்க வேணும்" என்றாள் குடும்பத்தலைவி.

"நீங்கள் எங்களுக்கு அஞ்சாயிரம்; தரவேணும்" என்கிறாய் நீ மீண்டும்.

"ஐயாயிரமா? நாங்கள் எங்க போறது..?"

"தலைவர் இன்னும் மூண்டு வருசத்தில வட்டியோட திரும்பித் தந்திடுவார்." என்று மிகவும் பவ்வியமாகவும் அழுத்தமாகவும் நீ அந்த குடும்பத் தலைவியைப்பார்த்து சொல்கிறாய்.

இந்த இக்கட்டானதும் , இறுக்கமானதுமான சூழலிலும் அவள் எதை புரிந்து கொண்டாளோ க்ளுக்கென சிரித்துவிட்டாள். அவள் சிரிப்பு உனக்கு கிலேசத்தை உண்டு பண்ணியிருக்க வேண்டும். உன் முகம் இறுக்கமடைகிறது. நானோ பதட்டம் கொள்கிறேன். அவன் பயிற்றப் பட்டு போன்று சும்மாயிருந்தான். அவனைப் போன்றே அந்த குடும்பதலைவரும் சும்மாயிருந்தார்.

"நாங்கள் கடைசிப்போர் தொடங்கப் போகிறோம்." என்று நீ சொன்னதும். அவர்கள் இருவரும் நம் மூவரையும் மாறிமாறி அசூசையாய் பார்த்தார்கள். உனக்கு என்னவிதமான உணர்ச்சி வந்ததோ தெரியவில்லை. ஆனால் எனக்கு வெட்கம் வந்துவிட்டது.

கடைசிப்போர்... கடைசிப்போர். கடைசிப்போர்...

ஒவ்வொரு போர் ஆரம்பிக்கும் போதும் இதுவே கடைசிப்போர் என்று அலெக்ஸான்டர் முடிவெடுத்துக் கொள்வான். போர்.போர்... போரே தான் அலெக்ஸாஸ்டரின் வாழ்க்கை. ஒன்பது ஆண்டுகள் கடும்போர் புரிந்தான். பகல் எல்லாம் யுத்தம் செய்தான். இரவெல்லாம் யுத்தம் செய்வது எப்படி என்று திட்டம் தீட்டினான். சில சமயங்களில் நடு இரவிலும் யுத்தம் செய்தான் ஓயாத யுத்தம். ஓயாத அலைபோல யுத்தம் செய்தான்! பிணங்களை குவித்து குவித்து குவித்து தீயிட்டான்.



பாபிலோனியா அவன் காலடியில் வீழ்ந்தது. பாரசீகத்துக்கும் அவனே மன்னன் ஆனான். எகிப்துக்கும் அவனே அரசன். அலெக்ஸான்டர் மாசிடோனியாவின் எல்லையை விஸ்தரித்துக் கொண்டே போனான். இப்படிப்பட்ட நேரத்தில் அலெக்ஸாண்டர் மீது போர் குற்றம் செய்வதாய் போர் அதிருப்தியாளர்கள் விமர்சனம் செய்தனர். போர் போரென அலைந்து கொண்டிருக்கும் போது அதிருப்தியுற்ற மாற்றுக்கருத்தாளர்கள் அலெக்ஸாண் டரை கொல்ல சதிமுயற்சி செய்தார்கள்.

அலெக்ஸாணடர் கோபமுற்றான். தன்னை கொல்ல விரும்புபவர்களின் பெரிய பட்டியலை அவனது ஒற்றர் படை தயாரித்தது. அதன்படி எல்லோரும் கைது செய்யப்பட்டு பொதுமக்கள் முன்னிலையில் சிரச்சேதம் செய்யப்பட்டனர். அலெக்ஸான்டரை விமர்சித்தவர்களும், எதிர்கருத்தாடல் செய்த திண்ணை விமர்சகர்களும் பாதாள சிறையில் அடைக்கப்பட்டனர். இன்னும் சிலர் தேர்க்காலில் கட்டி இழுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள்.

அலெக்ஸாஸ்டர் மீது அதிருப்திக் கருத்தை தோற்றுவித்தது கிரேக்கமே என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட அலெக்ஸாண்டர் மீண்டும்

ஒவ்வொரு போர் ஆரம்பிக்கும் போதும் இதுவே கடைசிப்போர் என்று அலெக்ஸான்டர் முடிவெடுத்துக் கொள்வான்.

www.tamilarangam.net

உங்கடை தலைவர் இப்ப செய்யப்போற கடைசிப்போரை பதினைஞ்சு, இருவது வரிசத்துக்கு முதல் செய்திருக்கலாமே.

கிரேக்கத்துடன் ஆக்ரோஷமாய் சண்டை செய்தான். குழந்தைகளை இரண்டாகப் பிளந்தான். பெண்களை மாசிடோனியப் படைகளை விட்டு புணரச் செய்தான். பழமைக் கோயில்களையும், புராதன, புராண வடிவங்களையும் தீயிட்டுக் கொழுத்தினான். அலெக்ஸான்டரின் மூர்க்கமான போர் ஆக்கிரோஷமானதால் கிரேக்கர்களுக்கு மன்னிப்புக்கோரவும், சரணடையவும் கூட சந்தர்ப்பம் இல்லாமல் போனது.

தலைநகர் ஏதென்ஸ் பதட்டமடைந்தது. அலெக்ஸான்டரை எப்படி சாந்தப்படுத்துவது என்று திண்டாடினார்கள். சமாதானம் பேச தத்துவாசிரியர் அரிஸ்டாட்டிலை ஏதென்ஸின் அறிஞர்களும் மதகுருமார்களும் அழைத்தனர். அதன்பின் இரண்டு முடிவுகளை சமாதான குழுவினர்கள் எடுத்தார்கள்.

1. அலெக்ஸாண்டரை கிரேக்கத்தின் மன்னராக்கினார்கள்
2. அப்புறம் அவனை கிரேக்கத்தின் கடவுள் என்று வணங்கினார்கள்.



நேற்று நாம் சென்ற வீட்டுக்காரன் நம்முடன் பேசியது எனக்க ஞாபகம் வரத் தொடங்கிவிட்டது. அங்கேயும் நீ இதே போன்றே "நாங்கள் கடைசிப் போர் செய்யப்போகிறம்" என்றாய்

அந்த வீட்டுக்காரனுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்திருக்க வேண்டும். உன்னை ஒரு புழுவைப்போல் பார்த்துவிட்டு எங்களையும் ஒரு மலப்புழுக்கை போல் பார்த்துக் கொண்டே "நீங்கள் மூண்டு பேருமோ?" என்று கேட்டான்.

நீ ஒரு சாஸ்வதன் என்பது அந்த வீட்டுக்காரனுக்கு புரியாது. உன் உணர்வுகள் உறைபனியின் கீழ் கிடக்கும் ஆழ்கடல் போன்று மௌனித்திருக்க உன் முகம் மட்டும் புன்னகைத்துக்கொள்கிறது.

"தலைவர் கடைசிப்போர ஆரம்பிக்கப்போறார். நாங்கள் உங்களட்ட காசுக்கு வாறது இதுதான் கடைசித் தரம்." என்றேன் நான்.

"உங்கடை தலைவர் இப்ப செய்யப்போற கடைசிப்போரை பதினைஞ்சு, இருவது வரிசத்துக்கு முதல் செய்திருக்கலாமே." என்று அந்த வீட்டுக்காரன் கேட்டதும் நிச்சயம் நீ கோபத்தின் எல்லை கடந்திருப்பாய் என்பது நான் புரியாமல் இல்லை.

"நீங்கள் விதண்டாவாதம் செய்யிறீங்கள். நீங்கள் இப்ப தாற காசை நாங்கள் இன்னும் மூண்டு வரிசத்திலை திருப்பித் தாறம். மூண்டு வீத வட்டியோட திரும்பிதந்திடுவம்." என்கிறாய். செயினைக்கூட முழுதாய் இழுக்காது கால் கதவு திறந்து பேசிக் கொண்டிருக்கும் அந்த வீட்டுக்காரனிடம்.

அவனோ மேலும் நம்முடன் பேச விரும்பாதவனாகவும், நம்மை மேலும் கோபம் கொள்ளச் செய்ய விரும்புபவனாகவும் காணப்பட்டான். "கடைசிப்போர் நடந்து கொண்டு இருக்கேக்கையே உங்கடை தலைவர் பாங்றொப்சி அடிச்சிட்டால் எங்கட காசுக்கு என்ன நிலமை?" என்றானே பார்க்கலாம்.

சத்தியமாய் நான் சிரித்துவிட்டேன். வீட்டுக்காரன் கதவை மூடிவிட்டான்.

இந்த குடும்பத்தலைவியும் அந்த வீட்டுக்காரன் போன்றே ஏதேனும்

www.tamilarangam.net



அலெக்ஸான்டர் எல்லா தீர்வுக்கும் போர் தான் வழி என்று நம்பினான். எவ்வளவு பெரிய படையாக இருந்தாலும் உளவியல் ரீதியாக பலகீனப்படுத்திவிட்டால் நிலைகு லைந்து விடும்.

குண்டக்க மண்டக்க கேட்டுவிட்டால் நீ பதில் தயார்செய்து கொள்கிறாயோ என்னமோ ஆனால் நான் தயாராக இருக்கிறேன்.

"அப்ப சமாதானம்" என்று அப்பாவியாய் அந்த குடும்பதலைவர் கேட்டார்.

"அதுமூலமா நமக்கு தீர்வு கிடைக்காது. போர்தான் தீர்வு.." என்று நான் சொல்கிறேன். நீயோ மௌனமாய் இருக்க அவனோ என் கருத்தை ஆமோதித்து தலையாட்டுகிறான்.

"கிருஷ்ணன் கூட மகாபாரத போருக்கு முன்பு அருச்சுனனிடம் சொல்லியிருக்கிறான். சமாதானம் மூலம் நமக்கு நன்மை விளைகிறது என்றால் சமாதானத்தை விரும்பலாம். போரின் மூலமாக நன்மைகள் பெருகுமானால் நாம் போரைத்தான் ஆதரிக்கவேண்டும்" என்று

அந்த குடும்ப தலைவனும் தலைவியும் மறு வார்த்தை பேசத் தெரியாமல் இருக்கிறாங்கள். நமக்கு நம்பிக்கை வந்து விடுகிறது. எப்படியும் ரெண்டாயிரத்தி அஞ்சாவது கறந்து விடலாம் என்று.

"அப்படியென்றால் போர்தான் தீர்வே?" என்கின்ற ஒரு குரல் என் நம்பிக்கை மீது ஆப்பு இடுகிறது.

நமது கோழைத்தனம் அஹிம்சைக்குப் பின்னால் ஒழிந்து கொண்டிருக்கிறது. நமது மரண பயம் போரெதிர்ப்புக்கு பின்னால் ஒழிந்து கொண்டிருக்கிறது.

நாம் போரிட மறுப்பதால் போர் முடிந்து விடப்போவதில்லை. நம்முடைய போர் மறுப்பு ஆக்கிரமிப்பாளனுக்கு நாம் விடும் அழைப்பு. போர் மறுப்பு நம்மை அடிமைகளாக்கும்.

குடும்பத்தலைவரை விழிதாழ்த்தாது நீ பார்க்கிறாய். அவரோ தலைவியை பார்க்கிறார்.

"போர்தான் தீர்வு" என்கிறாய் நீ. அவன் உன்னை ஆமோதித்து தலையாட்டுகிறான்.

அலெக்ஸான்டர் எல்லா தீர்வுக்கும் போர் தான் வழி என்று நம்பினான். எவ்வளவு பெரிய படையாக இருந்தாலும் உளவியல் ரீதியாக பலகீனப்படுத்திவிட்டால் நிலைகுலைந்து விடும். அந்த நேரம் பார்த்து இடைவிடாது மூர்க்கமாகத் தாக்கினால் தோற்று ஓடிவிடுவார்கள். இந்த முறையை கையாண்டே அவன் மத்திய ஆசியாவுக்குள் நுழைந்தான்.

நைல் நதியின் தீரத்தில் செழித்திருந்த நாடுகள் அவன் காலடியில் விழுந்தது. வைரமும், நவரத்தினங்களும், தங்க மலைகளுமாக பிரமிட்டுகள் தோறும் தோண்டி எடுத்தான். இத்தனையும் இருந்தால் அவன் மாசிடோனியாவை தங்க நகரமாகவே மாற்றி விடவே முடியும். ஆனால், மாசிடோனியா முழுவதும் அவனுக்கு எதிரிகள் கூடிவிட்டார்கள். அலெக்ஸான்டரின் கொலைகளை விமர்சித்து திண்ணைகள் தோறும் அதிருப்தியாளர்கள் அதிகரித்து விட்டார்கள். போதாக்குறைக்கு அலெக்ஸான்டரிடம் தோற்ற முன்னைய கிரேக்கப் பேரரசின் விசுவாசிகள் இவனுக்கு எதிராக கலகம் வேறு செய்யத்தொடங்கி விட்டார்கள்.

நைல் நதியின் தீரத்தில் கொள்ளையிட்ட செல்வங்களை மாசிடோனியாவிற்கு கொண்டு செல்வதைக் காட்டிலும் மாற்றுத்திட்டம் ஒன்றை தீட்டினான். மெடிட்ரேனியன் கடலோரமாக நைல்நதி சங்கமிக்கும் இடத்தில் பெருநகரம் ஒன்றை கட்டியெழுப்ப அலெக்ஸாண்டர் தீர்மானித்தான்.

www.tamilarangam.net

அவனது புதிய நகரம், அவனது கனவு நகரம், சூறையாடிய செல்வங்களாலும் அறவிடும் வரிகளாலும் ஓங்கி வளர்ந்தது. அந்த நகரத்திற்கு அலெக்ஸாண்ட்ரியா என்று பெயரிட்டான். அதுவே அலெக்ஸாண்டரின் தலைநகர் என்றும் உலகுக்கு அறிய செய்தான். கவர்ந்து கொண்டுவரப்பட்ட றுக்ஸானா என்னும் அரேபியபெண்ணுடனும் பெரும் செல்வத்துடனும், பெரும் படையுடனும் பெரும்போகத்துடனும் வாழ்வாங்கு வாழ்ந்தான் அலக்ஸாண்டர்.

மூன்று நாள் முன் நடந்த சம்பவம்போன்று இன்று ஆகிவிடுமோ என்று என் மனம் ஐயமுற தொடங்கிவிட்டது.

இரண்டாயிரத்தி ஐநூறில் முப்பதுவீதம் அங்கு போனாலும் எழுபது வீதமும் மூன்றாய் பிரித்தால் ஆளுக்கு ஐந்நூற்றி முப்பத்திமூன்று சொச்சம் கிடைக்கும். பார்ட்டைம் வேலைதான். சீசனுக்கு மட்டுமே கிடைக்கின்ற வேலை. இப்போது சம்பாதித்தால் தான் உண்டு. போனதடவை மருத்துவ நிதி என்று கலக்ஸனுக்கு போன எத்தனையோ பேர் மார்கத்தில் வீடு, நியூமார் கட்டில் நிலம், லெக்ஸஸ், பென்ஸ், ஜக்குவார் என்று மூன்று நான்கு ஜெனரேஷனுக்கு சொத்து சேர்த்துவிடார்கள்.

தலைவரோட நேரடி பிரதி நிதிகளாய் வந்திருக்கிறம். இதுதான் கடைசிமுறை. நீங் கள் எங்களிட்டைதான் தர வேணும் என்றது இல்லை. வன்னிக்கே நீங்கள் நேரடியா அனுப்பலாம்.

எனக்கு இது தான் முதல் சீஸன். உனக்கு அப்படியல்ல. உனக்கு நிரந்தரமாகவே ஒரு சமஸ்தானமே இருக்கிறது. கலக்ஸன் என்று ஒன்று ஆரம்பித்துவிட்டால் உன் காட்டில் காசு மழைதான். உனக்கு என்றுமே குருபார்வை. பதினைந்து வருடங்களாக புல்டைம் வேலையே உனக்கு இதுதான். உனக்கு நிறைய அனுபவம். எந்த இடத்தில் குரலை உயர்த்த வேண்டும். எங்கே பதிக்க வேண்டும். எப்படி சிரிக்க வேண்டும். எப்படி முறைக்க வேண்டும் என்பதில் எல்லாம் நீ ஜித்தன். நான் சும்மா விசுக்கோத்து. நான் கூட பரவாயில்லை. அவன் ஒரு பேய்க்குஞ்சு. ஒரு மண்ணும் தெரியாது சும்மா சும்மா மண்டையை ஆட்டுவதைத்தவிர எதுவும் அவனுக்கு தெரியாது. சும்மா ஒரு ஆள் எண்ணிக்கைக்குத்தான் கூட்டிப்போகிறோம் நாங்கள். இருந்தாலும் எழுபது வீதத்தில் மூன்றில் ஒன்று கொடுத்துவிட வேண்டும்.

சில நேரங்களில் அதிகமாய் வாய் காட்டுகிற ஆக்களிடம் காசு கறப்பதில் போதும் போதும் என்றாகிவிடுகிறது. மூன்றுநாள் முன்பு கூட ஒரு வீட்டின் கதவை தட்டி விட்டு நீதான் முன்னே நிற்கிறாய்.

நமது தோரணை பார்த்ததும் "நாங்கள் மட்டக்களப்பு" என்று விட்டு கதவை மூடிக்கொள்கிறான் அந்த ஆள். உனக்கோ ஆத்திரம். எனக்கோ கமிஷன் கவலை. அவனுக்கு என்ன உணர்ச்சியோ தெரியவில்லை.

நீ அசருவதாய் இல்லை, மீண்டும் கதவு அழைப்பு மணியை அமுக்குகிறாய். மௌனமாய் வெளியே கரைய உள்ளே மணி அடித்துக்கொண்டே இருந்தது நெடு நேரம். நீயும் விடுவதாய் இல்லை. அவர்களும் கதவைத்திறப்பதாய் இல்லை. போருக்கு காசு சேர்ப்பது கனேடிய சட்டப்படி தேசவிரோத செயல் என்று எல்லா இங்லீஷ் பேப்பர் காரங்களும் எழுதிப்போட்டாங்கள். எனக்கோ பயம் வர ஆரம்பித்து விட்டது. உள்ளே போனவன் சட்டத்துறையினருக்கு அழைப்பு விடுத்துவிட்டால்? மட்டக்களப்பானை நம்ப முடியாது. செய்தாலும் செய்வான். என் கவலையை உன்னிடம் மெதுவாய் சொன்னேன். நீயோ ஓர உதட்டால் புன்னகைத்து தலையை ஆட்டினாய். அதன் பொருள் புரியாவிட்டாலும் நான் சமாதானம் அடைந்து கொண்டேன்.

உன் இம்சை அவரை துன்புறுத்தியிருக்க வேண்டும். கதவை அகலத் திறந்தான். "உள்ளே வந்து உங்களோடை கொஞ்சம் கதைக்கலாமோ?" என்கிறாய்.

"உள்ள எல்லாம் வேணும் இஞ்ச வச்சே சொல்லுங்க."

"தலைவரோட நேரடி பிரதி நிதிகளாய் வந்திருக்கிறம். இதுதான் கடைசிமுறை. நீங்கள் எங்களிட்டைதான் தர வேணும் என்றது இல்லை. வன்னிக்கே நீங்கள் நேரடியா அனுப்பலாம். இது ஈழத்தோடை கடைசிப்போர்.' என்று வழக்கம் போல் அதே வார்த்தைகளை மேலும் கீழும் மாறிப் போட்டாலும் பொருள் மாறாது பேசினாய்.


"கடைசிப்போர் என்று எங்களுக்கு கதையெல்லாம் விடாதீங்கோ. 'கடைசிப்போர் ஒன்று' என்று சொல்லுங்கோ." என்ற அந்த மட்டக்களப்பான் சொன்னதும் உனக்கு அடுத்ததாய் என்ன வார்த்தை சொல்வதென்று தடுமாற்றம் எழுகிறது. உன் தடுமாற்றத்தை அவன் தனக்கு சாதகமாக்கிக் கொள்கிறான்.

"கடைசிப்போர் ரெண்டு, கடைசிப்போர் மூன்று என்டெல்லாம் நீங்கள் விதம்விதமாய் எல்லாம் பெயர்வச்சி சண்டை பிடிப்பீங்கள். அதுக்கெல்லாம் எங்களால காசு தர எலாது. அது மட்டுமில்லாம நான் மட்டக்களப்பு." என்று நாம் வார்த்தை பேசமுடியாது மடக்கி அடித்தான். இப்போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காசுதாரமல் தப்பிப்பதற்கு மட்டக்களப்பை ஒரு காரணமாக சொல்கிறார்களோ என்று முதன் முதலாய் உனக்கு சந்தேகம் வருகிறது. அவனை சினேகமாய் பார்க்கிறாய்.

“உங்களுக்கும் சேர்த்துதான் நாங்கள் போறாடுறம்.” என்று அவனை மடக்க முற்பட்ட உன்னை சுரத்தின்றி பார்க்கின்றான். பின்தரையை பார்க்கின்றான். அப்புறமாய் என் பின்னே நிற்கும் அவனை பார்க்கின்றான். நீயோ அவன் அடுத்த தாய் பேசப் போகும் வசனத்துக்கு ஏற்ற வசனம் பேச புலன்களை விழிப்பாய் வைத்திருக்கிறாய். நானோ மிகவும் ஆவலாய் சுவாரஸ்யம் மிக்க நாடகம் ஒன்றின் பார்வையாளனாய் அடுத்த கட்டடத்துக்கு காத்திருக்கிறேன். கணங்கள் குளிர்காற்றில் தோய்ந்து கரைகிறது.

“இந்த ஆறடிக்கு ஆறடியை விட்டுட்டு போய் போராடு. எனக்காக போராட நீயாரு. உன்னட்ட நான் கேட்டனா நீ எனக்காக போராடு எண்டு.” அந்த மட்டக்களப்பனுக்கு சரியான கோபம் வந்திட்டுது. உனக்கோ அவனைக்காட்டிலும் கோபம். ஆனாலும் நீ உன்னை இழக்கவில்லை. நீயோ பொறுமையை மிகவும் கடைப்பிடித்தாய்.

“அண்ணை நீங்கள் இப்படி சொல்லப் படாது. தென் தமிழீழ மக்கள்தான் எப்பவும் சிங்கள ராணுவத்தின்ற நெருக்குவாரத்துக்கும், சிங்கள அரசின்ற ஒதுக்குதலுக்கும் ஆளாகிறது. நாங்கள் யாழ்ப்பாணத்தை அடிச்சிப்பிடிக்கிறதக் காட்டிலும் மட்டக்களப்பை அடிச்சிப்பிடிக்கிறதுதான் முக்கியம். ஏனெண்டால், இந்த ஒட்டுக் குழுக்களின்ற அட்டசாகமும் நெருக்குவாரமும் கூடிப்போச்சுது. எங்களிட்டை தென்தமிழீழ மக்கள் சரியாக விசனப்பட்டவையள்.”

“தென்தமிழீழம், தென்தமிழீழம் என்று சொல்லுறீங்களே. உங்களுக்கு அந்த தமிழீத்தோடை லான்ட் ஸ்கேப்ப பத்தி ஏதாவது தெரியுமா? கஞ்சிகுடி ஆத்தில இருந்து வெருகல் ஆறு வரைக்கும் இருக்கிற நீளப் பிரதேசத்தோட அகலம் எவ்வளவு எண்டு தெரியுமா? முப்பதுக்கும் குறைவான மைல் தான். சண்டை பிடிச்சி நீங்கள் தமிழீழம் பிடிச்சிட்டால் சர்வதேச எல்லை சட்டப்படி முப்பத்தி மூனு மைல்கள் நோமேன் லான்ஸ்க்குள்ளே போயிரும் என்றது உனக்கு தெரியுமா? மட்டக்களப்பான்ற மண் எல்லாம் சூனியப்பிரதேசத்துக்குள்ள போனால் நாங்கள் வாழ்றதுக்குஎங்க போறது.?”

அந்த மட்டக்களப்பான் போன்றே இந்த வீட்டுக்காரர்களும் எடக்கு மடக்காக எதுவும் பேசக்கூடும் என்கின்ற சஞ்சலம் உனக்கு வரவில்லை போலும். ஆனாலும் எனக்கு வந்து விட்டது.

“போர்தான் தீர்வா?” என்னும் அவரின் குரலில் தென்பட்ட அவநம்பிக்கை எனக்கும் அவ நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டது, அவரிடம் இருந்து நமக்கு எதுவும் தேறாது என்று. ஆனால் நீயோ சற்றும் அசரவில்லை.

“மோட்டுச் சிங்களவன் எதுவும் கேட்டால் தரமாட்டான். அடி உதவுறமாதிரி அண்ணன் தம்பி உதவமாட்டான். மயிலே மயிலே எண்டால் சிங்கள மயில் இறகு போடாது... புடுங்கவேணும்...”

‘இருவத்தி ஐஞ்சு வரிசமா புடுங்கிறீங்க தானே. ஒரு மசிரும் வந்த மாதிரி.” துடுக்காய் அந்த குடும்பத்தலைவி சொல்ல அந்த குடும்பத்தலைவன் அவளை வெடுக்கென பார்த்தான். நீயும் நானும் அவனும் கூட அவளை வினோதமாய் பார்த்தோம்.

நீங்கள் எங்கள் மாவீரர்களின்ற தியாகத்தை அவமதிக்கிறீங்கள். எங்களோட தேசியத் தலைவரை நம்பவில்லை. நீங்கள் எல்லாம் துரோகம் செய்யிறீங்கள் எங்கட தமிழீழ மக்களுக்கு. கொஞ்சம் யோசிச்சுப்பாருங்க நீங்கள் இண்டைக்கு கனடாவில இவ்வளவு வசதியா வாழ்றீங்கள் எண்டால் அதுக்கு காரணம் எங்களோடை தலைவர்தான்!” மிகமிக நிதானமாகவும் சற்றே கடுகடுப்பாகவும் நீ பேசுகிறாய். நீ பயிற்றப்பட்டவன். நீ ஜித்தன். நீ மகா சாணக்கியன். உன் கடைசி அஸ்த்திரம் அவர்கள் மனசுக்குள் பாய்ந்தது.

“இப்ப எங்களிட்ட திடீரென இரண்டாயிரத்தி ஐந்நூறு டொலர் எடுக்க முடியாதே.”

“ இருவத்தி ஐஞ்சு வரிசமா புடுங்கிறீங்க தானே. ஒரு மசிரும் வந்த மாதிரி ”

www.tamilarangam.net

“பிரச்சனை இல்லை. நாங்கள் எல்லாவிதமான கிரடிட் கார்ட்டும் எடுத்துதருவம்... பேசனல் லோன், வீட்டின்ர பேரிலையும் லோன் எடுத்துத்தருவம். எங்களுக்கு எல்லா இடத்திலையும் ஆக்கள் இருக்கிறாங்கள். எவ்வளவு எடுத்துத்தாரமோ அதில பத்துவீதம் கழிச்சிப்போட்டுத்தான் தருவம். எத்தின ஆயிரத்துக்கு உங்களுக்கு கிரடிட் வேணும்?”


நெஞ்சை பிடித்துக்கொண்டு சுவர் ஓரமா சாயும் குடும்பதலைவனை தலைவி மார்போடு அணைத்துக் கொள்கிறாள். என்னைப் பார்த்தும், அவனைப்பார்த்தும், புன்னகைக்கிறாய். நானோ என் மனசுக்குள் கூவிச் சத்தமிடுகிறேன். “தலைவர் வாழ்க!”

........ஆனால் அலக்ஸாண்டர் வாழவில்லை. அவனுக்கு மனப்பிறழ்வு நோய் பீடித்து விட்டது. சஹாரா பாலைவனமெங்கும் பைத்தியமாக அலைந்தான். மகனே நீ செய்யும் கொலைகளின் பாவக்கணக்கு உன்னைத் துரத்துமென்று அனது தந்தையார் சாகும்போத சொன்னார். அவன் கொன்ற குழந்தைகளின் ஆன்மா அவனை விரட்டியது. அவன் பாலைவனமெங்கும் ஓடினான். குதிரைகளுடன் போர் பற்றி உரையாடினான். சுடு மணலில் ஒட்டகங்களின் தடம் பார்த்து திசை தேடி தொலைந்து போனான், அலக்ஸான்டர்.

(வரலற்றாசிரியர் மைக்கல் ஜெனிவிஷ் கடைசியாக சொல்கிறார், வரலாறு என்பது திட்டமிட்டு உருவாக்கப்படுவதென்று.)

## 54 கதா பாத்திரங்களும் 642 அடிக்குறிப்புக்களும்.

**வின்சன்ட்**




அண்மையில் பரபரப்பாக யாழ் பல்கலைக் கழகத்துக்கு துணைவேந்தராக முன்மொழியப்பட்டு பலத்த எதிர்ப்புக்ககுள்ளாகி தற்போது இலங்கையைவிட்டு வெளியே தப்பியோடியிருக்கும் ‘ரட்ணயீவன் ∴கூல்’ இனுடைய நூல் ஒன்று தட்டுப்பட்டது.

பல்கலைக் கழகத்திலிருந்து யாழ்ப்பாண மாணவர்கள் பேர்-ஆசிரியர்கள் பலரினாலும் ∴கூல் துரத்தப்பட்டிருக்கிறார். அதற்கு என்ன உண்மையான காரணம் என்பது இந்த நூலில் கிடைக்கிறது. யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேயரின் வருகைக் காலத்தில் மதமாற்றப்பட்டு சமூக நெருக்குவாரங்களிலிருந்து தப்பிய ஒரு ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவராகவே ∴கூல் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார். ஒடுக்கப்பட்ட சாதியினரான மல்லிகை யீவாவிற்கு முனைவர் பட்டத்தை மதிப்பளிக்கும் வகையில் கொடுக்க மறுத்த யாழ் பல்லைக்கழகத்தில் எப்படி ஒடு ஒடுக்கப்பட்ட சரிதியினரான யீவன் ∴கூல் வரமுடியும்? அதை விடவா முடியும்? இதுவே உண்மையான காரணமாக இருந்திருக்க வேண்டும் என்று இந்த நூல் அய்யமெழுப்புகிறது. இதற்கு யாழ் ‘சநாதனிகள்’பதில்தருவார்களா? இது ஒரு நாவலாகவும் அல்லாது வரலாற்று நூலாகவும் அல்லாது இருப்பது அதன் பலமும் பலவீனமும். ‘வால்காவிலிருந்து கங்கை வரை’ எப்படி எம் தமிழ் அறிவு சீவிகளுக்கு பைபிளோ ‘அதே போல’ இதுவும் அமையக்கூடும் - அவர்கள் வாசித்தால். ஆனால் இந்த நாவலை வாசித்தாலும்கூட பல அறிவுசீவிகளும் வெளியில் காட்டிக் கொள்மாட்டார்கள். ஏனென்றால் அதில் உள்ளேயிருப்பது ‘தோண்டியிழுத்து வெளியில் போடபட்டிருக்கும், யாழப்பாண சாதிய ஒடுக்குமுறையின் கோர வாய்க்குள் சிக்கியிருந்த பலியாடுகளான ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்க்கை. அது கொடுக்கும் பிண நாற்றம். அதை வெளியே தற்போது காட்டிக் கொள்ள யார்தான் விரும்புவார்கள். ∴கூல்க்கு ஆதரவாகவும் எதிராகவும் வந்த அண்மைய சொல்லாடல்கள் எதிலும் இந்த நூல் பற்றிய குறிப்புக்கூட இடம்பெறாது போனதற்கு இதைத்தவிர வேறு காரணம் என்னவாக இருக்கமுடியும்?

பல நிகழ்வுகள்-கதைப்பின்னல்கள் எஸ்.பொவையும் டானியலையும் அவர் படித்திருப்பாரோ என்பதை கேள்வியாக வைக்கின்றன. அவருடைய சான்று நூல்களில் அந்நூல்கள் இல்லை.

ஆனால் ∴கூல் இடம் இருக்கும் பார்வை, இன்றைக்கான வரலாற்றியல், பண்பாட்டியல், சமூகவியல் மற்றும் மொழியில் அடுக்குகளிலிருந்து கட்டமைக்கப்படாது(அப்படியொரு கட்டாயம் இல்லையாயினும்) தான்தோன்றித்தனமாக இருப்பது அவருக்கு சமூக அறிவியல்துறையில் பட்டறிவின்மை இருப்பதையே சுட்டுகின்றது. 54 கதாபாத்திரங்களுடனும் 642 அடிக்குறிப்புக்களுடனும் குழறுபடியாக இருந்தாலும் வாசித்துப் பார்க்கவேண்டிய நூல்.

The Exile Returned
A self portrait of the Tamil vellahlahs of Jaffna, Sri Lanka.
Aruvi publishers Colombo.1997.
S.Ratnajeevan H.Holole.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நமக்கு சிக்கலுக்குரியதாகி விடுகிறது. இந்த வித்தியாசங்களை விளங்கிக் கொள்ளும் மனதில் இருந்து நாங்கள் விவாதிக்கத் தொடங்க வேண்டும். இந்த வகையில் எனது புரிதல் முறையில், எனது கிராமத்திலும் வேறு வேறு இடங்களில் அறிந்ததையும் பதிவாக்குகிறேன். இவை வெறும் சம்பவங்கள்.

எனது தங்கையின் சினேகிதி. 15 வயதுடையவள். எங்கள் பாடசாலை ஆசிரியன் ஒருவனால் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டாள். தனியார் நிறுவனங்களில் பாடசாலை தொடங்க முன் (6-8வரை) வகுப்புகள் நடைபெறும். அன்றும் இந்த மாணவி வகுப்பிற்கு முதலாவது ஆளாக போயிருக்கிறாள். அங்கு ஆசிரியன் மட்டுமே இருந்தான். அவன் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அந்தப்பிள்ளையின் அருகில் சென்று கதைத்துக் கொண்டு அவளின் கையைப் பிடித்து இழுக்க முயன்றிருக்கிறான். அந்த மாணவி பெரிதாக கத்தி குழற, வகுப்பிற்கு வந்து கொண்டிருந்த பிள்ளைகளும் சத்தம் கேட்டு ஓடிவந்து பார்த்தனர். உடனே ஆசிரியனும் ஒன்றும் தெரியாத மாதிரி தள்ளி நின்றுவிட்டான். அந்தப் பிள்ளைக்கு என்ன செய்வதென்று தெரியாமல் பயமும் பதட்டத்துடனும் அழுது கொண்டே இருந்தாள். பின்பு நடந்தவற்றை தனது தோழிகளிடம் சொல்லி அழுதாள்.

# அனுபவம் பகிர்வு எதிர்வுறல்.

அதீதா

சிறுமிகளில் இருந்து முதிய பெண்கள் வரை கொலை, தற்கொலை, பாலியல்வன்முறை போன்றவற்றிற்கு ஆளாகி வருகிறார்கள். இந்நிலையானது பெண்களை, அவர்களின் வளர்ச்சி வேகத்தை அடக்குவதற்கும் ஒடுக்குவதற்குமான உத்திகளாகின்றது. அதுவும் யுத்த காலங்களிலேயே அதிகூடிய பெண்கள் பாலியல் துன்புறுத்தல், பாலியல் பலாத்காரம் போன்றவற்றிற்கு உட்படுத்தப்படுவதுடன் மிகுந்த மன உளைச்சலுக்குட்பட்டு தற்கொலையை நோக்கி தள்ளப்படுகிறார்கள். இந்தக்காலகட்டத்திலேயே தற்கொலைகள் அதிகமாக நிகழ்கின்றது என்பதை ஆய்வுகளும் தெரியப்படுத்துகிறது. பெண்களுக்கான அநியாயங்கள், கொடுமைகள், அடக்குமுறைகள் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்தாலும் இன்றைய காலகட்டத்தில் மிகவும் உச்ச நிலையை அடைந்துள்ளமை எம்மை பயம் கொள்ள வைக்கிறது.

பெண்கள் எப்போதும் கற்புடன் களங்கமற்று இருக்கவேண்டும் என ஆண்களால் திணிக்கப்பட்டவர்கள். துன்புறுத்தலுக்குள்ளாகிய பெண்களின் மனதில், பயம், பலவீனம், அழியாத வடு போன்றவை ஏற்பட்டு, மேற்கூறிய ஆண்களின் சமூக ஒடுக்குமுறைகளினால் மனஉளைச்சல் ஏற்பட்டு தற்கொலை செய்து கொண்ட பெண்களின் தொகை அண்மைக்காலங்களில் அதிகரித்து வருவதை நாம் கேள்விப்பட்டு வருகிறோம். இவை குறித்து நாம் எங்கே அக்கறை கொள்கிறோம் என நம்மில் பலர் யோசிக்கிறார்கள். உண்மை. நாம் அக்கறை கொள்ள வேண்டும். ஆனால்,

பெண்களுக்கு இதுமாதிரியான பிரச்சனைகள் பொதுவாக இருந்தாலும் எல்லாப் பெண்களுக்கும் ஒரேமாதிரியான பிரச்சனை, விளங்கும் முறை என்பது இருக்கின்றது என்று நாம் நம்பிக்கொண்டு இருப்பது

இப்படியே சம்பவம் வகுப்பில் இருந்த அனைவருக்கும் தெரிய வந்தது. அவளால் தொடர்ந்து வகுப்பில் இருக்க முடியவில்லை. வகுப்பைவிட்டு வெளியே வந்து பாடசாலைக்கும் செல்லாமல் வீட்டிற்கே போனாள். வீட்டினுள் போனதும் தாயைக் கட்டிப்பிடித்து கத்தினாள். தாய் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் அவளால் சாதாரணமாக முடியவில்லை. வீட்டின் அறையிற்குள் சென்று கதவைப் பூட்டிவிட்டு அழுதாள். பின் எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாமல் தவித்தாள். தனக்கு நடந்த இச்சம்பவம் பாடசாலை முழுவதும் பரவியிருக்கும். ஆசிரியர்கள்,மாணவர்கள் எல்லோரும் ஒரு மாதிரியாகக் கதைப்பார்கள். என்னை இனி ஒரு மாதிரிப் பார்ப்பார்கள். அல்லது என்னில்தான் ஏதும் பிழை இருக்கும் என்று கதைப்பார்கள். மாறி மாறி குழப்பங்கள் வர குழப்பத்திற்குள்ளேயே இருந்தவள் திடீரென்று எழும்பி வெளியே வந்து பெற்றோர் சகோதரர்களிடம் பள்ளிக்கூடம் போட்டுவாறேன் என்று சொல்லிவிட்டு புலிகள் இயக்கத்தின் பெண்கள் முகாமிற்கு சென்றுவிட்டாள்.

பெற்றோர்கள் இரவுவரை வீட்டிற்கு வராத மகளை தேடினார்கள். அவள் புலிகள் இயக்கத்தில் போய் இணைந்துவிட்டாள். புலிகளின் முகாமிற்கு சென்று மகளை திரும்பி வரும்படி கேட்க, அவள் வர மறுத்துவிட்டாள். பின்பு புலிகளின் கரும்புலி படைப்பிரிவில் சேர்ந்து இரண்டு வருடத்தின் பின் மரணித்தும் விட்டாள். ஆனால் இங்கே அவளை சாவடித்தவர்கள் யார்? இந்தக் கேள்விக்கு விடை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருமாதிரியுண்டு. ஆசிரியனோ இன்றைக்கும் வாழ்ந்துகொண்டிருக்கிறான். சீதனம் வாங்கி திருமணம் செய்து தனது சகோதரிகளுக்கு சீதனம் கொடுத்து திருமணம் செய்து வைத்து குடும்பத்துடன் வெளிநாட்டில் வசிக்கிறான்.

இந்த ஒரு சம்பவத்தை நான் இவ்வளவு விபரமாக எழுதியதற்கான காரணம் என்னுடன் பழகும் நிறையப் பெண்கள் இப்படியான சம்பவங்கள் குறித்து ஏன் பேசவேண்டும் என்றே நினைக்கிறார்கள் அல்லது அவற்றை மறைக்க முயலுகிறார்கள். அதைவிட எனக்கு அந்தப் பெண்ணைத் தனிப்படத் தெரியும் என்பதுவும் இன்னொரு காரணம். இதே சம்பவத்தை இலங்கையின் வேறு பகுதியில் உள்ளவர்களுக்கு அல்லது வெளிநாடுகளில் வசிப்போருக்கு சொல்ல முற்படும் போது அவர்களால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கும். விளங்கிக் கொள்ள

www.tamilarangam.net

கஸ்டமாக இருக்கலாம். இங்கே தற்கொலை மனம் பாவிக்கப்பட்ட விதம் குறித்து எதுவித கேள்விகளும் இவர்களிடம் இல்லை.

இரண்டாவது:

இந்த சம்பவமும் எனது கிராமத்துப் பெண்ணிற்கே நடந்த பயங்கரமான பாலியல் வன்முறை- மரணம். அங்குள்ள ஒருவனால் காதலிப்பதாக சொல்லி நெருங்கிப் பழகி பாலியல் உறவு கொண்டு, பின் கைவிடப்பட்டாள்.

குறிப்பிட்ட பெண்ணின் தமையனுக்கு திருமணம் நடந்து முடிந்து சிலநாட்களின் பின் அவர்களின் வீட்டில் சீதனமாக வந்த நகைகள் காசுகள் எல்லாம் களவு போய்விட்டது. களவு பற்றி அந்தப் பெண்ணின் தமையன் புலிகளிடம் முறைப்பாடு செய்தார். தனக்கு சந்தேகமானவனின் பெயரையும் கூறினார். அவன் இதைக் கேள்விப்பட்டு தனது பெயரை புலிகளிடம் சொன்னதாலும் கிராமம் முழுவதும் தான்தான் களவு எடுத்தது என்பது தெரிய வந்ததாலும் கோபங்கொண்டவன் தனது கோபத்தை தீர்க்க களவு கொடுத்தவரின் தங்கையான இந்தப் பெண்ணை ஏமாற்றிவிட்டான்.

அவளுக்கு பின்னால் சிறிது காலங்கள் திரிந்து அவளின் மனதை கலைத்து, அவள் எவ்வளவோ மறுத்தும் தொடர்ந்தும் முயற்சித்து தன்னை விரும்பப் பண்ணினான். தொடர்ந்தும் விடாமல் காதலிப்பதாக நடித்தான். அவளும் முழுதாக அவனை நம்பத் தொடங்க அவனும் அவளை இணங்க வைத்து உறவு கொண்டான். எப்படியும் திருமணம் நடக்கப்போகிறதுதானே என பயப்படாமல் தைரியமாக இருந்தாள். ஆனால் அவனோ தனது ஆண்தனத்தை காட்டத் தொடங்கினான். எனக்கும் உனக்கும் என்ன பொருத்தம்? ஏணி வைத்தாலும் எட்டாது. வீணாக என்னை நினைத்து கனவுகாணாதே. நான் உன்னை திருமணம் செய்ய மாட்டேன். உனது அண்ணன் என்னைக் காட்டிக் கொடுத்ததற்காகத்தான் இப்படி பழகி உன்னை ஏமாற்றி உனது அண்ணனை பழிவாங்கினேன், என்று மிகவும் சாதரணமாக கூறிவிட்டு நாட்டைவிட்டு வெளிக்கிட்டு வெளிநாட்டு மாப்பிள்ளையாகிவிட்டான், அந்தக் கிராமமே அவளை ஒதுக்கியது. அவள் எதிர்பார்த்த எல்லாமே இல்லாமல் போனது. வாழ்க்கையே வெறுமையாக நினைக்க வைத்தது. இனி ஏன் நான் வாழவேண்டும்? அந்த நினைப்புடனேயே புலிகள் இயக்கத்தில் சேர்ந்து பின் கடற்புலியாகி மரணித்து விட்டாள். ஏன் அவள் அப்படி போய்ச்சாக வேண்டும் என ஒரு கேள்வி எழலாம். ஆனால் அவளது இருப்பு ஒரு இறுக்கமான பின் தங்கிய கிராமச் சூழல் என்பதால் திரும்பவும் புதிய ஒரு வாழ்வை வாழவிடாது. அதுவும் ஆண்சமூகம் அப்படியே நசுக்கிவிடும்.

இங்கே நான் சொன்ன விடையம் பொதுவாக எல்லாப் பெண்களுக்கும் இருக்கின்ற ஏமாற்றம் நம்பிக்கையிழப்புக் குறித்த விடையம் என்றாலும் இன்று யுத்தசூழல் குறித்த முடிவு, ஆதரவற்ற நிலை என்பன இந்தப் பிரதேசப் பெண்களை அதிகம் பாதிக்கிறது. வசதிபடைத்த யாழ்ப்பாணத்து பெண்கள் எப்படியாவது வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுவிடுவார்கள். ஆனால் வன்னி மட்டக்களப்புப் பெண்கள் யுத்தத்திற்குள் தம்மை அழித்துக் கொண்டு விடுகிறார்கள்.

அடுத்து, எங்கள் கிராமத்தையே மிகவும் பயத்தில் உறைய வைத்த ஒரு கொலைச்சம்பவம்:-

எனது நண்பிக்கு நடந்தது. என்னுடன் ஒன்றாக படித்தவள். உடற்பயிற்சி ஆசிரியரின் மகள். விளையாட்டுத்துறையில் மிகவும் ஈடுபாடுடையவள். எனக்கும் அவளுக்கும் தனியார் கல்வி நிறுவனத்திலும் பாடசாலைவிளையாட்டுப் போட்டிகளிலும் வட்டார, மாவட்ட விளையாட்டுப்போட்டிகளிலும் நிறையவே போட்டிகள் வரும். ஆனாலும் நானும் அவளும் ஒற்றுமையான நண்பிகள். அவளிற்கு இன்னும் ஒரு சகோதரி. ஆண் சகோதரர்கள் இல்லை. அதனால் அவளது தகப்பன் பாடசாலையில் எல்லோருக்கும் கூறுவார்:- "எனக்கு ஆண் பிள்ளை இல்லை என்று முன்பு கவலைப்பட்டனான். ஆனால் இப்ப கவலை இல்லை. நான் எனது மகளை ஆண்பிள்ளை மாதிரியே வளர்க்கிறேன், அவளும் அப்படியாகவே வளருகிறாள்" என்று அடிக்கடி சொல்லுவார்.எருது பூட்டி உழுவாள். நெல் விதைப்பாள். எல்லோருடனும் கள்ளங்கபடமற்றுப் பழகுவாள். பயம் என்றால் என்னவென்றே தெரியாத ஒரு துணிந்த பெண். இந்தியன் ஆமியின் வருகை அவளின் வாழ்வை அழித்தது. இந்திய இராணுவம் எங்கள் கிராமத்திற்கு வந்து கொண்டிருக்க அவர்களை கொக்கோ கோலாவும் இளநீரும்...... எல்லாமும் கொடுத்து சந்தியில் நின்று கை கொடுத்து வருக வருக என வரவேற்றவர்கள் புலிகள். இந்திய இராணுவம் கிராமத்தின் பல முக்கியமான இடங்களில் முகாம்கள் அமைத்து இருந்தனர். அதில் ஒரு முகாம் எனது நண்பியின் வீட்டிற்கு அருகில் இருந்தது. அது அவளை நிறையவே பாதித்தது. எந்நேரமும் எதையாவது துடிதுடிப்புடன் செய்துகொண்டிருக்கும் அவளை இந்திய இராணுவத்தினருக்கும் பிடித்தது. அவளுடன் கதைத்தார்கள், அன்பாகப் பழகினார்கள். அவளும் எதுவித எண்ணங்களுமில்லாமல் பழகினாள். காலையில் வெளியில் போகும் போதும் திரும்பி வரும்போதும் அவர்களை காணாமல் வீட்டிற்குள் வரமுடியாது. ஏனெனில் அவர்களின் முகாமை கடந்துதான் அவள் வீட்டிற்கே வரவேண்டும். சும்மா ஓப்புக்காவெனினும் Morning என்று சொல்ல வேண்டிய ஒரு கட்டாய சூழலில் இருந்தாள் அவள். இல்லாவிட்டால் இராணுவத்தினரால் அவளுக்கும் அவளது குடும்பத்தவர்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுவிடும்.

இதை, அல்லது அவள் இராணுவத்துடன் பழகியதை விடுதலைப்புலிகள் அவள் இராணுவ கப்டன் ஒருவனை விரும்புகிறாள் என கூறினர். பின்னர் அவள் பாடசாலை வரும் சமயம் அவளை பிடித்து தங்கள் காட்டிற்குள் இருக்கும் ஒரு முகாமில் ஒரு கிழமை அளவில் வைத்திருந்தனர். இதை அறிந்த அந்தக் கப்டனே அவளது தகப்பனிடம் போய் எனக்கு 45வயது. எனக்கு அவள் மகள் போல். அந்த அன்புதான் எனக்கு இருந்தது. எனக்கு திருமணமாகி குழந்தைகளும் இருக்கிறார்கள் என தன் நிலமையை விபரமாக விளங்கப்படுத்தினான். இதை புலிகளிடம் சொல்லும்படி அவளின் தகப்பனிடம் சொன்னான். அவரும் புலிகளிடம் சொன்னார். அதைவிட மாணவர்களாகிய நாங்கள் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர் மற்றும் பொது மக்கள் எல்லோரும் சேர்ந்து ஊர்வலம் நடத்தினோம், புலிகளின் பொறுப்பாளனிடம் அதிபர் ஆசிரியர்கள் பேசிப்பார்த்தார்கள், ஆனால் எதையுமே புலிகள் ஏற்கவில்லை, ஆனாலும் அவளைப் பிடித்ததற்கான சரியான ஒரு காரணத்தைத்தன்னிலும் அவர்கள் நிறுவவில்லை. பின்பு மாணவர்கள் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை செய்து (அதில் அவளை விடுதலை செய்யுமாறும் அவள் உண்மையாக செய்த குற்றம் என்ன என்றும் கேட்டு நாங்கள் எல்லோரும் கையெழுத்திட்டு துண்டுப்பிரசுரம் ஒன்றை புலிகளிடம் சமர்ப்பித்தோம். அதற்கு எந்த விதமான பதிலும் அவர்கள் தரவில்லை. அவளின் தகப்பன் தான் ஒரு தடவை மகளைப் பார்க்கப் போவதாக கேட்டதற்கும் பார்க்கவிடவில்லை. உங்கள் மகள் ஒரு துரோகி, ஒரு இந்திய இராணுவ காப்டனை விரும்புகிறாள், என்று கூறினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தகப்பனும் அதற்கான ஆதாரங்களை காட்டுங்கள் என கேட்டதற்கு ஒரு கடிதத்தை காட்டியுள்ளார்கள். அவர் அதைப் பார்த்துவிட்டு எனது மகளின் கையெழுத்து எனக்கு நன்றாகத் தெரியும். இது எனது மகளின் கையெழுத்து இல்லை என வாதாடினார். பின் இதைப்பற்றி காட்டிக் கதைக்க எனது மகளைக்காட்டுங்கள் என்று எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் அவர்கள் காட்டவில்லை.

அடுத்த நாள் பாடசாலையில் நாங்கள் இடைவேளை நேரம் விளையாடிக் கொண்டிருக்கும் போது ஒரு ரக்ரரில் அவளை, (கறுப்புத் துணியினால் கண்ணைக் கட்டியபடி) 5,6 ஆண்- பெண் புலிகள் இயக்கத்தினர் கூட்டிச்சென்றனர். நாங்கள் எல்லோரும் பார்த்ததை எங்கள் வகுப்பு ஆசிரியர்களிடம் போய் சொல்லிக் கொண்டிருக்க அசிரியர்கள் எல்லோரும் உடனே ஒன்று கூடி அவளைக் கூட்டிக் கொண்டு போகிறார்கள். அப்படியென்றால் அவளை அவளின் வீட்டிலோ அல்லது அவள் படிக்கும் பாடசாலையிலோ (அவள் படிப்பது நான் படிக்கும் பாடசாலைக்கு அருகில் உள்ள இன்னொரு பாடசாலை) விடப்போகிறார்கள், இன்று பின்னேரம் மாஸ்டர் வீட்டை போய்ப் பார்ப்போம் என்று கதைத்துக்கொண்டிருக்க சந்தியில் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. உடனேயே சந்தியிலிருந்து வந்தவர்கள், அவளைச் சுட்டுவிட்டான்கள் என்று சொன்னார்கள். நாங்கள் எல்லோரும் போய்ப் பார்க்க சந்தியில் உள்ள புளியமரம் ஒன்றில் கைகள் இரண்டும் பின்னிற்கு சேர்த்து மரத்துடன் கட்டியபடியும் கண்கள் கறுப்பு துணியினால் கட்டியபடியும் நெஞ்சில் துரோகி என்ற வாசகத்துடன் ஒருமட்டையுடனும் நின்றபடியே இறந்துகிடந்தாள். புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கிராமம் என்பதால் எவருமே எதுவுமே கதைக்க முடியவில்லை. அந்த இடத்தில் குழுமி நின்றவர்கள் எல்லோரும் மௌனமாகவே திரும்பினர். தகப்பனும் இன்னும் ஒரு சிலரும் சேர்ந்து அவளின் உடலை எடுத்து வீட்டிற்கு சென்றனர்.

முகாமில் இருக்கும் போது அவளுக்கு எவ்வகையான துன்புறுத்தல்கள், வன்முறைகள் நடந்தன என்பது எவருக்குமே தெரியாது. ஆனாலும் அவளின் இறுதி சடங்கிற்கு சென்றிருந்த போது அவளின் உடலில் காய்ந்த இரத்தக் கறைகளும் காயங்களும் அடையாளம் காட்டியது. பின்பு தனியார் கல்வி நிறுவனத்தில் வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது புலிகள் வந்து கூட்டம் வைத்தார்கள். அவளை சுட்டதற்கான நியாயங்களை கூறினார்கள். நாங்களும் அவள் எழுதிய கடிதத்தை காட்டும்படி கேட்டோம். அதற்கு அவர்கள் ஒருகடிதத்தின் கையெழுத்துப் பிரதி ஒன்றைக் காட்டினார்கள். நாங்கள் இதை நம்ப முடியாது. இதில் எதுவுமே தெளிவாகத் தெரியவில்லை, நீங்கள் ஒரிஜினல் பிரதியை காட்டுங்கள் என்று கேட்டதற்கு அது தலைவருக்கு அனுப்பிவிட்டோம் என்று கூறினார்கள். நாங்கள் சொல்வதைக் கேட்டோம். அவ்வளவுதான்.

இது மாதிரிக் கதைகளைப் பதிவாக்கியதன் மூலம் நான் எல்லாவற்றையும் பார்க்கவில்லை என்று பெண்களாலேயே குற்றம் சாட்டப்பட்டிருக்கிறேன். இதுவே உண்மை. இதேபோல் யாழ்ப்பாணத்திலும் படுகொலைகள், தற்கொலைகள், பாலியல் வன்முறைகள், பெண்கள் கடத்தல்கள், சிறுமிகள் பாலியல் துன்புறுத்தல்கள் போன்ற சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. அவைபற்றி எல்லாம் நிறையப் பத்திரிகைகள், வானொலிகள் மனிதஉரிமைகள் அமைப்புகள், மற்றும் இலக்கியவாதிகள், அரசியல்வாதிகள் என பலபக்கத்தாலும் பேசப்பட்டன. இன்றும் பேசப்படுகின்றன. பதிவாக்கப்பட்டும் இருக்கின்றன.

கனடாவிலும் இதே வகைப்பட்ட நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இங்குள்ள எங்களில் அநேகர் இவைகுறித்து அமமானமான நிகழ்வு. ஒரு புதினம் என்பதற்கு மீறி யோசித்தவர்களாகத் தெரியவில்லை. சாமினி என்ற பெண் ஒரு ஆணினால் வேலை எடுத்துத் தருவதாக கூறி ஏமாற்றப்பட்டு பாலியல்வன் முறைக்குட்பட்டு கொலை செய்யப்பட்டார் என்று சொல்லப்படுகிறது. ஒரு பெண் மன உளைச்சலினால் தனது பிள்ளைகளை காரினுள் வைத்து மூடி சாகடித்து தானும் சாக முறப்பட அதற்குள் அவர் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று பின்பு வெளியில் வந்து திரும்பவும் தற்கொலை செய்துவிட்டார்? இதே போல் மிகவும் அண்மையில் ஒரு சம்பவம் நிகழ்ந்துள்ளது. மிகவும் கவலைக்குரியதும் அதைவிட பெண்கள் எவ்வளவு கொடுமையான மன அவஸ்தைக்கு ஆளாகிறார்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்ற உண்மையையும் அறிய வைக்கிறது. தனது 6மாதக் குழந்தை யையும் 2வயதுக் குழந்தையையும் தண்ணீருக்குள் அமிழ்த்தி கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்ய முயற்சிக்க அதற்குள் அவரது குடும்பத்தவர்கள் காப்பாற்றிவிட்டார்கள். நீருக்குள் அமிழ்த்தி கொலை செய்யும் கொடூரமான மனநிலைக்கு தள்ளப்பட்டுள்ளாள் அந்தப் பெண். சுயமாகவே தனது பிள்ளைகளை கொன்றுள்ளார், வேறு எவரும் அதற்கு காரணம் இல்லை என்று பொலிஸ் அறிக்கை கூறுகிறது. ஏன் அவள் அப்படி செய்தாள்? அல்லது அந்த நிலை அவளுக்கு வருவதற்குரிய காரணம் என்ன? என்ற கேள்விகள் எம்முள் எழுகிறது. தற்போது அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்தப் பெண்ணினது கொலை மனம் குறித்து விவாதிக்க நமது சமூகம் தயாரில்லை. கணவனோடு பிரச்சனை குடும்பத்திற்குள் சிக்கல் என்பதற்கு தனது குழந்தையைப் பலியாக்கல் என்பதன் கொடூர வன்முறை குறித்தே நாங்கள் பேசவேண்டும். இந்தப் பெண் வெளியில் வந்து பழைய நிலமைக்கு திரும்பி வாழ எங்கள் சமூகம் இடம் கொடுக்குமா? கொடுஞ் சொற்களாலும் அவமானப்படுத்தியும் அனுதாபம் காட்டியும் எப்படியாவது தற்கொலைக்கு தூண்டிவிடும் என்று நாம் யோசிப்பதைவிட அந்தபடுகொலை தற்கொலை போன்றவற்றிற்கு நாம் எவ்வகையில் துணையாகிப் போனோம் என்பது குறித்து பேசவேண்டும். இந்தத் தவறுகள் புலம்பெயர்ந்த நாடுகளில் மட்டும் நிகழ்வதில்லை. எனது கிராமத்தில் நாலு பிள்ளைகளைத் தூக்கிக் கிணற்றுக்குள் போட்டுவிட்டு தானும் குதித்து மரணமான சம்பவம் ஒன்று நடந்தது பற்றி முதலில் எழுதியிருக்கிறேன்.

இப்போது நான்மேலே சொன்ன சம்பவங்களுடாக நாம் ஒரு உரையாடலைத் தொடங்க வேண்டும். மாவீரங்களுக்குள் மறைந்து போன எமது பெண்களின் தற்கொலை மனம் பேசப்படவேண்டும். படுகொலைக்குள் மறைந்து போன நமது பெண்களின் மாவீரம் பேசப்படவேண்டும்.

❑

www.tamilarangam.net

# மையவாதத்தைக் கோட்பாட்டு ரீதியாக அணுகுதல்

வின்சன்ட்

மையவாதம் மற்றும் இனமையவாதம் என்பன பரவலாக அறியப்பட்ட சொற்கள். குறிப்பாகத் தமிழ் விமரிசனங்கள் திறனாய்வுகளில் இவை அதிகளவாகவே இடம்பெறும். இன மையவாதம் என்பதை இதை இந்த எழுத்துக்கள் முறையாகப் பயன்படுத்துகின்றனவா, என்பதை நாம் கேள்விக்கு உள்ளாக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இனமையவாதம், மையவாதம் என்ற சொற்கள் பயன்படுத்தப் படுவதும் ஒரு வகையில் இனமையவாத றையுடன்தான் என்பதையும் காணமுடியும். இது கட்டவிழ்ப்பு முறையின் உள்ளீடு போன்றது. கட்டவிழ்ப்பில் ஒரு பாடம் தனக்கு எதிரான நிலையைக் கட்மைக்கிறது என்பது போல வேதான் இதையும் பார்க்க வேண்டும். அது எவ்வாறு என்பதை இந்தக் கட்டுரையில் பார்க்க முயற்சிக்கலாம். இன மையவாதம் என்றால் என்ன? இந்தக் கேள்விக்கான பதிலா கவும் இந்தக் கட்டுரையைப் பார்க்கலாம்.

ஒரு இன வரைவியலாளருக்கும் எனக்கும் ஏற்பட்ட இரண்டு பட்டறிவு நிகழ்வுகளை இங்கு சொல்வது இந்தக் கட்டுரையின் நோக்கத்துக்கு மிகப் பொருத தமாக அமையும் என எண்ணு கிறேன்.

முதலாவது, கென் பார்கெர் (Barger 2006) என்ற இந்தியா னாபோலிசு பல்கலைக்கழக மானிடவியலாளரது. அவர் இன்னுயிற் மக்களிடம் தனது பட்டறிவைப் பின்வருமாறு விளக்குகிறார். கனடாவின் ∴ கட்சன் பேயில் உள்ள இன்னு யிற் மக்களின் குடியிருப்பில் அவர்களுடன் நாட்களைச் செலவிட வேண்டியிருந்தது. இப்படிச் செய்வது பொதுவாக மானிடவியல் ஆய்வு செய்கின்றவர்களின், அவர்களது கல்வியின் ஒரு பகுதிப் பணியாகும். அது நத்தார் நாள். இனுயிற் மக்களிடம் அங்கிருந்த ஆற்றின் குறுக்காக பனிக்கட்டியின் மீது மரபான பனிச்சறுக்க போட்டி நடக்கவிருந்த. அம்மக்கள் பார்கரையும் பங்கேற்கச் சொன்னார்கள். அவர் மறுத்து வந்தார். இவருக்கு எவ்வித மரபான பனிச்சறுக்கு முறையில் பட்டறிவும் இல்லை என்பதே இதற்கு காரணம். ஆனால் இனுயிற் மக்கள் விடவில்லை. இறுதியில் வேறு வழியில்லாமல் அதில் அவர் கலந்துகொண்டார். போட்டியில் எதிர்பார்த்தது போலவே அவர் கடைசியாகவும் வெகு நேரத்திற்கு பின்னும் முடிவிடத்துக்கு வந்து சேர்ந்தார்.

இங்கு வெற்றிக்கு கொஞ்சம் கூட அருகில் அவர் இல்லை. ஆனால் அனைத்து மக்களும் அந்தக் குழுமத்திலிருந்து வந்து அவரைச் சூழ்ந்தபடி அவரை வாழ்த்தினர். எதற்காக ? அவரது பங்களிப்புக்காக. அவரது முயற்சிக் காக. வெற்றி என்பதை ஒரே நோக்காகக் கொண்ட அவரது அமெ ரிக்க - மேற்கத்திய மனோ நிலைக் குப் பலத்த அடி விழுந்தது. 'நீங்கள் நல்லாய் முயற்சி செய்தீர்கள்' என்பதே இன்னுயிற் மக்களின் வாழ்த்தாக இருந்தது. அந்தப் பண்பாட்டினரின் முயற்சிக்கான வாழ்த்தின் பலன் அவருக்குச் சில நாட்களின்பின் நேரடியாகத் தெரிந்தது.

ஒரு மாதத்தின்பின் மூன்று இன்னுயிற் மக்களுடன் கரிபு வேட்டைப் பயணத்தில் அவர் பங்கேற்க வேண்டி வந்தது. அந்த நேரத்தில் பனிப்பு யலில் சிக்கிப் பல நாட்கள் உண வின்றி இருக்கும் நிலை ஏற்பட்டது. அவர்கள் உயிர் தப்புவர்களா என்பது அந்த மூவருக்கும் தெரியாத நிலை. இம்மாதிரி நிலைகளில் ஒரு முயற்சி என்பது வெற்றி தருமா என்பது தெரியாத நிலையில், அதைத் தொடர வேண்டியதாக இருக்கிறது. இப்படிப் பட்ட வாழ்க்கைச் சூழ்நிலையின் தேவை அவர்களை, இனுயிற் மக் களை முயற்சி செய்து பார்த்தல் என்பதை மட்டும் முன்னிலைப் படுத்தும் வாழ்வாக இருக்கிறது.

**மையவாதம் அற்ற மனிதரை நான் பார்த்ததில்லை. அது சாத்தியமும் அல்ல. ஆனால் மைய வாதத்தின் அளவுகள் - பரிமணங்கள் நாசிசம் எவ்வாறு ஒரு இன மையவாதத்திலிருந்து உருவாகியதோ, அது போல பிற ஏதோவொரு வடிவங்கள் உருவாகக் காரணமாகலாம்.**

www.tamilarangam.net

வெற்றி என்பதும் அதன் பலன் என்பதும் அந்த முயற்சியில் முன்நிலைப் படுத்தப்படுவதில்லை.

இரண்டாவதாக, என்னுடைய பட்டறிவு இவ்வாறு இருந்தது. தமிழகத்தில் ஒரு ஊரில் நண்பரைப் பார்க்கச் சென்றிருந்தேன். அவர்கள் ஊரின் பெரிய ஒரு விழா ஒன்று நடந்து கொண்டிருந்தது. அங்கு இரவு தங்கவேண்டியிருந்து. அந்த மாலையில் ஒரு சிறிய குறிச்சிக்குரிய தெருவில் சில கலை நிகழ்ச்சிகள் நடந்தன. அதில் சிறிய நாடகங்கள் மற்றும் பாடல் போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளில் புள்ளிகள் வழங்க தீர்ப்பிட என்னையும் கொண்டு போய் இருத்தினார்கள். போட்டி முடிந்த மறுநாள் காலையில் நண்பரின் வீட்டில் நண்பர் அவரது தாயார், அக்காள், மற்றும் நண்பரின் மற்றொரு நண்பர், அவரும் என்னுடன் படிப்பவர் அனைவரும் சூழ்ந்து நின்று கொண்டு என்னிடம் கதைத்தார்கள். 'நீ அப்படிச் செய்திருக்கக் கூடாது. கொஞ்சம் அதிகம் புள்ளிகளைப் போட்டு பாடல் போட்டியில் பங்கேற்ற நண்பனையும், நண்பரின் குழுமத்திற்கு சார்பான நாடகக் குழுவையும் முதலிடத்தில் வைத்திருக்க வேண்டும். அந்தக் குறிச்சியில் இருக்கும் மற்றுமொரு குழுவின் ஆதரவு மனப்பான்மையில் இருக்கும் மற்றொரு நடுவர்தான் புள்ளிகளை அதிகம் அவர்களுக்கு போட்டுவிட்டார்' என்றவாறு கதைகள் தொடர்ந்தன. எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. இடையிடையில் ஓரிரு கதைகள் சொல்லிச் சமாளித்துக் கொண்டிருந்தேன்.

இந்தக் கதைகளில் ஒரு இடத்தில் "இவனுகள் தங்கையையும் தயாரையும் கூட்டிக் கொடுப்பார்கள். என்ன மனிசராய் இருக்கிறார்கள்" என்பதாகச் சொல்லப்பட்டது. நான் புள்ளிகள் சார்பாகப் போடவில்லை என்பதற்குத்தான் இந்த வசை என்பது விளங்கிவிட்டது. நல்ல வேளையாக நண்பன் அவ்வளவு கடும்போக்குக்காரனல்ல. அதனால் தப்பித்தேன். இதில் எது சரி என்பது எனக்கு இன்று வரை புரிவதில்லை. எனக்கு... எனக்கு என்னும் இந்த மன நிலையின் எல்லை எது என்பதும் புரிவதில்லை. ஒவ்வொருவரும் 'எதில் எனக்கு' 'எது எனக்கு' என்பதில் எல்லை வைத்திருக்கிறார்களா? என்பதும் புரிவதில்லை. கண்ணுக்கு முன்னால் சுயநலம் கருதிக் கருத்தியல் பேசும் பலர் இருந்துகொண்டிருக்கிறார்கள். அடிவருடிக்கொண்டு பிழைத்தும்போகும் இந்தத் தன்மை எது என்பது தொடங்கி எந்த நிலைப்பாட்டின் அடிவருடித்தனம் என்பதுவரை கேள்வியிருக்கிறது.

இவை இரண்டையும் வைத்துக்கொண்டு இன-மைய-வாதத்திற்கு வருவோம்.

இந்த எடுத்துக்காட்டுக்கள் இரண்டிலும் வெவ்வேறு பண்பாட்டிலிருந்து/குழுவிலிருந்து மற்றுமொரு இடத்தில் இருக்கும் இருவர் அந்தந்த மக்களின் நடவடிக்கையை என்ன மாதிரியாகப் பார்கிறார்கள் என்பது விளங்கியிருக்கும். ஆனால் அதில் எது சரி, எது பிழை என்பது தீர்மானிக்கப்படுவது யாருடைய கையில் உள்ளது? ஒரு குழு தன்னுடைய அணுகுமுறையில் சிந்திப்பதும், அதனால் மற்றைய குழுக்கள் தனது குழுவைவிடத் தாழ்ந்தது என்று எண்ணுவதும் தனது குழு உயர்வானது என்று எண்ணுவதுமே இனமையவாதம் எனப்படலாம். இனக்குழு என்பது மரபான பண்பாட்டுத் தொடர்ச்சியை உடையது. எனவே இனமையவாதம் என்பது தனது பண்பாட்டை மையப்படுத்திப் பிறவற்றைப் பார்ப்பது எனப்படும்.

ஒரு பண்பாடு, ஒரு குழு, ஒரு கூட்டம், ஒரு குழுமம் தமது உலகப் பார்வையில் இருந்துகொண்டு மற்றைய மக்களை, பண்பாட்டை, குழுவை, குழுமத்தை நோக்குவது எனப் பொதுவாகச் சொல்லிவிடலாம். "நான் அப்படிப் பார்ப்பதில்லை. எனக்கும் பரந்த மனது உண்டு, சகிப்புத் தன்மை உண்டு" என்று சொல்வதைக் கேட்டிருக்கலாம். இது எதைக் குறிக்கிறது. எதைக் குறித்த பரந்த மனது. எவற்றைக் குறித்த சகிப்புத் தன்மை. பிற பண்பாட்டின், பிற குழுவின் ஏதோ ஒன்ற பொறுத்துக் கொள்ள முடியவில்லை, எனவே சகித்துக் கொள்வதாகச் சொல்லப் படுகிறது. இங்கு இனமையவாதம் மறைமுகமாக இருந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறீர்கள். மற்றொருவகையில் பார்த்தால் அறிவு சீவிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு/நமக்கு மட்டும்தான் உலகில் அதிகம் விளக்கம் உண்டு என்பதாகவும், அதிகம் புரிந்து, தெரிந்து வைத்திருப்பதாகவும் எண்ணம், மாயை, சாற்று அல்லது அப்படி ஒரு பெயர் உண்டு. இது எவ்வகையில் இன மைய வாதமாகிறது என்று பார்க்க முடியவேண்டும். 'பிற' அனைத்தும் (அறிவுசீவிகள் தவிர்ந்த அனைத்தும் இங்கு 'பிற') புத்தியில்லாததாய் இருக்கையில் 'பிற' தவிர்த்த நான்/நாம் அறிவாளிகளாய் மாறிவிடுதல் என்பது நான்/நாம் தவிர்த்த அனைத்தையும் ஒன்றாக வைத்துப் பார்ப்பதே இதற்கு காரணம். இவ்வாறு நான்/நாம் தவிர்த்த அனைத்தையும் ஒன்றாக்கிப் பார்க்கும் பெருங்கதையாடலின் அபாயம் உடனே எமது அறிவில் எட்டி உதைப்பதை உணர முடியும். இது அல்லாதவிடத்து இனமையவாதம் நான்/எம்மிடம் இல்லை என்று பொருள்படும். அப்படியாயின் நாம்/நான் யார்? இதைத் தவிர்ந்த மக்கள் அனைவரும் யார்? வேறு பல வகைகள் உண்டா? அப்படியொரு முடிவு வாசிப்பில் உதித்தால் அதுதான் இந்தக் கட்டுரையின் போக்கிற்கு, இதன் இறுதிப் பகுதியில் தேவை. நினைவில் இருத்திக் கொள்ளுவோம். கொஞ்சம் ஆழமாகப் போய் இனமையவாதத்தின் என்ன பொதிந்திருக்கிறது என்று பார்த்தால் அங்கு கிடைக்கும் விளக்கம் பின் வருமாறு அமையலாம். "எங்களுக்கு இருக்கக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட தரவுகளை, அறிவுகளை, பட்டறிவுகளை வைத்துக்கொண்டு பிறவற்றைப் பற்றி எடுக்கும் தவறான எடுகோள்கள்" என்பதே/என்பவையே இனமையவாதம் எனச் சொல்லலாம். "எங்களுக்கு ஒன்றைப்பற்றித் தெரியவில்லை என்பது எங்களுக்குத் தெரிவதில்லை" என்பதனாலேயே இங்கு 'எடுகோள்கள்' என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்த 'அறியாமை' நம்மை ஏதாவது ஒரு வகை மையவாதத்தில் ஆழ்த்திவிடுகிறது என்பதே உண்மை. அறியாமை என்பதால் இங்கு சொல்ல வருவது பிறரைப்பற்றிய நமது அறிவுதானே தவிர வேறல்ல. நமக்கு பிறரைப்பற்றி இருக்கும் அறிவு மட்டுப்படுத் தப்பட்டதாக, எமது எல்லைகளுக்கு உள்ளபட்டு இருப் பதால் புரிதல் சாத்தியமில்லாது விடுகிறது. ஒரு இலக்கியப் பாடத்தை, ஒரு மெய்யியல் பாடத்தைப் படித்து, வாசித்து எப்படி ஒருவரால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாதவாறு அதற்கும் நமக்கும் இடையில் தடைகள், எல்லைகள் இருக்கின்றனவோ அதேபோல ஒரு மக்கள் குழுவை அறிந்து கொள்வதிலும் தடைகள் அறிவின் எல்லைகள் உள்ளன. ஒரு பண்பாட்டைப் பற்றிப் படிக்கிறோம் என்று புறப்படும் மானிடவியல் விற்பன்னர்களுக்கு, இதனால்தான் "பங்கேற்பு உற்று நோக்கலைச் செய்யும்படி" பல ஆண்டுகளாக தொடருகின்ற மானிடவியல் துறையினரின் பட்டறிவின்படி அறிவுறுத்தப்படுகிறது. இத்தகைய பங்கேற்பு உற்று நோக்கலின் விளைவாகவே பார்கெர் இன்னுயிற் மக்களைப் புரிந்து கொண்டார் என்பதை எமக்கு ஊகிக்க முடிகிறது. பங்கேற்று உற்று நோக்கல் என்பதால் கூட பல வேளைகளில் நம்மால் ஒரு பண்பாட்டை, ஒரு சமூகத்தில் உள்ள சிறிய அலகுகளைப், புரிந்து கொள்ள முடியாமல் போய்விடும். அதற்கு நமது முன் முடிவுகள் காரணமாக


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக மேற்கத்தியர்களின் இருமை எதிர்நிலை அணுகு முறையினால் பல தவறுகள் ஏற்பட்டுள்ளதை வரலாற்றில் நம்மால் பார்க்க முடிந்திருக்கிறது.

மேற்கத்தியர்களுக்கு நல்லது/கெட்டது, கறுப்பு/வெள்ளை, கடவுள்/சாத்தான் போன்ற அணுகு முறைதான் அனைத்திலும் உண்டு. இதனால்தான் பல வரலாற்று நிகழ்வுகளில் அவர்களால் தவறுகள் இழைக்கப் பட்டிருக்கின்றன என்றும் புரிந்து கொள்ளலாம். ஆயினும் மேலும் பல உலகில் உள்ளன. மார்க்சியத்தில் சொல்லப்பட்ட சமூக ஆய்வு அணுகுமுறையும் இருமை எதிர்நிலையில்தான் சொல்லப்பட்டது என அமைப்பியல் சொல்கிறது.

அடிக்கட்டுமானம் மற்றும் மேல்கட்டுமானம் என்பவையும் இருமை எதிர்நிலைகள்தான் என்கிறது அமைப்பியல். மார்க்சின் சிந்தனையில் பொருளாதாரக் கட்டுமானம் அடிக்கட்டுமானமாக பிற அனைத்தையும் நிர்ணயிப்பதாக, பிற அனைத்து மேற்கட்டுமானத்தின் உப பிரிவுகளாக கலை, இலக்கியம், பண்பாடு, சமூக நடவடிக்கை முதலிய அனைத்தையும் நிர்ணயிப்பதாக உருவானது.

இது, இந்தச் சிந்தனை முறை 'மேற்கத்திய''வாதம்' மட்டுமே. இந்த மேற்கத்திய என்ற சொல்லும் மிகப் பொதுவாக பல மக்களை ஒருங்கிணைத்த ஒரு குழுமத்தைக் குறிப்பதாக இருப்பதும் தொடர்கின்ற உரையாடலுக்கு புறம்பானதே.

யாழ்ப்பாண மையவாதம் சரியா, பிழையா அல்லது சரிகளும் பல பிழைகளும் கொண்ட தொகுதியா என்று பார்ப்பது எனது வேலையல்ல. இந்தக் கட்டுரையின் நோக்கமுமல்ல. ஆனால் அந்த அணுகுமுறையில் என்ன வெளிப்படுகிறது என்று பார்க்கவேண்டும்.

யாழ்மையவாதம் அல்லது யாழப்பாண மையவாதம் (இரண்டும் ஒன்றா என்பதும் எதைக் குறிக்கிறது என்பது பற்றி எனக்குத் தெளிவும் குறிப்பான வரையறையும் இல்லாதபோதும்) என்ற சொல்லை வெளிப்படுத்துவோரிடம் யாழ் மையவாதத்திற்கு எதிரான மற்றொரு, ஏதோவொரு மையவாதம் இருக்கிறது என்பதை 'ஊகித்துக்' கொள்ளலாம்.

இந்த 'ஏதோவொரு' மையவாதம் என்பது 'ஒரேயொரு' மையவாதம் மட்டுமல்ல என்பதும் அந்த 'ஏதோவொருவிலும்' பல 'ஏதோவொருக்கள்' அடங்கியுள்ளன என்பதும் தெளிவு.

'ஒரு' மைய வாதத்தை/'யாழ்' மையவாதத்தை கேள்விக் குள்ளாக்கும் நிலை என்பது மற்றொரு மைய வாத்தால்தான் சாத்தியமே தவிர மையவாதம் அல்லாத ஒரு நிலையால் அது கைகூடிவராது என்பதும் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.அதாவது மையவாதம் என்பது அல்லாத ஒரு மனிதர் இருப்பதில்லை.

எந்த ஒரு மமையவாதத்தின் நிலையும் எப்போதும் சரியானதாக இருக்கமுடியாது. ஆனால், ஒரு மையவாதம் அது சார்ந்த குழுக்களின்/பண்பாட்டின்/குமுகத்தின் இப்படி ஏதாவது ஒரு கூறின், பிரிவின் அல்லது பல கூறுகளின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள உதவி செய்கிறது.

காட்டாக, அமெரிக்கா என்ற பெருஞ் சமூகத்தின் 'பெருமிருப்பு' தொடர்ந்து நிலை பெற்று உலகளவில் கைகூடிவருவது அதன் அமெரிக்கமைய வாதத்தால் என்பது அனைவருக்கும் வெள்ளிடை மலை. அமெரிக்கா சொல்லும் அனைத்துக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தலையாட்டி அமெரிக்காவின் காப்புறுதித் திட்டங்களில், வீட்டுவாய்ப்பு மோகத்தில், வேலைப் போக்கு வாழ்க்கையில், இணைய வலைப் பின்னலில், ஊடக வலைப் பின்னலில் சிக்கியிருக்கும் நாம் அதை உணராத வகையில் அதனுள் சிக்கியிருக்கிறோம்.

மற்றொரு வகையில் 'ஊகித்தால்' அமெரிக்காவின் இனமையவாதத்தை ஏற்றுக் கொண்டு உலகெங்கும் வாழ்ந்து வருகின்றோம். அமெரிக்க இனமைய வாதத்தின் எல்லைகள் நிலவியல், மற்றும் காலவியல் பரப்பில் விரிந்து கொண்டு தடையற்று செல்கின்றதையும் பார்க்கின்றோம். அமெரிக்காவின் இனமையவாதம் எங்களால் எதிர்க்கப்படமுடியாததாய் நமது கையறு நிலையில் இருக்கிறது.

அதேவேளை அமெரிக்காவில் வாழும் மக்களை அங்கு வசிக்கும் ஒரே காணத்தால் மட்டும் அமெரிக்க யைவாதிகள் என்று சொல்லிவிடமுடியுமா? அங்கு வாழும் கறுப்பின விளிம்புநிலை மக்களும் வெறும் வேலை விசாவுடன் மட்டும் உழைத்து உருகிக் கொண்டிருக்கும் தென்அமெரிக்க மக்களும் அவர்களுடைய பாடசாலைக்குப் போகாத குழந்தைகளும் அடங்குவார்களா? இவை யாழ் மைய வாதத்திற்கு வெளியே உள்ள பெரிய அளவிலானவை என்றால்...
நுண்ணளவில்...
யாழ்மையவாதத்திற்கு உள்ளே... உள்ள சிறியவற்றையும் பார்க்க வேண்டியிருக்கிறது. யாழ்மையவாதம் என்ற பெயரால் யாழ் நிலவியல் பகுதியில் இருப்பவரை அல்லது அந்த நிலப்பரப்புடன், கருத்தியல் பரப்புடன் தொடர்புடைய ஒருவரை முத்திரை குத்துதல் என்பது / அழைத்தல் / விளித்தல் / விழித்தல் என்பது அந்தப் பரப்பில் அடங்கியிருக்கும் சிறிய சிறிய வேற்றுமைகளைக் கைவிடுவதாக / காணாமல் போகவிடுவதாகப் பொருளாகிவிடும். இது ஒரு அபாயமும் கூட.

எவ்வாறு மார்க்சியம் சிறிய சிறிய வேறுபாடுகளை இருமை எதிர்நிலைப் பார்வைக்குள்ளால் புறக்கணித்ததோ, அதே போல இந்தப் பார்வையும் பல சிறு அலகுகளை அவற்றின் இருத்தலைப் புறக்கணித்துவிடும்.

எடுத்துக்காட்டாக, யாழ்ப்பாண மையவாதம் என அடையாளப்ப டுத்தப்படும் ஒரு குழுவில் ஒரு தலித் இருப்பாரா? யாழ்ப்பாண மையவாத அடையாளப்படுத்தலில் ஒரு ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினர் இருப்பாரா? அப்படியாயின் அவருக்கு இந்த யாழ்ப்பாணவாத முத்திரை குத்தலால் என்ன பாதிப்பு ஏற்படுகிறது. யாழ்ப்பாணமையவாதியின் குழுவில் ஒரு பெண் இருக்கின்றாரா? அவர் இந்த யாழ்ப்பாண மையவாத ஆணினால் ஒடுக்கப் படுகின்றாரா? 'யாழ்ப்பாணமையவாதத்தின்' சுட்டெல்லைக்குள் ஒரு சிறு சமயத்தைச் சேர்ந்தவர் வருவாரா? இல்லையா? முன்சொன்ன மையவாதம் என்றால் என்ன என்பது பற்றிய விளக்கங்களுடன் இந்த இடத்தில் நின்று சிந்திக்கவேண்டும். இப்படியான சிறு குழுக்கள் காணமல் போகச் செய்யப்படும் ஒரு அலகை அல்லது ஒரு அடையாளத்தை எடுத்து வைத்துக்கொண்டு பிறவற்றைக் கையாள்வது, எண்ணும் தீங்கைவிட பலமடங்கு மறுதலையான விளைவைக் கொண்டுவருவதாகத்தான் இருக்கும். எங்களது மட்டுப்படுத்தப்படுத்தப்பட்ட பட்டறிவிலிருந்து வரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன-மையவாதப் பார்வையைக் கொண்டு மற்றுமொரு இன-மையவாதத்தை எடைபோடுவது என்பது எவ்வளவு சரியானது என்பது அவரவரின் எடைபோடலுக்குரியது. மற்றுமொரு வகையில் சொன்னால் இன-மையவாதம் பிறரைப் பிழையாகத் தவறாகப் புரிந்து கொள்ளச் செய்கிறது. முன்னர் சில மார்க்சியப் பயிற்சி வகுப்புக்களில் மார்க்சியக் கண்ணாடிக்குள்ளால் நாங்கள் பார்க்கவேண்டும் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அதே போல இன-மையவாதத்தை மறுப்பதற்கு மற்றுமொரு மையவாதத்துடன் சாயம்பூசப்பட்ட ஒரு கண்ணாடிக்குள்ளால் பார்ப்பது சரியல்ல. 'நாங்கள்' 'அவர்களுடைய' வாழ்க்கைப் பட்டறிவை 'எங்களுடைய' மட்டுப்படுத்தப்பட்ட பட்டறிவினூடாகப் 'பார்த்து' எடைபோடுகிறோம். 'எங்களுக்கு' 'அவர்களுடைய' வழிமுறைகளும் புரிதலும் அதன் பொருளும் தெரியாது. அவர்களின் வாழ்க்கைச் செயற்பாடுகள் எங்களுக்கு தெரியாது. அதைப்போலவே அவர்களுக்கு எங்களுடையவையும்.

இதில

எங்களுக்கு = யாழ்ப்பாணத்துமையவாதிகளுக்கு

எங்களுக்கு = (யாழ்ப்பாணத்து மையவாதியைக்) குற்றம் சுமத்துபவருக்கு

அவர்களுடைய = யாழ்ப்பாணத்துமையவாதியுடையவை

அவர்களுடைய = (யாழ்ப்பாணத்து மையவாதியைக்) குற்றம் சுமத்துபவருடையவை

இதுதான் உள்ள நிலை. பிறருடைய பட்டறிவுகளைப் பற்றி நாம் முன்னெடுக்கும் எடுகோள்கள் பிழையான / தவறான / எதிர்மறையான முடிவுகளையே தரும். ஒரு வகையில் இன-மையவாதம் என்பது தவிர்க்க முடியாதது. நேர்நோக்கு அல்லது சரியான புரிந்துணர்வுகள் முதலியவற்றால் தீர்க்கப்படவும் முடியாதது. இன-மையவாதத்தின் வெளிப்பாடுகள் பல நிலை களிலும் அதன் அளவு மற்றும் வீரியத்தைப் பொறுத்து தீமையிலிருந்து நன்மைவரை வரலாற்றில் விட்டுச் சென்றிருக்கிறது.

இனமையவாதம் இல்லாத ஒரு இனக்குழு தனது இருப்பை உலகத்தின் வரலாற்றில் பிடித்து வைக்க முடியாது. வைத்ததுமில்லை.

மொழியறிஞர் டேவிட் கிறிஸ்டல் என்பவர் இருகிழமைக்கு மொழி என்ற விழுக்காட்டில் மொழிகள் அழிந்து கொண்டிருக்கின்றன என்று சொல்கிறார். இதற்கு இனமையவாதத்தின் இரண்டு இரு வேறுபட்ட அணுகுமுறைகள் உதவியாக வேலைசெய்கின்றன. அழியும் இந்த மொழிகள், ஆங்கிலத்தினால் அல்லது பெரும்பாலும் வெறு ஆதிக்க மொழிகளினால் உட்கொள்ளப் படுகின்றன என்று வைத்துக் கொள்வோம். இங்கு ஆங்கிலத்தினால், ஆதிக்க மொழிகளினால் இன-மையவாத / மொழி-மையவாதம் (ஆங்கிலம்) பேசும் நாடுகளின் மையவாத அணுகுமுறையினால் சிறிய, தன்னளவில் இன-மையவாதத்துடன் தன்னைப் பார்த்துக்கொள்ளாத ஒரு மொழி அழிந்து போகிறது. இன-மையவாதம் இல்லாத ஒரு மொழி இன-மையவாதத்தின் தீவிரச் செயற்பாட்டில் உள்ள மற்றொரு மொழியிடம் தன்னை இழந்து, அழித்துக்கொள்கிறது. இதற்குப் புறக்காரணிகள் பலவும், பல வகையில் பங்கீடுகள் செய்கின்றன என்பதும் உண்மைதான். இதேபோலவே உலகமயமாக்கலில் சிக்கிய ஒரு சிறு இனக்குழுமம் என்னதான் இன-மையவாதத்/ மொழி-மையவாதத் தன்மையுடன் தனது மொழியைக்காக்க முற்பட்டாலும் அது தன்னை இழந்து கொள்ளவேண்டிய புறச்சூழல் இன்று நிறைந்திருக்கிறது. ஆப்பிரிக்க துணைக்கண்டத்தில் உள்ள ஏதோவொரு நாட்டில் இருக்கும் 1000 பேரைக் கொண்ட இனக்குழுவினால் இன்னும் எத்தனை நாளைக்கு தனது இனக்குழுவின் மொழியை, எவ்வளவுதான் அவர்கள் அதிகளவில் இன-மையவாதத் தன்மையுடன் செயற்பட்டாலும் தங்களது மொழியைக் காத்துக் கொள்ள முடியும்? இனம், மொழி இவை சார்ந்த தூய்மை வாதம் இனமைய வாதத்தின் மற்றொரு வெளிப்பாடு. இவற்றின் நீட்சியும் தொடர்சியுமே இனவெறியையும், குடியேற்றவாத ஆதிக்க மனோநிலையையும், இனத்துவத் தூய்மைப்படுத்தலையும் (நாசிசம் போன்று) உருவாக்குகின்றன.

இந்த அணுகுமுறைகளும் விளைவுகளும் உலகினால் எப்போதும் கண்டிக்கப்படுகின்றன. ஆனால் உண்மையில் நடப்பது என்ன? ஒவ்வொருநாளும் செய்தியில் எங்களுக்கு இவற்றின் ஏதோவொரு வடிவம் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. நாங்கள் ஒரு போதும் மையவாதிகளாக இல்லாமல் இருக்க முடியாது. முழுமையான திறந்த அணுகு முறையுடன் நாம் ஒருபோதும் இருக்கவும் முடியாது. அப்படியானால் நாம் இந்த இன-மையவாதம் குறித்து என்ன செய்யலாம்? ஒவ்வொரு வாழ்வியல் சூழலை யையும், ஒவ்வொருவருடைய வாழ்வியல் சூழலையையும் பிறரால் முழுமையாகப் பட்டறிந்து பார்ப்பது இயலாதது. எனவே எப்போதும் வாழ்வின் ஏதாவது ஒரு இடத்தில் 'எடுகோள்கள்' வந்துகொண்டேயிருக்கும். இதிலிருந்து எம்மை அறிவியல் அணுகுமுறைகூடத் தப்பிக்க வைக்க முடியாது.

ஒரு அறிவியல் அணுகுமுறையின் வெற்றியே அதன் பாரபட்சமற்ற நிலைப்பாட்டில் தங்கியிருக்கிறது. ஆனால் அது முன்னதாக கட்டுப்பாட்டு நிலை ஒன்றை கருத்தில் கொண்டு அதை வைத்துக் கொண்டே தனது பாராபட்சமற்ற தன்மையை முன்வைக்கின்றது. அந்தக் கட்டுப்பாட்டு நிலை என்பது என்ன? அது சரியானதென்று யார் சொன்னது? அதன் சார்நிலை என்ன? இதைப்போல தொடரும் கேள்விகள் மனிதரின் சார் நிலைப் பார்வையைக் கொண்டு செல்கின்றன. சார்நிலைப் பார்வையிலிருந்து விடுபடமுடியாதபடி அறிவியலும் இருப்பதால், அதைப்போன்ற சார்நிலைப் பார்வையாகிற, இன-மையப்பார்வையும் அதைப்போன்றதே என முடிவாகின்றது. மானிடவியலில் இந்தச் சிக்கலைத் தீர்க்கக் குறைக்கச் சில அணுகுமுறைகள் இருக்கின்றன. ஆனால் பொதுவான இலக்கிய, அறிவுசீவித்த தளத்தில் இவை கிடைப்பதில்லை. மையவாதம் அற்ற மனிதரை நான் பார்த்ததில்லை. அது சாத்தியமும் அல்ல. ஆனால் மைய வாதத் தின் அளவுகள் - பரிமணங்கள் நாசிசம் எவ்வாறு ஒரு இன மையவாதத்திலிருந்து உருவாகியதோ, அது போல பிற ஏதோவொரு வடிவங்கள் உருவாகக் காரணமாகலாம்.

உதவிய படிகள்:
http://www.iupui.edu/~anthkb/ethnocen.htm (March 15, 2006)
உரைமொழிவு தொகுதி1

மற்றும் பல பண்பாட்டு மானிடவியல் நூல்கள்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ்ப்பாணத்தின் மானம் காக்கும் கோவணம் அல்ல கிழக்குமாகாணம்.

அக்கரைப்பற்றுப் பள்ளிவாசலில் படுகொலை செய்யப்பட்ட முஸ்லீம் மக்களுக்குச் சமர்ப்பணம்.




எம். ஆர். ஸ்ராலின்

“ கிழக்கை அடிப்படையாகக் கொண்ட பனிப்போர்தான் இன்று இலங்கையில் நடைபெறுகின்றதே அன்றி சமாதானத்திற்கான முயற்சிகள் அவை என்று யாரும் எண்ணியிருந்தால் அது தப்பாகும். இந்தப் பின்னணியில்தான் இன்று புலிகளது இலக்கு கிழக்குத் தமிழர்களை வென்றெடுப்பதனூடாக கிழக்கு மாகாணத்துக்கான தமது ஆதிக்கத்தை உறுதி செய்வது. இதற்காக இவர்கள் கருணாவை துரோகியாக்கி கடந்த இரண்டு வருட காலமாக தீ மிதித்தாலும் அது கிழக்கு மண்ணில் எடுபடுவதாய் இல்லை. மீண்டும் மீண்டும் தமிழ் முஸ்லிம் நல்லுறவு அங்கே வளர்ந்து வருகிறது. அதனை சீர்குலைத்து அதில் குளிர்காய புலிகள் எடுத்துவரும் எல்லாவித முயற்சிகளும் தோற்கடிக்கப்பட்டு வருகின்றது. ”

யாழ்ப்பாணத்தினுடைய மத்தியதர வர்க்கத்தின் அபிலாசைகளுக்காக தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட ‘தமிழீழ கதையாடல்’ தனது அந்திம காலங்களில் தள்ளாடிக்கொண்டிருக்கிறது. இந்தக் கற்பிதம் உருக்கொடுக்கப்பட்டிருந்த கடந்த கால்நூற்றாண்டுகாலப் பகுதியில் வடகிழக்கினது மூலைமுடுக்குகள் எங்கும் வாழ்ந்துவந்த எல்லா சாமானிய மக்களும் தமிழீழத்திற்காக வெகுவாக ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். என்றுமே மீளமுடியாத பாரிய விலைகளைக்கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழீழம் எனும் தீவிரவாதப் போக்கினுள் அநியாயமாக இறக்கிவிடப்பட்டவர்களுள் கிழக்கிலங்கை மக்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இதன் காரணமாக கிழக்கிலங்கையின் ஆயிரக்கணக்கான மனிதவளங்கள் பலிகொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தமிழீழக் கனவுக்காக கிழக்கு மண்ணில் காலூன்றிய தமிழ் பேரினவாத வெறியினால் பல்லினங்களைக் கொண்ட கிழக்கு மாகாணத்தினது உயிர் மூச்சாக ஒருகாலத்தில் திகழ்ந்த ‘சமூக நல்லிணக்கம்’ கழுத்து நெரிக்கப்பட்டு குற்றுயிராக்கப்பட்டது.

தமிழீழத்தின் பெயரில் அதற்காக தாகம் கொண்டலைவதாகச் சொல்லிக்கொண்ட புலிகள் ஊட்டிய இனவெறிகளினால் இதுவரை காலமும் தமிழ் .முஸ்லிம் என ஆழமாக பிளவுபடுத்தப்பட்டிருந்த கிழக்கிலங்கை மக்கள் கருணா பிளவின் பின்னர் தாம் மீண்டும் கட்டியெழுப்பவேண்டிய இன நல்லுறவின் அவசியத்தை உணரத் தலைப்பட்டுள்ளனர். இதன் காரணமாக பிரதேச அடையாளத்தை முன்நிறுத்திய உணர்வுகளின் சங்கமமான ஒருவிதமான புதிய அரசியல் கருவூலம் ஒன்று கிழக்கு மண்ணில் இன்று உருவாகத் தொடங்கியுள்ளது. இது தமிழீழம், தமிழ்த்தேசியம் எனும் வெற்றுக் கோசங்களுக்கு மாற்றான ஒரு அரசியலாக வளர்ந்து வருவதனால் புலிகள் இது குறித்து கிலிகொள்ளத் தொடங்கியுள்ளனர். தமது பம்மாத்துகளை தொடர்ந்தும் கிழக்கில் பேண மீண்டும் மீண்டும் அங்கு தமிழ் முஸ்லிம் கலவரங்களை ஏற்படுத்தி இனமுரண்பாடுகளை கூர்மையாக்க பலவழிகளிலும் செயற்படத் தொடங்கியுள்ளனர். ஜிகாத் பூச்சாண்டி காட்டி தமிழர்களுக்கு தம்மிடம் வந்தாலே பாதுகாப்பு என்று நிறுவ புலிகள் படாதபாடு படுகின்றனர். இது

www.tamilarangam.net


போன்று அண்மைக்காலங்களில் புலிகள் மேற்கொண்டுவரும் பல சதி முயற்சிகள் அம்பலப்பட்டுள்ளமையும் தமிழ் முஸ்லிம் மக்களின் நிதானமாக அமைதி காத்தலும் புலிகள் தமிழ்த் தேசி யத்தின் பெயரில் மேற்கொண்டுவரும் சதித்திட்டத்துக்கு கிழக்கில் தொடர்ந்தும் தோல்விகளையே தந்து கொண்டிருக்கின்றது.

வடக்கு, கிழக்கு எனும் இரு தனித்தனியான மாகா ணங்களை இணைத்து அதனை 'தமிழர்களின் தாயகம்' ஆகக் கொள்வது எனும் அடிப்படையே 'தமிழீழம்' எனும் நோக்கினை அடையும் போராட்டத்தின் சாராம்சமாகும். அந்த வகையில் தமிழீழம் எனும் இலக்கினை நோக்கி கட்டமைக்கப்பட்ட 'தமிழ் தேசியம்' எனும் கோட்பாடு அதனது பிறப்பிலேயே பலவீனமானதொன்றாயிருந்தது. அதாவது இந்த இரு மாகாணங்களில் வாழும் மக்கள் எதிர்கொண்ட ஒடுக்குமுறைகள் சார்ந்த கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த தமிழீழதேசியம் கட்டமைக்கப்படவில்லை. மாறாக யாழ்ப்பாணத்தின் அதிலும் மேட்டுக்குடிகளின் வாழ்வாதாரமான கல்விசார் பிரச்சனைக ளிலிருந்தே முகிழ்ந்ததொன்றாக இந்த தமிழ்த்தேசியம் இருந்தது. இந்த யாழ்மையவாத சிந்தனையில் இருந்து வெளிப்பட்டமையால்தான் போராட்ட அமைப்புகளின் தலை மைகள் அனைவரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்க ளாயிருந் தார்கள் (குட்டிமணி, உமாமகேஸ்வரன், பிரபாகரன், இரத்தின சபாபதி, பத்மநாபா, பாலகுமார், சிறிசபாரட் ணம், பனாங்கொடை மகேஸ்வரன், வட்டுக்கோட்டை ஜெகன், நாகராஜமாஸ்ரர், விசுவானந்ததேவன், பாலசுப்ரமணியம், அ.பகீரதன்/காண்டீபன், ஒபராய்தேவன்.....)

அதேவேளை கிழக்கு மாகாணமோ யாழ்ப்பாணத்தில் இருந்து வேறுபட்ட ஒரு 'நிலபுல' பொருளாதார அமைப்பினை கொண்டிருந்தது. ஆங்கில மொழிசார்ந்தோ, கல்வி அரச வேலைவாய்ப்புக்கள் சார்ந்தோ மேலெழும்பிய ஒரு வர்க்கத்தினர் கிழக்கில் இருக்கவில்லை. இதன்காரணமாக கல்விசார் பிரச்சனைகளிலோ அதையொட்டியெழுந்த அரசியல் முனைப்பு களிலோ களமிறங்கும் தேவையை கிழக்குமாகாண மக்கள் கொண்டிருக்கவில்லை. அத்தோடு வடமாகாணத்தில் கோலோச்சிய, கோலோச்சுகின்ற, சைவ, வேளாள, கலாசார, பண்பாட்டு அம்சங்க ளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட பாரம்பரியங்களை கிழக்கு மாகாணம் கொண்டிருந்தது. தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் எனும் மூவின மக்கள் ஒருமித்து ஒரேஅளவில் வாழுகின்ற மாகாணம் கிழக்கு. வீரசைவ, பௌத்த, சமண, இஸ்லாமிய மற் றும் கிறிஸ்தவ, மத கோட்பாடுகளிலிருந்து கலந்தெழுந்த பன்மைத் துவ ஒழுக்க முறைகள் கிழக்கில் காணப்படுகின்றன. இதன்காரண மாகவும் 'தமிழ்' எனும் ஒற்றை அடையாளத்தை முன்னிறுத்தும் 'தமிழீழ' கோசத்தினுள் கிழக்குமாகாணம் உடனடியாகவே களமிறங்க தயக்கம் காட்டியிருக்கலாம். ஆனாலும் தொடர்ந்து வந்த காலங்களில் கிழக்கு மாகாணம் தனது தனித்துவத்தை இழந்துபோகும் வண்ணம் படித்தயாழ்ப்பாணத்தின் மொழிவெறி பிரச்சாரங்கள் அவர்களை வெற்றிகொண்டன.

1971 ம் ஆண்டு இலங்கையரசினால் அமுல் செய்யப பட்ட 'கல்விதரப்படுத்தல்' ஆனது யாழ்மாவட்டத்தில் ஏற்படுத்திய பாதிப்புகளை தமிழ்பேசும் மக்கள் எல்லோருக்கும் (முஸ்லிம்க ளுக்கும் கூட) பொதுவானதாக முன்னிறுத்தியே தமிழீழ கோரிக்கை பிரச்சாரப்படுத்தப்பட்டது. (இதுபற்றிய விரிவான விளக்கங்களுக்கு பார்க்க மற்றது -இதழ்1 - கட்டுரை எம்.ஆர்.ஸ்ராலின்) கிழக்கி லங்கை மக்கள் கொண்டிருந்த கிராமிய வாழ்விலமைந்த 'தன்னிறைவு விவசாய' பொருளாதார சூழலில் பல்கலைக்கழக வாய்ப்புகளையிட்டு அவர்களுக்கு என்ன அக்கறை இருக்க முடியும்? அப்படியேயிருந்தாலும் கிழக்கு மாகாணத்திற்கு இச்சட்டம் சாதகமான சூழலையே தோற்றுவித்தது. ஆனால் இவற்றை யெல்லாம் உணர்ந்துகொள்ளவிடாமல் தமிழர் விடுதலை கூட்டணியின் பிரச்சாரம் அவர்களை திட்டமிட்டு திண்ணியமாக ஏமாற்றியது.

1970ம் ஆண்டு தேர்தலில் படுதோல்வி கண்டு யாழ் -



பெரும் தலைவர்களான சிவசிதம்பரம், அமிர்தலிங்கம் போன்ற வர்கள் பாராளுமன்ற கதிரைகளை இழந்திருந்த நிலையில் இந்த கல்வி தரப்படுத்தல் எதிர்ப்பு பிரச்சாரம் அடுத்ததேர்தலுக்கு த.வி.கூட்டணிக்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது. தமிழ் மாணவர் பேரவை (சத்தியசீலன்) தமிழ் இளைஞர் பேரவை (புஸ்பராசா) போன்றவை வடக்கு, கிழக்கு எங்கும் முன்னெடுத்த இனஉணர்வு பிரச்சாரங்களும் த.வி. கூட்டணியின் அனல்பறக்கும் மேடை பேச்சுக்களும் இணைந்து முழங்கியது. 1977 ஆண்டு தேர்தல் இந்த பிரச்சனையே முன்னிறுத்தப்பட்டதுவும் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி 'தமிழீழத்திற்கான ஆணை' கோரும் தேர்தல் வாக்கு சேகரிப்பும் தமிழ் பேசும் கிழக்குமாகாண மக்களின் தமிழ் உணர்வுகளை உலுப்பிவிட்டது. இப்படியாக கிழக்குமாகா ணம் யாழ்ப்பாணத்திலிருந்து பொங்கியெழுந்த தமிழீழ வெள்ளத் தில் அதன் அபாயம் உணராது மூழ்கியது. தொடர்ந்து வந்த 1983ன் இனக்கலவரமும் கிழக்கு மக்களின் உணர்வலை களை கட்டுக்கடங்கமுடியாதவாறு கிளறிவிட்டது. இந்தக் கலவரத்தில் கூட கொழும்புவாழ் யாழ்ப்பாண பெருவியாபாரிகளும், அரச உத்தியோகத்தர்களுமே பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனபோதும் தமிழீழம் மட்டுமே தமிழர்களுக்கு ஒரு பாதுகாப்பான தீர்வு என்பதில் தாமும் தமிழர்கள் என உணர்ந்து கிழக்கிலங்கையில் வாழ்ந்த (முஸ்லிம்களும் தமிழர்கள்) மக்கள் தமிழீழத்திற்காக போராட முன்வந்தனர்.

தொடக்க காலங்களில் மெதுமெதுவாக மட்டுமே இந்த போராட்டத்தின்பால் கிழக்குமக்கள் ஈர்க்கப்பட்டது பலவித காரணங்களின் அடிப்படையில் இயல்பானதாயிருந்தது. ஆனால் 1983ன் பின்னர் கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலோராயிருந்த உழைக்கும் (அடிப்படையிலேயே போர்க்குணாம்சம் கொண்ட) மக்களின் முழுமையான பங்களிப்பு உளப்பூர்வமானதாயும் ஒதுங்கி கொள்ளும் மனப்பாங்கற்றதாகவும் மாறியது. குறிப்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியாவில் தமிழ் தீவிரவாத இயக்கங்கள் பயிற்சி முகாம்களை அமைக்கத்தொடங்கிய போது அங்கு பயிற்சிபெற்ற போராளிகளில் கணிசமானோர் கிழக்குமாகாண (தமிழ், முஸ்லிம்) இளைஞர்களாக இருந்தார்கள். தமிழகத்தில் அதிகளவு பயிற்சி முகாம்களை கொண்டிருந்த P. L. O. T இல் இருந்த 5150 போராளிகளில் 3000 பேர் கிழக்கு மாகாண போராளிகளாகும். இதேபோல் ஈ.பி.ஆர்.எல்எவ் இனுடைய 2600 போராளிகளி சுமார் 1300 பேர் கிழக்கு மாகாணப் போராளிகளாகும். வு.நு.டு.முவினுடைய 2100 போராளிகளிலும் 950இற்கும் மேற்பட்டோர் கிழக்குப் போராளிகளாகும். 1983 இல் இந்திய மத்திய அரசினால் வழங்கப்பட்ட உத்தர பிரதேச பயிற்சிகளில் (U.P) E.P.R.L.F. இனுடைய 145 போராளிகளில் 105 பேர் கிழக்கு மாகாணத்தில் இருந்தே வந்திருந்தனர்.நுசுமுந டில்லி றெயினிங்278, இதில் மலையகம் 52, கிழக்குமாகாணம் 51. தமிழ்நாடு150 பேரில்57 பேர் கிழக்குமாகாணம்.இதில் அதிப்படியானவர்கள் திருமலையைச் சேர்ந்நதவர்கள். இது சனத்தொகை அடிப்படையில் வடமாகாணத்துடன் ஒப்பிடுகையில் கிழக்கினது அபரிதமான பங்களிப்பாகும். இதன்காரணமாக போராட்டகளத்தில் எதிர்கொள்ள நேர்ந்த இழப்புகளிலும், அழிவுக ளிலும் கிழக்குமாகாணம் தனது கடும் விலையை கொடுக்க நேரிட்டது.

1) 1986 இல் புலிகளால் இவ்வியக்கங்கள் தடைசெய்யப்பட்டபோதும் P.L.O.T போன்ற அமைப்புகளுக்குள் உடைவுகள் ஏற்பட்ட போதும் தமிழகத்தில் இருந்த யாழ்ப்பாணத்து இளைஞர்களுக்கு வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்ல கிடைத்த வாய்ப்புகள் போல் கிழக்கிலங்கை இளைஞர்களுக்கு கிடைத்தி ருக்கவில்லை. தமிழகப் பெருவீதிகள் எங்கும் அநாதரவாக அலைந்ததெல்லாம் இந்த கிழக்கு மாகாணத்து இளைஞர்களே.

2) ஆரம்பகாலங்களில் யாழ்ப்பாணத்தை காப்பாற்றுவதிலேயே எல்லா இயக்கங்களும் கவனங்கொண்டதால் கிழக்கு மாகாணம் சிறிலங்கா படைபலங்களின் எல்லாவித ஒடுக்குமுறைகளையும் ஒழுங்கை ஒழுங்கையாக அனுபவிக்க நேர்ந்தது. இதன்காரணமாக பூசா, வெலிக்கடை போன்ற பாரிய தடுப்பு சித்திரவதை முகாம்களில் அடைக்கப்பட்ட இளைஞர்களில் கிழக்குமாகாண இளைஞர்களே ஆயிரக்கணக்கில் காணப்பட்டனர்.

3) கொக்கட்டிசோலை படுகொலை போன்ற சிறிலங்கா இராணுவத்தின் அழித்தொழிப்புகள் பிற்படுத்தப்பட்ட படுவான்கரைக் கிராமங்களான மகிழடித்தீவு, முனைக்காடு, முதலைக்குடா....... போன்ற கிராமங்களின் அத்தனை இளம் சந்ததியினரையும் அழித்தொழித்தது.

4) மாற்று இயக்கங்களை புலிகள் தடைசெய்தபோது யாழ்ப்பாணத்தில் மாட்டிகொண்டு உயிரிழந்த பல போராளிகள் கிழக்குமாகாணத்தை சேர்ந்தவர்களாகும் இதற்கு 'கந்தன் கருணை' படுகொலை நல்ல உதாரணமாகும்.

5)இராணுவத்தினது தாக்குதல்கள் மூர்க்கத்தனமாக இருந்தவேளைகளில் வடமாகாண மக்கள் போல் தப்பியோடி இந்தியாவில் லட்சக்கணக்கில் தஞ்சம்புகும் வாய்ப்பு கூட புவியியல் ரீதியாக கிழக்கிலங்கை மக்களுக்கு வாய்த்திருக்கவில்லை. அன்றிலிருந்து இன்றுவரை எரியும் கிழக்கிலே வாழ்வை எதிர்கொள்வதே அவர்களின் விதியாயிற்று.

6) 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை தொடர்ந்து 'மாகாணசபையை' புலிகளிடமிருந்து பாதுகாக்க பலவந்தமாக தமிழ்தேசிய இராணுவத்தில் (வு.பே.யு)இணைத்துக்கொள்ளப்பட்ட சிறுவர்கள் கிழக்கிலிருந்தே அதிகம் பிடித்தெடுக்கப்பட்டார்கள். யாழ்ப்பாணம் போன்று வெளிநாடுகளுக்கு ஓடித்தப்பும் 'வாய்ப்பும் வசதியும்' அவர்களுக்கு இருக்கவில்லை. இதனால் I.P.K.F. வெளியேற்றத்தின் பின்னர் சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து வந்த புலிகளால் தமிழ் தேசிய இராணுவம் வெற்றி கொள்ளப் பட்டபோது மட்டக்களப்பு (மீன்பாடும்) வாவியெங்கும் நாட்கணக்கில் பிணங்கள் மிதந்தன. இதில் பொத்துவிலில் இருந்து புல்மோட்டை வரை சுமார் 1150 கிழக்கு மாகாண இளைஞர்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

7)புலிகளது முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் உக்கிரமானபோது காத்தான்குடி(140), ஏறாவூர்(126), அழிஞ்சபொத்தானை(147), கிரான்குளம்(68),..... என்று சுமார் 1069 பேர் வரையான கிழக்கு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.
இவையனைத்தும் முஸ்லிம்கள் தமிழீழ கோரிக்கையிலிருந்து முழுமையாக வெளியேறும் வரையான கிழக்கு மாகாணத்தின் குறிப்பிடும்படியான விலைகொடுப்புகள் ஆகும்.

தமிழ் பேசும் மக்கள் எனும் கதையாடலில் இருந்து முஸ்லிம்கள் 1987 ஆம் ஆண்டுதொடக்கம் மெது மெதுவாக வெளியேறத் தொடங்கினர். 1987 ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இந்த முஸ்லிம்கள் முழுமையாக ஓரங்கட்டப்பட்டதின் காரணமாக தமக்கான தனித்துவ அரசியல் கோரிக்கைகளை நோக்கி நடைபோடத்தொடங்கினர். காலஞ்சென்ற அஸ்ரப் அவர்களின் முழுமையான ஆளுமை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் அமைப்பினூடு அந்தக் கடமையை முஸ்லிம்க ளுக்காக செய்ய முன்வந்தது.

முஸ்லிம்களது தனித்துவமான அரசியல் போக்கினை அங்கீகரிக்க மறுத்த புலிகள் முஸ்லிம்களது இருப்பையே அச்சுறுத்தும் செயற்பாடுகளில் இறங்கினர். கிழக்கில் பள்ளிவாசல் படுகொலைகள், முஸ்லிம் கிராமங்கள் மீதான தாக்குதல்கள், வடக்கில் இருந்து ஒரு இலட்சம் முஸ்லிம்கள் துரத்தியடிக்கப் பட்டமை என்று 1990 ஆண்டு பாரியதொரு இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் புலிகள் இறங்கினர். இந்த ஆண்டுதான் புலிகளை ஒரு குறுந்தேசியவாதிகள் என்பதை விட பாஸிஸ்டு காளாக இனங்காட்டியது. இதன்காரணமாக மொழி ரீதியில் தமிழ் பேசும் மக்களாய் இருந்தபோதும் மத அடையாளத்தைக் கொண்டு முஸ்லிம்களை புலிகள் வேறுபடுத்தினர். இதுவே முஸ்லிம்கள் தம்மை தமிழர்களாய் இருந்தபோதும் முஸ்லிம்கள் எனும் தமது மத அடையாளத்தை முன்னிறுத்திய போராட்டப்பாதையில் செல்ல (தமிழீழத்தில் இருந்து விலகி) வழிவகுத்தது.

இதன்காரணமாக கிழக்குமாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் என்று தந்தை செல்வாவினால் பெயரிட்டு அழைக்கப்பட்ட மக்கள் கூட்டத்தில் சரிபாதியான முஸ்லிம் பிரிவினர் தமிழீழத்தின் பெயரில் தாம் ஏமாற முடியாது என்று முழுமையாக விலகிச் சென்றனர். இதன் பின்னரும் கிழக்கிலங்கை வாழ் (முஸ்லிம்கள் அல்லாத) தமிழர்கள் தமிழீழத்தில் நம்பிக்கை வைத்து 2004 ஆம் ஆண்டுவரை தமது முழுமையான பங்களிப்பை செலுத்தி வந்தனர். இதன் பின்னர் கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் இருதுருவங்களாக பிரிந்து வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டனர். ஒருபுறம் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து அதில் முஸ்லிம்களையும் உள்ளடக்கிய தமிழீழத்தில் நம்பிக்கை கொண்டு போராட வேண்டிய நிலையில் கிழக்குவாழ் தமிழர்களின் தலைவிதியை புலிகள் தீர்மானித்தனர். மறுபுறம் முஸ்லிம்களோ தமிழீழத்தை மறுத்து தமது பலவிதமான தனித்துவக் கட்சிகளினூடாக முஸ்லிம்களுக்கான ஒரு தனி அலகு கிழக்கில் உருவாக்கப்படவேண்டும் எனும் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஜனநாயக வழிகளில் போராடினர். ஒன்றை ஒன்று மறுக்கின்ற இந்த இருவகையான கோரிக்கைகள் கிழக்கு வாழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்றைய நிலையில் கிழக்கிலங்கையின் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் தமிழீழத்துக்கு வெளியே தமது அரசியல் அபிலாசைகளை தேடத்தொடங்கி யுள்ளனர். இந்நிலைமையானது கிழக்கு மாகாணத்தில் தமிழீழ தாயகக் கோட்பாட்டினுடைய பொருத்தப்பாட்டின் மீது பாரிய கேள்விகளை எழுப்பியுள்ளது. அதேவேளை சிறுபான்மை முஸ்லிம்களை மற்றய தமிழர்களின் எதிரிகளாகக் கட்டமைத்து அதனூடாக கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் அல்லாத தமிழர்களை தமிழீழத்தின் பக்கம் தக்கவைத்திருந்த நிலையும் முடிவுக்கு வந்துள்ளது. தமிழீழ பூச்சுத்தலில் இருந்து விடுபட்ட கிழக்கிலங்கை வாழ் மக்கள் எல்லோரும் தமது கால் நூற்றாண் டுகால தமிழீழம் எனும் கனவுலக வாழ்வில் இருந்து விடுபட்டு யதார்த்தம் குறித்து ஒருமித்து சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். கருணா பிளவின் பின்னர் கிழக்கு தமிழர்களிடத்தில் தமது மாகாணத்தினது அபிவிருத்தி குறித்த அக்கறைகள் அதிகரித் துள்ளன. கடந்த இருபது வருடங்களாக தமிழீழத்திற்காக தாம் கடந்து வந்த அழிவுகளில் நின்று எதையுமே பெற்றுக்கொள்ள முடியாத சூனியத்திற்குள் விடப்பட்டதை கிழக்கு மாகாண மக்கள் இன்று எண்ணிப் பார்க்கிறார்கள். அதேவேளை தமது அடுத்த வீட்டுச் சமூகமான முஸ்லீம்கள் பாராளுமன்ற அரசியல் பாதையி னூடாக கண்டு வந்த வளர்ச்சியில் தாம் பங்கு கொள்ள முடியாமல் போன கடந்த காலம் குறித்து கிழக்குத் தமிழர்கள் அதிகம் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். கடந்த காலங் களில் தாம் யாழ்ப்பாணத் தலைமைகளால் நன்கு ஏமாற்றப்பட்டுள்ளதாக வெட்கித் தலைகுனிந்து நிற்கிறார்கள். அதேவேளை கருணாவினது பிளவு மூலம் கிழக்கில் உருவாகியுள்ள தமிழீழ மக்கள் விடுத லைப் புலிகள் எனும் கட்சியானதுகடந்த காலங்களில் முஸ்லீம்கள் மீது இழைக்கப்பட்ட சகல மனித உரிமை மீறல்கள் குறித்தும் சுயவிமர்சனம் செய்யும் நிலைக்கு வந்துள்ளது. அண்மையில் (30ஏப்ரல்2006) சண்டேரைம்ஸ் பேட்டியில் தமிழீழ மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் கீழ்வருமாறு கூறியிருப்பது அவதானிக்கத்தக்கது.

'சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களின் முற்போக்கான சிந்தனைகளால் உருவாக்கப்படும் சமஷ்டி அரசியல் அமைப்பு அவசியம் என்பதனால் மூன்று சமூகங்களும் இணைந்துஒரு ஐக்கிய இலங்கைக்கான ஒரு அடித்தளத்தைப் பெற நாம் செயற்படுவோம்.'

இதுபோன்ற நல்லுறவுகளுக்கான பரஸ்பர அழைப்புக்கள் எதிர்கால அரசியலில் பிரதேச ஒற்றுமையுடன் கூடிய இனபேதமற்ற கிழக்கு நோக்கி தமிழர்களும் முஸ்லீம்களும் பயணிக்கும் வாய்ப்புக்களை அதிகரிக்கும். பரஸ்பர கொடுக்கல் வாங்கல்களுடனும் நாளாந்த அன்னியோன்னியத்துடனும் வாழும் யதார்த்தமான தமிழ், முஸ்லிம் கிராமங்கள் தம்மிடையே உறவு களை மீள கட்டியெழுப்பவேண்டிய அவசியம் இன்று இருதரப் பாலும் உணரப்பட்டுவருகின்றது. 'சுனாமி' தாக்குதலின்போது செய்யப்பட்ட உடனடி மனிதாபிமான பணிகளில் கிழக்குமாகா ணத்தில் இனவேறுபாடுகள் கணிசமான அளவு மறைந்துபோயுள் ளது. சுனாமியால் இறந்துபோன உடல்கள் தமிழ், முஸ்லிம் வேறுபாடுகளையும் மதநம்பிக்கை அடிப்படையிலானஇறுக்கமான சடங்கு சம்பிரதாயங்களையும் மீறி ஒருமித்துப் புதைக்கப்பட்டன. தமது குடும்பங்களை இழந்து அகதிமுகாம்களில் வெறித்துப்போய் தஞ்சமடைந்திருந்த தமிழ் பெண்களுக்கு மனஆறுதல் கூறுவ

சமூகங்களிடையே மென்மேலும் விரிசல்களையே ஆழப்படுத்தியது. 1990 ஆண்டு கசப்புணர்வுகள் மறைந்துவிடாமல் குரோதங்களே கோலோச்சும் நிலை தொடர்ந்தது.

மாத்தையா பிளவின் பின்னர் புலிகள் தமது படைப்பிரிவு களை கிழக்கை நம்பியே விஸ்தரிக்க வேண்டி இருந்தமையால் கிழக்கு மாகாண தமிழர்களிடையே முஸ்லிம் எதிர்ப்புணர்வுக ளையே தக்கவைக்கும் வகையிலேயே திட்டமிட்டு செயற்பட்டனர். முஸ்லிம்கள் அரசினுடைய கைக்கூலிகள்', 'சிங்களவர்களுடன் சேர்ந்து கிழக்கு மாகாணத்தை ஆக்கிரமிக்க போகிறார்கள்', 'கிடைக்கப்போகின்ற தமிழீழத்தில் மட்டுமே கிழக்கு வாழ் தமிழர்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதப் படுத்தப்படமுடியும்.' என்ற வாறான கட்டுக்கதைகளை புலிகளின் பிரச்சார ஊடகங்கள் கிழக்கிலே பரப்பி அதில் வெற்றியும் கண்டனர். இதன்கார ணமாகவே I.P.K.F. வெளியேற்றத்தின் பின்னர் L.T.T.E. எனும் அமைப்பின் முதுகெலும்பாக கிழக்குப்போராளிகள் பரிணமித்தனர். இன்று புலிகள் பீற்றிக்கொள்கின்ற ஆனையிறவு, முல்லைத்தீவு, ஜெயசிகுறு என்கின்ற வெற்றிகள் கிழக்கு மாகாண இளைஞர்கள் இன்றி சாத்தியப்பட்டிருக்க முடியாது. இரண்டுவருடங்கள் தொடர்ச் சியாக நடந்த ஜெயசிக்குறு சமரில் பங்கெடுத்த போராளிகள் 7000 - 9000 ஆகும். இதில் கிழக்கிலங்கை இளைஞர் யுவதிகளை முழுமையாகக் கொண்டமைந்த ஜெயந்தன் படையணி, அன்பரசிப் படையணி போன்றவற்றில் இருந்து மட்டும் சுமார் 6000 போராளிகள் களத்தில் நின்றனர். புலிகளுக்கு மரபுவழிப்போர் நடத்தும் திறமை கொண்ட கெரில்லா அமைப்பு எனும் சான்றிதழ் சர்வதேச ரீதியாகக் கிடைப்பதற்கு இந்த சமரில் மட்டும் கிழக்கிலங்கை தமது 1090 இளம் உயிர்களை ஓமந்தை வீதிகளில் பலியிட்டது.

கிழக்கு மாகாணம் தமிழீழத்திற்காக வழங்கிவந்த தனது மூர்க்கத்தனமான பங்களிப்புகள் அண்மைக்காலங்களில் நடந்த இருபெரும் நிகழ்வுகளினால் முடிவுக்கு வந்துள்ளது. பாரிய அழிவுகளை கிழக்கு மாகாணத்திற்கு தந்திருக்கின்ற போதிலும் கருணாவினுடைய பிளவு, சுனாமி ஆகிய இரண்டும் கிழக்கு மாகாணத்தி னுடைய எதிர்கால அரசியல் மாற்றத்திற்கு வழியேற்படுத்தியுள்ளன.

2004 மார்ச் மாதம் தமிழீழ விடுதலைப்பு லிகளுக்குள் ஏற்பட்ட பிளவானது கிழக்கு மாகாணத்தில் இருந்த முஸ்லிம்கள் அல்லாத தமிழர்களையும் தமிழீழ தாயகக் கோட்பாட்டில் நம்பிக்கையற்று வெளியேறச் செய்துள்ளது.

www.tamilarangam.net

தற்காக தமது முஸ்லிம் பெண்களை வீடுகளிலிருந்து புறப்பட்டு செல்லுமாறு அக்கரைப்பற்று பள்ளிவாசல் ஒலிபெருக்கியே பகிரங்கமாக கேட்டுக்கொண்டது. இதுபோன்று சிங்கள மக்களினதும் இராணுவத்தினரதும் மனிதாபிமான பணிகள் கிழக்கு தமிழர்களிடத்து பாரிய மனமாற்றத்தை கொண்டுவந்துள்ளது.

அதேவேளை முஸ்லிம்கள் தரப்பில் இருக்கின்ற அரசியல்வாதிகள் தமது முஸ்லிம் என்கின்ற குறுகிய அடையாளத்தை விடுத்து கிழக்கு மாகாணம் என்கின்ற பரந்துபட்ட மக்கள் எல்லோரையும் ஒன்றிணைக்கும் ஒரு அரசியல் வடிவம் குறித்து தீவிரமாக சிந்திக்க தலைப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

அக்கரைப்பற்று அதாவுல்லா தலைமையிலான 'தேசிய முஸ்லிம் காங்கிரஸ்' எனும் கட்சியானது இதுவரைகாலமும் தனது பெயரில் இருந்த 'முஸ்லிம்' எனும் வார்த்தையை நீக்கி விடுவதாக அறிவித்துள்ளது. முழுக்க முழுக்க முஸ்லிம்களிடையே உருவாகி அவர்களையே நம்பி வாக்குசீட்டு அரசியலில் ஈடுபட்டுவந்த இக்கட்சியானது இன்று கிழக்கு மாகாண மக்களை நோக்கிய தனது பரந்துபட்ட சிந்தனைப் பரப்பை அரசியலில் முன்னிறுத்தத் தொடங்கியுள்ளது. 23-09-2005 இக்கட்சியினது தலைமைப்பீடத்தில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கை 'நாட்டின் சகல இனங்களுக்கிடையிலும் ஒற்றுமையை ஏற்படுத்தி தத்தமது உரிமைகளை பெற்று மகிழ்சியாகவும் சமாதானமாகவும் வாழ்வதற்கு வித்திடுவதற்காக இந்த நாட்டின் அரசியலை முன்னெடுத்துச் செல்லும் பாரிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இம்மாற்றம் இடம்பெற்றுள்ளது. எனத் தெரிவிக்கப்பட்டது. இனங்களின் பெயராலும் மொழிகளின் பெயராலும் அரசியல் நடத்தி வருகின்ற இலங்கையில் இருக்கின்ற அரசியல் கட்சிகள் எதுவும் செய்யமுடியாத இத்தகைய துணிச்சலான முடிவானது இனங்களுக்கிடையேயான நல்லுறவை வளர்ப்பதில் முஸ்லிம்கள் காட்டுகின்ற அக்கறையை வெளிப்படுத்தி நிற்கின்றது. இன்றுவரை தமிழர்களிடையே உருவாகி வந்திருக்கின்ற எந்தக்கட்சியாவது தனது 'போலியான தமிழீழ' அடையாளத்தை விட்டுக்கொடுக்க முன்வருமா என்பது சிந்திக்கத் தக்கது. கிழக்கில் முஸ்லிம்களிடையே ஏற்பட்டுவருகின்ற இத்தகைய மாற்றங்கள் அமைதியை விரும்புகின்ற எவராலும் கைகூப்பி வரவேற்கப்படவேண்டியவை. ஆனால் புலிகளைப் பொறுத்தவரை இன உணர்ச்சிக் கோசங்களோடு தம் வாழ்வை ஓட்டிவருகின்ற அவர்களுக்கு கிழக்குமாகாணத்தில் ஏற்பட்டு வருகின்ற இந்த மாற்றங்கள் மிகுந்த அச்சத்தைக் கொடுத்துள்ளது. ஆகவே மீண்டும் மீண்டும் கிழக்கில் இனவிரிசல்களை ஏற்படுத்துவதற்காகவே புலிகளது முழு பலமும் அங்கு பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. இதற்காக கிழக்கை அடிப்படையாகக் கொண்டு பலவிதமான சூழ்சிகளிலும் சின்னத்தனமான நடவடிக்கைகளிலும் புலிகள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

1) கருணா பிளவிற்கு பின்னர் ஏற்பட்டுவருகின்ற தமிழ் முஸ்லிம் நல்லுறவுகளை குலைக்கும் நோக்கோடு முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள், படுகொலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனூடாக முஸ்லிம்களை ஆத்திரமூட்டி தமிழர்களுக்கு எதிராக பழிதீர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தூண்டுவது புலிகளின் நோக்கமாக உள்ளது. உதாரணமாக கடந்த ஆண்டு நவம்பர் மாத நடுப்பகுதியில் இருந்து டிசம்பர் மாத நடுப்பகுதி வரையான சுமார் 15 நாட்களில் மட்டும் சுமார் 23 முஸ்லிம்கள் புலிகளால் கொலைசெய்யப்பட்டுள்ளனர். 49 முஸ்லிம்கள் புலிகளது துப்பாக்கிச் சூடுகளில் இருந்து காயங்களுடன் தப்பி பிழைத்துள்ளனர். திருகோணமலை முஸ்லிம்கள் அதிகமாக வாழுகின்ற கிண்ணியா, தோப்பூர், மூதூர், சரிப் நகர், ஹிஜ்ரி நகர், ஜின்னா நகர், ஆலிம் நகர், அசாத் நகர் போன்ற பகுதிகளில் அடிக்கடி புலிகள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் அக்கிராம வாசிகளை அகதிகளாக துரத்தியடிக்கின்றது. கடந்த நவம்பர் மாதம் 02 ஆம் திகதி காத்தான்குடி பிரதேச செயலாளரும் பிரபல எழுத்தாளருமான பளில் அவர்கள் புலிகளால் சுடப்பட்ட நிகழ்வானது காத்தான்குடி பிரதேசத்தில் பெரும் பதட்ட சூழ்நிலையை தோற்றுவித்தது. 20 நவம்பரில் மீராவோடையில் மீராசாய்பு அகமட் லெவ்வையும் அவரது மனைவி பௌசியாவும் 6 குழந்தைகளின் முன்னால் வைத்து படுக்கையில் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்கள் கருணா பிளவின் பின்னர் புலிகளில் இருந்து வெளியேறிய போராளிகளை வெளிநாடு வேலைவாய்ப்புக்காக கொழும்புக்கு அனுப்புகின்ற முகவர்களாக செயற்பட்டனர் என்பதுதான் புலிகளது குற்றச்சாட்டு. இந்த குற்றச்சாட்டினூடாக புலிகள் அடைகின்ற அச்சமானது இரண்டு இனங்களும் தமது பரஸ்பர தேவைகளில் ஒருவரில் ஒருவர் ஒட்டி உறவாடுவதை தவிர்பதற்கானது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. (முஸ்லிம்களுக்கெதிரான புலிகளது மனித உரிமை மீறல்கள் பற்றிய ஒருசில உதாரணங்களே இதுவாகும் இதுபற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோருக்கு http://www.srilankanmic.org.uk)

2) கிழக்கில் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் உருவாகி வருவதாக கட்டுக்கதைகளை உருவாக்கி தமிழர்களிடத்தில் ஒருவித கலவர நிலையை தோற்றுவிப்பது. இதற்காகவே கொழும்பு தினக்குரலில் தொடங்கி, பரிஸ் ஈழமுரசு ஈறாக ஜெனிவாப் பேச்சுக்கள்வரை புலிகளின் முழுப்பிரச்சாரப் பலமும் செலவழிக்கப்பட்டு வருகின்றதை அவதானிக்க முடியும். கடந்த 16 மார்ச்சில் பாரிஸ் ஈழமுரசு இப்படித் தலைப்பிட்டிருந்தது. 'இராணுவ புலனாய்வுப் பிரிவின் கீழ் திருகோணமலையில் ஜிகாத் குழு' இதில் உள்ள செய்திவரிகளை மேலோட்டமாகப் படிப்பவர்களுக்கு பாரியதொரு ரகசியத்தை இச்செய்தி மூலம் தாம் அறிந்துவிட்டதான மனவுணர்வை ஏற்படுத்தும் வகையில் பாகிஸ்தானில் இயங்குவதாக சொல்லப்படுகின்ற தீவிரவாத அமைப்பொன்றின் பெயர் குறிப்பிடப்பட்டு 'லஸ்கர் ஈ தொய்பா' விடம் பயிற்சி என எழுதப்பட்டிருந்தது. ஆனால் கீழ்வந்த செய்திகளில் தொடருகின்ற 'கூறப்படுகின்றது', 'தெரிவிக்கப்படுகின்றது', 'அறியப்படுகின்றது' போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் ஊடாக இச்செய்திகளின் பொய்மைத் தன்மை உறுதியானது. கேட்கிறவன் கேணையனாய் இருந்தால் கேப்பையிலும் பால் கறக்கலாம் என்பதுபோல் கேணத்தனமான ஜேர்ணலிசம் பண்ணும் ஈழமுரசு போன்ற புலி ஒட்டுண்ணிகள் தமிழ் மக்களை என்ன எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்?

3) கருணா அணியினரை அழிக்க முஸ்லிம் இளைஞர்களை தமது உளவுப் பணிக்கு பயன்படுத்தும் வண்ணம் பொட்டம்மானுடைய சிறப்பு உளவாளிகள் கிழக்கில் களமிறக்கப்பட்டுள்ளனர். இதனூடாக கருணா தரப்பினரை முஸ்லிம் மக்களை நெருங்கவிடாது தமிழ் முஸ்லிம் விரிசல்களை தக்கவைப்பதே புலிகளின் முதல் நோக்கமாக உள்ளது.

கடந்த நவம்பர் 18 அன்று அக்கரைப்பற்று பெரியபள்ளிவாசலில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் கூட புலிகளது கையாலாகாத் தனத்தின் வெளிப்பாடாகவே இருந்தது. ஒன்றன்பின் ஒன்றாக புலிகளது பிரித்தாழும் தந்திரங்கள் தோல்வி கண்டமையே இந்தப் பள்ளிவாசல் மீதான தாக்குதலை புலிகள் மேற்கொள்ளக் காரணமாயிற்று. அதாவது பள்ளிவாசல் தாக்குதலுக்கு முன்னரும் பின்னரும் நடந்த நிகழ்சிகளை சற்று ஆராயும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போது இந்த உண்மைகள் புலனாகும். கடந்த ஆண்டு மே மாதம் கருணா தரப்பின் முக்கிய தளபதிகளில் ஒருவரான இனிய பாரதி என்பவர் ஆயுதங்களுடன் பயணித்தார் என்பதனால் மாகோ யாவில் வைத்து இலங்கைப் பொலிசாரால் கைது செய்யப் பட்டிருந்தார். மொன்றாகலையில் அவர் தடுத்து வைக்கப் பட்டிருந்தபோது அவரைக் கொல்வதற்காக பின்னப்பட்ட சதிக்கு ஒரு முஸ்லிம் பொலிஸ் உத்தியோகத்தரை புலிகள் விலை கொடுத்து வாங்க முயன்றனர். ஆனாலும் அந்தப் பொலிசாரின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்காமையால் அம்முயற்சி தோல்வி கண்டது. அதாவது இனியபாரதி அம்பாறை நீதிமன்றம் கொண்டுவரப்படுவது பற்றிய தகவல் தவறாகத் தெரிவிக்கப்பட்டு 18-05-05 அந்த முஸ்லிம் பொலிசாரால் இனியபாரதி காப்பாற்றப்பட்டார். இது புலிகளை கடும் கோபத்துக்குள்ளாக்கி இருந்தது. இதேபோன்று அவர் விடுதலையான பின்னர் அவருடன் வேறு ஏதோ குற்றத்திற்கான சந்தேகத்தின் பெயரில் தடுத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் விடுதலையாகி இருந்த பௌஸர் என்னும் இளைஞருடன் இனியபாரதிக்கு நட்புத் தொடர்ந்தது. இதனை அறிந்துகொண்ட புலிகளது உளவுப் பிரிவினர் இனியபாராதியின் சிறைக் கூட்டாளியான பௌசரை வைத்து அவரைக் கொல்லத் திட்டம் தீட்டினர். அதன்படி அந்த பௌசர் எனும் இளைஞரிடம் 1 லட்சரூபா பணமும் ஒரு கைத்துப்பாக்கியும் வழங்கப்பட்டிருந்தது. வேலை நிறைவேறினால் 25 லட்சரூபா தருவதாகவும் விலைபேசி கொலைமுயற்சிக்கு தூண்டியுள்ளனர். ஆனாலும் புலிகள் எதிர்பார்த்தபடி அந்த முஸ்லிம் இளைஞர் பணத்துக்காக விலைபோக மறுத்து கருணாதரப்பினரிடமே சரணடைந்துள்ளார். இந்த சதி தோற்கடிக்கப்பட்டதன் பின்னணியிலேயே - இரு புலிக்கொலையாளிகள் அக்கரைப்பற்றில் வைத்து கருணா தரப்பினரால் கைது செய்யப்பட்டு பின்னர் கொன்று வீசப்பட்டிருந்தனர்.இவர்களது சடலங்கள் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு அரசடிசந்திக்கு அண்மையில் ஒன்றும் வம்மியடி ஆற்றாங்கரையில் ஒன்றுமாக 15 நவம்பர் 2005இல் கண்டெடுக்கப்பட்டது. இந்தச் சம்பவம் பலருக்கு ஞாபகம் இருக்கலாம்.

கருணா தரப்பினருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் இதுபோன்ற செயற்பாடுகளின் ஊடாக பரஸ்பர நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தி முஸ்லிம் மக்களை கருணாதரப்பினரை நோக்கி நெருங்கவிடாது பார்த்துக்கொள்ளுதல், அதனூடாக கருணா தரப்பினர் அம்பாறை மாவட்டத்தில் மேற்குப்புறமாகவுள்ள எல்லைகளை அண்டிய முஸ்லிம்களுக்குரிய விவசாயப் பண்ணை நிலங்களை பின்தளங்களாக உபயோகிக்க முனைவதைத் தடுத்தல் புலிகளது நோக்கங்களாகவுள்ளன. ஒன்றாகவுள்ளது. அடுத்து இந்த முஸ்லிம் கருணா தரப்பு இடைவெளிகளை உருவாக்குகின்ற உத்தி சாத்தியமானால் அது காலப்போக்கில் முஸ்லிம்கள் மீது கிழக்குத் தமிழர்கள் கடும்போக்கொன்றை மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கும் என்பது புலிகளின் கணிப்பாக உள்ளது.

தமது கொலைவெறிகளுக்கு முஸ்லிம்கள் துணைபோக மறுத்துவருகின்றமையினால் புலிகளே முஸ்லிம்களைப் பழிவாங்குகின்ற செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றது. இந்த ஆத்திரமுறலுடன் கூடிய முஸ்லிம்களைப் பழிவாங்குகின்ற ஒரு நடவடிக்கைதான் அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலுக்கான தாக்குதலாகும். இந்த வெறியாட்டத்தில் ஏழு அப்பாவி பக்தர்கள் கொல்லப்பட்டனர். அதேவேளை தமது இந்தத் தாக்குதலூடாக அப்பகுதியில் ஒரு பதட்டநிலையைத் தோற்றுவித்து இனக்கலவரம் ஒன்றை உருவாக்கும் நோக்கம் புலிகளுக்கு இருந்தது. 'கருணா தரப்பினர் ஆயுதங்களுடன் ஓடிச்சென்று பள்ளிவாசலுக்குள் புகுந்தார்கள் என்று' முதலில் புலிகள் காரணம் சொன்னார்கள். ஆனால் தாக்குதலுக்கு முதல்நாள் இரவு பள்ளிவாசலின் ஒருபுறத்தே இருக்கின்ற தமிழ் குடும்பங்கள் இரவோடிரவாக புலிகளால் இடமாறிச் செல்லுமாறு கட்டளையிடப்பட்டு இருந்தனர். என்கின்ற செய்தி அம்பலமானது. ஆகவே இது முன்னேற்பாடுகள் நிறைந்த திட்டமிடப்பட்ட ஒரு தாக்குதல் என்பது தெரியவந்தது. புலிகளது கணக்கு வழக்கு மிக மோசமாக பிழைத்துப் போனதுடன் தாம் வைத்த பொறியிலேயே தாமே விழுந்தனர். மீண்டும் ஒரு இனஅழிப்பை புலிகள் திட்டமிடுகின்றார்கள் என்று முஸ்லிம்களது உணர்வலைகள் புலிகளை நோக்கித் திரும்பியது. ஒருவாரம் தொடர்ச்சியான கடையடைப்புகள் நடாத்தப்பட்டு தமது கடுமையான எதிர்ப்பை கிழக்கிலங்கை முஸ்லிம்கள் தெரிவித்தனர். அக்கரைப் பற்றுத் தொடங்கி மூதூர் வரை இந்த ஹர்த்தால் நடத்தப்பட்டது. புலிகளது மாவீரர் நாளையொட்டி அலங்கார வளைவுகளை அக்கரைப்பற்று நகருக்குள் வைக்க முயன்ற புலிகள் முஸ்லீம் களால் தடுத்துத் திருப்பி அனுப்பப்பட்டனர். அதைத் தொடர்ந்து தமது பொறுப்பாளர்களை வந்து சந்திக்குமாறு அக்கரைப்பற்று சமூகப் பிரமுகர்களுக்குப் புலிகள் அழைப்பு விடுத்திருந் தனர்.ஆனால் புலிகளது எல்லா அழைப்பையும் முஸ்லீம்கள் உதாசீனம் செய்திருந்தனர். 25நவம்பர்2005இல் முஸ்லீம் தேசியக் கூட்டமைப்பு கிழக்கில் முஸ்லீம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அடாவடித் தனங்களைக் கண்டித்து கொழும்பில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடாத்தியது. அதே போன்று மென்மேலும் தினக்கொலைகளைச் சந்திக்க நேரிட்ட கிழக்கு முஸ்லீம்கள் மேற்படி சம்பவங்களைக் கண்டித்து 16 டிசம்பரில் முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி கொழும்பில் இன்னுமொரு ஆர்ப்பாட்டத்தைச் செய்தது. அம்பாறை மாவட்டத்திலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பணிமனைக்கு விஜயம் செய்த கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்றூ.'.ப் ஹக்லாண்ட் அவர்கள் முஸ்லீம் பிரதிநிதிகளுடன் ஒரு சந்திப்பை நடாத்தினார். 20 டிசம்பரில் நடைபெற்ற இச்சந்திப்பில் 'இரு இனங்கள் மத்தியிலும் விரிசலை ஏற்படுத்தி சுயலாபம் டேடும் முயற்சிகளில் சில அரசியல் சக்திகள் பின்னணியில் நின்று செயற்படுகின்றன' என்று புலிகளை மறைமுகமாகச் சாடியது மட்டுமன்றி 'இதனால் முரண்பாடுகள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும், இதனையிட்டு மக்கள் பொறுமையுடனும் நிதானமாகவும் செயற்படவேண்டியது அவசியம்' எனவும் வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த எதிர்ப்ப லைகளுக்கு முகம் கொடுக்க முடியாத புலிகள் இந்தப் படு கொலைகளை தாம் செய்யவில்லை என்றும் அதைக் கருணா தரப்பினரே செய்ததாகவும் 5 வயது சிறுவனைப்போல் அழாப்பினர். இது கொஞ்சம்கூட கிழக்கில் எடுபடவில்லை.

4) முஸ்லிம் மக்களிடமிருந்து தமிழ் முஸ்லிம் நல்லுறவுக்காக குரலெழுப்பும் எழுத்தாளர்களையும், புத்திஜீவிகளையும் இஸ்லாமிய பயங்கரவாதிகளாகச் சித்தரித்து அவர்களது பணிகளை விட்டு ஒதுங்கச் செய்கின்ற முயற்சிகளிலும் புலிகளது பிரச்சார ஊடகங்கள் அண்மைக்காலமாக ஈடுபட்டு வருகின்றன. இதனூடாக தமிழர்களை நோக்கி முஸ்லிம்கள் நீட்டுகின்ற நேசக் கரங்களை ஒடிப்பதே புலிகளின் நோக்கமாகவுள்ளது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். அக்கரைப்பற்றில் தமது சதித்திட்டத்துக்கு விலைபோகாத இந்த முஸ்லிம் இளைஞரான பௌசருடைய பெயரை வைத்துக்கொண்டு கொழும்பில் வாழுகின்ற எழுத்தாளரான பௌசர் அவர்களை அல்கைதா உறுப்பினராக திரிபுபடுத்தி வம்புக்கிழுத்தது நிதர்சனம். இஸ்லாமியர் அணிகின்ற சிறிய வெள்ளைத் தொப்பி ஒன்றை அணிந்திருக்கின்ற ஒருவருடைய நெற்றியும் தொப்பியும் மட்டுமே தெரியக்கூடியதான பாதிவடிவிலான போட்டோவை மட்டும் பிரசுரித்து புஸ்பா தங்கத்

www.tamilarangam.net

துரையினுடைய திகில் தொடர் பாணியில் யார் இந்தப் பௌசர் என்று 11 டிசம்பர் 2005இல் கடைவிரித்தது நிதர்சனம் என்கின்ற புலிகளின் இணையத்தளம். முஸ்லிம் சமூகத்துள் மிகவும் மதிக்கப் படுகின்ற புத்திஜீவியான இந்தப் பௌசர் கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லீம் நல்லுறவுகளை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காகப் பலவழிகளிலும் தனது வாழ்வைச் செலவிட்டு வருபவர். சுமார் 10 வருடங்களுக்கு மேலாக இலங்கையிலே முதல்தரமான ஒரு இலக்கியப்பத்திரிகையை நடாத்தி வருபவர். 'மூன்றாவது மனிதன்' எனும் இச்சஞ்சிகை இலங்கையில் மட்டும் அல்ல இந்தியா மற்றும் புகலிட நாடெங்கும் பிரபல்யமானது. இந்தச் சஞ்சிகையின் பெயரைக்கூட அறிந்துகொள்ள முடியாதது மூன்றாவது கண் என்று ஞானசூனியமாக எழுதியது நிதர்சனம். இந்த இலட்சணத்தில் அல்கைதா பற்றிய புலனாய்வு செய்வதற்கு இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? புலிகளைப் பொறுத்தவரை பொட்டம்மானுடைய இந்த பொறுக்கித்தனமான புலனாய்வுத் தகவலுடன்தான் பாலசிங்கத்தை ஜெனிவாவுக்கு அனுப்பியிருந்தார்கள். அவரும் அங்கே வந்து 'ஒட்டுக்குழு வரிசை யில் ஜிகாத் பற்றிய' தங்களது கட்டுக்கதைகளை அவிழ்த்து விட்டார். ஆக மொத்தத்தில் படித்த மனிசனாச்சே ஏதாவது விசயம் இருக்கும் என்று இலங்கையில் பணிபுரிகின்ற தேர்தல் கண்காணிப்புக்கான சர்வதேச அமைப்பான 'போப்ரல்' அமைப்பு பாலசிங்கத்தை மேற்கோள்காட்டி ஜிகாத்குழு' பற்றி அறிக்கை விட்டது.

ஆனால் விசமத்தனமான இந்த சாட்சியம் குறித்து முஸ்லிம் சமூகத்தில் இருந்து பலவாறாகவும் எழுந்த எதிர்ப்ப றிக்கைகளுக்கு யாராலும் பதில் சொல்ல முடியவில்லை. முஸ்லிம்கள் அதிகம் வாழும் பகுதிகளில் போப்ரல் அமைப்பின் அறிக்கையையிட்டு கடையடைப்புக்கு கோரிக்கை விடப்பட்டது. உலமாக்கள் சபை போப்ரல் அமைப்பு பொய் சொன்னதற்காக முஸ்லிம்களிடம் மன்னிப்பு கேட்கவேண்டும் என்று கடுமையான தொனியில் அறிக்கை விட்டது. 06-03-2006 திகதி லண்டன் பி.பி.சி.க்கு கருத்துத் தெரிவித்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ராவூப் ஹக்கீம் அவர்கள். 'அப்படியொரு ஆயுதக்குழு இருப்பது என்பது திட்டமிடப்பட்ட சதி. சர்வதேசம் முஸ்லிம் பயங்கரவாதம் என்கின்ற பீதியை எதிர் கொண்டிருக்கும் நிலையில் இது திட்டமிட்டே எம்மீது சுமத்தப்படுகின்ற பழியாகும்.' எனக் கூறி னார்.

இறுதியில் முஸ்லிம்களது கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் போப்ரல் அமைப்பு தனது ஜிகாத் பற்றிய கருத்து புலிகளது ஊடகங்களால் திரிக்கப்பட்டு விட்டதாகவும், எப்படியிருந்தபோதும் தனது கருத்தை வாபஸ்(.....) பெறுவதாகவும் கூறிக்கொண்டது. அதன் பின்னர் ஜிகாத் பற்றிக் கூக்குரல் இட்ட அதிகமான புலிகளின் ஊடகங் கள் தமது வால்களை சுருட்டிக் கொண்டன. இதே போன்றுதான் லண்டனில் வாழ்ந்துவரும் மனித உரிமைப் பணியாளனான பஸீர் என்பவர் பற்றி நிதர்சனம் மிகவும் மோசமான முறையில் அவரை ஒரு அல்கைதா பயங்கரவாதி என்று அவரது புகைப்படம் ஒன்றினையும் பிரசுரித்து 09 டிசம்பர்2005அன்று செய்தி வெளியிட்டிருந்தது. இவர் லண்டனில் இருந்து இயங்குகின்ற முஸ்லிம் தகவல் நடுவகம் எனும் அமைப்பினை செயற்படுத்தி வருபவர். தனது சொந்தவாழ்வில் ஒரு கண்ணியமாக வக்கீலாக கடமை புரிந்து வரும் இவர் இலங்கையில் முஸ்லிம் சமூகத்தின் மீது நடத்தப்படும் மனித உரிமைகள் மீறல்கள் குறித்து ஆவணங்க ளைச் சேகரித்து வருகின்றார். வானொலிகளிலும் கூட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தின் தமிழ் முஸ்லிம் நல்லுறவுக்காக ஓங்கிக் குரல் கொடுத்துவருகின்ற இவரது பணிகளை முடக்கவேண்டும் என்பதுதான் புலிகளது முக்கிய நோக்கமாக உள்ளது. எனவேதான் புலிகளது இணையத்தளமான நிதர்சனம் இவரை ஒரு அல்கைதா பயங்கரவாதியாக உருவகித்து குற்றஞ் சுமத்தியுள்ளது. இன உறவுக்காக உண்மையாக உழைக்கின்ற அனைவரும் நிதர்சனத் தினுடைய இந்த கொச்சைத்தனமான குற்றச்சாட்டுகளுக்கு தமது வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு டையவர்களாக உள்ளோம்.

இவை அனைத்து திருவிழாக்களையும் புலிகள் ஏன் முஸ்லிம்கள் மீது அரங்கேற்றி வருகிறார்கள் என்பதுதான் இங்கே எழும்புகின்ற கேள்வி. 'இஸ்லாமிய பயங்கரவாதம்' சர்வதேச அளவில் இன்று எழுந்திருக்கும் எதிர்ப்புணர்வுகளை தமக்கு சாதமாக பாவித்துக் கொள்ளுதலுக்கான புலிகளது இராஜதந்திர முனைப்பு இதுவென பல கருத்துக்கள் வெளிவருகின்றன. ஆனால் அது புலிகளைப் பற்றிய மிகைப்படுத்தப்பட்ட ஒரு ஆய்வாகத்தான் இருக்க முடியும். ஏனெனில் சர்வதேச ஆதரவு பற்றிய இராஜதந்திர அணுகுமுறை கொஞ்ச நஞ்சமாவது புலிகளிடம் இருந்திருந்தால் இன்று சர்வதேசங்கள் ஒவ்வொன் றிலும் அவர்கள் மூக்குடைபட்டு நிற்கவேண்டியதில்லை. தடுப்பூசிப் பயத்துக்கு ஓடி ஒழிக்கின்ற பள்ளிச் சிறுவர்களைப்போல் புலிகள் இன்று ஜெனீவாவிற்கு செல்ல மறுத்து அடம்பிடிக்கவேண்டிய தேவையில்லை.

சிலவேளை ஜெனிவா முதற்சுற்றுப் பேச்சுக்களில்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜிகாத் பற்றிய குற்றச்சாட்டை முன்வைத்ததில் அப்படியொரு சர்வதேசம் பற்றிய நோக்கம் தெரிந்தோ தெரியாமலோ இரண்டாம் பட்சமாக வாய்த்திருக்கலாம். ஏனெனில் புலிகளது எல்லாவித நகர்வுகளும் தமிழ் மக்களிடையே தமக்கான ஆதரவு தளத்தை தக்கவைப்பதிலும் தமது திறைசேரியை நிரப்பிக்கொள்வதிலுமே பின்னிப்பிணைந்திருப்பது நாம் கண்டுவரும் வரலாறு. அதிலும் குறிப்பாக 2004 கிழக்குப் பிளவின் பின்னர் கிழக்கிலங்கைத் தமிழ் மக்களை எப்படி கருணாவிடம் இருந்து பிரித்து தம்பக்கம் மீண்டும் இழுப்பதென்பதிலேயே புலிகள் குறியாய் இருந்து வருகிறார்கள். முஸ்லிம் சமூகத்தின் மீது கொலைகள் கொள்ளைகள், கடத்தல்கள், கப்பம் வேண்டுதல் என்று புலிகளே பலவகை நெருக்கடிகளையும் கொடுத்து வருகிறார்கள். அதே வேளை தமது சமூகத்தின் மீது அதிகரிக்கப்பட்டுவரும் வன்முறைக ளுக்கான ஒரு நிரந்தரத் தீர்வு என்பதும் கிழக்குமாகாணத்தின் எதிர்கால அமைதிக்குமான வழி என்பதும் இனநல்லுறவினைப் பேணுவதினூடாகவே சாத்தியமாகும் என்று நம்புகின்ற புத்தி ஜீவிகள் முஸ்லீம்களிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்க ளது செல்வாக்கு முஸ்லீம் சமூகத்திடம் இருந்து அகற்றப்பட வேண்டும் என்பதை புலிகளது நோக்கமாக வுள்ளது. அதற்காகவே இந்தத சமாதான விரும்பிகளைக் கொச்சைப்படுத்தி சேறடித்து அவர்களைத் தங்கள் பணிகளில் இருந்து ஓரம் கட்டுவதை நோக்காக்கொண்டு புலிகளது ஒட்டுப் படைகளான இணையத்த ளங்களும் செயற்பட்டு வருகின்றன.

முஸ்லீம் புத்திஜீவிகளையும் மிதவாத சனநாயகப் போராளிகளையும் தம் சமூகத்தினை வழி நடாத்தும் முக்கி பாத்திரங்களில் இருந்து அகற்றுவதினூடாக ஏற்படுகின்ற வெற்றிடத்தை முஸ்லீம் தீவிரவாத சக்திகளைக் கொண்டு நிரப்பும் கள்ள நோக்கமே புலிகளது விருப்பமாகும். இன்று முஸ்லீம்களிடம் ஆயுதக்குழுக்கள் இருக்கிறது என்பதல்ல முஸ்லீம்களிடம் ஆயுதக்குழுக்கள் இல்லை என்பதுதான் புலிகளது உண்மையான பிரச்சனையாகும். முஸ்லீம்களிடம் தீவிரவாதமும் வன்முறையும் அதிகரித்து கிழக்கு மாகாணத் தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடாத்தப்படவேண்டும் என்பதற்காகவே புலிகள் தங்களது கஜரததுரகபதாதிகள் அனைத்தையும் பயன்படுத்துகிறார்கள் சுருங்கச் சொன்னால் இன்று இலங்கையில் நடக்கின்ற எல்லாவித அரசியல் சூதுகளும் கிழக்கு மாகாணத்தை யார் அடாத்துப் பண்ணுவது என்பது பற்றியதேயாகும். இதற்காகவே புலிகள், அரசு, கருணா என்று முத்தரப்பும் மூச்சடைத்துப் போனாலும் முத்துக்குளிக்கின்ற நப்பாசையில் 'கிழக்கை மீட்க' துடியாய்த் துடிக்கிறார்கள். இந்த கிழக்கை அடிப்படையாகக் கொண்ட பனிப்போர்தான் இன்று இலங்கையில் நடைபெறுகின்றதே அன்றி சமாதானத்திற்கான முயற்சிகள் அவை என்று யாரும் எண்ணியிருந்தால் அது தப்பாகும். இந்தப் பின்னணியில்தான் இன்று புலிகளது இலக்கு கிழக்குத் தமிழர்களை வென்றெடுப்ப தனூடாக கிழக்கு மாகாணத்துக்கான தமது ஆதிக்கத்தை உறுதி செய்வதாகும். இதற்காக இவர்கள் கருணாவை துரோகியாக்கி கடந்த இரண்டு வருட காலமாக தீ மிதித்தாலும் அது கிழக்கு மண்ணில் எடுபடுவதாய் இல்லை. ஆகவே காலம்காலமாக ஆக்கி ரமிப்பாளர்கள் செய்த வருகின்ற பிரித்தாளும் தந்திரமே இன்று புலிகளது கிழக்கு நோக்கிய அவர்களது உள்வீட்டுப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் இறுதி அஸ்திரமாகவுள்ளது. ஆனால் மறுதலையாக கருணாவினது பிளவு மூலம் கிழக்கில் உருவாகியுள்ள தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் எனும் கட்சியானது எதிர்கால அரசியலில் பிரதேச ஒற்றுமையுடன் கூடிய இனபேதமற்ற பயணத்தில் தமிழர்களும் முஸ்லீம்களும் இணைந்து பயணிக்கும் வாய்ப்புக்களைத் துரிதப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதை அறிய முடிகிறது. மீண்டும் மீண்டும் தமிழ் முஸ்லிம் நல்லுறவு அங்கே வளர்ந்து வருகிறது. அதனை சீர்குலைத்து அதில் குளிர்காய புலிகள் எடுத்துவரும் எல்லாவித முயற்சிகளும் தோற்கடிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் மீள உருவாகி வருகின்ற இனவுறவுகளில் விரிசல்களை ஏற்படுத்த புலிகள் மேற்கொண்ட பல சதி முயற்சிகள் முஸ்லிம் மக்களின் நிதானமான அமைதிகாத்தலினால் முறியடிக்கப்பட்டு வருகின்றன. இதனை சாவதேச அமைப்புகள் குறிப்பிட்டு பாராட்டும் தெரிவித்திருந்தன. முஸ்லிம்களை ஆத்திரமூட்டி தமிழர்களுக் கெதிராக தூண்டிவிடுவதனூடாக கிழக்குவாழ் தமிழர்களுக்கு பாதுகாப்பு புலிகளே என நிறுவும் முயற்சியில் மண் விழுந்திருக்கின்றது. குறிப்பாக புலிகளுக்கும் இலங்கையில் உள்ள அனைத்து அரசியல் சக்திகளுக்கும் கிழக்கினது அமைதியை சீர்குலைத்து அங்கேயொரு கலவரத்தை ஏற்படுத் துவது இனிமேல் முடியாது என்கின்ற செய்திகள் வெளிப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது.

ஆரம்பத்தில் முஸ்லீம்களைப் பொறுத்தவரை முஸ்லீம்கள் என்ற தனித்துவத்தைக் கைவிட்டு தமிழர்களாக மட்டுமே இருக்கவேண்டுமென தமிழ்த்தேசியம் அவர்கள் மீது ஒற்றை அடையாளத்தைத் திணித்து நெருக்குவாரம் பண்ணியது. அதே நெருக்கடியையே கருணா பிளவின் போதும் கிழக்குத் தமிழர்கள் மீது செலுத்தியது. கிழக்குத் தமிழர்கள் கிழக்கிலங்கை மக்களாகவும் அதேவேளை தமிழர்களாகவும் இருக்கக் கூடிய பன்முகத்தன்மையை அவர்களுக்கு மறுத்தது. இந்தத் தமிழ்த் தேசியம் எனும் பெயரில் யாழ்ப்பாணியம் செலுத்திய மேலா திக்கமானது கிழக்கு வாழ் தமிழ் முஸ்லீம்கள் எனும் இருசமூ கங்கள் மீதும் ஒரேமாதிரியான அணுகுமுறையையே கொண்டிருக் கிறது. இதனால் இந்த இரு சமூகங்களும் இணைந்து தமது அரசியலில் இருந்து தமிழ் எனும் இன அடையாளத்தைக் களைந்து தன்நிலை அடையாளங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் இருக்கிறார்கள். இந்த நவீன அரசியலின் தொடக்கப்புள்ளி தமது வாழிடங்களை அடையாளப்படுத்துகின்ற பிரதேச ரீதியான ஒருங்கிணைப்பில் ஆரம்பமாகின்றது.

அத்தோடு இது தமிழ்த்தேசியம் என்பதின் தோல்வியை பறை சாற்றுகின்றது.

ஆக சாமன்யர்களான போதும் 'கிழக்கு' வாழ் தமிழர்க ளும் முஸ்லிம்களும் இணைந்து தமக்கானதொரு அரசியலை நோக்கி பயணிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த பயணத்தின் தொடக்கமானது புலிகளுக்கு ஒரு அரசியல் செய்தியை மிக அழுத்தமாக வெளிப்படுத்தியுள்ளது. 'யாழ்ப்பாணியத்தின் மானம் காக்கும் கோவணம் அல்ல கிழக்கு மாகாணம்' என்பதே அது. இறுதியாக கடந்த 21-08-2005 இல் சாய்ந்தமருது வைத்தியசாலைக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழாவில் உரையாற்றியபோது தேசிய காங்கிரஸ் தலைவரும் கிழக்கிலங்கை உள்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஏ.எல்.எம்.ஏ.அதாவுல்லா அவர்கள் குறிப்பிட்ட சில வார்த்தைகளுடன் இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

'வட கிழக்கிலே குறிப்பாக கிழக்கிலே அமைதியும் கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்றால் வடக்கும் கிழக்கும் தனித்தனியாகப் பிரியவேண்டும். என்றோ ஒரு நாள் ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுமானால் இதுதான் தீர்வு. இதுதான் யதார்த்தம். இதைத் துணிந்து கூறுவதற்காக யாரும் என்னை அடக்கி ஒடுக்க முடியாது.'


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முஸ்லிம்களின் மீதான புலிகளின் போக்கு



**கலில் ஜிப்ரான்**

**1983 யூலைக்கலவரங்களை அடுத்து மாவனல்லையில் முஸ்லிம்களுடன் வாழ்ந்த உறவினை தனது இடதுசாரி சிந்தனைகளால் முஸ்லிம்களுக்கு கிழக்கில் ஏற்பட்ட துயரங்கள் குறித்து எழுதி முஸ்லிம்களின் நண்பனாக விளங்கிய வ.ஐ.ச.ஜெயபாலன் புலிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தவகையில் மாற்று இயக்கங்களைச் சேர்ந்த பலர் இவ்வாறான முஸ்லிம்களுக்குள் ஊடுருவும் செயற்பாடுகள் குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்தவரிசையிலேயே ஜி.நடேசன் (முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர், சோதிலிங்கம், ரி.சிவராம் (முன்னாள் plot உறுப்பினர்.) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாகும்.**

புலிகளின் புலனாய்வுச் செயற்பாடுகள் முஸ்லிம்க ளுக்குள் ஊடுருவும் முயற்சி களை 1980 களின் நடுப்பகு தியில் தீவீரமாக ஈடுபட்டதுடன் முஸ்லிம் இளைஞர்களை தங்களது இயக்கத்தில் இணைத்தும் செயற்பட்டனர். புலிகளின் புலனாய்வுத் துறைத்தலைவர் பொட்டம்மான் கூட கிழக்கில் பல்வேறுபட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு அங்கிருந்து சிங்கள மக்களை விரட்டியதும், முஸ்லிம் மக்களின் அரசியல் புதிய தனித்துவ இலக்கைநோக்கி நகரத் தொடங்கியதும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை தொடுத்து கிழக்கிலே முஸ்லிம்களை கிராமம் கிராமமாக தாக்கியும், வெளியேறுமாறு நெருக்கியும் வந்தனர் இந்த நெருக்கடிகளாலும் இராணுவ (இலங்கை) விஸ்தரிப்பினாலும் முஸ்லிம்களின் அரசியல் தீவிரமாக தனித்துவத்தினை நோக்கி நகர்ந்தது இதனால் தனது உபாயங்களை புலிகள் மாற்றிக்கொள்ள வேண்டியேற்பட்டது.

சிங்களவர்களை நகர்புறங்களில் இருந்து எச்சரித்து விரட்டியும் எல்லைப்புற கிராமங்களில் ஆங்காங்கு கொன்றும் கிழக்கைவிட்டு விரட்டிய அனுபவத்துடன் முஸ்லிம்களை இனச்சுத்திகரிப்புச் செய்ய முற்பட்டனர். இதற்கு முன்னோடியாக கிழக்கிலே முஸ்லிம்களை அரசியல் ரீதியாக முடக்கும் நோக்கத்துடன் முஸ்லிமை காங்கிரஸின் முக்கிய பிரமுகர்களை கிழக்கில் இருந்து 'தேசபிரதிஸ்டம்' செய்தனர். பின்னர் கிழக்கிலே 1990 ஆகஸ்டில் தொடங்கி ஏறாவூர் காத்தான்குடி அளிஞ்சிபொத்தானை... என்று பாரிய படுகொலைகளை செய்தனர். அதேவேளை அக்டோபர் மாதம் வடமாகாணத்தில் இருந்து முஸ்லிம்களை இனச்சுத்திகரிப்புச்செய்து வடக்குப்புலிகள் கரிகாலனின் (கிழக்குப் புலிகள்) வற்புறுத்தலால் செய்யப்பட்டதான ஒரு சூழ்நிலையை வதந்தியை உலாவிட்டு வடக்குப் புலிகள் முஸ்லிம்களின் உயிர்களுக்குப் 'பாதுகாப்பளித்து□ மீண்டும் அவர்களை குடியேற்றச் செய்வோம் என்ற சூழ்நிலையை உருவாக்கினார்கள்.

மீண்டும் இராணுவம் கிழக்கிலே காலூன்றத் தொடங்கி முஸ்லிம்கள் தங்கள் பாதுகாப்புக்கென ஊர்காவல் படையாக சேரும் சூழ்நிலை உருவாக அதனால் தமிழ் மக்களும் பாதிக்கப்பட்டனர். இந்த நிலையை மீண்டும் புலிகள் தமக்கு சாதகமாக பயன்படுத் தினர். ஆனால் தமது நீண்ட தமிழீழத் தாயகக் கனவிற்கு முஸ்லிம்களை ஊடறுத்து செயற்பட வேண்டிய தேவை குறித்து

www.tamilarangam.net

தீவிரமாக செயற்பட்டனர். இது தொடர்பில் வெளியில் வாழும் தமிழ் புத்திஜீவிகள் பங்களிப்பு செய்தனர்.

முஸ்லிம்களை மீண்டும் வெல்வதுடன் அவர்களை ஒரு அச்சமுள்ள சூழ்நிலையில் தமிழர்கள் என்ற அடிப்படையில் தாங்கள் மதம் சாராத (secular) ஆட்சியினை நிறுவ முயற்சிப்ப வர்கள் என்பதால் முஸ்லிம்கள் அச்சமுறத் தேவையில்லை. ஆயுத பலமும் ஏகப்பிரதிநிதித்துவமும் நோக்கிய தங்களது நகர்வுகளை தந்திரோபாயமாக கையாள பெரிதும் தமிழ் புத்திஜீகள் பத்திரிகையாளர்களை அணுகினர். எதிர்முகாம்களில் உள்ள தமிழர்களையும் அணுகும் முயற்சியும் உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் தொடர்பு கொண்டவேளையில் அவர்களுடன் முஸ்லிம் களுடன் தொடர்பு கொண்டவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

புலிகளின் குறி முதலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்பதனால் அவரை முதலில் வழிக்கு கொண்டுவரும் முகமாக செயற்பாடுகள் திட்டமிடப்பட்டன. அவ்வாறு வழிக்கு வராதவிடத்து அவரை அகற்றுவதற்கான திட்டங்களும் தீட்டப்பட்டன. அஸ்ரப்பும் தேசிய ஐக்கிய முன்னணி என்று தனது கட்சியினை பரந்துபட்ட சகல இன மக்களையும் கொண்ட தான கட்சியாக மாற்றி தானும் தேசிய அரசியல்வாதியாக இலங்கை அரசியலில் மிக முக்கியமான தேசியப் பிரமுகராக வரவேண்டும் என்ற ஆசை காரணமாக தனது தனித்துவ 'இனவாத' கட்சியில் இருந்து மெதுவாக விடுபட்ட சூழ்நிலை யையும் புலிகள் கருத்தில் கொண்டனர். அரசியல் ரீதியாக முஸ்லிம்களிடையே ஊடுருவ முயற்சிகள் செய்யப்பட்ட வேளையில் கிழக்கிலே இலக்கியம், சமூகசேவை, மத ஊடுரு வலுக்கான காய்களும் நகர்த்தப்பட்டன. 1990களில் பின்னர் பிளவுற்றிருந்த தமிழ் - முஸ்லிம் உறவு புறச்சூழ்நிலை, யதார்த்தங்களால் புதுபிக்கப்பட்ட சூழ்நிலை புலிகளுக்கு சாதகமாக அமைந்தது.

1983 யூலைக்கலவரங்களை அடுத்து மாவனல்லையில் முஸ்லிம்களுடன் வாழ்ந்த உறவினை தனது இடதுசாரி சிந்தனைகளால் முஸ்லிம்களுக்கு கிழக்கில் ஏற்பட்ட துயரங்கள் குறித்து எழுதி முஸ்லிம்களின் நண்பனாக விளங்கிய வ.ஐ.ச.ஜெயபாலன் புலிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தவகையில் மாற்று இயக்கங்களைச் சேர்ந்த பலர் இவ்வாறான முஸ்லிம்களுக்குள் ஊடுருவும் செயற்பாடுகள் குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்தவரிசையிலேயே ஜி.நடேசன் (முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர், சோதிலிங்கம், ரி.சிவராம் (முன்னாள் plot உறுப்பினர்.) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

கிழக்கில் ஓட்டமாவடி தொடக்கம் பொத்துவில் வரை முஸ்லிம்களின் கிராமங்களில் அரசியல்வாதிகள், இலக்கிய வாதிகள், பத்திரிகையாளர்கள் என்று பல்வேறுபட்ட தரப்பின ருடனும் அரசியலும், இலக்கியமும் தர்க்கித்து அவர்களது மனநிலைகளை புரிந்துகொண்டு தனது பணியினை வ.ஐ.ச. ஜெயபாலன் புரிந்துள்ளார் என்று அறியமுடிகிறது. இந்தவகையில் மறைந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப் உடன் தொடர்புகளை நெருக்கமாக ஏற்படுத்திக்கொள்ள பசீர் சேகுதாவுத் எனப்படும் சிறிலங்கா மு.காங்கிரஸ் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய (முன்னாள் ஈரோஸ் பா.உறுப் பினர்.) உதவிபுரிந்துள்ளார். இவர் அஸ்ரப்புடன் இஸ்லாமிய 'சூபி' கருத்தியல்களுடன் உடன்பட்டவராகவும் காணப்பட்டார். தனது நெருக்கத்தினை பயன்படுத்தி வ.ஜ.ச.ஜெயபாலனை அஸ்ரப்புக்கு அறிமுகப்படுத்தினார். இந்த நெருக்கத்தினூடாக புலிகளையும் அஸ்ரப்பையும் இணைக்கும் பணியில் வ.ஐ.ச. ஜெயபாலன் வெற்றி பெற்றதாக கூறியிருந்தார். எனினும் இந்த முயற்சிகளில் ஏற்பட்ட தொடர்புகளுக்கும் பின்னாளில் தமிழ் வேட்பாளர்களை தம்மோடு இணைத்து திகாமதுல்ல மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடக் காரணமாயிருந்தவர் யார் என்பது குறித்து மாறுபட்ட கருத்துக்கள் உண்டு. ஆயினும் அஸ்ரப்பின் கொலையை புலிகள் செய்தபின்னர் அதுகுறித்த விசாரணைகள் நீதியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. என்பது மாத்திரமல்ல அவ்வாறான விசாரணையை உளப்பூர்வமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமையும் வற்புறுத்தவில்லை.

வ.ஐ.ச.ஜெயபாலன் மே.1998 இல் 'உயிர்த்தெழும் கவிதை'த் தொகுதியினை அக்கரைப்பற்றில் வெளியிட்டார். இக்கவிதைத் தொகுதியிலே 'அழுவதே விதியென்றால்' என்ற கவிதை வடமாகாண முஸ்லிம்களில் வெளியேற்றத்தினை விதியென்று சகிக்க வேண்டியதொன்றாக விமர்சனம் செய்யப பட்டது. புலிகள் சார்பாக மன்னிப்புக் கேட்பதற்கு பதிலாக புலிகள் தான் மக்கள் என்பதுபோல் தமிழ் மக்கள் சார்பில் மன்னிப்புக் கேட்பதாய் இக்கவிதை அமைகிறது என விமர்சிக்கப்பட்டது. விதியென்று வெறுமனே புலிகளுடன் சமரசம் செய்ய முஸ்லிம் மக்களை கருத்தியல் ரீதியாக மூளைச்சலவை செய்கின்ற முயற்சியின் அங்கமாகவே இதனைப் பார்க்கவேண்டும்.

இலக்கியமும் பத்திரிகைத் துறையைச் சார்ந்த பலர் இந்த பணியினைச் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டனர். நடேசன், சிவராம் ஆகியோர் தங்களது தொடர்புகள் ஊடாக கிழக்கு முஸ்லிம்களை இணைக்கும் பணியில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் புலப்படுகின்றன. இதற்கு கிழக்கிலங்கை முஸ்லிம் பத்திரிகை யாளர்கள் சங்கத்தினரின் தமிழ்செல்வனுடனான சந்திப்பும் ஒரு உதாரணமாகும். இத்தகைய ஊடுருவல்கள் பல்வேறு தளங்களில் தந்திரோபாயமாக திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் சமூக சேவைகளுடனான புலிகளின் ஊடுருவல்களை சுனாமியின் பின்னரான நிலைமைகளையும் திருகோணமலை இனவன்முறைகளும் மேலும் முஸ்லிம் கிராமங்களில் உள்ள வறுமை, அரசியல் சந்தர்ப்பவாதம் என்பவற்றையும் பயன்படுத்தி புலிகள் கச்சிதமாகவும் அதேவேளை சர்வதேப் பிரச்சாரத் திற்காகவும் பயன்படுத்திவருகின்றனர். அவ்வாறே மதமுரண்பாட்டு நிலையை காத்தான்குடியிலே பயன்படுத்தும் முயற்சியில் அண்மையில் புலிகள் தோல்விகண்டதும், மறுபுறமாக அண்மைக் காலமாக 'வஹ்ஹாபி' எனப்படும் சவூதி இஸ்லாமியப் பிரிவினர் அமெரிக்காவுக்கு எதிரான பயங்கரவாத செயற்பாடுகளை ஊக்குவிக்கின்ற ஒரு மதப்பிரிவனராக அமெரிக்கா கருதுவதால் அந்தப் பிரிவினருக்கும் சூபிக்குமிடையிலான ஒரு மதமுரண்பாடாக உலகுக்கு காட்டுகின்ற முயற்சியிலும் புலிகள் இறங்கியுள்ளனர். ஆனால் உண்மையில் வஹ்ஹாபி பிரிவினர் என்பவர்கள் இலங்கையில் குறிப்பிடத்தக்க முஸ்லிம் பிரிவினர் அல்ல. குறிப்பாக உலகப் பயங்கரவாதத்தினை 'ஆதரிக்கின்ற' பகுதியினரான முஸ்லிம்களாக 'சூபி' பிரிவு முஸ்லிம்களை எதிர்க்கின்ற கிழக்கு முஸ்லிம்களை திரித்துக் காட்டுகின்ற முயற்சியிலும் இறங்கியுள்ளனர்.

## சமூகசேவைகளுடான புலிகளின் ஊடுருவல்

பல்வேறு உள்ளூர், வெளியூர் அரசசார்பற்ற நிறுவ னங்களின் முகவர்களாக அல்லது உள்ளூரில் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் முஸ்லிம் அரசசார்பற்ற நிறுவ னங்களுக்கும் உதவி வழங்கி, வழிநடத்தி முஸ்லிம் மக்களிடம் இனஉறவினைப் பேணவும் சமூக விழிப்புக்கு வழிகாட் டவும் என்றபோர்வையில் சுனாமியின் பின்னர் கூடியளவில் முனைப்பு பெற்றுள்ள அதிக அளவில் வெளிநாட்டு மாகாண தமிழ் துறைகள் நிபுணர்களைக் கொண்டதான வைத்திய, கணனி, உளவியல்

www.tamilarangam.net

மருத்துவம் என பல்துறை உதவிகளுடான ஊடுருவல். இந்த வகையில் உள்ளூரில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO) முக்கிய பங்கு வகிக்கிறது. இவர்கள் முஸ்லிம்களுக்கு உதவி செய்வதில் தாங்கள் விசால மனத்துடன் செயல் பவ.ஐ.ச.ஜெயபாலன் மே.1998 இல் 'உயிர்த்தெழும் கவிதை'த் தொகுதியினை அக்கரைப்பற்றில் வெளியிட்டார். இக்கவிதைத் தொகுதியிலே 'அழுவதே விதியென்றால்' என்ற கவிதை வடமாகாண முஸ்லிம்களில் வெளியேற்றத்தினை விதியென்று சகிக்க வேண்டியதொன்றாக விமர்சனம் செய்யப்பட்டது. புலிகள் சார்பாக மன்னிப்புக் கேட்பதற்கு பதிலாக புலிகள் தான் மக்கள் என்பதுபோல் தமிழ் மக்கள் சார்பில் மன்னிப்புக் கேட்பதாய் இக்கவிதை அமைகிறது என விமர்சிக்கப்பட் டது. விதியென்று வெறுமனே புலிகளுடன் சமரசம் செய்ய முஸ்லிம் மக்களை கருத்தியல் ரீதியாக மூளைச் சலவை செய்கின்ற முயற்சியின் அங்கமாகவே இதனைப் பார்க்க வேண்டும்.ட்டு முஸ்லிம் மக்களுக் காக தங்களது அமைப்பும் உலகத்தமிழர்களும் அக்கறை கொண்டிருப்பதாக காட்டும் செயற்பாடும் பிறிதொருவகையான ஊடுருவல்.

'தானம் தருகின்ற மாட்டை பல்லைப் பிடித்துப் பார்க்கக் கூடாது.' என்று ஒரு கிராமிய மொழியுண்டு. ஆனால் இந்தத் தானம் ஏழை முஸ்லிம்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அவர்களால் கருதப்படுகிற தனையும் மறுப்பதற்கில்லை. இப்போது தமிழீழ மக்களான சிங்க ளவர்களுக்கும் த.பு.க. உதவி செய்யத் தொடங்கியுள்ளது. தமிழீழப் பிரசைகளை புலிகள் 'ஒன்றாகவே' கருதுகிறார்கள்! வடக்கிலே கூரைக்குக்கீழே என்ன மரநிழலிலே ஒதுங்கவும் மறுத்து முஸ்லிம்களை தயவு தாட்சண்யமின்றி, ஈனவிரக்கமின்றி குழந் தைகளையும், வயோதிபர்களையும் பெண்களையும் துரத்திய வர்கள் இன்று த.பு.க என்ற படோபகாரக ஸ்தாபனத்தை முஸ்லிம் கள் மீது கண்பார்த்தருளச் செய்திருக்கிறார்கள். காத்தான்குடி, சம்மாந்துறை பள்ளிவாசல் களில் குரூரமாக கொலைசெய்தவர்கள் இன்று மத்ரசா, பள்ளி வாசல் கட்டிக் கொடுக்கிறார்கள். அந்நிகழ்வுகளிலெல்லாம் 'மூன்றாவது சக்தி' முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் (இங்கு அவர்கள் குறிப்பிடுவது தமிழர்களை அல்ல அவர்களது பாதையில் புலிகளுக்கும் இடையில் தடையாய் வரக்கூடாது என்று எச்சரிக்கை விடுக்கிறார்கள். முஸ்லிம் சமூகத் தின் பலவீனமான பக்கங்களை தங்களது மேற்குநாட்டு புத்திஜீ விகள் ஆய்வாளர்களூடாக எவ்வாறு கையாளுவது என்று நன்கு படித்து வைத்திருக்கிறார்கள் புலிகள். ஆனால் முஸ்லிம்களின் அரசியல் பாமரத்தனமும் சுயநலமும் இத்தகைய ஊடுருவல்களை முன்னெடுக்க உதவுகிறது.

## மதப்பிரிவின் முரண்பாடுகளுக்குள் ஊடுருவல்

புலிகளின் ஊடுருவல் முஸ்லிம்களின் மதமுரண்பாடுகளையும் பயன்படுத்த முனைந்துள்ளது. காத்தான்குடியில் முஸ்லிம் அடிப்படைவாத கருத்துக்களுடன் முரண்பட்ட அப்துல்ரவூப் மௌலவி என்பவரின் புதிய மதப் பிரிவினருடன் கூட ஒரு சந்தர்ப்பவாத 'கூட்டினை' புலிகள் ஏற்படுத்தியிருந்தனர் அறியக்கிடைக்கிறது. இந்துமத அடிப்படைக் கோட்பாடு களையொட்டிய அத்வைத கோட்பாட்டினை இஸ்லா மியஏகத்துவ கொள்கையை சிதைத்து புதிதான சித்தாந்த விளக்கத்தை பின்பற்றும் ஒரு பகுதியினர்தான் அப்துள் ரவூப் மௌலவியின் சீடர்கள். ஒப்பீட்டளவில் செல்வமிக்க பகுதியினராகவும், கொடியேற்றம், தனிமனித வழிபாட்டினை முதன் மைப்படுத்தும் கிரிகைகளை நடத்தியபோது ஒரு தடவை புலிகளை உதவிக்கழைத்து தங்கள் சடங்குகளை செய்ததாக குறிப்பிடப்படுகிறது. சிவராம் தமிழ்நெற் ஆசிரியர் குழுவில் இருந்தபோது இப்பிரிவினர் குறித்து மிகுந்த ஆழமாக அறிந்தவராகவும் அவற்றினை தனது இணையத்தளத்தில் விபரமாகவெளியிடுபவராகவும் இருந்தார். இவரின் மறைவின் பின்னர் சில சம்பவம் காத்தான்குடியில் இடம்பெற்றபோதும் அதுகுறித்த செய்திகள் விபரமானதாக இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் அண்மையில் இப்பிரிவினர் ஏனைய அடிப்படைவாத முஸ்லிம்களுடன் ஒரு சமரசத்திற்கு வந்ததும் இப்பிரிவினருக்கிடையிலான முரண்பாடுகள் தீவிரமடைந்த போக்கில் காணப்படுகில்லை. சிவராமும் இறந்துவிட்டதாலும் மதப்பிரிவினர் முஸ்லிம்களுக்குள் ஊடுருவும் சந்தர்ப்பம் புலிகளுக்கு இல்லாமல் போயுள்ளது. எனினும் முஸ்லிமாக மதம்மாறியதாக முஸ்லிம் மக்களுக்குள் ஊடுருவும் புலிகள் குறித்தும் அசட்டையாக இருக்கமுடியாது. இதில் கருணா பிரிந்து சில மாதங்களுக்கு பின்னர் வெலிக்கந்தை பகுதியில் வன்னியைச் சேர்ந்த புலியொருவர் முஸ்லிமாக மாறி ஒரு சிகையலங்கார நிலையத்தில் பணிபுரிந்து வந்ததாகவும் கருணா அணியினர் அவரை கொன்றதாகவும் செய்திகள் வந்தன. ஏற்கனவே முஸ்லிம் வியாபாரிகள் எல்லைப்புறப் பகுதிகளில் வாழும் விவசாயிகள் பலர் புலிகளால் கருணா குறித்து கடத்தப்பட்டும் விசாரிக்கப்பட் டுள்ளார்கள். மேலும் புலிகளின் முஸ்லிம்களுக்கிடையான சந்திப்புகளிலும் 'தமிழ் தேச விரோதிகளுக்கு ஒத்தாசை வழங்குவோர், சேர்ந்து செயற்படுவோர் தண்டிக்கப்படுவர் என்றும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளனர். கருணாவின் மீது கர்ணகடூர மான கோபத்தினை கொண்டுள்ள புலிகள், புலி ஆதரவாளர்கள் அதேயளவு கோபத்தை முன்னாள் எம்.பி. யான மௌலானாவின் மீதும் கொண்டுள்ளனர். மௌலானா மாத்திரமின்றி முன்னாள் எம்.பி.ஹிஸ்புல்லா, சேகு தாவூத் பசீர் ஆகியோரும் தங்களுடைய அரசியல் தேவைகளுக்காக புலிகளுடன் இரகசியத் தொடர்புகளையும் காலத்துக்கு காலம் பேணி வந்திருக்கிறார்கள். அதிலும் மௌலானா மிக நெருக்கமான உறவைப் பேணிவந்துள்ளார். இன்றைய புலிகளின் வார்த்தையில் கூறுவதானால் அன்றைய புலிகளின் ஒட்டுப்படையாக செயற்பட்டுள்ளார். பிரபா -ஹக்கீம் ஒப்பந்தத்துக்கு இது முக்கிய காரணமாக பாலகுமாருடன் தனக்கிருந்த தொடர்புகளே காரணம் சேகுதாவுத் பசீர் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார். வன்னிப்புலிகளைப் பொறுத்தவரை மௌலானா ஒரு 'சோனகர்' தமிழ் தேசத்தின் எதிரிக்கு உதவி இத்தனை சிக்கல்களை உருவாக்கிவிட்டா(ன்)ர் என்று பகிரங்கமாக குறிப்பிடுகின்றனர். மறைமுகமாக மௌலானா குறித்து தேடுதல் வேட்டை, புலனாய்வு தகவல் திரட்டல்களும் உலகமெங்கும் மேற்கொள்ளப்பட்டி ருக்கின்றன. மறுபுறம் இவற்றை கிழக்கின் அரசியல் நிலைப் பாடுகள் மீண்டும் ஒரு யுத்தத்தை புலிகள் வேண்டி நிற்பதால் மீண்டும் தமிழ் முஸ்லிம் உறவினை கலைத்தல் மேலாதிக் கத்தினை தமது தமிழீழத்தாயக கனவினை நோக்கி நகர்த்த புலிகளுக்கு தேவையாக இருக்கிறது. **எனவே கிழக்குத் தமிழ் முஸ்லிம் மக்கள் தமது வரலாற்று உறவை புதிய தலைமுறையினருக்கு உணர்த்த வேண்டிய தேவை இன்று அத்தியாவசியமான பணியாகும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பஸ் இப்ப சிவன்கோவில் புளியடி தாண்டிப் போகிறது. மெல்ல யன்னலைத் திறந்தாள். என்ர பேர் ராஜகுமாரி. என்று சொல்லிக் கொண்டே வெளியில் ஓடிக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் ஆட்டோக்கள் எல்லாத்தையும் ஆசை ஆசையாப் பார்த்துக் கொண்டிருந்தாள். வாத்தியாருக்கு பெரிய நிம்மதி இப்பதான். மனிசிட ஆய்க்கினை தாங்கேலாம இருந்தது. ஒரு வேலைக்கரியைப் பிடிச்சுக் கொண்டு வாங்கோ.. வாங்கோ... எண்டு கத்தித் தொலைத்ததுக்கு ஒரு நிம்மதி.

நான் ஒரு ஸ்கூல் வாத்தியார். எனக்கு 5 பிள்ளைகள். மனிசியும் ஸ்கூலுக்குப் போறவா. வீட்டைப் பார்க்கோணும். என்ர அம்மாவுக்கும் நீதான் உதவியாய் இருக்கோணும் என்று சொல்லிக்கொண்டிருந்தார். வெளியாலை பிராக்குப் பார்க்க கூடாது. சீற்றில அமைதியா இரு பிள்ளை. இப்படியெல்லாம் நீ பஸ்ஸில போனதில்லையே? ராஜகுமாரி தலையை உள்ளுக்குள் இழுத்தாள்.

வாத்தியார் பஸ்ஸை விட்டு இறக்கி வீட்டுக்குக் கூட்டிப் போனார். நடந்து போகேக்கேயே எவ்வளவு கோயில்கள். எவ்வளவு பெரிய கோபுரங்கள். அப்பு கதைகதையாச் சொல்லேக்க கேட்டதெல்லாம் நேரிலே பார்க்கிறாள். .ராஜகுமாரிக்கு மனசு மதாளிக்குது. தான் வைரகோயிலுக்குப் போறதிற்கே எவ்வளவு தூரம் நடக்கோணும். அதுவும் சுடுமணலுக்குள்ளால தத்தித் தத்தி நடக்க என்ன வேதனை. இஞ்ச ஒவ்வொரு வீட்டுக்கு முன்னாலையும் ஒவ்வொரு பெரிய கோயில். ஆளுக்கொரு கோயிலும் கோபுரமும். கையில் வைச்சிக்கிற நாலு உடுப்பைச் சுத்தியுள்ள உரபாக்கை நெஞ்சில ஒத்தி வைத்துக் கொண்டு வாத்தியாரோட ஓடி ஓடி நடக்கிறாள்.

ராஜகுமாரியை வீட்டுக்குள் கூட்டிக் கொண்டு போய் தன்னுடைய மனைவியிடம் ஒப்படைக்கிறார் வாத்தியார். தன்னுடைய ஐந்து பிள்ளைகளையும் கூப்பிட்டு முன்னால் நிறுத்தி இஞ்சபாருங்கோ பிள்ளையள் இப்ப எங்கட வீட்டுக்கு ஒரு புது ஆள் வந்திருக்கிறா. இவாட பெயர் ராஜகுமாரி. உங்களுடைய தங்கையாக நினைத்து நீங்கள் பழக வேண்டும். இப்ப எங்களுக்கு ஒரு சிக்கல் இருக்கு எங்களிட்டையும் ஒரு ராஜு இருக்கிறா. நாங்கள் கொன்பியூசாகமா இருக்கிறதெண்டா யாருடையதாவது பெயரை மாத்த வேண்டும். அதனால ராஜகுமாரிக்கு நாங்கள் ஒரு இலகுவான பெயர் வைப்பம். என்ன பெயர் வைப்பது என்று நீங்கள் சொல்லுங்கோ. எண்டு வாத்தியார் கேட்க ஆளாளுக்கு பப்பி, றொசின்,ஜிம்மி, பவளம் என்று சொல்லியபோது வாத்தியார் பவளம் நல்ல தமிழ்ப பெயர் என்று சொல்லி பிரையாசப்பட்டு ராஜகுமாரிக்குப் பவளம் என்று பெயரிட்டார்.

இப்போது மீண்டும் நீங்கள் குட்டி திரைப்படத்திற்கு வரவேண்டும். கிராமத்தில் இருந்து பட்டணம் வந்தவள் குட்டியா கியதை நீங்கள் கவனிக்க வெண்டும். பவளம் இந்த இளம் வயதில் தம்மிடம் வந்துள்ளது தாம் செய்த பாக்கியம் என்று மனதுக்குள் நினைத்த வாத்தியார் தைப்பொங்கலுக்கு தன்னுடைய பிள்ளைகளுக்கு உடுப்பு எடுத்தபோது மறக்காமல் பவளக் கொடிக்கும் எடுத்தார். பவளக் கொடியைப் பொறுத்தளவில் குசுனிக்குள் படுத்தெழும்பினாலும் நேரம் நேரம் ஏதோ சாப்பாடு கிடைக்கிறது என்று நிம்மதியடைந்தாலும் தன்னுடைய அப்பு மற்றும் அக்காள் மாரை விட்டு வந்ததில் பெருத்த வருத்தம். அப்பு பற்றி அதிகம் யோசித்தாள். அப்பு தன்னை வந்து எப்ப பார்ப்பார் என்று கவலை வரத் தொடங்கி விட்டது. வாத்தியரின் பிள்ளைகள் நாயைவிடக் கேவலமாக தன்னை நடத்துவதை எப்படியாவது வாத்தியாரிடம் சொல்ல வேண்டும் என எண்ணினாலும் சரிவரவில்லை. வாத்தியாரின் மனிசிகூட எப்பவும் வீட்டுக்குள் வெளியில் பவளக்கொடியை வைத்திருக்கவே விரும்பினாள். வாத்தியார் இல்லாத நேரமெல்லாம் என்ன செய்விக்க வேண்டுமோ அவ்வளவையும் செய்வித்தாள். வாத்தியார் வீட்டில் இருக்கிற நேரம் இவை எதுவும் நடப்பதில்லை. ஆனாலும் வாத்தியாருக்கு குட்டியின் போக்கிலிருந்து மெல்ல மெல்லக் கசிந்தது. வாத்தியார் நிறையவே பவளக்கொடி பற்றிக் கவலைப்பட்டார். தன்னுடைய பிள்ளைகள் எவ்வளவு சந்தோசமாக வைத்திருக்க வேண்டும் தன்னை நம்பி வந்தது அது. ஏன் இப்படிக் கொடுமைகள் செய்யுதுகள் என்று கவலைப்பட்டார். அவர்கள் வாத்தியாரின் கதைகள் பற்றிக் கனக்க யோசிக்கவில்லை. அவர்களுக்கான காரணம் நிறையவே இருந்தது. இந்த அமளிதுமளிக்குள்ளால் பவளம் வளர்ந்து கொண்டிருந்தாள்.

வாத்தியாரின் பிள்ளைகள் விளையாடும் பந்துகள் பக்கத்தி வீட்டிற்குப் போய் விழும் நேரமெல்லாம் அவை அப்படியே கைவிடப்பட்டன. பவளக்கொடிக்குப் புதினம். எவ்வளவு பந்து கைவிட்டாச்சு. எப்பவாவது அங்கிருந்து யாராவது எடுத்துஇங்கால எறிந்தாலொளிய மற்றப்படி அவை தேவையற்றவையாகியது. ஏன் அக்காக்கள் அதுகளை எடுக்கக் கூடாது என்று கேட்க அவே மற்றாக்கள். நாங்கள் அதுக்குள்ள போறேல்ல என்று சொன்னதை விளங்காமல் பவளக்கொடி போய்ப் பந்தை எடுத்துக் கொண்டு வந்து விட்டாள். இதை அறிந்த வாத்தியாரின் மனைவி உடம்பெல்லாம் விறுவிறுக்க பவளகொடியைக் கை நீட்டி அடித்து விட்டாள். எங்கட வீட்டிலயிருந்து இவ்வளவுகாலமும் யாரும் கால்வைக்காத வளவுக்கை நீ வந்து கால்வைத்து எங்கட மானத்தைக் கப்பல் ஏத்துறாய் நாயே... இண்டைக்கு வரட்டும் வாதத்தியார். நான் ஒரு முடிவு எடுக்கிறன் என்று தாண்டவம் ஆடுற அவளைப் பார்க்க பவளக்கொடிக்கு பயம் வந்துட்டுது. வாத்தியார் வீட்டுக்கு வந்தவுடனே மனிசி தொடங்கீட்டாள். கொண்டுவந்தியளே ஒண்டை எனக்கு ஒத்தாசையெண்டு. அது செய்த கூத்தைப் பார்த்தியளோ? அடுத்தவீட்டுக்குப் போன பந்தை வேலி பூந்து எடுத்து வந்திருக்கிறாள். எங்கட பரம்பரையில இல்லாத ஒன்று. அவங்கள் என்ன நினைப்பாங்கள்.எண்டு அடித்தெண்டைகிழிய கத்துற மனிசியை பாா்த்துச் சிரித்தார். வாத்தியாருக்குப் பெரிய நிம்மதி. மெல்ல மனிசியைக் கூப்பிட்டுச் சொன்னார். எங்கட பிள்ளையள் எதுவும் போனதே இல்லைத்தானே. உதுக்கேன் கிடந்து கத்துறாய். பிடிக்காட்டிச் சொல்லு உப்ப கொண்டுபோய் விட்டுவிடுறன். உனக்கும் பொடியளுக்கும் ஒத்தசையாய் இருக்கட்டுமன் என்று செய்தா இருக்கிற பிரச்சனையை சும்மா கூட்டிக்கொண்டிருக்கிறாய். கொஞ்சம் சும்மா இரன்.

இவ்வளவு கதையும் வாசித்துக் கொண்டுவர உங்களுக்கு குட்டி படம் பார்த்தது மாதிரியே இருக்கும் என்று நம்புகிறேன். இப்ப நீங்கள் ஒரு கேள்வி கோக்கோணும். அப்புவிட்ட இருந்து ராஜகுமாரியாய் யாழ்ப்பாணம் போனது இந்தியனாமிக் காலத்தில. ராஜகுமாரி பவளமாய் மாறியது யாழ்ப்பாணத்தில. அப்ப பவளம் பவளக் கொடியாய் மாறியது எப்ப?

தேசியக் கொடி என்று ஒன்றை யாழ்ப்பணத்தில எல்லோரும் கச்சையாய்க் கட்டியபோது. கச்சை கைமாறி பவளத்தின் மானத்தையும் மறைக்க கட்டாயச்சட்டம் வந்தபோது பவளம் உண்மையில் ஏமாந்துதான் போனாள். ஆருக்குத் தெரியும். பவளம் வாத்தியாரை பாவம் என்று நம்பினாள். தனக்காகக் கதைக்கும் கவலைப்படும் ஒரு ஜீவன் வாத்தியார்தான் என்று நம்பினாள். இந்தக் கட்டத்தில வாத்தியாரை முன்நிறுத்தி நீங்கள் குட்டி திரைப்படம் பற்றிய அப்பட்டமான பம்மாத்தைக் கவனிக்க முடியும். பவளக்கொடி நிம்மதியாக இருக்க வேண்டும். கஸ்டப்படுத்தக் கூடாது என்று நினைக்கும் வாத்தியாரையும் குட்டி திரைப்படத்தில் வரும் ரமேஸ் அா்விந்தினது பாத்திரத்தையும் உற்று நோக்க வேண்டும். குட்டிதிரைப்படத்தில் குட்டிக்கு எதிராக இருக்கின்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாட்டியினதும் பேரனினதும் எதிர் வினைகளை நீக்கிவிட்டால் குட்டியின் மீது காட்டப்பட்ட சிக்கல்கள் இல்லாமல் ஒழிந்து விடும். அதனால் குட்டியை தொடர்ச்சியாக வேலைக்கு வைத்திருக்கலாம். அதனால் தமது பிள்ளைகளை தொடர்ச்சியாக பராமரிக்கப்பண்ணலாம். அல்லது பல்கலைக்கழகத்துக் கணேசலிங்கம் போல பாலியல் வல்லுறவும் செய்யலாம்.

குட்டிமாதிரி சிறுவர்களை வேலையில் அமர்த்தக் கூடாது என்று யாரும் சொல்லவரமாட்டார்கள். குட்டி பவளம் மாதிரி பிள்ளைகளை யுத்தத்திற்கே அனுப்பிக் கொல்லும் சமூகத்திற்கு வேலையும் பாலியல் வல்லுறவும் என்ன சின்ன ஜுஜுபி. பவளத்திற்கு வீட்டில இருக்கிற கொடுமை தாங்காம ஒரு இரவில ஒருத்தருக்கும் தெரியாம வீட்டை விட்டு ஓடிவிட்டாள். தப்பியோட முதல் பவளத்திற்கு மிகக் கவலையான விடையம் என்ன வென்றால் பைத்தியமாக சாமி வந்து வெருட்டுவதாக சாபமிடுவதாக கமலகாசன் றேஞ்சுக்கு இறங்கி நடிக்க வேண்டியிருந்ததுதான்.

குட்டி திரைப்படத்தில ஓடின குட்டி யாரிட்டை மாட்டினாள் என்பது உங்களுக்குத் தெரியும்.. யாழ்ப்பாணத்தில இருந்து தப்பியோடுற ஒரு பிள்ளை யாரிட்ட மாட்டும் என்பதும் உங்களுக்குத் தெரியும். இதென்ன சின்ன விடையம். பிறகென்ன. வாத்தியார் தன்ர வீடும் மாவீரர் வீடு என்று அடையாளப்படுத்த ரெடியாய் இருக்கிறார். எப்படியாவது தன்ர அப்புவைப் பார்க்க வேணும் என்று பவளம் தியானித்துக் கொண்டிருக்கிறாள். சோடாப் போத்தில் நிறைய பிளேன்ரீயைக் கொண்டு வந்து வைத்துவிட்டு குடியடி. டேவிட் அண்ணை 'புளுத்தூர்' அடிக்கிறார் இப்ப உன்னட்டதான் வாறார். கெதியாய்க் குடியடி... என்று சொன்னவனை எட்டிக் காலால் உதைத்தாள் பவளம். விறாந்தையில் காற்றில் வீசிக் கொண்டிருந்த இருந்த கொடிமரத்தை நோக்கி நடந்து போகிறாள்.

அப்பு ஏன் கட்டிலுக்கும் பட்டிக்கும் மாறிமாறி நடந்தார் என்று யோசிக்கிறீர்களா? மூன்று நாளுக்கு முதல் யாழ்ப்பாணத்து செக்கு வியாபரிக்கு விற்ற இரண்டு எருத்தன் இண்டைக்கு அப்புவின்ர பட்டிக்குத் திரும்பி வந்துட்டுது. இரவோடிரவாய் கால்நடையா யாழ்ப்பாணத்தில இருந்து வந்திருக்கு.. அது மாடே வந்திருக்கு. தன்ர மகள் ஏன் வரேல்ல எண்டு அப்பு யோசிப்பார் தானே.

பவளக்கொடி தன்னுடைய ஆடைகளையெல்லாம் அவிழ்த்தெறிந்து......... என்று அட்டைப்படத்தில் முடிகிறது கதை.



# கைநாட்டு

கருமையத்தின் வெளியீடாக கைநாட்டு எனும் இதழ் வெளிவந்திருக்கிறது.
யாழ்ப்பாணத்தில் இருந்து கலைக்கப்பட்ட முஸ்லீம்களின் நினைவு கூரலை
2005 நவம்பரில் நிகழ்த்தியிருந்தது. அதன் நினைவாக வெளியிடப்பட்ட இந்த இதழில்
எம்.ஆர்.ஸ்ராலின்,நற்கீரன்,சுமதிரூபன்,
சத்தியா,கற்சுறா,கன்னிகா,நந்தினி,இளங்கோ,
முருகபூபதி,நடேசன், வஸ்கொடகாமா,தர்சன் சக்கரவர்த்தி
போன்றவர்கள் எழுதியுள்ளார்கள்.
கனடாவில் நாடகத்திற்கான அமைப்பாக இயங்கும் இந்தக் கருமைய அமைப்பு சமூகத்தின் இருண்ட பக்கங்களை வெளிக் கொண்டுவர பலதளங்களில் இயங்குகின்றது. நாங்கள் புதிதாக ஆரம்பிக்கிறோம் என்பதன் மறுபக்கமே இருப்பவற்றை ஏற்கவில்லை என்பதுதான்.
என்று அறிவிக்கிறது கருமையம் .
தொடர்புகளுக்கு: karumaiyam@gmail.com

## இனம் தெரியாத இனம்

ஈழத்தில் கடந்த முப்பது வருடங்களாக நடைபெற்று வரும் யுத்தத்தில் இனந்தெரியாத நபர்களினாலேயே மக்கள் அதிகம் கொல்லப்பட்டுள்ளார்கள். இதன் தொடர்ச்சி இன்று இணையத்தளங்கள்வரை நீடித்துள்ளது. கருத்தை எதிர்கொள்ள முடியாதவர்கள் இரவோடிரவாய் இனந்தெரியாத நபராகி நமது மக்களை கொன்று போட்டார்கள். அதிலிருந்து எவ்விதத்திலும் வேறுபடாது இணையத்தளங்களில் இனந்தெரியாதநபராகி எழுதுகிறார்கள். இது ஆரோக்கியமான சூழலை ஒருபோதும் ஏற்படுத்தப் போவதில்லை. எதை எழுதி நிரூபித்தாலும் விவாதங்கள் தொடரும் சூழலற்ற ஒரு நிலையில் எல்லாம் பயனற்றுப் போய்விடும். கருத்துக்களை எதிர் கொள்ளும் திராணியற்ற ஒரு மனநிலையே இது. தயவுசெய்து இது தவிர்க்கப்படவேண்டும்.

மற்றது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மற்றது

இது - 02

**ஆசிரியர்கள்**
**கற்சுறா - அதீதா**

நமக்கு இதுவரை கற்பிக்கப்பட்ட அனைத்தும் பொய். உண்மை என்பதுவும்.

தொடர்புகளுக்கு

matrathu@hotmail.com

-இந்த இதழ் யாழ்ப்பாணமையவாதத்தினை முன்நிறுத்தி, அதன்மீதான கேள்விகளுடன் தொகுக்கப்பட்டிருக்கிறது.

-இன்று கேள்விகள் முக்கியம். கேள்விகளற்ற சமூகமாக இருப்பது படுமோசமான ஒரு நிலை.

-இதைவிட முக்கியம் பதில்கள். கேள்விகளைவிட முக்கியமானவை அவை. எனவே விவாதங்கள் தொடரவேண்டும் என்று விரும்புகிறோம்.

-இந்தத் தொகுப்பு தொடங்கப்பட்டபோது யாழ்ப்பாண மையவாதம் எது? அப்படி ஒன்று இருக்கா? இது ஒரு பிரதேசவாதக் கருத்து என்று நம்மீது முன்வைக்கப்பட்ட பலவிதமான கருத்துக்களை எல்லாம் நாம் உள்வாங்கியிருக்கிறோம்.

-இதற்கான பதில்களை இந்தத் தொகுப்பிலுள்ள அநேக கட்டுரைகள் தெளிவுபடுத்தும் என்று நம்புகிறோம். தெளிவற்ற நிலை ஒருவித விவாதங்களுமற்று அட்டவணைக் குட்படுத்தி எம்மை வழமை போல துரோகிகளாக்கிவிடும் சூழலையும் நாம் நினைவுகொள்கிறோம்.

-இதுவரை ஈழத்தில் எவ்வித கேள்வியுமின்றி துரோகிகளாகக் கொல்லப்பட்ட அத்தனை மனித உயிர்களதும் பிரதிநிதியாய் நாம் இருப்பதையிட்டு பெருமை கொள்கிறோம்.

-யாழ்ப்பாண மையவாதச் சிந்தனையென்பது ஈழவரலாறு எங்கிலும் பரவியருப்பதை அங்கம் அங்கமாகக் காணமுடியும். இதனது கொண்டோடிகளாக ஒவ்வொரு காலகட்டத்திலும் இதன் பிதாமகர்கள் இருக்கிறார்கள்.

-அன்று ஆறுமுகநாவலர் தொடக்கம் இன்று புலிகள் வரை. இதன்மூலம் நாம் புலி எதிர்ப்பே பேசுகிறோம் என்று சொல்பவர்கள் குறித்து நாம் என்ன சொல்லிவிட முடியும்?

-ஆம் நாம் எதிர்க்கிறோம். முற்று முழுதாக எதிர்க்கிறோம். மௌனமாய் இருந்து கொண்டு நடுநிலைமையாகச் செயற்படுகிறோம் என்று எம்மால் சொல்லமுடியவில்லை. அந்தத் தேவை எமக்கு ஒருபோதும் இல்லை.

-இது உண்மை நிலை.

-ஈழத்தில் எந்த ஒரு அர்த்தமும் இல்லாது உயிர்கள் பலியாகிக் கொண்டு போவதை யார் நிறுத்துவது? மிகவசதியாக தப்பிவந்த மக்கள் வெளிநாடுகளில் இருந்து சந்தோசமாக இன்னொரு யுத்தத்திற்கு பணம் கொடுக்கிறார்கள்.

-அங்கே கொலைக்கருவி மனித உயிர்களில் நடமாடுகிறது. யாரைக் கொன்றாவது தமிழீழம் தேவை என்கிறது யாழ்ப்பாணியம். சர்வதேசம் எங்கிலும் கோயில், குருக்கள் மடம் தொடக்கம் வறுத்த மிளகாய்த்தூள் என்று தன்னை யாழ்ப்பாணியம் அடையாளப்படுத்தாத இடம் கிடையாது.

-இந்த யாழ்ப்பாணியம் பொதுப்புத்தி மட்டத்தில் மிக ஆவேசமாக இப்படியெல்லாம் வெளிக்காட்டப்படுகிறது என்றால் அதைவிட மிகக் கவனமாக புத்திசீவி மட்டத்தில் காப்பாற்றப்படுகிறது.

-ஈழவரலாற்றில் யாழ்ப்பாணியம் செய்த அத்தனை நெட்டூழியங்களையும் வெறும் துன்பியல் சம்பவம் என்று ஒற்றைவரியில் சொல்லிச் சமாதானப்படுத்த வதில் காலத்தை ஓட்டுகிறது தமிழ்ப் புத்திசீவிதம். கயிறைப் பாம்பாக நம்பி விட்டு விடலாம்.பாம்பைக் கயிறாக நம்பி விட்டுவிடக்கூடாது. மாப்புளிக்காமல் அப்பம் வராது. என்று அத்தனை கொலைகளையும் காப்பாற்றுகிறது சிவத்தம்பியிசம். சிவத்தம்பியைத் தூக்கிக் காவடி எடுக்கிறது யாழ்ப்பாணியத் தமிழிலக்கியம். தமிழ்நாட்டிலோ ஹொலிவூட் படம் பார்த்த மனோநிலையில் இருந்து ஈழம் பற்றி கருத்துரைக்கிறார்கள். அவர்களுக்கு சாகசங்கள் மட்டுமே கண்ணுக்குத் தெரிகின்றன. சாவு அவர்கள் கதவுக்கு வருவதில்லைத்தானே. எதையும் பேசுவார்கள்.

-16 வருடங்களின் முன்னர் முஸ்லீம்களைக் கலைத்த யாழ்ப்பாணியம் இன்றுவரை அதற்கு நியாயம் கற்பிக்கிறது.

-இன்று யாழ்ப்பாணியத்திற்கு விழுந்த பேரிடி கிழக்குப் பிரிவு. இதை ஜீரணித்துக் கொள்ளாத யாழ்ப்பாணியம் அதை நிவர்த்தி செய்ய எத்தனை வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் கொலை செய்ய தயாராய் உள்ளது. கடந்த காலத்தில் யுத்தம் நடந்த காலத்தை விட யுத்த நிறுத்தகாலங்களிலேதான் கொலைகளின் வீதம் அதிகம் என்கிறது ஆய்வறிக்கைகள். சர்வதேசம் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று சொல்லித் தடை செய்கிறது. புலிகள் மீதான தடை ஒட்டுமொத்த தமிழர்களின் வீழ்ச்சி என்று கவலை கொள்கிறது யாழ்ப்பாணியம். தமிழ்நாட்டுப் புத்திசீவிகளோ அப்பாவித்தனமாய்த் தலையாட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய ஒட்டுமொத்த தமிழோ சாதியாகவும் மதமாகவும் பிரதேசமாகவும் பிளவுபட்டுப் போய்க்கிடக்கிறது.

-கடந்த 35 வருடங்களாக யுத்தம் நடைபெற்ற காலங்களில் ஈழத்து மாணவர்கள் தொடர்ச்சியாக கொம்பு சீவப்பட்டிருக்கிறார்கள். இதனால் நாம் இழந்து போவது எதிர்காலச் சிந்தனைத் தளத்தை என்பதை யாரும் உணர்ந்து கொள்ளவில்லை. திரும்பிப் பார்த்தால் இன்றுள்ள நிலை நமது ஆரம்ப நிலை. இதைக்கூட அறிய முடியாத நிலையில் நமது சீவியம் கழிகிறது என்பது வெட்கமானது.

-பாசிசத்தின் உச்ச வெறி தலைவிரித்தாடும் தருணம் இது. இங்கே நமது செயற்பாடுகள் எதை நோக்கியது என்பதில் தெளிவாய் இருக்க வேண்டும். இல்லையேல் தெரியாமல் செய்து விட்டோம் என்று நாளை சொல்லிக்கொள்வதில் எந்த நியாயமும் இருக்காது.

-மற்றது-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net
யாழ். இந்து வேளாள குலத்தை
ஸ்லாந்தில் P.R உள்ள 1960 ஆம் ஆ
வுத்திருமணம் செய்து விவாகரத்து பெற்ற படி
த்த அழகிய மணமகனுக்கு, அழகான, குடும்
பாங்கான 30 - 35 வயதுக்குட்பட்ட
மகள் தேவை. பொறுத்தமற்றவை க
விண்ணப்பிக்கவும். திருப்பி அனுப்பப்ப
ணியமாகத் யாழ்ப்பாண இந்து வேளாளர் மட்டும்
ணப்பிக்கவும். G-919, C/o, வீர
த.பெ.எண்.160, கொழும்பு
ஏ.ஜே.
Point Pedro
Valvedditturai
Nelliadi
Karaveddi
Dutch Church
Chankanai
Chunnakam
Manippay
Kokkuvil
Kopai
Anaicoddai
JAFFNA
Dutch Fort
Karativu
Elephant Pass
யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கனடாவை வதி
யாழ் இந்து உயர்குல வேளாள குலத்தைச் சேர்ந்த
மனப்பக்குவத்தை
உடைய அந்த மனிதர் இலக்கியத்தை
வாழ்வாக்கிக் கொண்டவர்.
யாழ்ப்பாணத்தவருக்கே உரிய முறையான
கல்வியை ஒழுங்காகக் கற்ற அவர், அதை
ஒதுக்கி 'சித்தம் போக்குச் சிவன் போக்கு' என
வாழக் கூடிய மனப் பக்குவமும் கைவரப்
பெற்றவர். ஜனநாயக, மனித நேயக்
கொள்கைகளைத் தன் இரத்தத்தில்
ஊறப்பெற்ற அவர், மேற்குலகப் 'புறத்தியான்'
போல வாழ்ந்தும் வருபவர்.
இலக்கியங்களைத் துறைபோகக் கற்ற அவர்,
சமகாலத் தமிழ் இலக்கியங்களையும்
வாசித்து மதிப்பிடுகிறவர். நூலகத்தைத் தன்
தாய் வீடாக்கியவர். சிந்தனையில் உலகப்
பொதுமகனான, மேற்குலக பண்பாடு, கலை,
Hot Curry Powder
POUDRE DE CURRY JAFFNA (PIQUANT)
ழ்ப்பாண முறையில் தயாரிக்கப்பட்
ரையும் சாந்தாதரராக சேருமாறும் வேண்டுகோள் விடுத்தார்.
ஆலய அர்ச்சகர் சிவத்திரு பா. திருக்குணானந்தக் குருக்கள் ஆசியு
வழங்குகின்ற பொழுது தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சேவையை மிகவு
பாராட்டினார். கவிநாயகர் கந்தவனம் அவர்கள் தலைமை உரையில் தான் இதுவ
கலாநிதி தங்கம்மா அப்பாக் குட்டியினுடைய 80 அகவைப் பாராட்டு விழாக்களி
ஐந்தில் பங்குபற்றியதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் எனக் கூறினார். தன்னை சமய
துறையினுக்கு இட்டுச் சென்றவர் அம்மையாரே எனவும் விதந்துரைத்தார்.
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களால் எழுதப்பட்ட காலம் தந்
கைவிளக்கு எனும் நூலினையும் கவிநாயகர் அவர்கள் வெளியிட்டு வைத்தார்கள்
சிவத்தமிழ் சஞ்சிகையினை திரு. பொ. கனகசபாபதி அவர்கள் அறிமுகம் செய்து
வைத்தார்கள். சிவத் தமிழ் ஜெர்மனி, இங்கிலாந்து, யாழ்ப்பாணம், கனடா ஆகிய
நான்கு நாடுகளுக்கும் செல்கின்றது என்பதை அதன் அட்டைப் படம் தெளிவாக
காட்டுகிறது என்பதையும், அதில் உள்ள 36 கட்டுரைகள், கவிதைகள்,
26 தங்கம்மா அப்பாக்குட்டி பற்றியது எனவும் குறிப்பிட்டார். கலாநிதி சிவகுமார
னுக்குச் சும்மா இருக்கத் தெரியாது ஏதாயினும் செய்து கொண்டே இருக்க
வேண்டும் என்பது அவர் கொள்கை. அவர் மகாஜனன்.
திரு. சிவலிங்கம், திரு. திருச்செல்வம், திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர்
யாழ்ப்பாண முறையில் தயாரிக்கப்பட்ட
வேர்க்கொம்பு
கோப்பி
Prepared According to Jaffna Methods
DRY GINGER
COFFEE
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்